# TNPSC தேர்வுப் பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் - ஆகஸ்ட் 2022


**www.tnpscthervupettagam.com**




















SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ..... 11
தமிழ்நாடு செய்திகள் ..... 17
குடியரசுத் தலைவரின் வண்ணம் விருது ..... 17
நகர்ப்புற விலங்கு மீட்பு மையம் ..... 17
i-Tamil Nadu தொழில்நுட்ப மையம் ..... 17
செவாலியர் விருது ..... 18
கோவிலின் உண்மை நிலையை மீட்டளித்தல் ..... 18
சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளின் நிறைவு விழா ..... 19
சென்னையின் இரண்டாவது விமான நிலையம் ..... 20
தங்க நெற்றிப் பட்டயம் ..... 20
பவள மணிகள் கண்டுபிடிப்பு ..... 21
தகைசால் தமிழர் விருது ..... 21
அஇஅதிமுக கட்சியின் முதல் பாராளுமன்ற உறுப்பினர் ..... 21
5வது யானைகள் காப்பகம் ..... 22
புதிய ராம்சார் தளங்கள் ..... 22
சித்தா பல்கலைக்கழக மசோதா ..... 23
நெய்தல் உப்பு ..... 24
போதைப் பொருட்களின் தவறானப் பயன்பாடுகளுக்கு எதிரான விழிப்புணர்வு தினம் ..... 24
ஒருங்கிணைந்த நிலப் பதிவேடு ..... 24
கருப்பையக கருத்தடைச் சாதனப் பயன்பாட்டில் சிறந்த செயல்திறன் ..... 25
"ஜாதியற்ற, மதமற்ற குடிமகன்" சான்றிதழ் ..... 25
சென்னை தினம் - ஆகஸ்ட் 22 ..... 25
காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022 ..... 26
அமெரிக்காவில் சோழர் கால சிலைகள் ..... 26
குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான புதிய திட்டங்கள் ..... 27
சாகித்ய அகாடமியின் பால் சாகித்ய புரஸ்கார் 2022 ..... 28
தேசியச் செய்திகள் ..... 29
11வது வேளாண் கணக்கெடுப்பு ..... 29
இந்தியாவில் இணையப் பயன்பாடு பற்றிய அறிக்கை 2022 ..... 29
சாகசச் சுற்றுலா ..... 30
கூகுள் வரைபடத்தில் வீதிக் காட்சி அம்சம் ..... 30
ஆழ்கடல் அகழ்வு - தேசிய அறிவியல் விருது ..... 31
கரிக்கியூர் பாறை ஓவியங்கள் ..... 31
வறட்சிநிலை முரண்பாடு பற்றிய கண்ணோட்டக் குறியீடு ..... 32
வர்த்தகத்திற்கான நிதி ..... 33
இந்தியாவில் வெளிப்படைத்தன்மை பற்றிய அறிக்கை ..... 33

வேளாண் உள்கட்டமைப்பு நிதி விருதுகள் 2022 ..... 34
பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்கள் தொடர்பான மசோதா ..... 35
சிகரம் 5140 ..... 35
பண மோசடி தடுப்புச் சட்ட விதிகள் குறித்த தீர்ப்பு ..... 36
இந்தியாவில் அதிவிரைவாக விற்பனையாகும் நுகர்வுப் பொருள் நிறுவனம் ..... 37
போதைப் பொருள் கடத்தல் மற்றும் தேசியப் பாதுகாப்பு குறித்த மாநாடு ..... 37
புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறைத் திட்டம் ..... 37
மூன்று தொழிலாளர் குறிகாட்டிகள் ..... 38
வனவிலங்கு (பாதுகாப்பு) திருத்த மசோதா, 2021 ..... 38
பள்ளிகளுக்கான புத்தாக்கச் சபை ..... 39
திரங்கா உத்சவ் ..... 40
இந்திய மெய்நிகர் உலர் தாவரகம் ..... 40
பொது நோய்த்தடுப்புத் திட்டத்திற்கான மறுபயன்பாட்டு வசதி ..... 41
உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ..... 41
சாக்சம் அங்கன்வாடி & போஷன் 2.0 திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள் ..... 42
மத்தியப் பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) மசோதா 2022 ..... 42
கரும்பிற்கு இதுவரை வழங்கப்படாத அதிகபட்ச நியாய மற்றும் இலாப விலை ..... 43
தரவுப் பாதுகாப்பு மசோதா 2021 ..... 44
அனைத்து மகளிர் கடற்படைக் குழு ..... 44
பார்ச்சூன் நிறுவனத்தின் உலகின் 500 முன்னணி நிறுவனங்களுக்கான 2022 ஆம் ஆண்டு பட்டியலில் இந்திய நிறுவனங்கள் ..... 45
2023 ஆம் ஆண்டிற்குள் கருங்காய்ச்சலை ஒழிப்பதற்கு இலக்கு நிர்ணயம் ..... 46
கைவினைப் பொருட்கள் கிராம முன்னெடுப்பு ..... 47
ஒவ்வொரு மாவட்டத்திலும் சமஸ்கிருத மொழி பேசும் மக்களைக் கொண்ட கிராமம் ..... 47
குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் 2022 ..... 47
‘பதே சலோ’ பிரச்சாரம் ..... 48
இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவர் ..... 48
வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 80வது ஆண்டு நிறைவு விழா ..... 49
மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் புதியத் தலைவர் ..... 50
நிதி ஆயோக் அமைப்பின் ஆளுகை குழுவின் 7வது சந்திப்பு ..... 50
மாபெரும் பயிற்சி - ஸ்கைலைட் ..... 50
ஆகாசா ஏர்லைன் நிறுவன விமானத்தின் முதல் பயணம் ..... 51
சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் பிராந்தியத் தரநிலை நிர்ணய மன்றம் ..... 51
இந்தியா கி உடான் முன்னெடுப்பு ..... 51
21 ஆம் நூற்றாண்டிற்கான அனுபவ கற்றல் திட்டம் ..... 52
எனது ரேஷன் உணவுப்படி எனது உரிமை ..... 52
எரிசக்தி வளப் பாதுகாப்பு (திருத்தம்) மசோதா 2022 ..... 52
வஜ்ர பிரஹார் பயிற்சி 2022 ..... 53
இரண்டாம் தலைமுறை தொழில்நுட்பத்தில் இயங்கும் எத்தனால் ஆலை ..... 53

சூன்யா- சுழிய மாசுபாட்டினை வெளியிடும் போக்குவரத்திற்கான பிரச்சாரம் ........ 54
நிறைவேற்ற முடியாத திருமண வாக்குறுதி ........ 54
ஹிம் ட்ரோன்-இ-தோன் திட்டம் ........ 55
SMILE-75 முன்னெடுப்பு ........ 55
பாரத் ரங் மஹோத்சவம் ........ 55
மின்சார (திருத்தம்) மசோதா, 2022 ........ 56
மாவட்ட ரீதியாக சிறுபான்மையினருக்கு அங்கீகாரம் அளித்தல் ........ 56
பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புறத் திட்டம் ........ 57
லும்பி-புரோவாக்இண்ட் தடுப்பூசி ........ 57
இமாலய வழித்தட வலையமைப்பு ........ 58
புதிய இணையவழி விண்வெளி அருங்காட்சியகம் ........ 59
உலகின் மிக உயரமான செனாப் இரயில் பாலத்தின் முக்கிய இணைப்பு ........ 59
75வது சுதந்திரத் தின விழா ........ 59
இந்தியாவின் பருவநிலை சார்ந்த உறுதிப்பாடுகள் ........ 60
ஆயுஷ் கட்டமைப்புத் திட்டம் ........ 61
செறிவூட்டப்பட்ட அரிசித் திட்டம் – இரண்டாம் கட்டம் ........ 61
சுதந்திரத் தின உரை : 7 சிறப்பம்சங்கள் ........ 62
குடியரசுத் தலைவரின் காவல்துறைப் பதக்கங்கள் ........ 62
குடியரசுத் தலைவரின் தாத்ரக்சக் பதக்கம் ........ 63
23வது இந்திய சர்வதேசக் கடல்சார் உணவுப் பொருட்கள் கண்காட்சி ........ 64
மிகவும் நம்பகமான அமைப்புகள் ........ 64
10 சதவீதம் எத்தனால் கலவை ........ 65
யாத்ரி சுரக்சா நடவடிக்கை ........ 65
வானத்தில் இந்தியத் தேசியக் கொடி ........ 66
INS சாத்புரா கப்பல் - 75 சுற்றுகள் ........ 66
சூப்பர் வாசுகி சரக்கு இரயில் ........ 67
இந்தியாவின் குழந்தை இறப்பு விகிதம் ........ 68
புதிய ஆயுதங்கள் மற்றும் ஆயுத அமைப்பு ........ 68
அடுத்த 25 ஆண்டுகளுக்கான 'பஞ்ச் பிரான்' இலக்கு ........ 69
இந்தியாவில் முதல்முறையாக உப்பு நீர் மூலம் இயங்கும் விளக்கு ........ 70
20% எத்தனால் கலந்த பெட்ரோல் ........ 70
ஆசியாவின் மிகப்பெரிய அழுத்தப்படுத்தப்பட்ட உயிரி எரிவாயு ஆலை ........ 71
வீர் துர்காதாஸ் ரத்தோர் சிலை ........ 71
தேசியப் பாதுகாப்பு உத்திகள் மாநாடு 2022 ........ 72
சஃபாய் மித்ரா சுரக்சித் ஷெஹர் ........ 72
மாந்தன் இயங்குதளம் ........ 72
தேசிய தானியங்கி கைரேகை அடையாளம் காணும் அமைப்பு ........ 73
NIDAAN தரவுத்தளம் ........ 73
வேளாண் கடன்களுக்கான வட்டி மானியம் ........ 74

பாரம்பரிய அறிவுசார் தகவல்களுக்கான டிஜிட்டல் நூலகத்தின் (TKDL) தரவுத் தளம் ..... 74
இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட குரங்கம்மை நோய் பரிசோதனைக் கருவி ..... 75
கிராமீன் உத்யாமி திட்டத்தின் இரண்டாம் கட்டம் ..... 76
நிலக்கரி அமைச்சக விருது 2021-2022 ..... 77
ராஷ்ட்ரிய புரஸ்கார் தளம் ..... 77
உலகம் முழுவதும் மூவர்ணக்கொடி ஏற்றம் ..... 78
தேசிய மகளிர் காவல்துறையினர் மாநாடு ..... 78
புவி வெப்ப ஆற்றல் மையம் – லடாக் ..... 79
வேத் திட்டம் ..... 79
சட்டப்பூர்வ உதவிப் பாதுகாப்பு ஆலோசனை அமைப்பு ..... 79
இந்தியாவின் முதல் மின்சார வாகனச் சூழல் அமைப்பு ..... 80
இந்தியாவின் பிறப்பு நிலை பாலின விகிதம் ..... 80
திருநர்களுக்கு சுகாதாரச் சேவைகள் ..... 81
பினாமி பரிவர்த்தனை (தடை) திருத்தச் சட்டம் 2016 ..... 82
பசுவின் சாணம் மூலமாக உற்பத்தி செய்யப்படும் அழுத்தப்பட்ட உயிரி எரிவாயுத் திட்டம் ..... 83
தேர்தல் வாக்குறுதிகள் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ..... 83
2024 ஆம் ஆண்டிற்குள் அதிகரிக்க உள்ள காற்றாலை திட்டங்கள் ..... 84
மின்கல அடுக்குக் கழிவு மேலாண்மை விதிகள் 2022 ..... 84
ஒரே நாடு ஒரே உரம் திட்டம் ..... 85
தானியங்கி இலக்கத் தகடுகளை ஆய்வு செய்யும் ஒளிப்படக் கருவி ..... 86
கோர்கா படைப்பிரிவின் ஆட்சேர்ப்பு - நேபாளம் ..... 87
இந்தியாவின் சிறந்த உயர் இலட்சியமிக்க மாவட்டம் ..... 87
அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் பெயர் மாற்றம் ..... 88
இந்தியாவின் முதல் பூகம்ப நினைவுச்சின்னம் ..... 88
இந்தியாவின் புதிய தலைமை நீதிபதி ..... 88
75 பழங்குடியின மாவட்டங்கள் - காசநோய் தடுப்பு நடவடிக்கைகள் ..... 89
நாகாலாந்தில் 2வது இரயில் நிலையம் ..... 90
அடல் பாலம் ..... 91
**சர்வதேசச் செய்திகள் ..... 91**
UNAIDS அறிக்கை 2022 ..... 91
ஜிம்பாப்வேயின் தங்க நாணயம் ..... 92
VINBAX பயிற்சி 2022 ..... 92
சாபஹார் தின மாநாடு ..... 93
பாகிஸ்தான் நாட்டிற்கு நிதி வசதி விரிவாக்கம் ..... 93
ஏவுகணை பாதுகாப்புப் பயிற்சி ..... 94
அல்-கொய்தா அமைப்பின் தலைவர் படுகொலை ..... 94
பிட்ச் பிளாக் பயிற்சி 2022 ..... 94
இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்பு ..... 95
வங்காள தேசத்துடன் IOCL நிறுவனம் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ..... 95

யுத் அபியாஸ் பயிற்சி ........ 96
நெதர்லாந்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை ........ 96
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் சந்திப்பு ........ 97
சீனாவின் மிகப்பெரிய இராணுவப் பயிற்சி ........ 97
சிலி நாட்டின் புதிய அரசியலமைப்பு ........ 98
அமெரிக்கக் கடற்படைக் கப்பலின் முதல் பழுதுநீக்கப் பணி ........ 98
தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் 55வது ஆண்டு விழா ........ 99
மேற்கு சேத்தி நதி நீர்மின் நிலையத் திட்டம் ........ 100
வண்ணத்துப்பூச்சி வடிவிலான கண்ணிவெடி ........ 100
"தியாக மண்டலம்" ........ 101
உலக அமைதிக்கான ஆணையம் ........ 101
IMD-UNDP மற்றும் ஜப்பான் ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு பருவநிலை நடவடிக்கைக்கான ஒத்துழைப்பு ........ 102
உதராசக்தி பயிற்சி ........ 102
'அல் நஜா' பயிற்சி ........ 102
சூப்பர் கருடா பாதுகாப்புப் பயிற்சி ........ 103
கிளேட் I மற்றும் கிளேட் II ........ 103
சர்வதேசப் பாதுகாப்பு குறித்த மாஸ்கோ மாநாடு 2022 ........ 103
அனைவருக்கும் இலவச மாதவிடாய்க் கழிவுத் துணி ........ 104
TEXCON மாநாடு ........ 104
ரைன் நதியில் நீர்மட்டம் ........ 104
ஐக்கிய நாடுகள் சபையின் இணையக் குழு ........ 105
தற்கால அடிமைத்தனத்தின் பிற வடிவங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ........ 105
சர்வதேசப் போக்குவரத்து மன்றம் ........ 106
இந்துஸ்தான் வானூர்தியியல் நிறுவனத்தின் சந்தைப் படுத்துதலுக்கான முதல் வெளிநாட்டு அலுவலகம் ........ 107
ஓரினச் சேர்க்கைக்கான தடை ரத்து – சிங்கப்பூர் ........ 107
அதிக வயதான மக்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடு ........ 107
சீனாவில் இதுவரை பதிவாகாத அளவிற்கான மிக நீண்டகால வறட்சி ........ 108
இந்தியா மற்றும் எகிப்து இடையேயான அரசுமுறை உறவுகளின் 75வது ஆண்டு விழா ........ 108
ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் ........ 109
PEN-PLUS உத்தி ........ 110
ஐரோப்பாவில் நிலவும் மோசமான வறட்சி நிலை ........ 110
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் உக்ரைன் மீதான செயல்முறை வாக்கெடுப்பு ........ 111
உலகின் 3வது பணக்காரர் ........ 111
உலகின் மிகக் குறைந்த கருவுறுதல் விகிதம் ........ 112
பொருளாதாரச் செய்திகள் ........ 113
வருடாந்திர அந்நிய நேரடி முதலீடுகள் ........ 113
HDFC வங்கி இணைப்பு ........ 113

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூல் ..... 114
5G அலைக்கற்றை ஏலம் 2022 ..... 114
75,000 அங்கீகரிக்கப்பட்ட தொடக்க நிறுவனங்கள் ..... 115
6 பில்லியன் பரிவர்த்தனைகள் ..... 116
புதிய வரி தளத்தில் பணவழங்கீட்டு முகமை ..... 116
இந்திய ரிசர்வ் வங்கியின் 4வது நிதிக் கொள்கை மறுஆய்வு ..... 116
இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை ..... 117
அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்கான குழு ..... 117
வரிப் பகிர்வு ..... 118
டிஜிட்டல் முறையிலான கடன் வழங்கீடுகளுக்கு விதிக்கப்பட்ட விதிமுறைகள் ..... 118
வருமான வரி செலுத்துவோர் மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் ..... 119
கிராமப்புற கூட்டுறவு வங்கிகளின் தேசிய மாநாடு ..... 119
டிஜிட்டல் வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பின் இயங்குதளத்தில் மைக்ரோசாப்ட் நிறுவனம் ..... 120
2021 ஆம் ஆண்டில் டிஜிட்டல் நாணயம் ..... 120
முதல் உற்பத்திக் குறியீட்டு நிதி ..... 121
எல்லைகளுக்கிடையிலான பாரத் கட்டண வழங்கீட்டு அமைப்பு மூலமான உள் வரவு ..... 121
புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான பிரத்தியேகக் கிளை ..... 122
2029 ஆம் ஆண்டில் 5 டாலர் டிரில்லியன் மதிப்பிலான பொருளாதாரம் ..... 122
அவசர கடன் உத்தரவாதத் திட்டம் ..... 122
மக்கக் கூடிய நெகிழிப் பொருட்களுக்கானக் கடன் ..... 123
இந்தியாவின் முதல் தங்கம் மற்றும் வெள்ளி நிதி ..... 124
2வது பெரிய உள்நாட்டு விமான நிறுவனம் ..... 124
NDTV மற்றும் அதானி குழுமம் ..... 125
கோதுமை மாவு ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் ..... 125
லித்தியம் வழங்கீட்டுச் சேவை – இந்தியா ..... 126
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 127**
AI4Bharat குழுமத்தில் நிலேகனி மையம் ..... 127
இந்தியாவின் முதல் கற்பிக்கும் எந்திர மனிதன் ..... 127
உறுப்புகளைப் படமிடுவதற்கான மீயொலி திறன் கொண்ட பசை போன்ற சாதனம் ..... 127
மிகவும் நீடித்தத் திறன் கொண்ட ஹைட்ரஜன் எரிபொருள் கலம் ..... 128
பைரீன் சீராக்கம் ..... 128
லீப் ஆண்டில் ஒரு வினாடிக்குக் குறைவான சுழற்சி ..... 129
தென் கொரியாவின் நிலவு ஆய்வுப் பயணத் திட்டம் ..... 130
விண்வெளியில் இஸ்ரோவின் மிகச்சிறிய ஏவுகலம் ..... 130
செவ்வாய்க் கிரகத்தின் பல்நிறமாலை வரைபடங்கள் ..... 132
புரதங்களின் வடிவம் ..... 132
உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர் முறையில் வழிகாட்டுகின்ற பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை ..... 133

மேம்படுத்தப் பட்டப் பிணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பு ........ 134
புதிய லாங்யா ஹெனிபாவைரஸ் ........ 134
ஓமிக்ரான் தடுப்பூசிக்கு ஒப்புதல் ........ 135
முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட மனிதக் கருவிழி ........ 136
விந்தணு இல்லாத முதல் செயற்கைக் கருமுட்டை ........ 136
ஆர்ட்டெமிஸ் III ஏவுகலத்திற்கான தரையிறங்கும் தளங்கள் ........ 136
ஹைட்ரஜன் எரிபொருள் கலன் மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்து ........ 137
வணிகம் சார்ந்த விண்வெளிச் சூழ்நிலை குறித்த முன்னுணர்வு ஆய்வகம் ........ 137
VL-SRSAM ........ 138
வியாழன் கோளின் படங்கள் ........ 138
சர்க்கரைக்கான மாற்று "சைலிட்டால்" ........ 139
ஹைட்ரஜன் மூலம் இயங்கும் பயணியர் இரயில்கள் ........ 140
உரையாடல் சாராத ஒலியைப் பயன்படுத்தித் தரவுகளை அனுப்புதல் ........ 140
முப்பரிமாண அச்சிடல் முறையில் கட்டமைக்கப்பட்ட தபால் அலுவலகம் ........ 141
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 141
வளமான சுற்றுச்சூழலுக்கான உரிமை ........ 141
TERI செயல் திட்டம் ........ 141
10 புதிய ராம்சார் தளங்கள் ........ 142
அரிய வகை வெள்ளை நிற யானை ........ 143
போர்ட்லகா ஓலரேசியா ........ 143
இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் புதியப் புத்தகம் ........ 144
கழிவுகள் உருவாக்கம் மற்றும் அதன் மேலாண்மை குறித்த தேசியப் பதிவு அறிக்கை ........ 144
தீபகற்பப் பாறையோந்தி ........ 145
இத்தாலியின் கார்டா ஏரி ........ 145
அழிந்து போன புலி இனங்கள் மீண்டும் உருவாக்கம் ........ 145
மெகலோடன் ........ 146
அரவிந்த் நிலவாழ் மரப் பல்லி ........ 147
மினியோப்டெரஸ் பிலிப்சி ........ 147
அனங் தால் ஏரி ........ 148
மாநிலச் செய்திகள் ........ 149
"கேரளா சவாரி" ஆன்லைன் வாடகை வாகனச் சேவை ........ 149
குஜராத் குறைகடத்திக் கொள்கை ........ 149
Under2 கூட்டணி ........ 149
நாட்டின் மிக நீண்ட கால அவை கூட்டத் தொடர் ........ 150
உள்ளூர் மக்களுக்கு 100% ஒதுக்கீடு ........ 150
கூகிள் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நுண்ணறிவு ஆய்வு அமைப்பிலிருந்து தரவைப் பெறுதல் ........ 151
வேளாண் உள்கட்டமைப்பு நிதிப் பயன்பாட்டில் வெற்றி கண்ட மாநிலம் ........ 151
பர்வாஸ் சந்தை இணைப்புத் திட்டம் ........ 152
பீகார் முதல்வர் ........ 152

அசாம்-மிசோரம் எல்லைப் பிரச்சனை ........ 152
நெதன்னா பீமா திட்டம் ........ 153
கட்டாய வெகுஜன மதமாற்றத்திற்கு எதிரான மசோதா ........ 153
டோன்யி போலோ விமான நிலையம் ........ 154
எஃகுத் தொழிற்சாலைக் கழிவைக் கொண்டு அமைக்கப்பட உள்ள சாலை -அருணாச்சலப் பிரதேசம் ........ 154
வான்வழியாக மருந்து வழங்கீடு ........ 154
முழுமையான செயல்பாட்டுக் கல்வியறிவு பெற்ற முதல் மாவட்டம் ........ 155
இந்தியாவை முதன்மை நாடாக மாற்றுவதற்கான திட்டம் ........ 156
மின்சார இரட்டை அடுக்குப் பேருந்து ........ 156
மகாராஷ்டிரா அரசின் மாநில விளையாட்டு ........ 156
தொடர்ச் சங்கிலித் தொழில்நுட்பம் அடிப்படையில் விதை விநியோகம் ........ 157
மிதிலா மக்கானாவிற்கு புவிசார் குறியீடு ........ 157
இணையவழி மருந்து கண்காணிப்பு அமைப்பு ........ 157
டிஜிட்டல் லோக் அதாலத்தில் 75 லட்சம் வழக்குகள் ........ 158
லக்னோ – இரவு நேரப் பூங்கா ........ 158
20வது பயோ ஆசியா மாநாடு 2023 ........ 158
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 159
ஆசியாவின் பணக்காரப் பெண்மணி ........ 159
புகழ்பெற்ற இந்தியவியலாளர் 2021 ........ 159
மத்திய ஊழல் தடுப்பு ஆணையர் ........ 160
டிபால் இர்ங்காம் டஸ்டன் விருது ........ 160
அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் முதல் பெண் தலைமை இயக்குநர் ........ 160
சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் ........ 161
இந்திய அமெரிக்க அழகி 2022 ........ 161
அமெரிக்கப் பாரம்பரியப் புகழ் மன்றம் ........ 161
சர்வதேச தொழில்முனைவோர் விருது ........ 162
சரோஜ் நாராயணசாமி ........ 162
முதலீட்டாளர் ராகேஷ் ஜுன்ஜுன்வாலா ........ 162
சசி தரூர் - மிக உயரியப் பிரெஞ்சுக் குடிமை விருது ........ 162
சுபாஸ் சந்திர போஸ் நினைவுச் சின்ன அந்தஸ்து ........ 163
ஸ்ரீ அரவிந்தரின் 150வது பிறந்தநாள் ........ 163
லிஸ்பன் ட்ரைன்னாலே வாழ்நாள் சாதனையாளர் விருது ........ 164
சிறந்த காவல் துறைக்கான சர்வதேச விருதுகள் ........ 164
நவ்ரோஸ் திருவிழா ........ 165
நீல நிற அடையாளக் குறியீடு ........ 165
பாண்டுரங் கான்கோஜி சிலை ........ 166
வானியல் மற்றும் வானியற்பியல் தொடர்பான 15வது சர்வதேச ஒலிம்பியாட் போட்டி ........ 166
பட்டுக் குறியீட்டு அமைப்பு ஜவுளிக் கண்காட்சி ........ 167

அண்ணா மொடயில் மணி ........ 167
புலிட்சர் பரிசு 2022 ........ 168
விடுதலைப் பதக்கம் 2022 ........ 168
உலகம் முழுவதும் தனியாக பயணம் மேற்கொண்ட நபர் ........ 168
ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசு 2022 ........ 169
தேசிய கோபால் ரத்னா விருதுகள் 2022 ........ 169
யுனெஸ்கோ அமைப்பின் அமைதிப் பரிசு 2022 ........ 170
பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் புதியத் தலைவர் ........ 170
விளையாட்டுச் செய்திகள் ........ 171
மகளிர் ODI உலகக் கோப்பை போட்டி 2025 ........ 171
காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் 2022 ........ 171
'கேம்ஸ் வைட் ஓபன்' ........ 172
20 வயதிற்குட்பட்டோருக்கான SAFF சாம்பியன்ஷிப் போட்டி - 2022 ........ 172
இந்தியாவின் 75வது கிராண்ட்மாஸ்டர் ........ 173
காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் - ஹாக்கி ........ 173
தங்கப் பதக்கம் - பி.வி. சிந்து ........ 174
காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2022 ........ 174
20 வயதுக்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டி ........ 177
செரீனா வில்லியம்ஸ் ஓய்வு ........ 177
ஆண்டின் சிறந்தக் கால்பந்தாட்ட வீரர் ........ 178
600 டி20 போட்டிகள் ........ 178
பளு தூக்குதல் போட்டியில் கின்னஸ் உலக சாதனை ........ 179
டாடா எஃகு நிறுவனத்தின் இந்திய சதுரங்கப் போட்டி 2022 ........ 179
UEFA சூப்பர் கோப்பை போட்டி 2022 ........ 179
அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு இடைநீக்கம் ........ 179
துராந்த் கோப்பை 2022 ........ 180
FTX கிரிப்டோ கோப்பைப் போட்டி ........ 181
20 வயதிற்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டி ........ 181
முக்கிய தினங்கள் ........ 182
உலக தாய்ப்பால் வழங்கல் வாரம் – ஆகஸ்ட் 01 முதல் 07 வரை ........ 182
முஸ்லிம் பெண்கள் உரிமை தினம் – ஆகஸ்ட் 01 ........ 182
உலக நுரையீரல் புற்றுநோய் தினம் - ஆகஸ்ட் 01 ........ 183
ஹிரோஷிமா தினம் - ஆகஸ்ட் 06 ........ 183
தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்ட் 07 ........ 183
2வது ஈட்டி எறிதல் தினம் - ஆகஸ்ட் 07 ........ 183
நாகசாகி தினம் - ஆகஸ்ட் 09 ........ 183
உலகப் பூர்வகுடி மக்களின் சர்வதேச தினம் - ஆகஸ்ட் 09 ........ 184
உலக சிங்க தினம் - ஆகஸ்ட் 10 ........ 185
உலக உயிரி எரிபொருள் தினம் - ஆகஸ்ட் 10 ........ 185

சர்வதேச இளைஞர் தினம் - ஆகஸ்ட் 12 ........ 186
உலக யானைகள் தினம் - ஆகஸ்ட் 12 ........ 186
உலக உடல் உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 13 ........ 186
உலக சமஸ்கிருத திவாஸ் - ஆகஸ்ட் 12 ........ 187
சர்வதேச இடது கைப் பழக்கம் கொண்டோர் தினம் - ஆகஸ்ட் 13 ........ 187
பிரிவினையின் கொடுந்துயர நினைவு தினம் – ஆகஸ்ட் 14 ........ 187
உலகப் புகைப்பட தினம் - ஆகஸ்ட் 19 ........ 187
உலக மனிதநேய தினம் - ஆகஸ்ட் 19 ........ 188
அக்சய் உர்ஜா திவாஸ் - ஆகஸ்ட் 20 ........ 188
சத்பவ்னா திவாஸ் - ஆகஸ்ட் 20 ........ 189
உலக கொசு நாள் - ஆகஸ்ட் 20 ........ 189
உலக மூத்த குடிமக்கள் தினம் - ஆகஸ்ட் 21 ........ 189
பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கௌரவமளிக்கும் சர்வதேச நினைவு தினம் - ஆகஸ்ட் 21 ........ 190
சமயம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களை நினைவு கூரும் சர்வதேச தினம் - ஆகஸ்ட் 22 ........ 190
உலக தண்ணீர் வாரம் 2022: ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 1 வரை ........ 191
சர்வதேச அடிமை வர்த்தகம் மற்றும் ஒழிப்பு நினைவு தினம் - ஆகஸ்ட் 23 ........ 191
கருப்பு ரிப்பன் தினம் - ஆகஸ்ட் 23 ........ 191
உலக குஜராத்தி மொழி தினம் - ஆகஸ்ட் 24 ........ 192
சர்வதேச இணையவெளி தினம் - ஆகஸ்ட் 23 ........ 192
பெண்கள் சமத்துவ தினம் - ஆகஸ்ட் 26 ........ 192
தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்ட் 29 ........ 192
தெலுங்கு மொழி தினம் - ஆகஸ்ட் 29 ........ 193
அணுசக்திச் சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 29 ........ 193
தேசிய சிறு தொழில் தினம் - ஆகஸ்ட் 30 ........ 193
வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 30 ........ 194
**இதரச் செய்திகள் ........ 194**
உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம் ........ 194
யுனெஸ்கோ அமைப்பின் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் வானியல் ஆய்வகம் ........ 194
காய்கறிகளுக்கான சிறப்பு மையம் ........ 195
இளைஞர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் 2022 ........ 195
இயற்கைக் குறியீடு 2022 ........ 196
தபால் குறியீட்டு எண்ணின் 50 ஆண்டு கால வரலாறு ........ 196
ஃபோர்ப்ஸ் நிறுவனத்தின் 100 முன்னணி மேகக் கணிமை நிறுவனங்களின் பட்டியல் ........ 197
நகரங்களில் காற்று மாசுபாடு மற்றும் சுகாதார நிலை அறிக்கை ........ 198
பாங்க் ஆஃப் அமெரிக்கா செக்யூரிட்டீஸ் இந்தியா நிறுவனத்தின் அறிக்கை ........ 199

# TNPSC துளிகள்

- இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற கிரேக்க-ரோமன் 17 வயதிற்கு உட்பட்ட நபர்களுக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டியில், கடந்த 32 ஆண்டுகளில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை சூரஜ் வசிஷ்ட் பெற்றார்.
- மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் ஆனது, தற்போது விடைபெற்ற குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மற்றும் அவரது முன்னோடிகளின் சில அரிய புகைப்படங்களைக் காட்சிப்படுத்தும் மூன்று புத்தகங்களை வெளியிட்டுள்ளது.
- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தினால் நடத்தப்படும் அனைத்து சர்வதேச மற்றும் உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளுக்கும் Paytm நிறுவனத்திற்குப் பதிலாக இனி மாஸ்டர்கார்டு நிறுவனம் நிதி வழங்கீட்டு நிறுவனமாகச் செயல்படும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, பொது வைப்புத்தொகையை ஏற்காமல், வங்கி சாராத நிதி நிறுவனத்தின் (NBFC) வணிகத்தைத் தொடங்குவதற்கு பிரமல் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் ஒரே மாதத்தில் தொடர்ந்து இரண்டாவது முறையாக வட்டி விகிதங்களை 75 அடிப்படைப் புள்ளிகள் வரை உயர்த்தியது.
    - இது வட்டி விகிதத்தைச் சுழியம் என்ற நிலையில் இருந்து 2.25 சதவிகிதம் முதல் 2.5 சதவிகிதம் வரையிலான வரம்பு வரையில் உயர்த்தியுள்ளது.
- தேசியச் சட்டச் சேவைகள் ஆணையம், தகுதியான கைதிகளை அடையாளம் கண்டு, விசாரணை மறு ஆய்வுக் குழுவிடம் கொண்டுச் செல்வதற்குத் தகுதியான நபர்களை விடுவிப்பதற்குப் பரிந்துரை செய்வதற்காக வேண்டி 'Release UTRC@75' என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- மாவட்டச் சட்டச் சேவைகள் ஆணையத்தின் (DLSA) முதலாவது தேசிய அளவிலான சந்திப்பினைத் தேசியச் சட்டச் சேவைகள் ஆணையம் (NALSA) ஏற்பாடு செய்துள்ளது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது, இந்திய ஒலிம்பிக் சங்கத்துடன் இணைந்து 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முறையாக இந்திய விருந்தோம்பல் இல்லத்தினை அமைக்க உள்ளது.
- மக்கள் கடத்தப்படுவது பற்றிய விழிப்புணர்வினை மக்களுக்கு வழங்குவதற்காக, ஆட் கடத்தலுக்கு எதிரான உலக தினமானது ஜூலை 30 ஆம் தேதியன்று கடைபிடிக்கப் பட்டது.
    - இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் துஷ்பிரயோகம்" என்பதாகும்.
- சர்வதேச நட்பு தினம் ஆண்டுதோறும் ஜூலை 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
    - இந்தியாவில் இந்தத் தினம் ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று (ஆகஸ்ட் 7) அனுசரிக்கப்படுகிறது.
- உலக வனச் சரகர் தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 31 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
    - இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "வனச் சரகர்கள் பன்முகத் தன்மைக்கு அந்நியமானவர்கள் அல்ல" என்பதாகும்.
- சஞ்சுக்தா தாஷ் எழுதிய ஒரு கவிதைத் தொகுப்பான 'லாக் டவுன் லிரிக்ஸ்' என்ற ஒரு புத்தகத்தை ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் வெளியிட்டார்.

- ஐரோப்பியக் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் ஜெர்மனி அணியை வீழ்த்தி இங்கிலாந்து அணி தனது முதல் மகளிர் கால்பந்துப் பட்டத்தை வென்றது.
- 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மகளிருக்கான நான்கு பேர் கொண்ட அணிகளுக்கான போட்டிகளில் இந்திய லான் பவுல்ஸ் அணி தங்கப் பதக்கத்தினை வென்றது.
    - இந்த விளையாட்டுப் பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.
- கடல்வாழ் உயிரியலாளர் எலன் ப்ரேஜர், "Dangerous Earth: What we wish we knew about volcanoes, hurricanes, climate change, earthquakes and more" என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- "Lion of The Skies: Hardit Singh Malik" என்றப் புத்தகத்தை ஸ்டீபன் பார்கர் எழுதியுள்ளார்.
- இந்தியன் ஆயில் என்ற பெருநிறுவனமானது, பெரு நிறுவனச் சமூகப் பொறுப்பின் கீழ் "சிறுத்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு" ஆதரவளிக்க முன் வந்த முதல் பெரு நிறுவனமாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் முதன்மைப் பயன்பாட்டு எரிசக்திக் கலவையில் இயற்கை எரிவாயுவின் அளவினை 15 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்று இந்திய அரசு இலக்கு ஒன்றை நிர்ணயித்துள்ளது.
- அமேசான் இந்தியா நிறுவனமானது, இந்தியாவில் தனது விநியோகச் சேவைகளை அதிகரிப்பதற்காக இந்திய இரயில்வே நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- வோடபோன் ஐடியா லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ரவீந்தர் தாக்கர் அந்நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- 4வது ONGC பாரா விளையாட்டுப் போட்டிகளானது, புதுடெல்லியில் அதிகாரப் பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.
- மத்திய அமைச்சரவை நியமனக் குழுவானது, அமைச்சரவைச் செயலாளர் ராஜீவ் கௌபாவின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டித்தது.
- சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளின் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் உறுப்பினர் அந்தஸ்திற்கு அமெரிக்க மேலவை தீர்க்கமாக ஒப்புதல் அளித்தது.
- இந்தியா-மியான்மர்-தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஒரு முத்தரப்பு நெடுஞ்சாலையை விரைவில் முடிக்க வேண்டியதற்கான அவசியத்தையும் அந்தப் பிராந்தியத்தில் போக்குவரத்து இணைப்பை அதிகரிக்கச் செய்வதற்காக வேண்டி அந்த நெடுஞ்சாலையை கம்போடியா நாடு வரை விரிவுபடுத்தவும் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக முன்னேற்ற வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கான ஒரு முயற்சியில் டெலாய்ட் இந்தியா என்ற நிறுவனத்தினை ஒரு ஆலோசக நிறுவனமாக நியமிப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உத்தரப் பிரதேச அரசு கையெழுத்திட்டது.
- முன்னாள் அரசுமுறை அதிகாரியான ஷியாம் சரண் 'How China Sees India' என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் கலப்பு குழு பிரிவிற்கான போட்டியில் இந்திய பேட்மிண்டன் அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.

- 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் ஆடவருக்கான ஒற்றையர் மேசைப் பந்தாட்டப் போட்டியில் இந்திய வீரர் ஷரத் கமல் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் இரட்டையர் இணை அணியினரான சிராக் ஷெட்டி மற்றும் சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி ஆகியோர் பூப்பந்து (பாட்மிண்டன்) போட்டியில் இந்தியாவிற்கான மூன்றாவது தங்கப் பதக்கத்தினை வென்றனர்.
- தரைப்படை, கடற்படை மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்புகள் குறித்த இந்தியாவின் முதன்மைக் கண்காட்சியான 12வது பாதுகாப்புக் கண்காட்சியானது, குஜராத்தின் காந்திநகரில் நடைபெற உள்ளது.
    - இந்த கண்காட்சியின் கருத்துரு, 'பெருமிதத்தினை நோக்கியப் பாதை' ஆகும்.
- கடந்த ஆண்டு மறைந்த கன்னட நடிகர் புனித் ராஜ்குமாருக்கு அவரது மரணத்திற்குப் பின்னதாக 'கர்நாடக ரத்னா' விருது வழங்கப்பட உள்ளது.
    - கர்நாடக மாநிலத்தின் உயரியக் குடிமை விருதைப் பெற உள்ள 10வது நபர் இவர் ஆவார்.
- உத்தரப் பிரதேச முதல்வர் ககோரி இரயில் கொள்ளை நடவடிக்கையின் 97 ஆம் ஆண்டு நிறைவை நினைவு கூறும் வகையில் "ரேடியோ ஜெய்கோஷ்" என்ற வானொலி அலைவரிசையினைத் தொடங்கி வைத்தார்.
- மைக்ரோசாப்ட் நிறுவனம் மற்றும் இந்திய அரசு ஆகியவை இணைந்து, அந்த நிறுவனத்தின் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துவது குறித்து, கிட்டத்தட்ட 2.5 மில்லியன் அரசு ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு திட்டத்தினை இணைந்துச் செயல்படுத்திட ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளன.
- லாத்வியா மற்றும் எஸ்டோனியா ஆகிய நாடுகள் சீனா மற்றும் 12 மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு ஒத்துழைப்புக் குழுவிலிருந்து விலகியுள்ளன.
    - தைவான் மீதான ராணுவ நெருக்கடியினை அதிகரிப்பது தொடர்பாக மேற்கத்திய நாடுகள் சீனா மீது வீசிய விமர்சனங்களுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.
- அர்ஜென்டினா நாட்டின் கடற்படை அதிகாரியான ரியர் அட்மிரல் கில்லர்மோ பாப்லோ ரியோஸ், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஐக்கிய நாடுகளின் இராணுவக் கண்காணிப்புக் குழுவின் (UNMOGIP) திட்டப் பணித் தலைவராகவும், தலைமை இராணுவக் கண்காணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- 16 வயதிற்குட்பட்டோருக்கான முதலாவது கேலோ இந்தியா மகளிர் ஹாக்கிப் போட்டியானது புதுடெல்லியில் நடைபெற உள்ளது.
- முதலாவது இந்திய மகளிர் பிரீமியர் லீக் போட்டியானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்க உள்ளது.
- வங்காள தேசத்திலுள்ள இந்திய நுழைவு இசைவுச் சீட்டு விண்ணப்ப மையத்தினை மேலும் 2 ஆண்டுகளுக்கு பாரத் ஸ்டேட் வங்கி நிர்வகிக்க உள்ளது.
- நாகலாந்து மாநிலப் பணிப் பிரிவின் இந்திய ஆட்சிப்பணி அதிகாரியான பியூஷ் கோயல், தேசிய உளவுத் துறைக் கட்டமைப்பின் ஒரு புதியத் தலைமை நிர்வாக அதிகாரியாக மத்திய அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், பருவ நிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மாநாட்டு அமைப்பின் (UNFCCC) புதிய நிர்வாகச் செயலாளராக சைமன் ஸ்டீல் என்பவரை நியமித்துள்ளார்.
- சதீஷ் காஷிநாத் மராத்தே, சுவாமிநாதன் குருமூர்த்தி, ரேவதி ஐயர் மற்றும் சச்சின் சதுர்வேதி ஆகியோர் இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியத்தின் அலுவல் பூர்வம் அல்லாத இயக்குநர்களாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- சோமாட்டோ நிறுவனத்தின் ஆதரவு பெற்ற ஒரு தளவாடத் தொழில்நுட்பத் தளமான சிப்ராக்கெட் 33.5 மில்லியன் டாலர் வருவாயினை எட்டியதையடுத்து இந்தியாவின் 106 வது யூனிகார்ன் நிறுவனமாக மாறியது.
- 2வது வடகிழக்கு ஒலிம்பிக் போட்டியினை மேகாலயா மாநில அரசு நடத்த உள்ளது.
  - முதலாவது வடகிழக்கு இந்திய விளையாட்டுப் போட்டிகள் 2018 ஆம் ஆண்டில் மணிப்பூரில் நடைபெற்றது.
- ரஷ்யாவில் நடைபெற உள்ள 2022 ஆம் ஆண்டு வோஸ்டாக் உத்திசார் படைப்பிரிவு மற்றும் பணியாளர் பயிற்சியில் சீனா பங்கேற்க உள்ளது.
  - இந்தப் பயிற்சியில் இந்தியா, பெலாரஸ், தஜிகிஸ்தான் மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகளின் இராணுவப் படைகளும் பங்கேற்க உள்ளன.
- 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஆடவர்களுக்கான மும்முறை தாண்டல் போட்டியில் இந்தியாவின் எல்தோஸ் பால் தனது முதல் தங்கப் பதக்கத்தினை வென்று வரலாற்றைப் படைத்துள்ளார்.
- கோவா மாநிலமானது 'ஹர் கர் ஜல் சான்றிதழ்' பெற்ற முதல் மாநிலமாக மாறியுள்ளது.
  - இதன் அர்த்தம் அந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் மூலம் நீர் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது என்பதாகும்.
- கேரளா மாநில அரசானது இந்தியாவிலேயே முதல் முறையாக மாநில அரசுக்குச் சொந்தமான வகையில் 'கேரள சவாரி' எனப்படும் முதல் இணைய வழியிலான வாடகை வாகனச் சேவையினைத் தொடங்கியுள்ளது.
- சர்வதேச கூடைப்பந்துக் கூட்டமைப்பின் 18 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஆசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியினைப் பெங்களூரு நடத்தவுள்ளது.
- 17வது பிரவாசி பாரதிய திவாஸ் (2023) என்பது அடுத்த ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதி அன்று இந்தூரில் நடைபெறும்.
- மக்களவையின் சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையிலான இந்தியப் பாராளுமன்றக் குழு கனடாவில் உள்ள ஹாலிஃபாக்ஸ் என்னுமிடத்தில் நடைபெறும் 65வது காமன் வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளது.
- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஹோஷியார்பூர் பகுதியைச் சேர்ந்த 20 வயதான மனிஷா கல்யாண், UEFA சாம்பியன்ஸ் லீக் போட்டியில் பங்கேற்ற முதல் இந்தியக் கால்பந்து வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.
- இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, “Bibi: My Story” என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார்.
- HDFC வங்கியானது வடக்கு கேரளாவில் முழுவதும் பெண்களால் இயக்கப் படும் தனது முதலாவது கிளையைத் திறந்துள்ளது.

- சண்டிகர் சர்வதேச விமான நிலையத்திற்கு ஷாஹீத் பகத் சிங் அவர்களின் பெயரைச் சூட்ட பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில அரசுகள் முடிவு செய்துள்ளன.
- வெளியுறவுத் துறை அமைச்சர் தென் அமெரிக்காவிற்கு தான் மேற்கொண்ட தனது முதல் உத்தியோகப் பூர்வ பயணத்தின் போது பராகுவேயில் நிறுவப்பட்டுள்ள காந்தியின் சிலையைத் திறந்து வைத்தார்.
- ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் ஜெய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள 'ராஜீவ் காந்தி மேம்படுத்தப் பட்ட தொழில்நுட்ப மையத்தினை' (R-CAT) திறந்து வைத்தார்.
- யுனெஸ்கோ அமைப்பின் வியத்தகு கலாச்சாரப் பாரம்பரியங்கள் பட்டியலில் இந்திய நடன முறையான கர்பா எனும் நடன முறையினைச் சேர்ப்பதற்கு இந்தியா பரிந்துரை செய்துள்ளது.
  - கடந்த ஆண்டு, துர்கா பூஜை யுனெஸ்கோ அமைப்பின் 2022 ஆம் ஆண்டிற்கான வியத்தகு கலாச்சாரப் பாரம்பரியங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- 23வது மத்திய மண்டல சபைச் சந்திப்பானது போபால் நகரில் நடைபெற்றது.
  - இது சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியதாகும்.
- முழுவதும் தானியங்கு முறையில் சிறப்பாகச் செயல்படும் ஆய்வகம் உள்ளிட்ட அதி நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆசியாவின் மிகப்பெரிய மருத்துவமனையினை பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
  - ஹரியானாவின் பரிதாபாத் நகரில் கட்டப் பட்ட அம்ரிதா மருத்துவமனை மாதா அம்ரிதானந்தா மயி மடத்தின் மூலம் நிதி அளிக்கப் படுகின்றது.
- உத்தரப் பிரதேச அரசு இந்தியாவில் முதல்முறையாக அம்மாநிலத்தில் ஒரு கல்வி நகரத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
  - 'ஒற்றை நுழைவு, பல வெளியேறும் வழி' என்ற ஒரு கருத்தாக்கத்தில் இந்த கல்வி நகரமைப்பு உருவாக்கப்பட உள்ளது.
- பேரிடரினைத் தாங்கக் கூடிய உள்கட்டமைப்புக்கான கூட்டணியை (CDRI) ஒரு 'சர்வதேச அமைப்பாக' வகைப்படுத்துவதற்கு வேண்டி மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- தேசியக் கனிமவள மேம்பாட்டுக் கழக நிறுவனம் மற்றும் FICCI ஆகியவை இணைந்து இந்தியக் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் தொழில் துறை குறித்த ஒரு சர்வதேச மாநாட்டினை ஏற்பாடு செய்தன.
  - இந்த மாநாட்டின் கருத்துரு, '2030 ஆம் ஆண்டினை நோக்கிய மாற்றம் & குறிக்கோள் 2047' என்பதாகும்.
- வரவிருக்கும் 2022 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இடைக் கால தலைமைப் பயிற்சியாளராக V.V.S. லட்சுமண் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியக் கடற்படை கப்பல் கர்ணாவில் அமைக்கப்பட்டுள்ள, இந்தியாவிலேயே இது போன்ற முதல்-வகையான, ஒரு ஒருங்கிணைந்த உட்புற ஏவுதல் தளம் (CISR) துணைப் படைத் தளபதி பிஸ்வஜித் தாஸ்குப்தாவால் திறந்து வைக்கப்பட்டது.
  - ஐஎன்ஸ் கர்ணா என்பது இவ்வாறான ஒரு வசதியினைப் பயன்படுத்துவதில் நாட்டின் கடற்படையில் முதலாவதும் நாட்டின் ஒரேயொரு ராணுவ உபகரணமும் ஆகும்.

- சண்டிகரின் மொஹாலியில் உள்ள முல்லன்பூரில் அமைக்கப்பட்டுள்ள ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- ஆகஸ்ட் 26 ஆம் தேதியானது சர்வதேச நாய் தினமாக அமெரிக்காவின் விலங்கு நல விரும்பி கொலீன் பைஜ் என்பவரால் நிறுவப் பட்டது.
  - ஒரு மனிதனுக்கும் அவரது நாய்க்கும் இடையே உள்ள ஒரு பிரிக்க முடியாதத் தொடர்பையும், நாய்களைத் தத்தெடுப்பதன் முக்கியத்துவத்தையும் இந்தத் தினம் அங்கீகரிக்கிறது.
- ஜம்மு காஷ்மீரில் 1000 அடல் மேம்பாட்டு ஆய்வகங்களை நிறுவ நிதி ஆயோக் அமைப்பானது திட்டமிட்டுள்ளது.
  - இது இந்தியாவில் மத்திய அரசின் அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஒரு துணைத் திட்டமாகும்.
- ரெயில்டெல் மற்றும் க்ளவுட் எக்ஸ்டெல், ஆகியன இரண்டும் இணைந்து தொலைத் தொடர்புப் பயனர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் ஒரு நோக்கத்துடன் தொலைத் தொடர்பு வசதிகள் நெருக்கடி மிக்க இடங்களில், இந்தியாவின் முதல் முறையாக பரவலாக்கப் பட்ட ரேடியோ அணுகல் வலையமைப்பு (RAN) வசதியினை அறிமுகப் படுத்த ஒன்றாக கை கோர்த்துள்ளன.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள திருப்பதியில் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்களின் தேசிய மாநாடு நடைபெற்றது
- உச்ச நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை நடவடிக்கைகள் ஆனது 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.
  - 71 ஆண்டு கால நீதிமன்ற வரலாற்றில் உச்ச நீதிமன்ற நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன், சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியா சார்பான புதிய நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது, பாரத் எரிவாயு வள நிறுவனம் மற்றும் பாரத் பெட்ரோலியம் கழக நிறுவனம் ஆகியவற்றினை ஒன்றாக இணைக்கச் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- விராட் கோலி, சர்வதேச கிரிக்கெட் போட்டியின் வரலாற்றில், கிரிக்கெட் விளையாட்டின் மூன்று வடிவங்களிலும் தலா 100 போட்டிகளில் விளையாடிய முதல் இந்தியர் மற்றும் இரண்டாவது சர்வதேச வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
  - இத்தகையச் சாதனையைப் படைத்த முதல் மனிதர் நியூசிலாந்து வீரர் ராஸ் டெய்லர் ஆவார்.
- இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் ரோஹித் சர்மா, நியூசிலாந்தின் மார்ட்டின் கப்டிலை முந்தி, டி20 கிரிக்கெட்டில் அதிக ரன் குவித்த வீரர் என்ற ஒரு பெருமையைப் பெற்றார்.
  - விராட் கோலி ஆடவர் டி20 சர்வதேசப் போட்டிகளில் அதிக ரன் குவித்த மூன்றாவது வீரர் ஆவார்.

# தமிழ்நாடு செய்திகள்

## குடியரசுத் தலைவரின் வண்ணம் விருது

- குடியரசுத் துணைத் தலைவர் மதிப்பு மிக்க குடியரசுத் தலைவரின் வண்ணம் என்ற விருதினை தமிழகக் காவல்துறைக்கு வழங்கினார்.
- இது மாநிலக் காவல்துறையின் பாராட்டத்தக்கச் சேவை மற்றும் பல சாதனைகளுக்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகும்.
- தென் இந்தியாவில் இருந்து இந்த விருதினைப் பெறும் முதல் மாநிலம் தமிழ்நாடு மட்டுமே ஆகும்.
- இந்தியாவில் மொத்தம் பத்து மாநிலங்கள் மட்டுமே இந்தப் பெருமைமிகு விருதினை வென்றுள்ளன.
- 2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலக் காவல்துறை தான் ஏற்படுத்தப் பட்ட 150வது ஆண்டினை அனுசரித்தது.

## நகர்ப்புற விலங்கு மீட்பு மையம்

- கிண்டி தேசியப் பூங்காவில் நகர்ப்புற விலங்கு மீட்பு மையம் ஒன்று அமைக்கப் பட்டு உள்ளது
- தமிழ்நாடு வனத்துறையின் இத்தகைய முதல் வகை மையமானது, காயமடைந்த மற்றும் மீட்கப்பட்ட வனவிலங்குகளுக்கு உதவி வருகிறது.
- இந்த மையம் ஒரு போக்குவரத்து வசதி கொண்ட மையமாகும்.
- அங்கு மீட்கப்பட்ட விலங்குகள் அழைத்துச் செல்லப்பட்டு, அவற்றின் காயங்களுக்கு சிகிச்சையளிக்கப் பட்டு, போதுமான அளவு நலமாக அடைந்த பின்னர் அவை மீண்டும் விடுவிக்கப் படுகின்றன.

## i-Tamil Nadu தொழில்நுட்ப மையம்



- I-Tamil Nadu தொழில்நுட்ப (iTNT) மையத்தினை மாநில அரசு தொடங்க உள்ளது.
- இது சிக்கலான சவால்களைத் தீர்ப்பதற்கு செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல் மற்றும் தொடர்சங்கிலி போன்ற சில தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தச் செய்வதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் ஒரு மையமாகும்.
- தமிழ்நாட்டின் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் உந்துதலைக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கையானது எடுக்கப்பட்டுள்ளது.

## செவாலியர் விருது

- கண்ணன் சுந்தரம் அவர்களுக்கு செவாலியர் டி எல் ஆர்ட்ரே நேஷனல் டு மெரைட் விருதை வழங்க உள்ளதாக பிரெஞ்சு அரசு அறிவித்துள்ளது.
- இவர் காலச்சுவடு பதிப்பகத்தின் இயக்குனர் ஆவார்.
- இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு இடையேயான வெளியீட்டுத் துறை ஒத்துழைப்பிற்கு இவர் ஆற்றியப் பங்களிப்பிற்கான அங்கீகாரமாக இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.

## கோவிலின் உண்மை நிலையை மீட்டளித்தல்

- சேலம் அருகே உள்ள தலைவெட்டி முனியப்பன் கோவிலானது இனி புத்தக் கோவிலாக கருதப்படும்.
- இதுவரை, இந்தக் கோவிலில் உள்ள உள்ளூர் தெய்வமானது இந்து மதச் சடங்குகளின் படி வழிபடப் பட்டது.
- இக்கோயிலானது சேலத்திற்கு அருகில் உள்ள பெரியேரி கிராமத்தில் கோட்டைச் சாலையில் அமைந்துள்ளது.
- உயர்நீதிமன்றமானது ஆய்வு ஒன்றை நடத்தி, அக்கோவிலின் "அடையாளம் மற்றும் தொன்மை" ஆகியவற்றைத் தீர்மானித்து, புத்தர் அறக்கட்டளையிடம் மீண்டும் அதனை ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுத்தது.



***அக்கோவிலில் உள்ள சிறப்பங்கள்***


- கோவிலில் உள்ள அந்தச் சிலையானது தாமரை பீடத்தின் மீது அர்த்தப் பத்மாசனம் எனப்படும் அமர்ந்த நிலையில் இருந்தது.
- அதன் கைகள் 'தியான முத்திரை' வடிவில் சித்தரிக்கப் பட்டுள்ளது.
- அந்த உருவமானது சக்தி எனப்படுகிறது.
- தலையில் சுருள் முடி, உச்சிக் கொண்டை மற்றும் நீளமான காதுமடல் போன்ற புத்தரின் உடல் அம்சங்களை இது குறிக்கிறது.

## சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளின் நிறைவு விழா

- 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின் பிரமாண்ட நிறைவு விழாவானது சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.
- சர்வதேச சதுரங்கப் போட்டியானது, சென்னை அருகே உள்ள ஷெரட்டன் மாமல்லபுரம் உல்லாச விடுதி மற்றும் மாநாட்டு மையத்தில் நடைபெற்றது.
- இந்தப் போட்டியில் உலகெங்கிலும் உள்ள 187 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் 700 பலகைகளில் போட்டியிட்டனர்.
- FIDE அமைப்பின் அடுத்த சதுரங்க ஒலிம்பியாட் போட்டியானது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடைபெற உள்ளது.
- சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்ற முதல் இந்திய வீரரான சென்னையைச் சேர்ந்த 86 வயதான கிராண்ட் மாஸ்டர் மானுவல் ஆரோன் தமிழக முதல்வரால் கௌரவிக்கப் பட்டார்.
- 44வது சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் மொத்தம் 17 இந்தியர்கள் பதக்கம் வென்று உள்ளனர்.
- இதில் தனிநபர்கள் பெற்ற 2 தங்கம், 1 வெள்ளி, தலா 4 வெண்கலம் மற்றும் அணிகள் பெற்ற 10 வெண்கலம் ஆகிய பதக்கங்கள் அடங்கும்.
- ஓபன் போட்டிப் பிரிவில் உஸ்பெகிஸ்தான், ஆர்மேனியா, இந்தியா பி அணிகள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றன.
- இந்திய பி அணியானது பிரக்ஞானந்தா, குகேஷ், நிஹால், ரவுனக் மற்றும் அதிபன் ஆகியோர் அடங்கிய ஒரு அணியாகும்.
- பெண்கள் பிரிவில் உக்ரைன், ஜார்ஜியா, இந்தியா ஏ ஆகிய அணிகள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றன.
- இந்திய மகளிர் ஏ அணியில் ஹரிகா துரோணவல்லி, கோனேரு ஹம்பி, R.வைஷாலி, பக்தி குல்கர்னி, தான்யா சச்தேவ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.
- வீரர்களின் வெற்றி மற்றும் தர மதிப்பீட்டின் அடிப்படையில் தனிநபர்களுக்கு வழங்கப் பட்ட பதக்கங்களில், இந்திய இளம் வீரர்கள் குகேஷ் மற்றும் நிஹால் சரீன் தங்கம் வென்றனர்.
- ஏ அணி வீரர் அர்ஜுன் எரிகைசி வெள்ளியும், பி அணி வீரர் பிரக்ஞானந்தா வெண்கலமும் வென்றனர்.
- பெண்கள் பிரிவில் தான்யா சச்தேவ், திவ்யா தேஷ்முக் மற்றும் R.வைஷாலி ஆகியோர் வெண்கலப் பதக்கத்தினை வென்றனர்.

## சென்னையின் இரண்டாவது விமான நிலையம்

- ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள பரந்தூர் என்ற இடம் சென்னை பசுமை வளாக விமான நிலையத்தினை நிறுவுவதற்கான இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- முன்னதாக, சென்னைக்கு அருகில் ஒரு கிரீன் ஃபீல்டு விமான நிலையத்தை கட்டமைப்பதற்காக நான்கு இடங்களைத் தமிழக அரசு அதிகாரிகள் அடையாளம் கண்டு தேர்வு செய்தனர்.
- பன்னூர், பரந்தூர், திருப்போரூர் மற்றும் படாளம் ஆகிய நான்கு இடங்கள் கண்டறியப் பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்தினால் ஆய்வு செய்யப்பட்டது.




## தங்க நெற்றிப் பட்டயம்

- இந்தியத் தொல்லியல் துறையானது ஆதிச்சநல்லூரில் தங்க 'நெற்றிப் பட்டயம்' ஒன்றைக் கண்டெடுத்துள்ளது.
- இந்த 'நெற்றிப் பட்டயம்' ஆனது 3.50 செ.மீ நீளம் கொண்டது.
- பிரித்தானியத் தொல்பொருள் ஆய்வாளர் அலெக்சாண்டர் 1902 ஆம் ஆண்டில் இதே போன்ற ஒரு ஆபரணத்தைக் கண்டெடுத்தார்.
- மேலும், ஒரு வெண்கல வடிகட்டி, ஒரு அலங்காரக் கிண்ணம், ஒரு இரும்பு ஈட்டி மற்றும் ஒன்பது இரும்பு அம்புகளும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன.
- முன்னதாக ஜூன் மாதத்தில் ஒரு தங்கக் காதணியையும் இந்தியத் தொல்லியல் துறை இங்கு கண்டெடுத்துள்ளது.



## பவள மணிகள் கண்டுபிடிப்பு

- சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொந்தகை என்னுமிடத்தில் 74 பவள மணிகள் கொண்ட குவியல் ஒன்று கண்டெடுக்கப் பட்டது.
- இது கீழடிப் பிரிவின் ஒரு பகுதியாகும்.
- இந்த மணிகள் ஒரு கலசத்திற்குள் காணப்பட்டன.
- முன்னதாக கொடுமணல் மற்றும் தாண்டிக்குடி பகுதிகளில் கார்னிலியன் (பவள மணிகள்) மணிகள் கண்டெடுக்கப்பட்டன.
- கொந்தகை அகழாய்வுத் தளத்தில் இவை கண்டெடுக்கப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.



## தகைசால் தமிழர் விருது

- தமிழக அரசின் 2022 ஆம் ஆண்டிற்கான தகைசால் தமிழர் விருதுக்கு மூத்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் R.நல்லகண்ணு (96) அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று நடைபெற உள்ள சுதந்திரத் தின விழாவின் போது இந்த விருதானது அவருக்கு வழங்கப்பட உள்ளது.
- நல்லகண்ணு தனது 11வது வயதில் (1936) ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக தமது போராட்டத்தைத் தொடங்கினார்.
- 1937 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் பணியாற்றும் போது அவருக்கு வயது 12 ஆகும்.
- 1944 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, சென்னையில் உள்ள ஜன சக்தி அமைப்பிற்காக பணியாற்றத் தொடங்கினார்.
- இந்த விருதை முதன் முதலில் பெற்ற நபர் இந்திய மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் N.சங்கரய்யா ஆவார்.


## அஇஅதிமுக கட்சியின் முதல் பாராளுமன்ற உறுப்பினர்

- அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் முதல் பாராளுமன்ற உறுப்பினர் திரு மாயத் தேவர் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- 1973 ஆம் ஆண்டு திண்டுக்கல் மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலின் போது ‘இரட்டை இலை’ சின்னத்தில் போட்டியிட்டு இந்தக் கட்சியின் முதல் வெற்றியை இவர் பதிவு செய்தார்.

- பின்னர் அவர் இந்தக் கட்சியில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியில் இணைந்தார்.
- அவர் தி.மு.க. கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1980 ஆம் ஆண்டில் மீண்டும் திண்டுக்கல் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## 5வது யானைகள் காப்பகம்

- தமிழக மாநில அரசானது அகஸ்தியமலை யானைகள் காப்பகத்தினை ஒரு புதிய யானைகள் காப்பகமாக அறிவித்தது.
- தமிழகத்தின் ஐந்தாவது யானைகள் காப்பகமான அகஸ்தியமலை திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இந்தியாவில் 31 யானைகள் காப்பகங்கள் உள்ளன.
- கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட யானைகள் காப்பகங்கள்
  - தாந்தேலி யானைகள் காப்பகம் - கர்நாடகா
  - சிங்பன் யானைகள் காப்பகம் - நாகாலாந்து
  - லெம்ரு யானைகள் காப்பகம் - சத்தீஸ்கர்




## புதிய ராம்சார் தளங்கள்

- தமிழகத்தில் நான்கு தளங்கள் ராம்சார் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இது மாநிலத்தின் மொத்த ராம்சார் தளங்களின் எண்ணிக்கையை 14 ஆக உயர்த்தி உள்ளது.
- மத்தியச் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது புதிதாக 11 இந்தியத் தளங்களை ராம்சார் பட்டியலில் சேர்த்தது.
- எனவே, தற்போது நாட்டில் உள்ள சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களின் எண்ணிக்கை 75 ஆகும்.
- தமிழ்நாட்டின் 4 புதிய சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள்
  - சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் - ராமநாதபுரம் மாவட்டம்

- காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் - ராமநாதபுரம் மாவட்டம்
- வடுவூர் பறவைகள் சரணாலயம் - திருவாரூர் மாவட்டம் மற்றும்
- சுசீந்திரம் தேரூர் சதுப்பு நில வளாகம்- கன்னியாகுமரி மாவட்டம்

❖ மற்ற தளங்களுள் ஒடிசாவில் உள்ள மூன்று தளங்கள், ஜம்மு காஷ்மீரில் உள்ள இரண்டு தளங்கள் மற்றும் மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா ஒரு தளங்கள் ஆகியவை அடங்கும்.

❖ தற்போது நாட்டிலேயே அதிகபட்ச ராம்சார் தளங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள (14) நிலையில், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (10) மாநிலம் இடம் பெற்றுள்ளது.

❖ 1982 முதல் 2013 ஆம் ஆண்டு வரை மொத்தம் 26 தளங்கள் ராம்சார் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

❖ 2014 ஆம் ஆண்டு முதல், 49 தளங்கள் இந்த முக்கிய அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளன.




## சித்தா பல்கலைக்கழக மசோதா

❖ சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்காக ஏப்ரல் மாதம் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவினை ஆளுநர் அலுவலகம் திருப்பி அனுப்பியுள்ளது.

❖ இந்த மசோதாவின்படி, ஆளுநருக்குப் பதிலாக தமிழக முதல்வர் அவர்கள் இந்த முன் மொழியப்பட்ட பல்கலைக்கழகத்தின் வேந்தராகச் செயல்படுவார்.

❖ சென்னை அருகே உள்ள மாதவரத்தில் சுமார் 20 ஏக்கர் நிலத்தைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்காக மாநில அரசு ஒதுக்கி வைத்துள்ளது.

## நெய்தல் உப்பு

- தமிழக முதல்வர் அவர்கள் நெய்தல் உப்பு என்ற தயாரிப்பினை அறிமுகம் செய்தார்.
- இது தமிழ்நாடு உப்பு உற்பத்திக் கழகத்தால் தயாரிக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்படும் உப்பாகும்.
- நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 300 லட்சம் மெட்ரிக் டன் உப்பில் 8% அளவினை (24 லட்சம் மெட்ரிக் டன்) தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது.
- தமிழக மாநிலமானது உப்பு உற்பத்தியில் இந்தியாவில் குஜாரத் மாநிலத்தினை அடுத்து இரண்டாவது இடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு உப்பு உற்பத்திக் கழகம் ஆனது 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியாவில் உப்பு மற்றும் உப்பு சார்ந்தப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, மாநில அரசுக்குச் சொந்தமான ஒரே நிறுவனம் இதுவாகும்.

## போதைப் பொருட்களின் தவறானப் பயன்பாடுகளுக்கு எதிரான விழிப்புணர்வு தினம்

- ஆகஸ்ட் 11 ஆம் தேதியானது, தமிழ்நாட்டில் போதைப் பொருட்களின் மீதான தவறானப் பயன்பாடுகளுக்கு எதிரான விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்பட்டது.
- மேலும் அந்நாளில் மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- போதைப் பொருட்கள் சமூகத்திற்கு மிக அச்சுறுத்தலாக விளங்குவதால், அது முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஒருங்கிணைந்த நிலப் பதிவேடு

- தமிழக அரசானது, ஒருங்கிணைந்த நிலப் பதிவேட்டினை வெளியிட உள்ளது.
- இது "சிட்டா", நில அளவீட்டுப் புத்தகம் மற்றும் "அடங்கல்" நிலத்தொகுதிகள் ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட ஓர் ஆவணமாகும்.
- தற்போதைய நிலவரப்படி, சிட்டா படிவத்திலுள்ள எழுத்து சார்ந்தத் தரவுகள் மற்றும் அடங்கல் படிவத்திலுள்ள இடம் சார்ந்த தரவுகள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.
- சமீபத்தியத் தரவுகளை உள்ளடக்கும் வகையில் இணையவழி அடங்கல் படிவங்கள் திருத்தி அமைக்கப் படுகின்றன.
- இணையவழி அடங்கல் படிவங்கள் 2.0 என்பது தொடங்கப்பட்ட பின்னர், மற்ற இரண்டு ஆவணங்களுடன் அது நிரப்பப்பட்டவுடன், ஒருங்கிணைந்த நிலப் பதிவேடானது தானாக நில உரிமையாளர்களுக்குக் கிடைக்கப் பெறும்.
- "சிட்டா" படிவமானது, நில உரிமையாளர் அல்லது உரிமையாளர்களின் பெயர்கள், அதன் கணக்கீட்டு எண் மற்றும் அந்த நிலம் அமைந்துள்ள வருவாய் மாவட்டத்தின் உட்பிரிவுகள், நில அளவு ஆகிய விவரங்களைக் கொண்டு உள்ளது.
- நில அளவீட்டுப் புத்தகமானது நில அளவைப் படத்தினையும், அடங்கல் படிவம் அந்த நிலத்தில் வளரும் பயிர்களின் தகவல்களையும் உள்ளடக்கியது.

## கருப்பையக கருத்தடைச் சாதனப் பயன்பாட்டில் சிறந்த செயல்திறன்

- மகப்பேறிற்குப் பிந்தைய கருப்பையக கருத்தடைச் சாதனப் பயன்பாட்டினை அதிக எண்ணிக்கையில் பயன்படுத்துவதில் தமிழக மாநிலம் இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.
- மகப்பேறிற்கு பிந்தைய கருப்பையக கருத்தடைச் சாதனம் பெண்களுக்குக்கான ஒரு தற்காலிகக் கருத்தடை முறையாகும்.
- தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக இந்தச் சாதனத்தின் பயன்பாட்டில் அதிக செயல் திறன்கள் பதிவாகியுள்ளன.
- 2019-20 ஆம் ஆண்டில், மொத்தம் 2,53,648 பெண்களுக்கும், 2020-21 ஆம் ஆண்டில் 3,19,936 பெண்களுக்கும் மற்றும் 2021-22 ஆம் ஆண்டில் 3,61,028 பெண்களுக்கும் இந்தச் சாதனம் பொருத்தப் பட்டது.

## "ஜாதியற்ற, மதமற்ற குடிமகன்" சான்றிதழ்

- சென்னையைச் சேர்ந்த ஒரு மூன்று வயது குழந்தைக்கு ஜாதி, மதம் அற்றவர் என்ற ஒரு சான்றிதழை இரண்டு வாரங்களுக்குள் அரசு வழங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- மாநில அரசு பிறப்பித்த இரண்டு அரசு ஆணைகளின்படி தனக்குச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று மனுதாரர் கோரியிருந்தார்.

## சென்னை தினம் - ஆகஸ்ட் 22



- 1639 ஆம் ஆண்டின் இந்நாளில் தான் மெட்ராஸ் (சென்னை) நகரம் நிறுவப்பட்டதாக நம்பப் படுகிறது.
- இந்நாளில், செயின்ட் ஜார்ஜ் கோட்டையை கட்டமைப்பதற்காக சுதேச அரசரிடமிருந்து நிலம் ஒன்றை வாங்கி கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தினால் இந்த நவீன கால நகரத்திற்கான அடித்தளம் நிறுவப்பட்டது.
- கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பாக ஆண்ட்ரு கோகன் என்பவரும் பிரான்சிஸ் டே என்பவரும் விஜயநகரப் பேரரசின் ஆளுநரான தாமர்லா வெங்கடாத்ரி நாயக்கர் என்பவரிடமிருந்து இந்த இடத்தினை வாங்கினர்.
- இந்த ஆண்டு இந்த நகரம் நிறுவப்பட்டதன் 383வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 2004 ஆம் ஆண்டு முதல் சென்னை தினம் கொண்டாடப்படும் ஒரு நடைமுறையானது தொடங்கியது.

## காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022

- 2022 ஆம் ஆண்டின் ‘தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கையினை’ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.
- இந்தக் கொள்கையானது, 2025 ஆம் ஆண்டிற்குள் தோல் துறையில் ரூ.20,000 கோடி முதலீட்டை உள்வாங்கி, 2 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இராணிப்பேட்டையின் பனப்பாக்கத்தில் மாபெரும் காலணி உற்பத்திப் பூங்காவினை நிறுவுவதற்கான அடிக்கல்லினையும் முதல்வர் அவர்கள் நாட்டினார்.
- காலணி உற்பத்திப் பிரிவின் தேசிய உற்பத்தி மதிப்பில் 26 சதவீதப் பங்களிப்பையும், தேசிய ஏற்றுமதியில் 48 சதவீதத்தையும் தமிழ்நாடு மாநிலம் வழங்குகிறது.

## அமெரிக்காவில் சோழர் கால சிலைகள்

- அமெரிக்காவில் உள்ள க்ளீவ்லேண்ட் அருங்காட்சியகம் மற்றும் கிறிஸ்டியின் ஏலக் கூடத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த ஆறு அழகுமிக்க வெண்கலச் சிலைகள் தற்போது கண்டறியப் பட்டன.
- அந்தப் பஞ்சலோக சிலைகள் திரிபுராந்தகா, திரிபுரசுந்தரி, நடராஜர், தட்சிணாமூர்த்தி வீணாதாரர், துறவி சுந்தரர் மற்றும் அவரது மனைவி பறவை நாச்சியார் ஆகியன ஆகும்.
- இந்தச் சிலைகள் 1960 ஆம் ஆண்டுகளில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வீரசோழ புரம் என்ற கோயிலில் இருந்து காணாமல் போயின.
- இக்கோயில் ஆனது 900 ஆண்டுகளுக்கு முன்பு சோழ மன்னன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது.
- ஒஹியோவில் உள்ள கிளீவ்லேண்ட் கலைப்பொருட்கள் அருங்காட்சியகத்தின் ஒரு அதிகாரப் பூர்வ இணையதளத்தில் திரிபுராந்தகா மற்றும் திரிபுரசுந்தரி ஆகிய சிலைகள் காணப் பட்டன.



## குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான புதிய திட்டங்கள்

- திருப்பூரில் நடைபெற்றப் பிராந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான பல முன்னெடுப்புகளை தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

***தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS)***

- இந்தத் திட்டமானது, இந்திய அரசின் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத அறக்கட்டளையுடன் இணைந்து ரூ.40 லட்சம் வரையிலான தகுதி வாய்ந்த கடன்களுக்கு 90% உத்தரவாதத்தை வழங்கும்.
- தமிழக அரசானது இந்தத் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் தொகையினை ஒதுக்கி உள்ளது.
- இந்தக் கொள்கையின் கீழ், குறைந்தபட்சம் மூன்று தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பதினைந்து நாட்களுக்குள் கடன்களை வழங்கும்.


***தமிழ்நாடு வர்த்தக வரவு தள்ளுபடி முறை (TN TREDS)***

- தமிழ்நாடு வர்த்தக வரவு தள்ளுபடி முறை என்பது ஒரு நிறுவனத்தின் வளத் திட்டமிடல் (ERP) ரீதியில் பெரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வழங்கீடுகளுக்குத் தாமதமாக பணம் செலுத்துவதில் உள்ள சிக்கல்களைச் சரி செய்யும் ஒரு தளமாகும்.
- இந்தத் தளமானது அரசுக்குச் சொந்தமான அனைத்து நிறுவனங்கள், சட்டப்பூர்வ வாரியங்கள், பெருநிறுவனங்கள் மற்றும் உயர்நிலைக் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அணுகக் கூடியதாக இருக்கும்.
- 179வது நாளின் இறுதிக்குள் தமிழ்நாடு வர்த்தக வரவு தள்ளுபடி முறை தளத்தில் இடம் பெற்றிருக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அரசு நிறுவனம் பணம் செலுத்தவில்லை என்றால், தமிழ்நாடு வர்த்தக வரவுத் தள்ளுபடி முறையில் பதிவேற்றப் பட்ட கட்டணங்களுக்கான நிலுவைத் தொகையை TAICO வங்கி 180வது நாளில் செலுத்தும்.

***மற்ற முன்னெடுப்புகள்***

- இந்த நிகழ்ச்சியின் போது அரசானது குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவன வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வாரியத்தின் பெயரினை (M-TIPB) "FaMeTN" என மறு பெயரிட்டது.

- கோவையில் தமிழ்நாடு தென்னை நார் வணிக மேம்பாட்டுக் கழகத்தை முதல்வர் அவர்கள் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.
- இது புதிய தென்னை நார் உற்பத்தித் தொழிற்சாலைகளை நிறுவுதல், சர்வதேச வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளுதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களை நிறுவுதல் மற்றும் தொழில் மற்றும் கல்வித்துறை இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.




| Project | Location | Cost |
|---|---|---|
| Foundation stone for industrial estate by COSIEMA | Solavampalayam | ₹18.13 |
| Flatting factory complex for silver anklet makers | Ariyagoundapatti in Salem | ₹24.55 |
| Housing units in Kurichi Indl Estate | Coimbatore | ₹22 |
| Common Facility centre at Narayanapuram | Palladam | ₹15.34 |

## சாகித்ய அகாடமியின் பால் சாகித்ய புரஸ்கார் 2022

- 23 மொழிப் பிரிவினைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு பால் சாகித்ய புரஸ்கார் வழங்கப் படும் என்று சாகித்ய அகாடமி அறிவித்தது.
- 24 மொழி எழுத்தாளர்களுக்கு யுவ சாகித்ய புரஸ்கார் விருதும் வழங்கப்படும் என்றும் அகாடமி அறிவித்துள்ளது.
- பால் சாகித்ய புரஸ்கார் பிரிவில், பஞ்சாபி மொழியில் இந்த ஆண்டு விருது வழங்கப் படவில்லை.
- சந்தாலி மொழிக்கான பால் சாகித்ய புரஸ்கார் விருதானது பின்னர் அறிவிக்கப்படும்.
- மராத்தி மொழியில் இளைஞர் விருது பிரிவில், விருது பெறுபவர் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.
- தமிழில் மல்லிகாவின் வீடு என்றப் படைப்பிற்காக G.மீனாட்சிக்குப் பால் சாகித்ய புரஸ்கார் வழங்கப்படும்.
- தமிழில் தனித்திருக்கும் அரளிகளின் மதியம் என்றப் படைப்பிற்காக பா.காளிமுத்து என்பவருக்கு யுவ புரஸ்கார் விருது வழங்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## 11வது வேளாண் கணக்கெடுப்பு

- 11வது வேளாண் கணக்கெடுப்பு (2021-22) ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்தக் கணக்கெடுப்பின் முக்கிய நோக்கமானது, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பது மற்றும் சிறு விவசாயிகளை ஒழுங்கமைப்பதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பது என்பதாகும்.
- இந்த ஆண்டு, முதல் முறையாக திறன்பேசிகள் மற்றும் வரைபட்டிகை ஆகியவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்படும்.
- வேளாண் கணக்கெடுப்பானது, 5 ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தப்படுகிறது.
- வேளாண் கணக்கெடுப்புத் திட்டம் ஆனது 1970-71 ஆம் ஆண்டு முதல் வேளாண் அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இதற்காக 1970-71 ஆம் ஆண்டானது குறிப்பு ஆண்டாக எடுத்துக் கொள்ளப்பட்டது.
- இதற்கு முன்பாக வேளாண் கணக்கெடுப்பு 2015-16 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## இந்தியாவில் இணையப் பயன்பாடு பற்றிய அறிக்கை 2022

- இந்திய இணையம் மற்றும் கைபேசி கூட்டமைப்பானது, "இந்தியாவில் இணையம்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- சுமார் 346 மில்லியன் இந்தியர்கள் எண்ணிம முறையிலான பணம் செலுத்துதல் மற்றும் இணைய வர்த்தகம் உள்ளிட்ட நிகழ்நேரப் பரிவர்த்தனைகளை மேற் கொள்ளச் செய்கின்றனர்.
- எண்ணிமப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் மக்களின் எண்ணிக்கை 331 மில்லியனாக இருக்கும் அமெரிக்க நாட்டினை அந்த எண்ணிக்கையில் இந்தியா விஞ்சியுள்ளது.
- உலகளவில் ஏற்பட்ட கோவிட்-19 பெருந்தொற்றானது எண்ணிமப் பரிவர்த்தனைகளை 51% அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், 230 மில்லியன் மக்கள் எண்ணிமப் பரிவர்த்தனையில் ஈடுபட்டு உள்ளனர்.
- தற்போது, நாட்டில் 692 மில்லியன் மக்கள் இணையப் பயனர்களாக உள்ளனர்.
- 351 மில்லியன் பேர் கிராமப்புறங்களிலிருந்தும், 341 பேர் நகர்ப்புறங்களிலிருந்தும் இணையப் பயனர்களாக உள்ளனர்.



## சாகசச் சுற்றுலா

- சுற்றுலாத் துறை அமைச்சகமானது, சமீபத்தில் சாகசச் சுற்றுலாவை "ஒரு முக்கியச் சுற்றுலாத் துறையாக" அங்கீகரித்துள்ளது.
- சாகசச் சுற்றுலாவில் நீர் சார்ந்த விளையாட்டு முறைகளும் அடங்கும்.
- இந்த அமைச்சகமானது, "சாகசச் சுற்றுலாவுக்கான தேசிய உத்திகளை" தயாரித்து உள்ளது.
- இந்திய நாட்டினை சாகசச் சுற்றுலாவிற்கு உலகளவில் விருப்பமிகு இடமாக மாற்றச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுற்றுலாத் துறை செயலாளரைத் தலைவராகக் கொண்டு, தேசிய சாகசச் சுற்றுலா வாரியமும் இதற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- முக்கியச் சுற்றுலாத் துறை என்பது குறிப்பிட்டப் பார்வையாளர்கள் அல்லது சந்தைப் பிரிவினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்டச் சுற்றுலா முறையாகும்.




## கூகுள் வரைபடத்தில் வீதிக் காட்சி அம்சம்





- கூகுள் வரைபடமானது இந்தியாவில் 10 நகரங்களுடன் சேர்த்து ஹைதராபாத்தில் வீதிக் காட்சிச் சேவையை அறிமுகப்படுத்தியது.

- ❖ கூகுள் வரைபடமானது, ஹைதராபாத்தை சேர்ந்த இரண்டு நிறுவனங்களுடன் இணைந்து இந்தச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது பெங்களூர், சென்னை, டெல்லி, மும்பை, ஹைதராபாத், புனே, நாசிக், வதோதரா மற்றும் அகமது நகர் உள்ளிட்ட 10 நகரங்களின் சமீபத்தியப் புகைப்படங்களைக் கிடைக்கச் செய்கிறது.
- ❖ இது உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து மேற்கூறிய நகரங்களில் 1,50,000 கி.மீ. பரப்பளவின் புகைப்படங்களை வழங்குகிறது.

## ஆழ்கடல் அகழ்வு - தேசிய அறிவியல் விருது

- ❖ இந்தியப் பெருங்கடலின் மத்தியப் பகுதியில் ஆழ்கடல் சுரங்க அமைப்பிற்கான உலகின் முதல் எந்திரச் சோதனைகளை நடத்திய இந்திய அறிவியலாளர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் தேசிய அறிவியல் விருதை வழங்கினார்.
- ❖ மேலும், முதல் வகையான மற்றும் அதிநவீன ரீதியில் முழுவதும் தன்னிச்சையாக இயங்கும் மிதவை அடிப்படையிலான கடலோரக் கண்காணிப்பு மற்றும் இந்தியப் பெருங் கடலுக்கான நீரின் தர அறிவிப்பு அமைப்பினையும் அவர் திறந்து வைத்தார்.
- ❖ இது இந்தியத் தேசியக் கடல் தகவல் சேவை மையத்தினால் உருவாக்கப்பட்டது.
- ❖ மேலும், இது இந்தியாவின் ஆழ்கடல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ❖ கடலில் 200 மீட்டர் ஆழத்திற்கு கீழே உள்ள பகுதி ஆழ்கடல் என்று வரையறுக்கப் படுகிறது.
- ❖ இந்தப் பகுதியில் இருந்து கனிமங்களைப் பிரித்தெடுக்கும் செயல்முறை ஆழ்கடல் அகழ்வு என்று அழைக்கப்படுகிறது.



Source: International Union for Conservation of Nature, Nature Journal

## கரிக்கியூர் பாறை ஓவியங்கள்


- ❖ கரிக்கியூர் பாறை ஓவியங்கள் ஆனது குன்றின் செங்குத்துப் பக்க ஓரங்களில் செதுக்கப் பட்ட 300க்கும் மேற்பட்ட படங்களைக் கொண்டதாகும்.
- ❖ அவை 5,000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை என்று நம்பப்படுகிறது.

- சமீபத்திய தசாப்தங்களில் நீலகிரி முழுவதும் மீண்டும் கண்டெடுக்கப்பட்ட குகை மற்றும் பாறை ஓவியங்களின் வரிசையில் இவையும் ஒன்றாகும்.
- கரிக்கியூர் ஆனது இந்தியாவின் மிகப்பெரிய பாறை ஓவியத் தளங்களில் ஒன்றாகும்.
- ஆரம்ப கட்ட வரைபடங்கள், வேட்டையாடும் வாழ்க்கை முறையிலிருந்து படிப்படியாக மேய்ச்சல் முறைக்கு மாறுவதை இந்தப் படங்கள் சித்தரிக்கின்றன.
- பிந்தைய வரைபடங்களில், ஒரு நிலையான விவசாய வாழ்க்கை முறை சித்தரிக்கப் பட்டது.



## வறட்சிநிலை முரண்பாடு பற்றிய கண்ணோட்டக் குறியீடு

- இந்திய வானிலை ஆய்வு மையமானது, சமீபத்தில் ஜூலை மாதத்திற்கான இந்தக் குறியீட்டை வெளியிட்டது.
- இந்தியாவில் கிட்டத்தட்ட 69% நிலமானது வறண்ட நிலமாக உள்ளது.
- 756 மாவட்டங்களில் கிட்டத் தட்ட 660 மாவட்டங்கள் (85%) வெவ்வேறு அளவிலான வறட்சியை எதிர்கொள்கின்ற அதே சமயம் 63 மட்டுமே வறட்சியற்றவையாக உள்ளன.
- குறைந்தபட்சம் 196 மாவட்டங்கள் கடுமையான வறட்சியின் பிடியில் உள்ள நிலையில் அதில் 65 மாவட்டங்கள் உத்தரப் பிரதேசத்தில் உள்ளன.
- விவசாயத்தில் வறட்சியின் தாக்கங்கள், குறிப்பாக ஈரமான மற்றும் வறண்டப் பருவங்கள் ஆனது பருவநிலை மண்டலங்களின் ஒரு பகுதியாக இருக்கும் வெப்ப மண்டலங்களில் அதிகமாக உள்ளன.




Source: India Meteorological Department

- இந்த முறையைப் பயன்படுத்தி குளிர்காலம் மற்றும் கோடைக்காலப் பயிரிடல் பருவங்களை மதிப்பிடலாம்.
- பரந்த அளவிலான இந்த வறண்டப் பகுதிகள் ராஜஸ்தானின் பாலைவனத்திலும், கட்ச் வளைகுடா மற்றும் பஞ்சாப் மற்றும் குஜராத்தின் பகுதியளவு வறண்டப் பகுதிகளிலும், மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

## வர்த்தகத்திற்கான நிதி

- 2020 ஆம் ஆண்டில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் இருந்தும், உலக வர்த்தக மையத்தின் வர்த்தக முயற்சிக்கான உதவி என்ற முன்னெடுப்பின் கீழும் அதிக உதவிகளைப் பெற்ற நாடாக இந்தியா மாறியது.
- வர்த்தகத்திற்கான உதவி முன்னெடுப்பானது வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவுவதன் மூலம் வறுமையைக் குறைப்பதற்கான வர்த்தகத்தை மேம்படுத்தச் செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வளர்ச்சி பெற்ற நாடுகள் வர்த்தகம் தொடர்பான திட்டங்களை இலக்காகக் கொண்ட மானியங்கள் மற்றும் சலுகைக் கடன்களை வழங்குகின்றன.

**ON TOP**

Five biggest recipients of trade and related disbursements, 2018-20

| Recipient | 2020 | | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|
| | Rank | Disbursement (in $ bn) | Rank | Disbursement (in $ bn) | Rank | Disbursement (in $ bn) |
| India | 1 | 2.74 | 1 | 3.86 | 1 | 3.57 |
| Bangladesh | 2 | 2.49 | 2 | 1.99 | 2 | 2.16 |
| Egypt | 3 | 1.79 | 3 | 1.75 | 3 | 1.94 |
| Ethiopia | 4 | 1.59 | 6 | 1.36 | 4 | 1.71 |
| Kenya | 5 | 1.31 | 5 | 1.49 | 8 | 0.94 |

## இந்தியாவில் வெளிப்படைத்தன்மை பற்றிய அறிக்கை

- ட்விட்டர் ஊடகமானது சமீபத்தில் ஒரு வெளிப்படைத் தன்மை மீதான அறிக்கையை வெளியிட்டது.
- ட்விட்டர் பக்கத்தில் பத்திரிக்கையாளர்கள் மற்றும் செய்தி நிறுவனங்களால் வெளியிடப் பட்ட உள்ளடக்கத்தை நீக்கச் செய்வதற்கான சட்டரீதியான கோரிக்கை என்பது உலகளவில் இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையில் முன் வைக்கப்படச் செய்கின்றன.
- இதன்படி இந்தியா 114 கோரிக்கைகளை முன்வைத்தது.
- ட்விட்டர் கணக்குத் தகவல்களைக் கேட்பதில் அமெரிக்காவிற்கு அடுத்த நிலையில் இந்தியா உள்ளது.
- உலகளவிளாவிய மொத்தத் தகவல் கோரிக்கைகளில் இந்தியா 19% கோரிக்கைகளை முன் வைத்துள்ளது..

- 2021 ஆம் ஆண்டு ஜூலை-டிசம்பர் மாதங்களில் அனைத்து வகையானப் பயனர்களின் உள்ளடக்கங்களை முடக்குவதற்கு, ட்விட்டருக்கு ஆணைகளை வழங்கிய முதல் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- இந்தியாவிற்கு அடுத்தபடியாக, துருக்கி, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் ஆகிய சில நாடுகளும் அதிகச் சட்டப்பூர்வ கோரிக்கைகளை முன் வைக்கின்றன.
- துருக்கி 78 கோரிக்கைகளையும், ரஷ்யா 55 கோரிக்கைகளையும், பாகிஸ்தான் 48 கோரிக்கைகளையும் முன் வைத்தன.

| Report | Legal demands | | | Compliance rate | | | Accounts specified |
|---|---|---|---|---|---|---|---|
| | Court orders | Other legal demands | Combined | Court orders | Other legal demands | Combined | Court orders |
| Total | 99 | 21,231 | 21,330 | 72.4 % | 13.6 % | 13.7 % | 2,488 |
| July - December 2021 | 23 | 3,969 | 3,992 | 69.6 % | 19.2 % | 19.5 % | 420 |
| January - June 2021 | 9 | 4,894 | 4,903 | 88.9 % | 11.7 % | 11.8 % | 614 |
| July - December 2020 | 15 | 6,956 | 6,971 | 73.3 % | 9 % | 9.1 % | 220 |
| January - June 2020 | 4 | 2,768 | 2,772 | 25 % | 13.8 % | 13.9 % | 9 |
| July - December 2019 | 7 | 775 | 782 | 85.7 % | 36.3 % | 36.7 % | 1,230 |
| January - June 2019 | 6 | 498 | 504 | - | - | 0 % | - |
| July - December 2018 | 10 | 657 | 667 | - | - | 0 % | - |

## வேளாண் உள்கட்டமைப்பு நிதி விருதுகள் 2022




- வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வேளாண் உள்கட்டமைப்பு நிதி விருதுகளை வழங்கினார்.

- வேளாண் உள்கட்டமைப்பு நிதியின் ஒரு பகுதியாக இந்த விருதுகள் வழங்கப் படுகின்றன.
- இந்த நிதியானது, 2020 ஆம் ஆண்டில் ஆத்ம நிர்பர் பாரத் முன்னெடுப்பின் கீழ் தொடங்கப் பட்டது.
- இது மத்திய அரசின் ஒரு திட்டமாகும்.

## பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்கள் தொடர்பான மசோதா

- பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்குத் தடை விதிக்கும் மசோதாவினைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- இந்த மசோதா "மிகப்பெரிய அழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் அவற்றின் விநியோக அமைப்புகள் (சட்டவிரோதச் செயல்பாடுகளுக்குத் தடை) திருத்த மசோதா, 2022" என்று அழைக்கப்படுகிறது.
- இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களின் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்களை முடக்கவும், அவற்றைப் பறிமுதல் செய்யவும் அல்லது இணைக்கவும் இது மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.
- 2005 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டமானது பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு மட்டுமே தடை விதித்தது.
- தற்போதுள்ள சட்டத்தில் 12A என்ற புதிய ஒரு பிரிவினைச் சேர்ப்பதற்கு இந்தத் திருத்த மசோதா முயல்கிறது.





## சிகரம் 5140

- ஜம்மு காஷ்மீரில் கார்கில் பகுதியின் டிராஸ் என்னுமிடத்தில் உள்ள 5140 என்ற ஒரு சிகரத்திற்கு 'துப்பாக்கி மலைக் குன்றுகள்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்திய ஆயுதப் படைகளின் வெற்றியை நினைவு கூறச் செய்வதையும், 'விஜய் நடவடிக்கையில்' துப்பாக்கி ஏந்திப் போராடி உயிர்த் தியாகம் செய்த வீரர்களின் உச்ச கட்டத் தியாகத்திற்குக் கௌரவம் செலுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இதற்கு இப்பெயரிடப்பட்டுள்ளது.
- 1999 ஆண்டின் கார்கில் போரில் நடவடிக்கைகளை முன்கூட்டியே நிறைவு செய்வதற்கு 5140 சிகரம் கைப்பற்றப்பட்டது ஒரு முக்கியக் காரணியாக இருந்தது.
- 5140 சிகரமானது, டோலோலிங் சரிவு மீது அமைந்த ஒரு மிக உயரியச் சிகரமாகும்.
- திராஸ் உட்புறப் பகுதியில் இது மிகவும் கரடுமுரடான ஒரு பகுதியாகும்.




## பண மோசடி தடுப்புச் சட்ட விதிகள் குறித்த தீர்ப்பு




- கடுமையான பணமோசடி தடுப்புச் சட்டம் (பிஎம்எல்ஏ) மற்றும் அமலாக்க இயக்குநரகம் ஆகியவற்றிடம் உள்ள பரவலான அதிகாரங்களின் செல்லுபடித் தன்மையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- 2002 ஆம் ஆண்டு சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கு எதிராக எழுப்பப் பட்ட ஒரு விரிவான எதிர்வழக்கின் பேரில் இந்தத் தீர்ப்பானது வழங்கப்பட்டது.
- இந்தத் திருத்தங்கள் தனிப்பட்டச் சுதந்திரம், சட்ட நடைமுறைகள் மற்றும் அரசியலமைப்பு ஆணையை மீறுவதாகக் கூறி பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- இந்த விதியின்படி, அமலாக்க இயக்குநரகம் ஒருவரை அவரது குற்றச்சாட்டுகள் பற்றி தெரிவிக்காமல் கூட கைது செய்யலாம்.
- இந்த அதிகாரமானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 21வது சரத்தில் கூறப்பட்டுள்ள 'முறையான செயல்முறைக்கான' உரிமையை மீறுவதாகும்.
- மேலும், 22வது சரத்தானது கைது செய்யப்பட்டதற்கானக் காரணத்தை ஒருவருக்குத் தெரிவிக்காமல் யாரையும் கைது செய்ய முடியாது.

## இந்தியாவில் அதிவிரைவாக விற்பனையாகும் நுகர்வுப் பொருள் நிறுவனம்

- ரொட்டித் தயாரிப்பு நிறுவனமான 'பார்லே' 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதி விரைவில் விற்பனையாகும் நுகர்வோர் பொருட்களில் மிகவும் பிரபலமான ஒன்றாக தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.
- இது தொடர்ந்து பதினொன்றாவது ஆண்டாகத் தரவரிசையின் முதல் இடத்தில் இடம் பெற்றுள்ளது.
- அமுல், பிரிட்டானியா, கிளினிக் பிளஸ் மற்றும் டாடா நுகர்வோர் தயாரிப்புகள் ஆகியவை பட்டியலில் உள்ள மற்ற சிறந்தத் தயாரிப்புகள் ஆகும்.
- இது காந்தார் இந்தியா மேற்கொண்ட வருடாந்திரத் தயாரிப்புப் பொருள் தடம் பதிப்பு ஆய்வினால் வெளியிடப்பட்டது.
- நுகர்வோரைச் சென்றடையும் புள்ளிகளின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டில் நுகர்வோர் தேர்ந்தெடுக்கும் அதிவிரைவாக விற்பனையாகும் நுகர்வுப் பொருள் தயாரிப்புகளை இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

## போதைப் பொருள் கடத்தல் மற்றும் தேசியப் பாதுகாப்பு குறித்த மாநாடு

- போதைப் பொருள் கடத்தல் மற்றும் தேசியப் பாதுகாப்பு குறித்த மாநாட்டினை உள் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்த மாநாட்டின் போது, டெல்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் கவுகாத்தி முழுவதும் 30,000 கிலோவுக்கும் அதிகமான போதைப் பொருட்களை போதைப் பொருள் தடுப்புப் பிரிவானது எரித்து அப்புறப்படுத்தியது.
- போதைப் பொருள் தடுப்புப் பிரிவானது, 2022 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதியன்று போதைப் பொருள் அகற்றல் பிரச்சாரத்தைத் தொடங்கியது.

## புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறைத் திட்டம்




- மின்சார அமைச்சகத்தின் முதன்மையான புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறைத் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இது விநியோக நிறுவனங்களின் செயல்பாட்டுத் திறன் மற்றும் நிதி நிலைத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மேற்கூரையில் நிறுவப்படும் சூரியசக்தி திட்டத்திற்கான ஒரு தேசிய இணையத் தளத்தினையும் அவர் தொடங்கி வைத்தார்.
- விண்ணப்பங்களைப் பதிவு செய்வதில் தொடங்கி நுகர்வோருக்கு மானியம் வழங்கச் செய்வது வரை மேற்கூரையில் சூரிய மின்சக்தி உற்பத்தி கருவியை நிறுவும் ஒரு செயல்முறையை இணைய தளத்தில் கண்காணிப்பதற்கு இந்தத் தளமானது உதவும்.


## மூன்று தொழிலாளர் குறிகாட்டிகள்

- அகில இந்திய அளவில் 46-59 வயதுக்குட்பட்ட பகுதி நேரமாக வேலை செய்யும் பணியாளர்களின் விகிதமானது 2017 முதல் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 10% சதவீதத்திற்கும் அதிகமாக இருந்ததாக தேசியப் புள்ளியியல் அலுவலகம் தெரிவித்து உள்ளது.
- 60 வயதுக்கு மேற்பட்ட வயதினர் பிரிவில், பகுதி நேர வேலை செய்யும் பணியாளர்களின் விகிதமானது 15 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது.
- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது இந்த மூன்று தொழிலாளர் குறிகாட்டிகளை உருவாக்கியுள்ளது.
  - "பாலியல் அடிப்படையில், பகுதி நேர வேலை செய்பவர்களின் விகிதம்"
  - "பாலியல் அடிப்படையில் பணியமர்த்துபவர்களின் விகிதம்" மற்றும்
  - குறைந்தபட்சமாக 3 வயதுக்குட்பட்ட ஒரு குழந்தையுடன் மற்றும் 3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இல்லாமலும் உள்ள குடும்பத்தில் வசிக்கும் 25 முதல் 49 வயதுடைய நபர்களின் பாலின அடிப்படையிலான வேலைவாய்ப்பு விகிதமானது, ""முதல் வருகை அட்டவணையின் நபர்களின் எண்ணிக்கையிலான தரவாக" உள்ளது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது, இந்தக் குறிகாட்டிகளுக்கான ஒரு பாதுகாவலர் நிறுவனமாகும்.

## வனவிலங்கு (பாதுகாப்பு) திருத்த மசோதா, 2021

- 2021 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) திருத்த மசோதாவினை மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- அழிந்து வரும் வன விலங்குகள் மற்றும் தாவர உயிரினங்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒரு உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்த இது முயல்கிறது.
- இந்த மசோதா, இந்திய வனங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள அந்நிய இனங்களின் இறக்குமதி, வர்த்தகம், உடைமை அல்லது பெருக்கம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தச் செய்வதற்கும் நிறுத்துவதற்கும் மத்திய அரசுக்கு அதிகாரங்களை வழங்குகிறது.
- உயிரினங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றிற்கான அனுமதிகளை வழங்கச் செய்வதற்கு ஒரு மேலாண்மை ஆணையத்தை அரசாங்கம் நியமிப்பதற்கும், அது குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனையை வழங்கச் செய்வதற்கான அறிவியல் ஆணையத்தினை அமைப்பதற்கும் இந்தப் புதிய மசோதா வழிவகை செய்யும்.

- இந்தத் திருத்த மசோதாவானது முதன்முதலில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் தேதி அன்று பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதே ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதியன்று ஒரு நிலைக் குழுவிடம் ஆய்விற்காக அனுப்பப் பட்டது.




## பள்ளிகளுக்கான புத்தாக்கச் சபை

- பள்ளிகளுக்கான புத்தாக்க சபை பற்றியத் தகவல்களை கல்வித்துறை இணை அமைச்சர் அன்னபூரண தேவி பகிர்ந்துள்ளார்.
- இது கல்வி அமைச்சகத்தின் புத்தாக்கப் பிரிவினால் தொடங்கப்பட்டது.
- இது தொழில் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட குழுவாகும்.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு குறித்து ஆண்டு முழுவதுமான நிகழ்வுகளை நடத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு தேசியப் புத்தாக்கம் மற்றும் தேசியக் கல்விக் கொள்கையில் வலியுறுத்தப் பட்டுள்ளபடி, பள்ளிக் கல்வியில் புத்தகங்களில் உள்ளவற்றை தாண்டியக் கருத்துகளைச் சேர்ப்பதை இது ஊக்குவிக்கும்.
- இது புத்தாக்கம் சார்ந்த செயல்பாடுகளின் அடிப்படையில் பள்ளிகளுக்கான தர வரிசை முறையைச் செயல்படுத்த உள்ளது.

## திரங்கா உத்சவ்

❖ கலாச்சாரத் துறை அமைச்சகமானது, பிங்காலி வெங்கய்யா அவர்களின் 146வது பிறந்த நாளை முன்னிட்டு, புதுடெல்லியில் "திரங்கா உத்சவ்" என்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.


❖ நாட்டிற்கு பிங்காலி வெங்கையா அவர்கள் ஆற்றியப் பங்களிப்பைக் கௌரவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இவரது நினைவாக ‘அமர் சித்ர கதை’ வெளியிடப்பட்டது.

❖ திரங்க கீதம் என்ற பாடலும் வெளியிடப்பட்டது.




## இந்திய மெய்நிகர் உலர் தாவரகம்



- ❖ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்தர் யாதவ், இந்தியாவின் மிகப்பெரிய இணைய வழி உலர் தாவரத் தரவுத்தளமான 'இந்திய மெய்நிகர் உலர் தாவரகம்' என்ற இணைய தளத்தை தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தத் தளமானது இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டு உள்ளது.
- ❖ இந்தியத் தாவரவியல் ஆய்வு அமைப்பானது, சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு துணை அலுவலகமாகும்.

## பொது நோய்த்தடுப்புத் திட்டத்திற்கான மறுபயன்பாட்டு வசதி

- ❖ Co-WIN தளமானது, பொது நோய்த்தடுப்புத் திட்டம் மற்றும் இரத்த தானம் ஆகியவற்றிற்காக மறுபயனாக்கப்பட உள்ளது.
- ❖ இந்தத் தளமானது, பின்னர் உறுப்பு தானத்திற்கும் சேர்த்துப் பயன்படுத்தப்படும்.
- ❖ CoWIN என்பதன் விரிவாக்கம் "கோவிட் தடுப்பூசி பற்றிய நுண்ணறிவு வலையமைப்பு" என்பதைக் குறிக்கிறது.
- ❖ இது இந்தியாவில் கோவிட்-19 தடுப்பூசிப் பதிவினை மேற்கொள்வதற்கான இணைய தளமாகும்.




## உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி

- ❖ நீதிபதி உதய் உமேஷ் லலித் இந்தியாவின் அடுத்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவியேற்க உள்ளார்.
- ❖ நீதிபதி ரமணா ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று ஓய்வு பெற உள்ளதையடுத்து, நீதிபதி U.U.லலித் இந்தியாவின் 49வது தலைமை நீதிபதியாகப் பதவியேற்க உள்ளார்.
- ❖ இவர் நவம்பர் 08 ஆம் தேதியன்று தனது 65வது வயதில் ஓய்வு பெறுவதற்கு முன்பாக 74 நாட்கள் மட்டுமே இப்பதவியில் இருப்பார்.
- ❖ நீதிபதி U.U.லலித் அவர்களுக்குப் பிறகு, இந்திய நாட்டின் நீதித்துறையின் தலைவராக நீதிபதி D.Y.சந்திரசூட் நியமிக்கப் படுவார்.
- ❖ 1991 ஆம் ஆண்டில் நீதிபதி கமல் நரேன் சிங் பணியாற்றிய 17 நாட்கள் அளவிலான பணிக் காலமே இந்தியத் தலைமை நீதிபதி பதவியின் மிகக் குறுகிய பதவிக் காலம் ஆகும்.

## சாக்சம் அங்கன்வாடி & போஷன் 2.0 திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள்




- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது, 'சாக்சம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0' திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சில செயல்பாட்டு வழி காட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டு முதல் 2025-26 ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- சாக்சம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 திட்டமானது ஒரு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து வழங்கீட்டுத் திட்டமாகும்.

## மத்தியப் பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) மசோதா 2022



- 2022 ஆம் ஆண்டு மத்தியப் பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) மசோதாவானது மக்கள் அவையில் நிறைவேற்றப்பட்டது.
- இது 'தேசிய இரயில் மற்றும் போக்குவரத்து கல்வி நிறுவனத்தினை (NRTI)' கதி சக்தி விஸ்வ வித்யாலயாவாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசிய இரயில் மற்றும் போக்குவரத்துக் கல்வி நிறுவனமானது இந்தியாவின் முதல் போக்குவரத்துக் கல்வி நிறுவனம் ஆகும்.
- இது குஜராத்தின் வதோதரா நகரில் அமைந்துள்ளது.

## கரும்பிற்கு இதுவரை வழங்கப்படாத அதிகபட்ச நியாய மற்றும் இலாப விலை

- கரும்பிற்கான நியாயமான மற்றும் இலாப விலைக்கு (FRP) மத்தியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டின் கரும்புச் சாகுபடிப் பருவத்தில், குவிண்டாலுக்கு 305 ரூபாய் விலையாக நிர்ணயிக்கப்பட்டது.
- 2022-23 ஆம் ஆண்டின் கரும்பு சாகுபடிப் பருவத்திற்கான நியாய மற்றும் இலாப விலை எனபது தற்போதைய 2021-22 ஆம் ஆண்டிற்கான கரும்புச் சாகுபடிப் பருவத்திற்கான நியாய மற்றும் இலாப விலையை விட 2.6 சதவீதம் அதிகமாகும்.
- கரும்பு விவசாயிகளுக்கு உத்தரவாத விலையை உறுதி செய்வதற்காக கரும்பிற்கான நியாய மற்றும் இலாப விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது
- கடந்த 8 ஆண்டுகளில் அரசாங்கம் நியாய மற்றும் இலாப விலையை 34% அதிகமாக உயர்த்தியுள்ளது.





- வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் (CACP) பரிந்துரையின் பேரில் நியாய மற்றும் இலாப விலை நிர்ணயிக்கப்பட்டு, மத்தியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் (CCEA) இந்த விலை அறிவிக்கப் படுகிறது.

- கரும்புத் தொழில்துறையை மறுசீரமைப்பது தொடர்பான ரங்கராஜன் குழுவின் ஒரு அறிக்கையின் அடிப்படையில் நியாய மற்றும் இலாப விலை நிர்ணயிக்கப்படுகிறது.
- தற்போதையக் கரும்புச் சாகுபடிப் பருவத்தின் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா பிரேசில் நாட்டின் உற்பத்தியை விஞ்சியுள்ளது.

## தரவுப் பாதுகாப்பு மசோதா 2021

- பாராளுமன்றத்தில் இருந்து தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதாவினை அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியான B.N.ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் இருந்த குழுவானது ஒரு வரைவைத் தயார் செய்ததில் இருந்து இந்த மசோதா நிலுவையில் உள்ளது.
- மத்திய அரசானது 2019 ஆம் ஆண்டில் மக்களவையில் இந்த மசோதாவின் வரைவினை அறிமுகப்படுத்தியது.
- இந்த மசோதாவானது 2021 ஆம் ஆண்டில் பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் மறுஆய்வு உட்பட பல மறு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டது.




## அனைத்து மகளிர் கடற்படைக் குழு

- இந்தியக் கடற்படையின் 314 பிரிவு விமானப் படைப் பிரிவினைச் சேர்ந்த (INAS 314) ஐந்து பெண் அதிகாரிகள், முழுவதும் மகளிர் அணியினரால் நடத்தப்படும் முதலாவது தன்னிச்சையான கடல்சார் உளவு மற்றும் கண்காணிப்புப் பணியை நிறைவு செய்து வரலாறு படைத்தனர்.
- இது டோர்னியர் 228 என்ற விமானத்தில் வடக்கு அரபிக்கடலுக்கு மேற்பரப்பில் வான் வெளியில் நடத்தப்பட்டது.
- இது இத்தகைய முதல் வகையிலான இராணுவ விமானக் கண்காணிப்புப் பணியாகும்.

- இந்த விமானமானது இந்தத் திட்டப்பணியின் படைத்தளபதி லெப்டினன்ட் கமாண்டர் ஆஞ்சல் சர்மா தலைமையில் இயக்கப் பட்டது.



## பார்ச்சூன் நிறுவனத்தின் உலகின் 500 முன்னணி நிறுவனங்களுக்கான 2022 ஆம் ஆண்டு பட்டியலில் இந்திய நிறுவனங்கள்



RIL TOP-RANKED INDIAN PVT SECTOR COMPANY IN 2022 FORTUNE GLOBAL 500 LIST

IANS

Buoyed by IPO, LIC opens its account in the list at No. 98, even as RIL goes up by 51 notches to No. 104

| Rank | Company | Revenues ($mn) | Revenue Growth (%) | Profits ($mn) | Profit Growth (%) | Staff (Nos.) | Change in Rank | Years on Global 500 List |
|---|---|---|---|---|---|---|---|---|
| 98 | LIC of India | $97,266.70 | 2.60% | $553.80 | 38.20% | 105,738 | - | 01 |
| 104 | Reliance Industries | $93,982.00 | 49.40% | $8,150.70 | 23.10% | 342,982 | 51 | 19 |
| 142 | Indian Oil | $79,542.40 | 57.70% | $3,370.40 | 15.60% | 32,938 | 70 | 28 |
| 190 | Oil & Natural Gas Corporation | $65,961.50 | 41.60% | $6,112.10 | 179.20% | 38,252 | 53 | 16 |
| 236 | State Bank of India | $54,643.20 | 5.20% | $4,749.60 | 57.30% | 244,250 | -31 | 17 |
| 295 | Bharat Petroleum | $46,867.30 | 49.70% | $1,568.40 | -28% | 9,193 | 99 | 19 |
| 370 | Tata Motors | $37,797.20 | 11.10% | ($1,536.20) | - | 73,608 | -13 | 13 |
| 435 | Tata Steel | $32,861.10 | 55.20% | $5,391.40 | 434.20% | 72,551 | - | 08 |
| 437 | Rajesh Exports | $32,649.50 | -6.20% | $135.40 | 18.90% | 181 | -89 | 07 |


*Fortune Global 500 list ranks companies by total revenues for their respective fiscal years ended on or before March 31, 2022*

Source: https://fortune.com/global500/2022/search/

- பார்ச்சூன் நிறுவனத்தின் உலகின் 500 முன்னணி நிறுவனங்களுக்கான 2022 ஆம் ஆண்டு பட்டியலில் 9 இந்தியப் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் இடம் பெற்று உள்ளன.
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமானது இப்பட்டியலில் 98வது இடத்தில் உள்ளது.
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமானது முதல் முறையாக இந்தப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனமானது (104வது இடம்) தொடர்ந்து 19வது ஆண்டாக இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மற்ற இந்திய நிறுவனங்கள்: இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (142), ONGC (190), SBI (236), பாரத் பெட்ரோலியம் (295) டாடா மோட்டார்ஸ் (370), டாடா ஸ்டீல் (435) மற்றும் ராஜேஷ் எக்ஸ்போர்ட்ஸ் (437) ஆகியனவாகும்.
- அமெரிக்காவின் வால்மார்ட் என்ற நிறுவனமானது தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- 1995 ஆம் ஆண்டு முதல், 17வது முறையாக தனது முதல் இடத்தை இந்த நிறுவனம் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

## 2023 ஆம் ஆண்டிற்குள் கருங்காய்ச்சலை ஒழிப்பதற்கு இலக்கு நிர்ணயம்




- 2023 ஆம் ஆண்டிற்குள் கருங்காய்ச்சலை நம்நாட்டிலிருந்து அகற்ற இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- கருங்காய்ச்சல் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட 633 உள்ளூர் தொகுதிகளுள், 625 தொகுதிகள் 2021 ஆம் ஆண்டில் கருங்காய்ச்சலை வெற்றிகரமாக ஒழித்துள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த நோயை ஒழிக்க வேண்டும் என்ற உலக சுகாதார அமைப்பின் இலக்கை விட இந்தியாவின் இலக்கு சற்று முன்னேறிய நிலையில் உள்ளது.
- கருங்காய்ச்சல் ஆனது லீஷ்மேனியாசிஸ் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தியா உட்பட 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள இந்த நோய் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகும்.

- ❖ லீஷ்மேனியா என்ற ஒட்டுண்ணியால் இந்நோய் ஏற்படுகிறது.
- ❖ இந்த ஒட்டுண்ணியானது மணல் ஈக்கள் என்ற பூச்சிகள் கடிப்பதால் பரவுகிறது.

## கைவினைப் பொருட்கள் கிராம முன்னெடுப்பு

- ❖ கைவினைப் பொருட்கள் கிராமம் என்பது, தொகுப்பாக வாழும் கைவினைஞர்களுக்கு தொழில்வளம் மிக்க மற்றும் வருமானம் தரக்கூடிய ஒரு வாழ்வாதாரம் மூலமாக கை வினைப் பொருட்கள் தொழிலினை ஊக்குவிக்கும்.
- ❖ கைவினைப் பொருட்கள் கிராமத்தில் உள்ள உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகியவை இந்தியாவின் கிராமப்புற வாழ்க்கையை உணர்த்தும் வகையில் கிராமப்புற பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது தொடர்பாக, ரகுராஜ்பூர் (ஒடிசா), திருப்பதி (ஆந்திரப் பிரதேசம்), வதாஜ் (குஜராத்), நைனி (உத்தரப் பிரதேசம்), ஆனேகுண்டி (கர்நாடகா), மகாபலிபுரம் (தமிழ்நாடு), தாஜ் கஞ்ச் (உத்தரப் பிரதேசம்) மற்றும் அமேர் (ராஜஸ்தான்) ஆகிய இடங்களில் 8 கை வினைப் பொருட்கள் கிராமங்கள் நிறுவப் பட்டுள்ளன.

## ஒவ்வொரு மாவட்டத்திலும் சமஸ்கிருத மொழி பேசும் மக்களைக் கொண்ட கிராமம்

- ❖ உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள 13 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், சமஸ்கிருத மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு கிராமத்தை உருவாக்க அந்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இந்தக் கிராமங்களில் வசிக்கும் குடிமக்களுக்கு, இந்தப் பழங்கால இந்திய மொழியை தினசரி தகவல் தொடர்பு ஊடகமாகப் பயன்படுத்துவதற்கு நிபுணர்களால் பயிற்சி அளிக்கப் படும்.
- ❖ சமஸ்கிருத மொழியில் புலமை பெறுவதற்காக வேண்டி அவர்களுக்கு வேதங்கள் மற்றும் புராணங்கள் போன்றவை கற்பிக்கப்படும்.
- ❖ பண்டைய இந்தியக் கலாச்சாரத்தின் மையமாக விளங்கும் இந்தக் கிராமங்கள் ஒவ்வொன்றும் "சமஸ்கிருத கிராமம்" என்று அழைக்கப்படும்.

## குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் 2022

- ❖ 14வது குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் ஆனது, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- ❖ மக்களவை பொதுச் செயலாளர் உத்பால் குமார் சிங், இந்தத் தேர்தலுக்கான தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
- ❖ இந்தியாவின் 14வது குடியரசுத் துணை தலைவராக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர் ஜக்தீப் தங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ இந்தத் தேர்தலுக்கான வாக்காளர் குழுமமானது, 245 மாநிலங்களவை உறுப்பினர்களையும், மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட 543 உறுப்பினர்களையும் கொண்டது.
- ❖ மொத்தம் பதிவான 725 வாக்குகளில் 528 வாக்குகளைப் பெற்று தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர் ஜக்தீப் தங்கர் 346 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

- 15 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டன.
- இத்தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் மார்கரெட் ஆல்வா 182 வாக்குகளைப் பெற்றார்.
- 80 வயதான ஆல்வா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு மூத்த உறுப்பினர் ஆவார்.
- மேலும் இவர், ராஜஸ்தான் மாநிலத்தின் ஆளுநராகப் பணியாற்றியுள்ளார்.
- மாநிலங்களவையின் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 780 வாக்காளர்களில் 725 வாக்காளர்கள் இதில் வாக்களித்தனர்.
- இந்தத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குப் பதிவு 92.94% ஆகும்.

## 'பதே சலோ' பிரச்சாரம்

- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகம் ஆனது 'பதே சலோ' என்ற பிரச்சாரத்தினை தொடங்கியுள்ளது.
- இது இந்திய இளைஞர்களுடன் தொடர்பு கொள்வதையும், அவர்களிடையே ஆழ்ந்த தேசபக்தி உணர்வை ஊட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் கணிசமான விரிவாக்கத்திற்காக இளைஞர்களை மையமாகக் கொண்ட சில செயல்பாடுகளை உருவாக்க முயல்கிறது.





## இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவர்

- இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவராக ஜக்தீப் தன்கர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- எதிர்க்கட்சி வேட்பாளர் மார்கரெட் ஆல்வா 182 என்ற வாக்குகள் பெற்ற நிலையில் இவர் 528 வாக்குகள் (72.8%) பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

- 1997 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற கடந்த ஆறு துணைத் தலைவர் தேர்தல்களிலேயே 2017 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 346 வாக்குகளைப் பெற்ற அவரது முன்னோடியான நாயுடு அவர்களின் வெற்றிச் சாதனையினை அடுத்து ஜக்தீப் அவரை விட 2% வாக்குகள் அதிகம் பெற்றுள்ளார்.
- 1992 ஆம் ஆண்டில் அதிக வாக்கு வித்தியாசத்தில் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் வெற்றி பெற்றச் சாதனையானது K.R.நாராயணன் அவர்களையேச் சாரும்.
- சுயேச்சை வேட்பாளர் ஆன காக்கா ஜோகிந்தர் சிங்கிற்கு எதிராக போட்டியிட்ட இவர் மொத்தம் பதிவான 701 வாக்குகளில் 700 வாக்குகளைப் பெற்றிருந்தார்.
- ஜக்தீப் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் தேதியன்று, இந்தியக் குடியரசுத் தலைவர் மூலம் இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராகப் பதவியேற்க உள்ளார்.
- இவர் இதற்கு முன்பு மேற்கு வங்காள மாநிலத்தின் ஆளுநராகப் பணியாற்றியவர் ஆவார்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 80வது ஆண்டு நிறைவு விழா

- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று ‘வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்’ 80வது ஆண்டு நிறைவினை இந்தியா கொண்டாடியது.
- இந்த இயக்கம் ஆனது ஆகஸ்ட் கிராந்தி என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இது ஒரு முக்கியமான மைல்கல் ஆகும்.
- இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில், 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று காந்தியடிகளால் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்கான அழைப்பானது விடுக்கப்பட்டது.
- அகில இந்திய காங்கிரஸ் குழுவின் மும்பை மாநாட்டில் இந்த இயக்கம் ஆனது தொடங்கப் பட்டது.
- மும்பையில் உள்ள ஆகஸ்ட் கிராந்தி மைதானத்தில் (குவாலியா டேங்க் மைதானம்) ஆற்றிய உரையில் மகாத்மா காந்தி அவர்கள் “சுதந்திரத்திற்காக செய் அல்லது செத்து மடி” என்ற முழக்கத்தினை விடுத்தார்.
- கிரிப்ஸ் தூதுக் குழுவின் தோல்வியே வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்கான ஒரு உடனடிக் காரணமாகும்.



## மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் புதியத் தலைவர்

- மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் புதியத் தலைவராக நீதிபதி ரஞ்சித் வசந்தராவ் மோரே என்பவரை குடியரசுத் தலைவர் அவர்கள் நியமித்தார்.
- இவர் மேகாலயா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாக பணியாற்றியவர் ஆவார்.
- இந்தத் தீர்ப்பாயமானது அரசியலமைப்பின் 323 - A என்ற பிரிவின் கீழ் நிறுவப்பட்டது.
- அரசுப் பணிகளில் நியமிக்கப்பட்ட நபர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பணி நிபந்தனைகள் தொடர்பானச் சர்ச்சைகள் மற்றும் புகார்களைத் தீர்ப்பதற்கு இது வழி வகை செய்கிறது.
- 323-A என்ற ஒரு சரத்தின் அடிப்படையில் பாராளுமன்றம் ஆனது 1985 ஆம் ஆண்டு நிர்வாகத் தீர்ப்பாயங்கள் சட்டத்தை நிறைவேற்றியது.
- ஒரு மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் மாநில நிர்வாகத் தீர்ப்பாயங்களை நிறுவ மத்திய அரசுக்கு இந்தச் சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது.
- இந்தியா முழுவதும் மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் 19 அமர்வு மையங்கள் உள்ளன.

## நிதி ஆயோக் அமைப்பின் ஆளுகை குழுவின் 7வது சந்திப்பு

- நிதி ஆயோக் அமைப்பின் ஆளுகை குழுவின் 7வது சந்திப்பிற்குப் பிரதமர் அவர்கள் தலைமை தாங்கினார்.
- பயிர் முறைகளைப் பல்வகைப்படுத்தல், நகர்ப்புற மேம்பாடு மற்றும் தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துதல் போன்ற பல பிரச்சனைகள் குறித்து இந்தச் சபையில் விவாதம் நடத்தப்பட்டது.
- நிதி ஆயோக் அமைப்பின் ஆளுகைக் குழுவானது அனைத்து மாநிலங்களின் முதல்வர்களையும், ஒன்றியப் பிரதேசங்களின் முதல்வர்களையும் மற்ற ஒன்றியப் பிரதேசங்களின் துணை நிலை ஆளுநர்களையும் உள்ளடக்கியதாகும்.

## மாபெரும் பயிற்சி - ஸ்கைலைட்

- இந்திய இராணுவம் தனது விண்வெளிக் களத் திறனை மேம்படுத்துவதற்காக வேண்டி சமீபத்தில் "ஸ்கைலைட்" என்ற மாபெரும் ஒரு பயிற்சியினை நடத்தியது.
- இது இவ்வகையிலான முதலாவது பெரிய அளவிலானப் பயிற்சியாகும்.
- இது செயற்கைக்கோள் தொடர்புச் சாதனங்களின் செயல்பாட்டுத் தயார்நிலையைச் சோதிப்பது மற்றும் இந்தச் சாதனங்களை இயக்கும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இது லட்சத்தீவு மற்றும் அந்தமான் தீவுகள் ஆகியவை உட்பட இந்தியா முழுவதும் நடத்தப் படும் பயிற்சியாகும்.
- இந்திய இராணுவம் ஆனது ஜிசாட்-7பி என்ற தனது சொந்தத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளைச் செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு பல்கற்றைச் செயற்கைக் கோள் ஆகும்.
- இது மேம்பட்டப் பாதுகாப்பு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஆகாசா ஏர்லைன் நிறுவன விமானத்தின் முதல் பயணம்

❖ ஆகாசா ஏர்லைன் நிறுவனமானது, 2022 ஆம் ஆண்டு ஆகஸ்டு 07 ஆம் தேதி முதல் மும்பை மற்றும் அகமதாபாத் இடையே தனது விமானச் சேவையினை இயக்கத் தொடங்கியது.

❖ முதலீட்டாளர் ராகேஷ் ஜுன்ஜுன்வாலா மற்றும் விமானப் போக்குவரத்து துறையினரான ஆதித்யா கோஷ் மற்றும் வினய் துபே ஆகியோரால் ஆகாசா ஏர்லைன் நிறுவனம் இயக்கப் படுகிறது.




## சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் பிராந்தியத் தரநிலை நிர்ணய மன்றம்

❖ ஆசியா மற்றும் ஓசியானியா பிராந்தியத்திற்கான சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியத்தின் பிராந்தியத் தரநிலை நிர்ணய மன்றமானது புதுடெல்லியில் தொடங்கப் பட்டுள்ளது.

❖ இது தகவல் தொடர்பு அமைச்சகத்தினால் நடத்தப்படுகிறது.

❖ இந்த மன்றத்தின் கருத்துரு "தொலைத் தொடர்புகளின் ஒழுங்குமுறை மற்றும் கொள்கை அம்சங்கள்" என்பதாகும்.

❖ சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் என்பது 1865 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதி அன்று நிறுவப்பட்ட, ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.

❖ தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்கள் தொடர்பான விடயங்களுக்கு இது பொறுப்பு மிக்க நிறுவனமாகும்.

❖ இது "சர்வதேச தந்தி ஒன்றியம்" ஆக நிறுவப் பட்டது.

❖ இதன் தற்போதையப் பெயர் ஆனது 1934 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## இந்தியா கி உடான் முன்னெடுப்பு

❖ கலாச்சார அமைச்சகமானது கூகுள் நிறுவனத்துடன் இணைந்து “இந்தியா கி உடான்” எனும் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.

❖ இந்த முன்னெடுப்பானது கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவின் அசைக்க முடியாத மற்றும் அழியாதத் தரத்தினையும் அதன் சாதனைகளையும் கொண்டாடுவதற்கான ஒரு முயற்சியாகும்.

❖ கூகுள் நிறுவனம் அதன் வளமான தகவல் காப்பகங்கள் மூலமாகவும், கலை சார்ந்த விளக்கப் படங்கள் மூலமாகவும் இந்தியாவின் வளமானக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தினை நோக்கிக் குடிமக்களை அழைத்துச் செல்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இத்திட்டத்தின் கருத்துரு, 'கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவின் அசைக்க முடியாத மற்றும் அழியாத தரம்' என்பதாகும்.
- இது கூகுள் நிறுவனத்தின் கலை மற்றும் கலாச்சாரத் துறையினால் செயல்படுத்தப் படுகிறது.

## 21 ஆம் நூற்றாண்டிற்கான அனுபவ கற்றல் திட்டம்

- ஏகலவ்யா கல்வி முறை அடிப்படையிலான குடியிருப்புப் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக 21 ஆம் நூற்றாண்டிற்கான அனுபவ கற்றல் திட்டம் ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இது மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் ESTS நிறுவனம் ஆகியவற்றினால் TATA அறக்கட்டளைகள், TISS மற்றும் MGIS ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து தொடங்கப்பட்டது.
- இது ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் ஆகியோருக்கான இணையவழித் திட்டமாகும்.
- இதில் அவர்களுக்கு நிகழ்நேர அனுபவங்களுக்கு ஏற்ப வகுப்பறைக் கற்றல் முறையை மாற்றியமைக்கப் பயிற்றுவிக்கப் படும்.

## எனது ரேஷன் உணவுப்படி எனது உரிமை

- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகங்கள் அமைச்சகம் ஆனது 'பொதுப் பதிவு வசதி' (எனது அன்றாட ரேஷன் எனது உரிமை) என்ற ஒரு இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- 11 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இந்தப் பதிவு செய்யும் வசதியானது தொடங்கப் பட்டுள்ளது.
- வீடுகளற்றோர், ஆதரவற்றோர், புலம்பெயர்ந்தோர் மற்றும் தகுதியுடைய இன்ன பிறப் பயனாளிகள் அன்றாட உணவுப் படிகளுக்காக வேண்டி அதற்கான அட்டைகளைப் பெறுவதற்காக அதனை விண்ணப்பிப்பதற்கான வசதியை பெறச் செய்வதே இதன் நோக்கமாகும்.
- அனைத்து 36 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களும் ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை திட்டத்தின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன.

## எரிசக்தி வளப் பாதுகாப்பு (திருத்தம்) மசோதா 2022

- 2022 ஆம் ஆண்டு எரிசக்தி வளப் பாதுகாப்புத் திருத்த மசோதாவானது மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான ஆற்றல் மூலங்களின் பயன்பாட்டைக் குறைப்பதையும், புதைபடிமம் சாராத ஆற்றல் மூலங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாட்டின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் புதைபடிமம் சாராத எரிசக்தி வளங்களை எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை இந்த மசோதா மத்திய அரசிற்கு வழங்கும்.
- இதில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் உயிரி எத்தனால் ஆகியவை அடங்கும்.

- ❖ இந்தியாவின் புதைபடிம எரிபொருள் சார்ந்த மின்னாற்றல் பயன்பாட்டை குறைக்கச் செய்வதே இந்த மசோதாவின் ஒரு முக்கிய நோக்கமாகும்.
- ❖ இந்தியாவின் கார்பன் சந்தையை வர்த்தகம் செய்வதற்கு ஏற்றவாறு மாற்றுவதும், தூய்மையானத் தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும், மின் திறனை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதே இரண்டாம் நோக்கமாகும்.





## வஜ்ர பிரஹார் பயிற்சி 2022

- ❖ இந்திய-அமெரிக்கக் கூட்டு சிறப்புப் படைப் பயிற்சியான 13வது "வஜ்ர பிரஹார் 2022" பயிற்சியானது இமாச்சலப் பிரதேசத்தில் தொடங்கியது.
- ❖ கூட்டுப் பணி திட்டமிடல் மற்றும் செயல்பாட்டு உத்திகள் போன்ற துறைகளில் சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்கள் பற்றி பகிர்ந்து கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மேலும், இது இரு நாடுகளின் சிறப்புப் படைப் பிரிவுகளுக்கு இடையேயான செயல் பாட்டுத் திறனை மேம்படுத்துகிறது.
- ❖ இந்த வருடாந்திரப் பயிற்சியானது இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே மாற்றி மாற்றி இரு நாடுகளாலும் நடத்தப்படுகிறது.

## இரண்டாம் தலைமுறை தொழில்நுட்பத்தில் இயங்கும் எத்தனால் ஆலை

- ❖ ஹரியானாவின் பானிபட் நகரில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் தலைமுறை தொழில் நுட்பத்தில் இயங்கும் எத்தனால் ஆலையைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- ❖ உள்நாட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில், ஆண்டுதோறும் சுமார் இரண்டு லட்சம் டன் நெல் வைக்கோலைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் சுமார் மூன்று கோடி லிட்டர் எத்தனாலை இந்த ஆலை உற்பத்தி செய்யும்.
- ❖ ஆண்டிற்கு சுமார் 3 லட்சம் டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுகளுக்குச் சமமானப் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வினைக் குறைப்பதில் இந்தத் திட்டம் ஒரு முக்கியப் பங்கினை அளிக்கும்.




## சூன்யா- சுழிய மாசுபாட்டினை வெளியிடும் போக்குவரத்திற்கான பிரச்சாரம்

- இது காற்றின் தரத்தை மேம்படுத்துவதையும், நாடு முழுவதும் சுழிய மாசுபாட்டினைக் கொண்டு போக்குவரத்து வசதியினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பெருநிறுவனத் தயாரிப்புத் திட்டம் மற்றும் மின்சார வாகன விழிப்புணர்வு இயக்கம் ஆகியவை மூலம் விநியோகம் மற்றும் பயணம் போன்ற வசதிகளுக்கு மின்சார வாகனங்களை (EV) பயன்படுத்துவதை இந்தப் பிரச்சாரம் ஊக்குவிக்கிறது.




## நிறைவேற்ற முடியாத திருமண வாக்குறுதி

- திருமணம் செய்வதாக உண்மையான ஒரு வாக்குறுதி வழங்குவதன் அடிப்படையில் கருத்து ஒற்றுமையுடன் உடலுறவு மேற்கொள்ளப்பட்டு அந்த வாக்குறுதி நிறைவேற்றப் படாமல் இருந்தால் அது கற்பழிப்பு அல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறி உள்ளது.
- உச்ச நீதிமன்றமானது 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு முதல் தகவல் அறிக்கையினை ரத்து செய்தது.
- மேலும், இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையினைப் பதிவு செய்வது என்பது குற்றவியல் நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகும் எனவும் உச்ச நீதிமன்றம் கூறியது.

## ஹிம் ட்ரோன்-இ-தோன் திட்டம்

- இந்திய இராணுவமானது இந்திய ஆளில்லா விமானக் கூட்டமைப்புடன் இணைந்து ஹிம் ட்ரோன்-இ-தோன் திட்டத்தினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இது இந்திய ஆளில்லா விமானச் சூழலமைவில் ஊக்குவிப்பு மற்றும் அத்துறை சார்ந்த வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'ஹிம் ட்ரோன்-இ-தோன்' என்பது இந்தியா முழுவதுமான திட்டமாகும்.
- இது தொழில்துறை, மென்பொருள் உருவாக்குநர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆளில்லா விமானத் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்துப் பங்கு தாரர்களையும் ஒன்றிணைக்க முயல்கிறது.




## SMILE-75 முன்னெடுப்பு


- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது SMILE-75 முன்னெடுப்பின் கீழ் 75 மாநகராட்சிகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இது இந்த மாநகராட்சிகளில் பிச்சை எடுத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு முழுமையான மறுவாழ்வினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SMILE என்பது "வாழ்வாதாரம் மற்றும் தொழில்முனைவினை மேம்படுத்துவதற்காக விளிம்புநிலை சேர்ந்தத் தனிநபர்களுக்கு ஆதரவு வழங்குதல்" (Support for Marginalised Individuals for Livelihood and Enterprise) என்பதாகும்.

## பாரத் ரங் மஹோத்சவம்

- மகாராஷ்டிர மாநில ஆளுநர் அவர்கள் 22வது 'பாரத் ரங் மஹோத்சவ' விழாவினைத் தொடங்கி வைத்தார்.
- இது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெறும் நாடக விழாவாகும்.
- இந்த ஐந்து நாள் விழாவினைத் தேசிய நாடகப் பள்ளி மற்றும் P.L.தேஷ்பாண்டே மகாராஷ்டிரா கலை அகாடமி ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.

## மின்சார (திருத்தம்) மசோதா, 2022

- சர்ச்சைக்குரிய 2022 ஆம் ஆண்டு மின்சாரத் திருத்த மசோதாவானது மக்களவையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது பல நிறுவனங்களுக்கு, மின்சாரம் வழங்கும் நிறுவனங்களின் விநியோக வலை அமைப்புகளைத் தடையற்ற முறையில் அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு நுகர்வோர் எந்தவொரு மின்சார சேவை வழங்குநர் நிறுவனத்தினையும் தேர்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பினை அளிக்கும்.
- இது மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களை தங்களது கட்டணத் திருத்தங்களை சரியான நேரத்தில் மேற்கொள்ளவும் சில்லறை மின் விநியோகத் துறையில் போட்டித் திறனை ஊக்குவிக்கவும் தூண்டுகிறது.
- இலவசமாக வழங்குதல் என்ற கலாச்சாரம் மற்றும் மின் விநியோக நிறுவனங்களின் பெருகி வரும் நிலுவைத் தொகைகள் மீதான ஒரு புதுப்பிக்கப்பட்ட விவாதத்தின் மத்தியில் இந்த மசோதா முன்வைக்கப்படுகிறது.
- இந்த மசோதா 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தினைத் திருத்தி அமைக்கிறது.
- தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானா ஆகிய மூன்று மாநிலங்களின் மின் பகிர்மான நிறுவனங்கள், அந்தந்த மாநிலங்களின் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு 57 சதவீதம் மொத்த நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளன.
- அவற்றைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் ஆகியவை உள்ளன.





## மாவட்ட ரீதியாக சிறுபான்மையினருக்கு அங்கீகாரம் அளித்தல்

- மதம் மற்றும் மொழி சார்ந்தச் சிறுபான்மையினர் சமூகங்களை மாவட்ட வாரியாக அடையாளம் காண்பது என்பது "சட்டத்திற்கு முரணானது" என்று உச்ச நீதிமன்றம் கூறி உள்ளது.
- மொழி மற்றும் மதச் சமூகங்களின் சிறுபான்மையினர் தகுதிநிலையானது மாநில வாரியாகக் கருதப்பட வேண்டும் என்றும் அது குறிப்பிட்டது.

- 2002 ஆம் ஆண்டில் T. M.A.பாய் மற்றும் கர்நாடக மாநில அரசு இடையே நடைபெற்ற வழக்கில் 11 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய ஒரு பெரும்பான்மைத் தீர்ப்பைக் குறிப்பிட்டு நீதிபதி இதனைக் கூறினார்.
- தற்போது, மத்திய அரசால் 1992 ஆம் ஆண்டு சிறுபான்மையினருக்கானத் தேசிய ஆணையச் சட்டத்தின் 2(c) என்ற ஒரு சட்டப் பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட சமூகங்கள் மட்டுமே சிறுபான்மையினராகக் கருதப்படுகின்றன.

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புறத் திட்டம்

- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புறம் (PMAY-U) திட்டத்தை 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம் என்பது இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களில் ஒன்றாகும்.
- மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள்/மத்திய இடைமுக முகமைகள் மூலம் நாட்டின் நகர்ப்புறங்களில் உள்ள அனைத்துத் தகுதியானப் பயனாளிகளுக்கும் அனைத்து வானிலைகளுக்கும் ஏற்ற வகையிலான பக்கா வீடுகளை வழங்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புறங்களையும் உள்ளடக்கியது.




## லும்பி-புரோவாக்இண்ட் தடுப்பூசி


- விலங்குகளின் தோலில் வரும் கட்டி (Lumpy Skin Disease – LSD) என்ற நோய்க்கான லும்பி-புரோவாக்இண்ட் என்ற உள்நாட்டிலிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு தடுப்பூசியானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்த நோயானது பல மாநிலங்களில் பரவியதால், 2019 ஆம் ஆண்டு முதல் நூற்றுக் கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன.

- லம்பி-புரோவாக்இண்ட் என்ற தடுப்பூசி, இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) கீழ் உள்ள இரண்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்நோய் ஆப்பிரிக்காவில் தோன்றியதாகும்.
- கடந்த 2 முதல் 3 ஆண்டுகளில், இந்தியாவின் தென் மாநிலங்களில் தன் தாக்கத்தினை வெளிப்படுத்தியப் பிறகு, LSD நோயின் பெருந்தொற்றானது பஞ்சாப் மற்றும் வட இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும் பரவியுள்ளது.
- இந்நோய் பெரும்பாலும் பசுக்களிலும், சற்றே குறைவான அளவில் எருமைகளிலும் ஏற்படுகிறது.




## இமாலய வழித்தட வலையமைப்பு

- சீனா மற்றும் நேபாளம் ஆகியவை இணைந்துச் சமீபத்தில் "இமாலயப் பல் பரிமாண வழித்தட இணைப்பு வலையமைப்பை" உருவாக்க ஒப்புதல் அளித்தன.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், சீனா-நேபாள எல்லைக்குட்பட்ட இரயில்வேயினை நிறுவச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிவதற்கான ஒரு ஆய்விற்கு சீனா நிதி அளிக்கும்.
- சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பின் கீழ் இமாலயப் பல் பரிமாண வழித்தட இணைப்பு வலையமைப்பானது கட்டமைக்கப்படும்.
- இதன் கீழ் இரயில்வே மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்புகள் கட்டமைக்கப் படும்.
- இது மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பின் கீழ், நேபாளத்திற்கும் சீனாவிற்கும் இடையே கட்டமைக்கப்பட உள்ள ஒரு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த வழித் தடமாகும்.



## புதிய இணையவழி விண்வெளி அருங்காட்சியகம்

- 'ஸ்பார்க்' விண்வெளி அருங்காட்சியகம் எனப்படும் இந்த டிஜிட்டல் தளத்தை இஸ்ரோ தலைவர் S. சோம்நாத் தொடங்கி வைத்தார்.
- இது ஒரு ஊடாடும் இடைமுகத்துடன் இஸ்ரோவின் பல்வேறுத் திட்டப் பணிகளை விளக்கிக் காட்டுகிறது.
- இது பயனர்கள் இந்தத் தளத்துடன் எளிதாக தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு ஊடாடும் இடைமுகத்தைக் கொண்டுள்ளது.
- இஸ்ரோவின் ஏவுகலங்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் அறிவியல் பணிகள் தொடர்பான பல ஆவணங்கள், படங்கள் மற்றும் ஒளிப்படக் காட்சிகளை இந்தத் தளம் வழங்குகிறது.

## உலகின் மிக உயரமான செனாப் இரயில் பாலத்தின் முக்கிய இணைப்பு

- செனாப் ஆற்றின் மீது கட்டப்பட்டு வரும் உலகின் மிக உயரமான இரயில்வே பாலத்தின் முக்கிய இணைப்பு சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்த முக்கிய இணைப்பானது உலகின் மிக உயரமான இரயில்வே பாலத்தின் மேல் தளங்களின் இரண்டு முனைகளை இணைக்கிறது.
- செனாப் பாலம் 1,315 மீட்டர் நீளம் கொண்டதாகும்.
- தற்போது கட்டப்பட்டு வருகின்ற செனாப் பாலம் அதன் கட்டுமானப் பணிகள் நிறைவு அடைந்ததும், அது பாரீசின் ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டர் உயரமாக விளங்கும்.
- இந்தப் பாலம் காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிக்கான நேரடி இணைப்பினை வழங்கும்.



## 75வது சுதந்திரத் தின விழா

- இந்தியா, விடுதலை பெற்றதன் 75வது ஆண்டு நிறைவு அல்லது தனது 76வது சுதந்திர தினத்தினைக் கொண்டாடுகிறது.
- "சுவதேசி ஷே சுவராஜ், சுவராஜ் ஷே சூரஜ்" என்ற ஸ்ரீ அரவிந்தரின் ஒரு மந்திரத்தைப் பின்பற்றுமாறு பிரதமர் அவர்கள் மக்களுக்கு வலியுறுத்தினார்.
- திரௌபதி முர்மு குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தான் பங்கேற்கும் முதல் சுதந்திரத் தின விழாவில், இராஷ்டிரபதி பவனில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சியை நடத்தினார்.

- "ஹர் கர் திரங்கா" என்ற பிரச்சாரத்திற்கான இணைய தளத்தில் இந்தியத் தேசியக் கொடியுடன் எடுத்துக் கொண்ட 5 கோடிக்கும் அதிகமான சுயப் புகைப்படங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- இந்தத் தினத்தினைக் கொண்டாடுவதற்காக, 'சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா' என்ற முன்னெடுப்பினை இந்திய அரசுத் தொடங்கியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதியன்று, பிரதமர் அவர்கள் சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- நாம் சுதந்திரம் அடைந்ததன் 75வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையும் அதனை நினைவு கூறும் வகையிலும் 75 வார நாள் கணிப்பு தொடங்கப்பட்டது.
- சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற சில வெளிவராத நாயகர்களின் பெயர்களைக் கொண்ட 16 பூங்காக்களை டெல்லியில் துணைநிலை ஆளுநர் V.K. சக்சேனா அவர்கள் திறந்து வைத்தார்.

## இந்தியாவின் பருவநிலை சார்ந்த உறுதிப்பாடுகள்

- 2070 ஆம் ஆண்டிற்குள் இந்தியா புதைபடிம எரிபொருளைச் சார்ந்திராமல் திறம்படச் செயல்படுதல் மற்றும் பொருளாதாரத்திற்கு ஆற்றல் அளிப்பதற்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இந்தியா சார்ந்திருப்பதை துரிதப்படுத்துதல் போன்ற கிளாஸ்கோவில் இந்தியா அளித்த உறுதிமொழிகளை இந்தியா அங்கீகரித்துள்ளது.
- இருப்பினும், இந்திய நாட்டினால் அங்கீகரிக்கப்பட்ட உறுதிமொழிகள், அது உறுதி அளித்தவற்றை விட குறைவாகவே இருந்தன.

***5 உறுதிப்பாடுகள்***

- 2030 ஆம் ஆண்டிற்குள், இந்தியா தனது புதைபடிமம் சாரா ஆற்றல் திறனை 500 GW ஆக உயர்த்தும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள், இந்தியா தனது ஆற்றல் தேவைகளில் 50 சதவீதத்தினைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் பூர்த்தி செய்யும்.
- இந்தியா தற்போது முதல் 2030 ஆம் ஆண்டு வரை மொத்த கரியமில (கார்பன்) வாயு உமிழ்வினை 1 பில்லியன் டன்கள் வரை குறைக்கும்.
- இந்தியா தனது கார்பன் செறிவினை, 2030 ஆம் ஆண்டிற்குள் 2005 ஆம் ஆண்டின் அளவில் இருந்து 45 சதவீதத்திற்கும் அதிகமான அளவு குறைக்கும்.
- ஆற்றல் மூலங்களிலிருந்து வெளியாகும் நிகர கார்பன்டை ஆக்சைடு உமிழ்வானது 2070 ஆம் ஆண்டிற்குள் நிறுத்தப்படும், அல்லது, இந்தியா 'நிகர சுழிய' உமிழ்வு என்ற இலக்கை எட்டும்.



## ஆயுஷ் கட்டமைப்புத் திட்டம்

- ஆயுஷ் அமைச்சகம் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியவை ஆயுஷ் கட்டமைப்புத் திட்டத்திற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தத்தின்படி, ஆயுஷ் துறையை டிஜிட்டல் மயமாக்குவதற்காக வேண்டி ஆயுஷ் அமைச்சகத்திற்கு 3 ஆண்டு காலத்திற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் தனது தொழில்நுட்ப உதவியை வழங்கும்.
- இந்த ஒப்பந்தமானது 2019 ஆம் ஆண்டில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாகும்.
- ஆயுஷ் கட்டமைப்புத் திட்டமானது, தகவல் தொழில்நுட்பத் துறைக்கான ஒரு ஆதரவு அமைப்பினை உருவாக்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஆயுஷ் அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டது.

## செறிவூட்டப்பட்ட அரிசித் திட்டம் – இரண்டாம் கட்டம்




- 2024 ஆம் ஆண்டிற்குள், அரசுத் திட்டங்களின் மூலம் செறிவூட்டப்பட்ட அரிசியினை விநியோகிக்க அரசானது 2021 ஆம் ஆண்டில் இலக்கு நிர்ணயித்தது.
- இந்த விநியோகத் திட்டத்தின் முதல் கட்டமானது 2021 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இரண்டாம் கட்டத்தில் 52% மாவட்டங்கள் செறிவூட்டப்பட்ட அரிசியினைப் பெற்றன.
- பொது விநியோகத் திட்டத்தின் கீழ், 24 மாநிலங்களைச் சேர்ந்த 151 மாவட்டங்கள் செறிவூட்டப்பட்ட அரிசியினைப் பெற்றன.
- செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கீட்டுத் திட்டமானது, மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்ற திட்டமாகும்.
- இந்தியாவில் இரத்தசோகை மற்றும் நுண் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகியவற்றை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு, 2019 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தினை 3 ஆண்டுகளுக்குத் தொடர (2021-22) அனுமதியானது அளிக்கப் பட்டது.

## சுதந்திரத் தின உரை : 7 சிறப்பம்சங்கள்

- இந்தியாவின் 76வது சுதந்திரத் தினத்தையொட்டி, டெல்லி செங்கோட்டையில் நடத்தப் பட்ட விழாவில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றினார்.
- சுதந்திரப் போராட்ட வீரர்கள், புரட்சியாளர்கள் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டவர்கள் ஆகியோரை நினைவு கூர்ந்து தனது உரையைத் தொடங்கச் செய்தார்.
- அயல் நாடுகளிடமிருந்து அனுமதிப் பெறுவதற்கு வழிவகுக்கும் 'குலாமி' என்ற அடிமை எண்ணத்தினை மக்கள் கைவிட வேண்டும் அவர் கேட்டுக் கொண்டார்.
- காலனித்துவத்தின் எஞ்சிய அதிகாரங்களை அகற்றவும் நமது அடிப்படைத் தோற்றத்தினைத் தக்க வைத்துக் கொள்ளவும் வேற்றுமையில் ஒற்றுமையை உறுதிப் படுத்தவும் தங்களது கடமையைச் செய்யுமாறும் மக்களைக் கேட்டுக் கொண்டார்.
- ஊழலும், வாரிசு அரசியலும் இந்தியாவில் நிலவும் இரண்டு மிகப்பெரியச் சவால்கள் என்று அவர் குறிப்பிட்டார்.
- நாட்டிலிருந்து ஊழலையும் வாரிசு அரசியலினையும் அகற்ற வேண்டும் என அவர் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.
- 130 கோடி மக்களின் ஒட்டு மொத்த மனப்பான்மையினை 'இந்திய மக்கள்' (டீம் இந்தியா) என்றவாறு மாற்றவும், அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சிப் பெற்ற நாடாக இந்தியா மாற உள்ளதை உறுதி செய்யவும் வேண்டி நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்லவும் அவர் மக்களிடம் அழைப்பு விடுத்தார்.
- பிரதமர் அவர்கள் அம்ரித் கால் என்பதற்காக 5 தீர்மானங்களை அல்லது "பஞ்ச் பிரான்" அல்லது 'விக்சித் பாரத்' (வளர்ச்சி பெற்ற இந்தியா) என்பதற்காகச் செயல்படுதல் என்பதை முன்வைத்தார்.

**I-Day resolve that identifies strengths, challenges**

- 'Panch Pran' target for next 25 years
- The big goal is 'developed India'
- 'Aatmanirbhar Bharat' needs to be taken forward
- Need to become self-reliant in the energy sector
- Private sector needs to play active role
- Women, pillars of India's growth
- Gender equality crucial parameter of unity, family its foundation
- Evils of corruption, nepotism two main threats

## குடியரசுத் தலைவரின் காவல்துறைப் பதக்கங்கள்

- 2022 ஆம் ஆண்டு சுதந்திரத் தினத்தன்று, 1082 காவல்துறைப் பணியாளர்கள் காவல் துறைப் பதக்கங்களைப் பெற்றனர்.

- அவர்களுள் 347 காவல்துறையினர் வீரதீரச் செயல்களுக்கானப் பதக்கத்தினையும், 87 நபர்கள் சிறப்பாகப் பணியாற்றியதற்கான காவல்துறைப் பதக்கத்தினையும், 648 பணியாளர்கள் மகத்தானச் சேவைக்கானப் பதக்கத்தினையும் பெற்றனர்.
- இந்த ஆண்டு, ஜம்மு & காஷ்மீரைச் சேர்ந்த 109 மத்திய சேமக் காவல் படை வீரர்கள் மற்றும் 108 காவல் அதிகாரிகள் வீரதீரப் பணிகளுக்கான காவல்துறை விருதினைப் பெற்றனர்.
- இவர்களைத் தவிர, 7 காவல்துறை வீரர்கள் சிறந்தச் சேவைக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தச் சேவைப் பதக்கத்தினைப் பெற்றனர்.
- மகத்தானச் சேவைக்கான சீர்திருத்தச் சேவைப் பதக்கத்தினை 38 வீரர்கள் பெற்றனர்.
- குடியரசுத் தலைவரின் காவல்துறைப் பதக்கங்கள் என்பது இந்தியாவின் சட்டங்களை அமலாக்கும் துறையினருக்கு வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது 1951 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இந்த விருதானது ஆரம்பத்தில், ‘குடியரசுத் தலைவரின் காவல்துறை மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கான விருதுகள்’ என்றழைக்கப்பட்டன.
- இவை வீரதீரச் செயல்கள் அல்லது சிறப்பானச் சேவைக்காக வழங்கப்படுகிறது.


Medal for Distinguished Service


Medal for Meritorious Service

## குடியரசுத் தலைவரின் தாத்ரக்சக் பதக்கம்

- ஆயுதப் படைகள் மற்றும் மத்திய ஆயுதப்படை வீரர்களுக்கான 107 வீரதீரப் பதக்கங்களை வழங்க குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் ஒப்புதல் அளித்தார்.
- இதில் 3 கிரித்தி சக்ரா பதக்கங்களும் 13 சௌரிய சக்ரா பதக்கங்களும் அடங்கும்.
- இவற்றைத் தவிர 81 சேனா பதக்கங்களும், 1 நவ் சேனா பதக்கங்களும், 2 பர் தோ சேனா பதக்கங்களும் அறிவிக்கப்பட்டன.
- கடலோரக் காவல் படையினருக்கான 3 தாத்ரக்சக் பதக்கங்களுக்கும் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்தார்.
- இது அவர்களின் ஆழ்ந்த வீரதீரச் செயல்கள், சிறப்பான சேவை மற்றும் கடமை மீதான ஒப்பற்ற அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கௌரவிக்கச் செய்யும் ஒரு நோக்கத்துடன் வழங்கப் படுகிறது.




## 23வது இந்திய சர்வதேசக் கடல்சார் உணவுப் பொருட்கள் கண்காட்சி

- 23வது இந்திய சர்வதேசக் கடல்சார் உணவுப் பொருட்கள் கண்காட்சியானது கொல்கத்தாவில் நடத்தப் பட உள்ளது.
- இது இந்தியக் கடல்சார் உணவுப் பொருள் ஏற்றுமதிச் சங்கத்துடன் இணைந்து கடல் சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு அமைப்பினால் நடத்தப்பட உள்ளது.
- இது கடல்சார் உணவுப்பொருட்கள் துறையில், 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படும் கண்காட்சியாகும்.

## மிகவும் நம்பகமான  அமைப்புகள்

- பாதுகாப்புப் படைகள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்தியப் பிரதமர் ஆகியவை இந்தியாவில் உள்ள மிக நம்பகமான அமைப்புகளாகும்.
- இப்சாஸ் இந்தியா என்ற அமைப்பினால் இந்தக் கணக்கெடுப்பானது நடத்தப்பட்டது.
- இதில் இந்திய உச்ச நீதிமன்றமானது 4வது இடத்தில் உள்ளது.
- இதனைத் தொடர்ந்து மத்தியப் புலனாய்வு வாரியமானது இடம் பெற்றுள்ளது.



## 10 சதவீதம் எத்தனால் கலவை

- கரும்பில் இருந்து எடுக்கப்பட்ட எத்தனாலைப் பெட்ரோலில் 10 சதவீத அளவில் கலந்து உபயோகிக்கும் திட்ட இலக்கினை இந்தியா திட்டமிட்டதற்கு முன்பே எட்டியுள்ளது.
- 10 சதவீதம் எத்தனால் (10 சதவீதம் எத்தனால், 90 சதவீதம் பெட்ரோல்) கலந்த பெட்ரோலை விநியோகிப்பதற்கான இலக்கானது ஜூன் மாதம் எட்டப்பட்டது.
- இதனை எட்டப்பட 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது
- 2025 ஆம் ஆண்டிற்குள், ஐந்து ஆண்டுகளில் 20 சதவிகிதம் எத்தனால் கலந்த பெட்ரோல் தயாரிக்கும் இலக்கை அடையும் முன்னெடுப்பினை அரசு முன்னெடுத்துள்ளது.




## யாத்ரி சுரக்சா நடவடிக்கை




- இந்திய இரயில்வே பாதுகாப்புப் படையானது, யாத்ரி சுரக்சா நடவடிக்கை என்று அழைக்கப் படும் இந்தியா முழுவதுமான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், பயணிகளுக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு வழங்கச் செய்வதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- இந்த நடவடிக்கையினைத் தொடங்குவதற்காக, 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பயணிகளிடம் கொள்ளையடிக்கும் குற்றவாளிகளுக்கு எதிராக இரயில்வே பாதுகாப்புப் படை ஒரு மாத கால அளவிலான இந்தியா முழுவதுமான ஒரு இயக்கத்தைத் தொடங்கியது.

## வானத்தில் இந்தியத் தேசியக் கொடி

- சுதந்திர தினத்தன்று, ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா என்ற அமைப்பானது, புவியில் இருந்து சுமார் 30 கிலோமீட்டர் உயரத்தில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றியது.
- கொடியை ஏந்திச் சென்று வானில் விரியச் செய்த ஒரு பலூன் மூலம் புவியில் இருந்து 1 லட்சத்து 6 ஆயிரம் அடி உயரத்திற்குத் தேசியக் கொடி அனுப்பப்பட்டது.
- ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா என்பது நாட்டிற்கான இளம் அறிவியலாளர்களை உருவாக்கி, எல்லைகளற்ற உலகம் குறித்த விழிப்புணர்வை குழந்தைகளிடையே பரப்புகின்ற ஓர் அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது, சமீபத்தில் ஒரு செயற்கைக் கோளைப் புவி தாழ்மட்டச் சுற்றுப் பாதையில் ஏவியது.
- சுதந்திரம் பெற்றதன் 75வது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் இந்தியா முழுவதும் உள்ள 750 மாணவியரால் இந்த ஆசாதிசாட் உருவாக்கப் பட்டது.




## INS சாத்புரா கப்பல் - 75 சுற்றுகள்

- இந்திய கடற்படைக் கப்பல் (INS) சாத்புரா என்ற கப்பலானது இந்தியாவின் 75வது ஆண்டு சுதந்திரத்தைக் கொண்டாடுவதற்காக வட அமெரிக்கக் கண்டத்தைச் சென்று அடைந்தது.
- இந்தியாவின் சுதந்திர தினத்தன்று சான் டியாகோ அமெரிக்கக் கடற்படைத் தளத்தில் INS சாத்புரா கப்பலானது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை கொண்டாடும் விதமாக 75 சுற்றுகளை நிறைவு செய்தது.
- INS சாத்புரா கப்பல் சான் டியாகோ அமெரிக்கக் கடற்படைத் தளத்திற்கு வருகை தந்தது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.
- இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல் வட அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையை வந்தடைந்தது இதுவே முதல் முறையாகும்.




## சூப்பர் வாசுகி சரக்கு இரயில்




- இந்திய இரயில்வே நிர்வாகமானது சூப்பர் வாசுகி சரக்கு என்ற இரயிலின் சோதனை ஓட்டத்தை மேற்கொண்டது.
- 295 ஏற்றப்பட்ட சரக்குப் பெட்டிகள் மற்றும் 6 இயந்திரங்களுடன் இந்தியாவின் மிக நீளமான மற்றும் அதிக எடை கொண்ட சரக்கு இரயிலாக இது விளங்குகிறது.
- 27,000 டன்களுக்கும் அதிகமான அளவில் நிலக்கரியை ஏற்றிக் கொண்டு இந்த 3.5 கி.மீ. நீளம் கொண்ட சரக்கு இரயிலின் சோதனை ஓட்டமானது மேற்கொள்ளப்பட்டது.
- சத்தீஸ்கரில் உள்ள கோர்பா மற்றும் நாக்பூருக்கு அருகிலுள்ள ராஜ்நந்த்கான் ஆகிய பகுதிகளுக்கு இடையே தென்கிழக்கு மத்திய இரயில்வே நிர்வாகம் இந்தச் சோதனை ஓட்டத்தை நடத்தியது.
- இந்திய இரயில்வே நிர்வாகத்தினால் இதுவரை இயக்கப்பட்ட மிக நீளமான மற்றும் அதிக எடை கொண்ட சரக்கு இரயில் இதுவாகும்.

## இந்தியாவின் குழந்தை இறப்பு விகிதம்



INFANT MORTALITY RATE FROM 2009-2019

| Year | Total | Male | Female |
|---|---|---|---|
| 2009 | 59 | 58 | 61 |
| 2010 | 55 | 52 | 57 |
| 2011 | 52 | 50 | 53 |
| 2012 | 49 | 47 | 51 |
| 2013 | 47 | 45 | 49 |
| 2014 | NA | NA | NA |
| 2015 | 43 | 40 | 47 |
| 2016 | 41 | 39 | 44 |
| 2017 | 38 | 37 | 40 |
| 2018 | 37 | 37 | 38 |
| 2019 | 35 | 36 | 35 |

- குழந்தை இறப்பு விகிதத்தினைக் குறைப்பதில் இந்தியா ஒரு விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் குழந்தை இறப்பு விகிதமானது 1,000 பிறப்புகளுக்கு 45 ஆக இருந்தது.
- ஆனால் 2019 ஆம் ஆண்டில் இது 1,000 பிறப்புகளுக்கு 35 ஆகக் குறைந்தது.
- 'பாலன் 1000' தேசியப் பிரச்சாரம் மற்றும் பெற்றோர் சார் செயலி ஆனது மும்பையில் நடைபெற்ற ஆரம்ப குழந்தைப் பருவ மேம்பாட்டு மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- 'பாலன் 1000' ஆனது குழந்தைகளின் வாழ்க்கையின் முதல் இரண்டு ஆண்டுகளில் அவர்களின் அறிவாற்றல் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது.
- இந்தச் செயலியானது பராமரிப்பாளர்களுக்கு குழந்தைகளின் அன்றாட வழக்கங்களில் என்ன செய்ய முடியும் என்பது குறித்த சில நடைமுறை சார்ந்த ஆலோசனைகளை வழங்கி, சந்தேகங்களைத் தீர்க்க உதவும்.
- இந்தத் திட்டமானது, ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் (RBSK) என்ற திட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.
- ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் திட்டம் ஆனது குழந்தை பிறந்த முதல் 1,000 நாட்களில் பொறுப்புமிக்க கவனிப்பு மற்றும் கவனம் மிக்க நலன்களை வழங்குவதை உறுதிப்படுத்துகிறது.

## புதிய ஆயுதங்கள் மற்றும் ஆயுத அமைப்பு

- பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆனது நிபுண் கண்ணி வெடிகள், தரையிறங்கும் வகையிலான தாக்குதல் கலம் (LCA) இரண்டு புதிய ஆயுதங்கள் மற்றும் F-INSAS அமைப்பு ஆகியவற்றை இராணுவத்திடம் ஒப்படைத்தது.

### *F-INSAS அமைப்பு*

- F-INSAS என்பதன் விரிவாக்கம் ஒரு அமைப்பாகச் செயல்பட உள்ள எதிர்கால காலாட் படை அமைப்பு என்பதாகும்.
- இது இந்திய இராணுவப் பிரிவுகளை நவீனமயமாக்க உதவும் வகையிலான உள் நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும்.

- இந்திய இராணுவத்தின் காலாட்படைப் பிரிவுகளின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பானது உருவாக்கப்பட்டது.
- F-INSAS அமைப்பானது AK-203 தாக்குதல் ரக துப்பாக்கி வடிவில் அழிப்புத் திறனை உள்ளடக்கியது.
- இந்தியா மற்றும் ரஷ்யா இடையிலான கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாக AK-203 ஆயுதத்தினை இந்தியா தயாரிக்க உள்ளது.

***நிபுண் படை எதிர்ப்பு கண்ணி வெடிகள்***

- இந்த 'நிபுண்' கண்ணி வெடிகள், தற்போதுள்ள கண்ணி வெடிகளை விட அதிக சக்தி வாய்ந்ததாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதால், எல்லையில் உள்ள படையினருக்கு வழங்கப் படும் பாதுகாப்பை இது மேலும் மேம்படுத்தும்.

***தரையிறங்கும் வகையிலான தாக்குதல் கலம்***

- தரையிறங்கும் வகையிலான தாக்குதல் கலங்கள் என்ற இந்தப் புதிய படகுகளில், மேம்பட்ட கண்காணிப்புக் கருவிகள் மற்றும் இதரப் பிற உபகரணங்களுடன் பொருத்தப் பட்டுள்ளன.
- கிழக்கு லடாக்கில் உள்ள பாங்கோங் சோ ஏரியின் பகுதிகளில் கடுமையான கண்காணிப்புப் பணியில் இவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
- போர் நடவடிக்கைகளில் வீரர்களை ஏற்றிச் செல்வதற்கானப் படகுகளுக்கு மாற்றாக இது விளங்கும்.
- இந்த இலகுரக தாக்குதல் தாங்கு கலங்கள் மூலம் 35 வீரர்களை ஏற்றிச் செல்ல முடியும்.




## அடுத்த 25 ஆண்டுகளுக்கான 'பஞ்ச் பிரான்' இலக்கு

- அடுத்த 25 ஆண்டுகளில் இந்திய நாட்டினை ஒரு வளர்ச்சிப் பெற்ற நாடாக மாற்றச் செய்வதற்கான "பஞ்ச் பிரான் இலக்குகளை" (ஐந்து தீர்மானங்கள்) பிரதமர் அவர்கள் நிர்ணயித்தார்.
- அந்த ஐந்து இலக்குகள் பின்வருமாறு
  - மாபெரும் தீர்மானங்கள் மற்றும் வளர்ச்சிப் பெற்ற இந்தியா என்ற உறுதியுடன் முன்னேறுதல்
  - அடிமைத் தனத்தின் அனைத்துத் தடயங்களையும் அழித்தல்

- இந்தியாவின் பாரம்பரியத்தைப் பற்றி பெருமிதம் கொள்ளுதல்
- ஒற்றுமையே வலிமை
- பிரதமர் மற்றும் முதல்வர்கள் உள்ளிட்ட குடிமக்களின் கடமைகள்.

❖ 2047 ஆம் ஆண்டில் நமது நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் போது இந்த ஐந்து தீர்மானங்கள் வளர்ச்சிப் பெற்ற நாட்டிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.




## இந்தியாவில் முதல்முறையாக உப்பு நீர் மூலம் இயங்கும் விளக்கு

❖ 'ரோஷிணி' எனப்படும் உப்பு நீர் மூலம் இயங்கும் விளக்கு ஆனது இந்தியாவில் முதல் முறையாக சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ இது LED விளக்குகளுக்கு ஆற்றலை வழங்குவதற்காக கடல்நீரைப் பயன்படுத்துகிறது.

❖ இது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்படும் இது போன்ற முதல் வகை விளக்காகும்.

❖ இது கடல்சார் ஆராய்ச்சிக்காக சென்னையில் உள்ள தேசியக் கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தால் இயக்கப்படும் சாகர் அன்வேஷிகா எனப்படும் கடலோர ஆராய்ச்சிக் கப்பலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ உப்பு நீர் மூலம் இயக்கப்படும் இந்த விளக்குகள் LED வகை விளக்குகளுக்கு ஆற்றலை வழங்குவதற்காகவே, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுப் பொருத்தப்பட்ட இரு மின்முனைகளுக்கு இடையே கடல்நீரை மின்பகுளிகளாகப் பயன்படுத்துகின்றன.

## 20% எத்தனால் கலந்த பெட்ரோல்

❖ இந்தியாவில் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பெட்ரோல் முனையங்களில் 20 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோல் விநியோகிக்கப் பட உள்ளது.

❖ கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைத்து சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கையானது மேற் கொள்ளப்பட்டுள்ளது.

❖ இந்தியா, இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 10 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலை விநியோகித்தல் என்ற இலக்கை எட்டியது.




## ஆசியாவின் மிகப்பெரிய அழுத்தப்படுத்தப்பட்ட உயிரி எரிவாயு ஆலை

- பஞ்சாப் மாநிலம் சங்ரூர் என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய அழுத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தி ஆலையானது தனது வணிக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.
- பூட்டல் கலான் (சங்ரூர்) கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலையானது ஒரு நாளைக்கு 33.23 டன் அழுத்தப்படுத்தப்பட்ட உயிரி எரிவாயுவினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

## வீர் துர்காதாஸ் ரத்தோர் சிலை

- ராஜஸ்தானின் ஜோத்பூரில் "வீர் துர்காதாஸ் ரத்தோர்" அவர்களின் 385வது பிறந்த நாளன்று அவரது சிலை திறக்கப்பட்டது.
- இவர் மார்வார் அரசின் ரத்தோர் இரஜப்புத்திர வம்சத்தின் தளபதியாக விளங்கியவர் ஆவார்.
- 17 ஆம் நூற்றாண்டில் மகாராஜா ஜஸ்வந்த் சிங் அவர்கள் மரணமடைந்தப் பிறகு மார்வார் (ஜோத்பூர்) பகுதியின் மீதான ரத்தோர் வம்சத்தின் ஆட்சியைத் துர்காதாஸ் ஒற்றை ஆளாகப் பாதுகாத்தார்.
- அவர் இரஜப்புத்திர போரின் போது (1679-1707) ரத்தோர் படைகளுக்குத் தலைமை தாங்கினார்.
- முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாக மாறிய இரஜப் புத்திரக் கிளர்ச்சியில் (1708-1710) முக்கியப் பங்கு வகித்தார்.
- ஜெய்ப்பூரின் ராஜா இரண்டாம் ஜெய் சிங் உடன் சேர்த்து இவரும் அந்தக் கிளர்ச்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தேசியப் பாதுகாப்பு உத்திகள் மாநாடு 2022

- 2022 ஆம் ஆண்டு "தேசியப் பாதுகாப்பு உத்திகள் மாநாடு" ஆனது சமீபத்தில் புது தில்லியில் தொடங்கப் பட்டது.
- இது தேசியப் பாதுகாப்பு சார்ந்தச் சவால்களை எதிர்கொள்வதற்காக வேண்டி உயர் மட்ட நிலையில் உள்ள தலைமை அமைப்புகளை ஒன்றிணைக்கிறது.
- காவல்துறை அதிகாரிகள், பாதுகாப்புத் துறையினர் மற்றும் சிறப்புத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

## சஃபாய் மித்ரா சுரக்சித் ஷெஹர்

- இந்தியா முழுவதிலும் உள்ள 500 நகரங்கள் தங்களை 'சஃபை மித்ரா சுரக்சித் ஷெஹர்' என்று அறிவித்துள்ளன.
- இந்த நகரங்கள் அனைத்தும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் வழங்கப்பட்ட நிறுவனம் சார்ந்த திறன், உபகரண விதிமுறைகள் மற்றும் மனிதவளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு போதுமான நிலையை எட்டி உள்ளன.
- இந்த அனைத்து நகரங்களும் தற்போது சஃபாய் மித்ராக்கள் என்ற துப்புரவுப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பான பணிச் சூழலை வழங்குகின்றன.
- "சஃபாய் மித்ரா சுரக்சித் ஷெஹர்" ஆனது நகர்ப்புறத் தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் நிலையான முறையிலான துப்புரவு நடைமுறைகளை செயல்படுத்தச் செய்வதை ஊக்குவிக்கும் இலக்குடன் இணக்கமான முறையில் அறிவிக்கப்பட்டது.

## மாந்தன் இயங்குதளம்




- இந்திய அரசானது, “மாந்தன் இயங்குதளத்தை” தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் தொழில்நுட்பம் சார்ந்த சமூகத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய புத்தாக்கங்கள் மற்றும் தீர்வுகளைச் செயல்படுத்துவதில் தொழில்துறை மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை வழி நடத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது NSEIT என்ற அமைப்பினால் இயக்கப்பட்டு, தலைமை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தினால் வழி நடத்தப் படுகிறது.

## தேசிய தானியங்கி கைரேகை அடையாளம் காணும் அமைப்பு

- தேசிய தானியங்கி கைரேகை அடையாள காணும் அமைப்பானது (NAFIS) சமீபத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தினால் (NCRB) உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த மையப்படுத்தப்பட்ட கைரேகை தரவுத் தளத்தைப் பயன்படுத்தி வழக்குகளை எளிதாகவும் விரைவாகவும் தீர்ப்பதற்கு இந்த அமைப்பு உதவும்.




## NIDAAN தரவுத்தளம்





- போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியமானது போதைப்பொருள் கடத்தலில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் குறித்த இந்தியாவின் முதல் தரவுத்தளத்தை உருவாக்கி உள்ளது.
- NIDAAN என்பதன் விரிவாக்கமானது போதைப்பொருள் கடத்தலில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் பற்றிய தேசிய ஒருங்கிணைந்த தரவுத்தளம் ஆகும்.

- நாட்டில் போதைப்பொருள் எதிர்ப்புச் சட்டங்களை அமல்படுத்துவதற்காகப் பணி அமர்த்தப் பட்ட பல்வேறு மத்திய மற்றும் மாநில வழக்குத் தொடுப்பு நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக இது தற்போது செயல்படுத்தப்படுகிறது.
- இது போதைப்பொருள் ஒருங்கிணைப்பு நெறிமுறை (NCORD) தளத்தின் ஓர் அங்கம் ஆகும்.
- இந்த இயங்குதளமானது பரிமாற்ற வசதி கொண்ட குற்றவியல் நீதி அமைப்பு மற்றும் இணையவழி சிறைச்சாலை செயலி (மேகக் கணிமை அடிப்படையிலானச் செயலி) களஞ்சியத்தில் இருந்து தரவுகளைப் பெறுகிறது.

## வேளாண் கடன்களுக்கான வட்டி மானியம்

- குறுகிய கால வேளாண் கடன்களுக்கான வட்டி மானியத்தை மீண்டும் அறிமுகப் படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதில் 3 லட்சம் ரூபாய் வரையிலான குறுகிய கால வேளாண் கடன்களுக்கு 1.5% வட்டி மானியம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- இந்தத் தொகையானது 2022-23 நிதியாண்டு முதல் 2024-25 வரையில் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.
- கிராமப் பொருளாதாரத்தில் போதுமான வேளாண் கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விவசாயிகள் குறைந்தபட்ச வட்டி விகிதத்தை வங்கியில் செலுத்துவதை உறுதி செய்வதற்காக வட்டி மானியத் திட்டம் அரசினால் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் என மறு பெயரிடப் பட்டுள்ளது.




## பாரம்பரிய அறிவுசார் தகவல்களுக்கான டிஜிட்டல் நூலகத்தின் (TKDL) தரவுத் தளம்

- காப்புரிமைப் பெற்ற அலுவலகங்களைத் தவிர, இதரப் பயனர்களும் அணுகும் வகையில் பாரம்பரிய அறிவுசார் தகவல்களுக்கான டிஜிட்டல் நூலக தரவுத்தளத்தை விரிவுபடுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்த ஒப்புதல் ஆனது புத்தாக்கம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தும் முயற்சியில் பாரம்பரிய அறிவுசார் தகவல்களைத் தற்போதைய நடைமுறைகளுடன் ஒருங்கிணைத்து அதனை இணைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் தரவுத்தளம் ஆனது அறிவுசார் மற்றும் தொழில்நுட்ப வரம்புகளை மேம்படுத்த செய்வதற்காக பாரம்பரிய அறிவுசார் தகவல்களின் முக்கிய ஆதாரமாக செயல்படும்.
- இந்தத் தரவுத்தளத்தை கட்டணம் அடிப்படையிலான ஒரு சந்தா மாதிரி மூலம் அணுக இயலும்.
- இது ஒவ்வொரு கட்டமாக தேசிய மற்றும் சர்வதேசப் பயனர்களுக்காக அனுமதிக்கப் படும்.
- பாரம்பரிய அறிவுசார் தகவல்களுக்கான டிஜிட்டல் நூலகம் ஆனது 2001 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.




## இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட குரங்கம்மை நோய் பரிசோதனைக் கருவி

- ஆந்திரப் பிரதேச மருத்துவத் தொழில்நுட்ப மண்டலம் ஆனது சமீபத்தில் குரங்கம்மை நோயினைப் பரிசோதிப்பதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது RT-PCR கருவியை அறிமுகப்படுத்தியது.
- இந்தக் கருவியின் உதவியுடன், இந்தத் தொற்றுநோயை விரைவாகக் கண்டறியலாம்.
- இந்தக் கருவியை டிரான்ஸான்சியா எர்பா பயோமெடிக்கல்ஸ் நிறுவனம் உருவாக்கி உள்ளது.
- டிரான்ஸான்சியா எர்பா பயோமெடிக்கல்ஸ் நிறுவனத்தின் RT-PCR கருவி அதிக உணர் திறன் கொண்டது.
- ஜூலை 14 ஆம் தேதியன்று கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில், இந்தியாவில் முதல் முறையாக குரங்கம்மை நோய்ப் பாதிப்பு பதிவானது.



## கிராமீன் உத்யாமி திட்டத்தின் இரண்டாம் கட்டம்


- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் ஆனது சேவா பாரதி மற்றும் யுவ விகாஸ் சமூக அமைப்புடன் இணைந்து கிராமீன் உத்யாமி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தைச் சமீபத்தில் தொடங்கியது.
- இது பழங்குடியின இளைஞர்களிடையே திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு குறித்து ஊக்குவிப்பது மற்றும் திறன் இந்தியா என்ற திட்டத்தினை மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பயிற்சியின் முதல் கட்டத்தில், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் சேர்க்கப் பட்டனர்.
- தற்போது, இந்த திட்டம் மகாராஷ்டிரா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் குஜராத் ஆகிய ஆறு மாநிலங்களில் செயல்படுத்தப் படுகிறது.



## நிலக்கரி அமைச்சக விருது 2021-2022

- இந்த விருதுகள், கடந்த ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டன.
- பாதுகாப்பு, உற்பத்தி & உற்பத்தித் திறன் மற்றும் நிலைத்தன்மை ஆகிய மூன்று பிரிவுகளில் அவை வழங்கப்பட்டன.
- தரம் மற்றும் பெருநிறுவன வளத் திட்டமிடல் செயலாக்கம் ஆகிய இரண்டு புதிய கூடுதல் பிரிவுகள் இந்த ஆண்டு சேர்க்கப் பட்டுள்ளன.
- 'பாதுகாப்பு', 'உற்பத்தி & உற்பத்தித் திறன்' மற்றும் 'தரம்' ஆகிய மூன்று பிரிவுகளிலும் மகாநதி நிலக்கரி வயல் நிறுவனம் முதல் பரிசைப் பெற்றது.
- சென்ட்ரல் நிலக்கரி வயல் லிமிடெட் நிறுவனமானது பாதுகாப்புப் பிரிவில் இரண்டாவது பரிசையும், நிலைத் தன்மை என்ற பிரிவில் மூன்றாவது பரிசினையும் பெற்றது.
- வெஸ்டர்ன் நிலக்கரி வயல் (WCL) நிறுவனம் 'நிலைத் தன்மை' பிரிவில் முதல் பரிசைப் பெற்றது.
- நார்தர்ன் நிலக்கரி வயல் 'பெரு நிறுவன வளத் திட்டமிடல் செயலாக்கம்' என்ற பிரிவில் முதல் பரிசைப் பெற்றது.
- சென்ட்ரல் நிலக்கரி வயல் நிறுவனமானது 2007 ஆம் ஆண்டு முதல் முதலாம் வகை மினி ரத்னா நிறுவனமாகும்.
- இது நிலக்கரித் துறையைக் கட்டுப்படுத்தும் நாட்டின் முதல் நிறுவனம் ஆகும்.
- தொடக்கத்தில் இது ஐந்து துணை நிறுவனங்களைக் கொண்டிருந்தது.
- அதே சமயம் கோல் இந்தியா லிமிடெட் தற்போது எட்டு துணை நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

## ராஷ்ட்ரிய புரஸ்கார் தளம்



- ❖ மத்திய அரசானது ராஷ்ட்ரிய புரஸ்கார் தளத்தினை அறிமுகப்படுத்தியது.
- ❖ வெளிப்படைத் தன்மை மற்றும் பொதுமக்களின் பங்களிப்பினை உறுதி செய்யச் செய்வதற்காக இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், முகமைகள் ஆகியவற்றில் வழங்கப்படும் அனைத்து விருதுகளையும் ஒரே தளத்தின் கீழ் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்திய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட பல்வேறு விருதுகளுக்கு தனி நபர்கள் / நிறுவனங்களைப் பரிந்துரைப்பதற்கு வேண்டி ஒவ்வொருக் குடிமகனுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் இந்தத் தளம் உதவுகிறது.
- ❖ பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய மூன்று பத்ம விருதுகளும் 1954 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.

## உலகம் முழுவதும் மூவர்ணக்கொடி ஏற்றம்

- ❖ சுதந்திரம் பெற்றதன் 75வது ஆண்டு நிறைவின் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, அண்டார்டிகாவைத் தவிர அனைத்துக் கண்டங்களுக்கும் இந்தியக் கடற்படை தனது போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது.
- ❖ இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல்கள் ஆனது ஆறு கண்டங்கள், மூன்று பெருங் கடல்கள் மற்றும் ஆறு வெவ்வேறு நேர மண்டலங்களில் மூவர்ணக் கொடியை ஏற்றி உள்ளது.
- ❖ பெர்த், சிங்கப்பூர், மஸ்கட், மொம்பாசா, லண்டன், ரியோ டி ஜெனிரோ மற்றும் சான் டி யாகோ ஆகிய இடங்களில் அந்தப் போர்க் கப்பல்கள் நிறுத்தப் பட்டன.




## தேசிய மகளிர் காவல்துறையினர் மாநாடு

- ❖ இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் காவல்துறையுடன் இணைந்து இரண்டு நாட்கள் அளவிலான 'தேசிய மகளிர் காவல்துறையினர் மாநாடு' சிம்லாவில் நடைபெற்றது.
- ❖ இந்த மாநாட்டினை உள்துறை அமைச்சகம் மற்றும் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வாரியம் ஏற்பாடு செய்தது.

- இந்த மாநாடு மகளிர் காவலர்களின் சாதனைகள் மற்றும் அவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள் குறித்து அவற்றை அடையாளம் காட்டும்.
- வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் குற்றங்களின் அடிப்படையில் பெண்களின் புதியப் பங்களிப்புகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப் படும்.

## புவி வெப்ப ஆற்றல் மையம் – லடாக்

- லடாக்கில் 14,000 அடி உயரத்தில் அமைந்த நிலப்பகுதியில் புவி வெப்ப ஆற்றலை பயன்படுத்தச் செய்வதற்கான மையத்தினை ONGC நிறுவனம் கட்டமைக்க உள்ளது.
- இது இந்தியாவின் முதல் மற்றும் உலகின் மிக உயர்ந்த புவி வெப்ப ஆற்றல் மையமாக விளங்கும்.
- இது லடாக் பகுதியின் ஆற்றல் திறனை இந்தியாவின் தூய்மை ஆற்றல் வளம் நிறைந்த பகுதிகளுள் ஒன்றாக வெளிக் கொணர்வதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும்.
- இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுவனம் அதன் கார்பன் தடயத்தை ஈடு கட்டுவதற்காகப் பின்பற்றிய உத்தியின் ஒரு பகுதியாக புவி வெப்ப ஆற்றல் முன்னெடுப்பானது உள்ளது.
- அமெரிக்கா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், துருக்கி மற்றும் நியூசிலாந்து ஆகியவை ஜிகாவாட் அளவிலான புவி வெப்ப உற்பத்தித் திறன்களைக் கொண்டு உள்ளன.
- மெக்ஸிகோ மற்றும் இத்தாலி 900 மெகாவாட் திறன் கொண்ட மையங்களையும், கென்யா 800 மெகாவாட்டிற்கு மேலான திறன் கொண்ட நிலையங்களையும் கொண்டு உள்ள நிலையில் ஐஸ்லாந்து, ஜப்பான் மற்றும் பிற நாடுகள் அதற்கு அடுத்த நிலையில் உள்ளன.

## வேத் திட்டம்

- இந்த முன்னோடித் திட்டத்தின் ஒரு பகுதியாக, மகாராஷ்டிராவில் உள்ள நந்தூர்பார் தாலுகாவில் உள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகத்தின் கீழ் செயல் படும் ஆசிரமச் சாலைகள், குடியிருப்புப் பள்ளிகள், கற்பதற்கான தனித்துவமான ஒரு வழியைப் பரிசோதித்து வருகின்றன.
- இந்த முன்னோடித் திட்டமானது 'வேத் திட்டம்' எனப்படுகிறது.
- இது மாணவர்களை மையமாகக் கொண்ட அறிவுறுத்தல் உத்தி எனப்படும் ஒரு சுய நிர்ணயக் கற்பித்தல் முறை என்ற ஒரு புதிய கருத்தை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த முறையில் ஆசிரியர்கள் வகுப்புகளில் பாடங்களை நடத்தும் வழக்கமான நிலையான முறையைப் பின்பற்றாமல், மாணவர்களுக்குச் சவால்களை நிர்ணயித்து, குழுச் செயல்பாடுகள் வடிவில் தாங்களாகவேப் புதுமையான முறைகளை உருவாக்கி அவர்களின் பாடத் திட்டங்களைக் கற்பதற்கு ஊக்குவிப்பர்.

## சட்டப்பூர்வ உதவிப் பாதுகாப்பு ஆலோசனை அமைப்பு

- தேசிய சட்டச் சேவைகள் அமைப்பானது இந்தியா முழுவதும் உள்ள 365 மாவட்ட சட்டச் சேவை ஆணையங்களில் சட்ட உதவிப் பாதுகாப்பு ஆலோசனை அமைப்பை (LADCS) தொடங்கியுள்ளது.

- இது முழு நேர அளவிலான சட்ட உதவி வழக்கறிஞர்களைக் கொண்டுள்ளது.
- சட்ட உதவிப் பாதுகாப்பு ஆலோசனை அமைப்பு என்பது குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு குற்றவியல் விசாரணைகளில் தங்களைத் தற்காத்துக் கொள்ள இலவசச் சட்ட உதவியை வழங்குகின்ற, தேசிய சட்டச் சேவைகள் அமைப்பினால் நிதி அளிக்கப் படும் ஒரு திட்டமாகும்.
- தேசிய சட்டச் சேவைகள் அமைப்பானது 1987 ஆம் ஆண்டு சட்டச் சேவைகள் ஆணைய சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- சமூகத்தின் பலவீனமானப் பிரிவினருக்கு இலவசச் சட்ட சேவைகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் முதல் மின்சார வாகனச் சூழல் அமைப்பு

- மின்சார வாகனங்கள் சூழல் அமைப்பிற்கான இந்தியாவின் முதல் பல் பயன்பாட்டு தீர்வுத் தளமான “அனைத்தும் மின்சார வாகன மயம்” என்ற தளத்தினை HDFC வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது.
- “அனைத்தும் மின்சார வாகன மயம்" தளமானது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற மற்றும் சாத்திய மிக்க வகையில் வாடிக்கையாளர் விழிப்புணர்வை அதிகரிக்கும்.
- இந்த முன்னெடுப்பானது பல தசாப்தங்களாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு வழக்கமான தொழில்நுட்பத்திற்குப் பதிலாக ஒரு புதிய பசுமைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வைப் பரப்புகிறது.

## இந்தியாவின் பிறப்பு நிலை பாலின விகிதம்

- பியூ ஆராய்ச்சி மையத்தின் சமீபத்திய ஆய்வானது, இந்தியாவில் “மகன்களின் மீதான பிறப்பிற்கான எதிர்பார்ப்பானது” குறைந்து வருவதாக சுட்டிக் காட்டியுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் 100 சிறுமிகளுக்கு 111 ஆண்களாக இருந்த பிறப்பு நிலை பாலின விகிதம் ஆனது 2019-21 ஆம் ஆண்டில் 100 சிறுமிகளுக்கு 108 ஆண்களாகக் குறைந்து உள்ளது.
- இந்தியாவில் 2010 ஆம் ஆண்டில் சுமார் 480,000 (4.8 லட்சம்) ஆக இருந்த "காணாமல் போகும்" பெண் குழந்தைகளின் வருடாந்திரச் சராசரி எண்ணிக்கையானது, 2019 ஆம் ஆண்டில் 410,000 (4.1 லட்சம்) ஆகக் குறைந்துள்ளது.
- உலகெங்கிலும், ஒவ்வொரு 100 பெண் குழந்தைகளுக்கும் தோராயமாக 105 ஆண் குழந்தைகள் என்ற விகிதத்தில் ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளை விட அதிகமாக பிறக்கின்றனர்.
- 1970 ஆம் ஆண்டுகளில், இந்தியாவின் பாலின விகிதம் ஆனது 105-100 என்ற உலகச் சராசரிக்கு இணையாக இருந்தது.
- இது 1980களின் முற்பகுதியில் 100 பெண் குழந்தைகளுக்கு 108 ஆண் குழந்தைகளாகவும், மேலும் 1990களில் 100 பெண் குழந்தைகளுக்கு 110 ஆண் குழந்தைகளாகவும் ஒரு எண்ணிக்கை நிலையினை எட்டியது.

- 2000 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்கு இடையில், ஒன்பது கோடி பெண் குழந்தைகளின் பிறப்புகளானது, பெண் பாலினம் காரணமான கருக் கலைப்புகளால் "தவிர்க்கப் பட்டுள்ளதாக" இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.
- சமயம் வாரியான பாலினத் தேர்வு சார்ந்த ஆய்வு அறிக்கையானது, சீக்கியர் இனத்தில் இந்த இடைவெளி அதிகமாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது.
- இந்துக்களிடையே "தவிர்க்கப்பட்ட" பெண் குழந்தைப் பிறப்புகளின் பங்கு என்பது அவர்களின் மக்கள்தொகைப் பங்கை விட அதிகமாக உள்ளது.
- இந்தியாவின் மக்கள்தொகையில் 80% இந்துக்கள் உள்ள நிலையில், 87% அல்லது எட்டு கோடி பெண் குழந்தைகளின் பிறப்புகள் பாலினம் சார்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கருக் கலைப்புகளால் "தவிர்க்கப்பட்டுள்ளதாக" இதில் மதிப்பிடப் பட்டுள்ளது.
- நாட்டின் "தவிர்க்கப்பட்டுள்ள" பெண் குழந்தைகளின் பிறப்புகளில் 7% அல்லது தோராயமாக 5.9 லட்சம் பேர் முஸ்லிம் இனத்தவர் ஆவர்.
- மக்கள் தொகையில் 2.3% ஆக உள்ள கிறிஸ்தவ இனத்தவர்கள் மேற்கொள்ளும் பாலினம் சார்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்புகளின் மொத்த எண்ணிக்கை 0.6% அல்லது சுமார் 53,000 ஆக உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது.

**INDIA'S SEX RATIO AT BIRTH APPEARS TO BE NARROWING**

Male births per 100 female births

| | |
|---|---|
| 2001 | 110 |
| 2011 | 111 |
| 2015-16 | 109 |
| 2020-21 | 108 |

## திருநர்களுக்கு சுகாதாரச் சேவைகள்

- தேசிய சுகாதார ஆணையம் (NHA) மற்றும் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை ஆகியவை சமீபத்தில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா என்ற திட்டத்தின் கீழ் திருநர்களுக்கு வேண்டிய முழுமையான சுகாதாரச் சேவைகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாடு முழுவதும் உள்ள தேசிய திருநர் தளம் மூலம் வழங்கப்படும் திருநர்கள் என்றச் சான்றிதழை வைத்திருக்கும் நபர் அனைத்துச் சுகாதார வசதிகளின் பலனையும் பெறுவார்.
- ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவமனைகளிலும் திருநர்களுக்குச் சிறப்புச் சலுகைகளுடன் கூடிய இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

- ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தகுதியுள்ள நபரும் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 5 லட்சம் வரையிலான சுகாதாரக் காப்பீட்டைப் பெறுகிறார்கள்.




## பினாமி பரிவர்த்தனை (தடை) திருத்தச் சட்டம் 2016

- 2016 ஆம் ஆண்டு பினாமி பரிவர்த்தனை (தடை) திருத்தச் சட்டமானது நடைமுறைக்கு வந்த நாளுக்கு பின்னரே பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 2016 ஆம் ஆண்டின் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன், அதாவது 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதி வரை மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் மீது, சம்பந்தப் பட்ட அதிகாரிகள் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை அல்லது பறிமுதல் நடவடிக்கைகளை தொடங்கவோ அல்லது தொடரவோ முடியாது" என்று அறிவிக்கப் பட்டது.
- மேற்கண்ட அறிவிப்பின் விளைவாக, அத்தகைய அனைத்து வழக்குகள் அல்லது பறி முதல் நடவடிக்கைகள் (1988 மற்றும் 2016க்கு இடைப்பட்டப் பரிவர்த்தனைகளுக்கு) அனைத்தும் ரத்து செய்யப்படும்.


**Penalty Benami Transactions (Prohibition) Amendment Act, 2016**

**Penalty:** offences are non-cognisable non- bailable.

| Offence | Fine | Imprisonment |
|---|---|---|
| For guilty of offence of a benami transaction | Upto 25% of the Fair Market Value | Minimum 1 year upto 7 years |
| For providing false information | Upto 10% of the Fair Market Value | Minimum 6 months upto 5 years |

## பசுவின் சாணம் மூலமாக உற்பத்தி செய்யப்படும் அழுத்தப்பட்ட உயிரி எரிவாயுத் திட்டம்

- ஹிந்துஸ்தான் பெட்ரோலியக் கழக நிறுவனமானது ராஜஸ்தானின் சாஞ்சூரில், பசுவின் சாணத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு அழுத்தப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தி ஆலையினைத் தொடங்கியது.
- கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி செய்தல் என்ற துறையின் கீழ் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் முதல் திட்டமாக இது இருக்கும்.
- உயிரி எரிவாயு உற்பத்திக்கு நாளொன்றுக்கு 100 டன் மாட்டுச் சாணத்தை இந்த ஆலை பயன்படுத்த உள்ளது.
- இதனை வாகன எரிபொருளாகப் பயன்படுத்த இயலும்.
- இந்த ஆலையானது கோபர்-தன் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, ஓர் ஆண்டிற்குள் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- கோபர் (இயற்கையான உயிரி வேளாண் வளங்களைப் பயன்படுத்துதல்) தன் திட்டம் ஸ்வச் பாரத் இயக்கத்தின் (கிராமின்) ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டுள்ளது.




## தேர்தல் வாக்குறுதிகள் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- தேர்தல் வாக்குறுதிகள் மீதான 2013 ஆம் ஆண்டு தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய உச்ச நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.
- இது 2013 ஆம் ஆண்டில் எஸ். சுப்ரமணியம் பாலாஜி எதிர் தமிழ்நாடு அரசு என்ற வழக்கின் தீர்ப்பாகும்.
- வாக்காளர்களைக் கவர அரசியல் கட்சிகள் அளிக்கும் தேர்தலுக்கு முந்தைய வாக்குறுதிகள் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 123வது பிரிவின் (ஊழல் நடைமுறைகள்) வரம்பிற்குள் வராது என்று உச்ச நீதிமன்றம் முன்பு கூறியது.
- ஒரு தனிப்பட்ட வேட்பாளர் மட்டுமே ஒரு ஊழல் முறைகேட்டை மேற்கொள்ள முடியும் என்றும் அவரது கட்சி அவ்வாறு செய்ய முடியாது என்றும் இது கூறியுள்ளது.
- இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வானது இந்தத் தீர்ப்பினை வழங்கியது.
- தற்போது, நீதிமன்றத்தின் முந்தைய நிலையை மறுபரிசீலனை செய்வதற்காக மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வானது நியமிக்கப்பட உள்ளது.





## 2024 ஆம் ஆண்டிற்குள் அதிகரிக்க உள்ள காற்றாலை திட்டங்கள்

- இந்தியாவில் புதிய காற்றாலை மின் நிலையங்கள் நிறுவப்படுகின்ற வருடாந்திர நிறுவல் வீதம் 2024 ஆம் ஆண்டிற்குள் உச்சத்தை எட்டும் என்றும் அதன் பிறகு அது குறையும் என்றும் கூறப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்குப் பிறகு மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் காற்று ஆற்றல்-சூரிய ஆற்றல் ஆகியவற்றின் கலப்பினங்களாக இருக்கும்.
- இது உலகக் காற்றாற்றல் சபை (GWEC) மற்றும் MEC இன்டலிஜென்ஸ் (MEC+) ஆகியவற்றால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் தற்போது 13.4 ஜிகாவாட் திறன் கொண்ட காற்றாலை ஆற்றல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- இது சந்தையில் 2024 ஆம் ஆண்டு வரை நிறுவல்களுக்கான பணிகளைக் கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் மேலும் 3.2 ஜிகாவாட் திறன்களை இதில் சேர்க்கும் விதமாக புதிய நிலையங்கள் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது 2023 ஆம் ஆண்டில் 4.1 GW ஆகவும் 2024 ஆம் ஆண்டில் 4.6 GW ஆகவும் உயர உள்ளது.
- அதன் பின் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4 ஜிகாவாட் மற்றும் 3.5 ஜிகாவாட் என்ற அளவாக அது குறையும்.
- 2017 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் காற்றாலை மின் நிலைய நிறுவல்கள் குறைந்து வருகின்றன.
- 2021 ஆம் ஆண்டில் 1.45 GW திறன் கொண்ட காற்றாலை நிலையங்கள் மட்டுமே நிறுவப் பட்டன.

## மின்கல அடுக்குக் கழிவு மேலாண்மை விதிகள் 2022

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது 2022 ஆம் ஆண்டு மின்கல அடுக்குக் கழிவு மேலாண்மை விதிகளை வெளியிட்டது.

- இது மின்கல அடுக்குக் கழிவுகளைச் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேலாண்மை செய்வதை உறுதி செய்வதையும், 2001 ஆம் ஆண்டு மின்கல அடுக்குகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை மாற்றியமைப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த விதிகள் மின்சார வாகனத்தின் மின்கல அடுக்குகள், எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய மின்கல அடுக்குகள், வாகன மின்கல அடுக்குகள் மற்றும் தொழில்துறை மின்கல அடுக்குகள் ஆகிய அனைத்து வகையான மின்கல அடுக்குகளையும் உள்ளடக்கியதாகும்.
- இந்த விதிகள் ஒரு நெறிமுறையையும், மையப்படுத்தப்பட்ட இணைய தளத்தினையும் அமைக்க வழிவகை செய்யும்.
- தயாரிப்பாளர்கள் மற்றும் மறுசுழற்சி செய்பவர்கள்/புதுப்பிப்பு நிறுவனங்கள் ஆகியோர் இடையே உற்பத்தியாளர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, விரிவாக்கப் பட்ட உற்பத்தியாளர் பொறுப்புகள் என்ற சான்றிதழ்களைப் பரிமாறிக் கொள்ள இந்த தளம் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த விதியானது மின்கல அடுக்குகளின் கழிவுகளில் இருந்து சில குறிப்பிட்டப் பொருட்களை மீட்டெடுப்பதற்கான குறைந்தபட்ச சதவீத நிர்ணயத்தினைக் கட்டாயம் ஆக்குகிறது.
- இந்த மீட்சியானது, மறுசுழற்சி மற்றும் புதுப்பித்தல் துறையில் புதிய தொழில் நுட்பங்களையும் முதலீட்டையும் கொண்டு வந்து புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்கும்.
- புதிய மின்கல அடுக்குகளைத் தயாரிப்பதில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மறு சுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதையும் இந்த விதிகள் பரிந்துரை செய்கின்றன.
- இது புதிய மூலப்பொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்து இயற்கை வளங்களைச் சேமிக்க உதவும்.




## ஒரே நாடு ஒரே உரம் திட்டம்


- 'ஒரே நாடு, ஒரே உரம்' திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

- இந்தப் புதிய திட்டமானது, 'பாரத்' என்ற ஒற்றைத் தயாரிப்பின் பெயரில் நாடு முழுவதும் உள்ள உரத் தயாரிப்புகளில் ஒரே சீரானத் தன்மையை கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உர மானியத் திட்டத்தின் பெயரானது அதிகாரப்பூர்வமாக பிரதான் மந்திரி பாரதிய ஜானுர்வரக் பரி யோஜனா என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- இனி பொதுத் துறையால் அல்லது தனியார் துறையால் உற்பத்தி செய்யப்பட்டதா என்பதைப் பொருட்படுத்தாமல் அனைத்து உரத் தயாரிப்புகளும், 'பாரத்' என்ற ஒரே தயாரிப்புப் பெயரைக் கொண்டிருக்க வேண்டும்.
- பல்வேறு வகையான உரப் பொருட்கள், அதாவது, 'பாரத் யூரியா', 'பாரத் DAP', 'பாரத் MOP' மற்றும் 'பாரத் NPK' என்பது போன்ற பெயர்கள், பாரத் என்ற தயாரிப்புப் பெயரை மட்டுமே கொண்டிருக்க வேண்டும்.
- பிரதான் மந்திரி பாரதிய ஜானுர்வரக் பரி யோஜனா திட்டத்தின் புதிய விதிகள் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.




## தானியங்கி இலக்கத் தகடுகளை ஆய்வு செய்யும் ஒளிப்படக் கருவி

- நாடு முழுவதும் உள்ள அனைத்து சுங்கச் சாவடிகளையும் அகற்ற இந்திய அரசு திட்டம் இட்டுள்ளது.
- அதற்குப் பதிலாக தானியங்கி இலக்கத் தகடுகளை ஆய்வு செய்யும் ஒளிப்படக் கருவிகளைப் பொருத்த அரசு தயாராக உள்ளது.
- இந்த ஒளிப்படக் கருவிகள் வாகன எண் இலக்கத் தகடுகளைப் ஆய்வு செய்து தானாகவே கட்டணத்தைக் கணக்கிலிருந்துப் பெற்று கொள்ளும்.
- தானியங்கி இலக்கத் தகடுகளை ஆய்வு செய்யும் ஒளிப்படக் கருவியானது ஒன்பது எண்களைப் படித்துப் பதிவு செய்வதற்கு ஏதுவாக உள்ளது.
- அவற்றைத் தாண்டி ஏதாவது இருந்தால், அதாவது இலக்கத் தகடுகளில் ஏதோ எழுதப் பட்டிருந்தால், ஒளிப்படக் கருவி அதைப் படித்துப் பதிவு செய்யாது.




## கோர்கா படைப்பிரிவின் ஆட்சேர்ப்பு - நேபாளம்

- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அக்னிபாத் திட்டத்தின் கீழ் இந்திய இராணுவத்தில் கூர்க்கா பிரிவினரை ஆட்சேர்ப்பு செய்வதை நிறுத்துமாறு நேபாளம் இந்தியாவை வலியுறுத்தியுள்ளது.
- இதனால் நேபாள அரசானது தனது ஆட்சேர்ப்புச் செயல்முறையை காலவரையின்றி நிறுத்தி உள்ளது.
- கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கை என்பது இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தப்பட்டது.
- 1947 ஆம் ஆண்டில் நேபாளம், இந்தியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் மேற் கொண்ட ஒப்பந்தத்தின் விதிமுறைக்கு இத்திட்டம் இணங்கவில்லை என்று நேபாள அரசு கூறியது.
- இந்த 1947 ஆம் ஆண்டு ஒப்பந்தமானது நேபாள வீரர்களை இந்திய இராணுவத்தில் சேர்க்கும் நடைமுறையினை நிர்வகிக்கிறது.

## இந்தியாவின் சிறந்த உயர் இலட்சியமிக்க மாவட்டம்

- நிதி ஆயோக் அமைப்பானது, 117 உயர் இலட்சியமிக்க மாவட்டங்களில் ஹரித்வார் மாவட்டத்தை இந்தியாவின் சிறந்த உயர் இலட்சியமிக்க மாவட்டமாக அறிவித்து உள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பின் உயர் இலட்சியமிக்க மாவட்டங்கள் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது சமூக-பொருளாதார மேம்பாட்டின் மூலம் ஒரு மாதிரித் தொகுதிகளாக உருவாகக் கூடிய சாத்திய மிக்க மாவட்டங்களை அடையாளம் காண்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்தவும், உள்ளார்ந்த மற்றும் முழுமையான மேம்பாட்டினை உறுதி செய்யவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கிறது.
- இதில் சமூக-பொருளாதார மேம்பாட்டினை அளவிடுகின்ற அளவுருக்கள்

- உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து (30%)
- கல்வி (30%)
- வேளாண்மை மற்றும் நீர் வளங்கள் (20%)
- நிதி உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாடு (10%)
- உள்கட்டமைப்பு (10%)

## அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் பெயர் மாற்றம்

- அனைத்து அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனங்களுக்கும் குறிப்பிட்டப் பெயர்களை வழங்குவதற்கான முன்மொழிதலுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.
- ஒரு பிராந்தியத்தினைச் சேர்ந்த மாவீரர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், வரலாற்று நிகழ்வுகள் அல்லது அப்பகுதியின் நினைவுச் சின்னங்கள் அல்லது அப்பகுதியின் தனித்துவமான புவியியல் அடையாளத்தின் அடிப்படையில் புதிய பெயர்கள் வழங்கப் படும்.
- தற்போது, அனைத்து அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனங்களும் ஒரு பொதுவான பெயர்களால் மட்டுமே அறியப் படுவதோடு அவை தனது இருப்பிடத்தைக் கொண்டு மட்டுமே வேறுபடுகின்றன.


## இந்தியாவின் முதல் பூகம்ப நினைவுச்சின்னம்

- குஜராத்தில் உள்ள பூஜ் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ம்ருதி வன் என்ற இந்தியாவின் முதல் பூகம்ப நினைவகத்தைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- ஸ்ம்ருதி வன் என்பது 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் பெயர்களைக் கொண்ட ஒரு தனித்துவமான நினைவுச் சின்னமாகும்.
- 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இப்பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் இந்த மக்கள் தங்கள் உயிர்களை இழந்தனர்.

## இந்தியாவின் புதிய தலைமை நீதிபதி

- நீதிபதி உதய் உமேஷ் லலித் இந்தியாவின் 49வது தலைமை நீதிபதியாக 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று பதவியேற்றார்.
- டெல்லி ராஷ்டிரபதி பவனில், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் இவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இவர் நீதிபதியாக பதவி உயர்த்தப்படுவதற்கு முன்பு, உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றினார்.
- இந்தியத் தலைமை நீதிபதியாக நியமனக் குழுவினால் நேரடியாக நியமிக்கப்பட்ட இரண்டாவது நபர் இவர் ஆவார்.
- இவர் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று (74 நாட்களுக்குள்) ஓய்வு பெற உள்ளார்.

- உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கான வழக்குகளைப் பட்டியலிடுவது மற்றும் அவசரமான விஷயங்களைக் குறிப்பிடுவது, உச்ச நீதிமன்றத்தில் குறைந்தபட்சம் ஒரு அரசியலமைப்பு அமர்வு ஆண்டு முழுவதும் செயல்படுவது ஆகியவற்றை அவர் உறுதி செய்தார்.
- 2017 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் 55,000 ஆக இருந்த நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையானது, 71,000 என்ற எண்ணிக்கையைக் கடந்த நேரத்தில் நீதிபதி லலித் அவர்களின் பதவியேற்பு நிகழ்ந்துள்ளது.
- நீதிபதி S.M.சிக்ரி 1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 13வது தலைமை நீதிபதியாக பதவியேற்றார்.
- 1964 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உச்ச நீதிமன்ற அமர்வுக்கு நேரடியாக பதவி உயர்த்தப் பட்ட முதல் வழக்கறிஞர் இவரே ஆவார்.





## 75 பழங்குடியின மாவட்டங்கள் - காசநோய் தடுப்பு நடவடிக்கைகள்

- இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், அதிக நோய் சுமை கொண்ட 75 பழங்குடியின மாவட்டங்கள் அதிக கவனம் செலுத்தும் காசநோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவைக் காசநோய் இல்லாத நாடாக மாற்றுவதை இது இலக்காகக் கொண்டுள்ளது.
- பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் சுகாதாரம் & குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் காசநோய்ப் பிரிவு ஆகியவை 'பழங்குடியினர் காசநோய் முன்னெடுப்பின்' கீழ் 100 நாட்கள் அளவிலான ஆஸ்வாசன் என்ற பிரச்சாரத்தின் மூலம் பெற்றத் தகவல்களைப் பரப்புவதற்காக சமீபத்தில் ஒரு தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தன.
- பழங்குடியினர் காசநோய் முன்னெடுப்பு என்பது பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் காசநோய்ப் பிரிவு ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இதற்குச் சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை ஒரு தொழில்நுட்பப் பங்கு தாரராகவும், பிரமல் ஸ்வஸ்த்யா ஒரு அமலாக்கப் பங்குதாரராகவும் தங்களது ஆதரவுகளை வழங்குகின்றன.

- பழங்குடியினர் காசநோய் முன்னெடுப்பின் கீழ், இந்தியாவின் 174 பழங்குடி மாவட்டங்களில் காசநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளைக் கண்டறிவதற்காக 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆஸ்வாசன் பிரச்சாரம் தொடங்கப்பட்டது.





## நாகாலாந்தில் 2வது இரயில் நிலையம்




- 119 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு நாகாலாந்து மாநிலத்தின் ஷோகுவியில் ஒரு புதிய இரயில் நிலையம் அமைக்கப்பட்டதன் மூலம் அது தனது இரண்டாவது இரயில் நிலையத்தைப் பெற்றது.
- டோன்யி போலோ எக்ஸ்பிரஸ் இரயிலானது தினமும் அசாமின் குவஹாத்தி மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் நஹர்லாகுன் ஆகியவற்றுக்கு இடையே இயக்கப் படுகிறது.
- டோன்யி போலோ எக்ஸ்பிரஸ் இரயிலின் சேவையானது ஷோகுவி ரயில் நிலையம் வரை நீட்டிப்பதன் மூலம் நாகாலாந்து மற்றும் அருணாச்சலப் பிரதேசம் நேரடியாக இரயில் சேவை மூலம் இணைக்கப்படும்.
- இம்மாநிலத்தின் முதல் ரயில் நிலையமான திமாபூர் ரயில் நிலையம் 1903 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது.

### அடல் பாலம்

- குஜராத்தில் சபர்மதி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாதசாரிகள் மட்டுமே உபயோகிக்கும் வகையிலான "அடல் பாலத்தை" பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- அகமதாபாத் மாநகராட்சிக் கழகமானது இந்த பாதசாரி மேம்பாலத்தை (அடல் பாலம்) உருவாக்கியது.




## சர்வதேசச் செய்திகள்

### UNAIDS அறிக்கை 2022

- ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் எச்.ஐ.வி தொற்றின் அதிகரித்து வரும் போக்குடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் எச்.ஐ.வி தொற்றுகள் குறைந்துள்ளன.
- 30 காசநோய்-எச்ஐவி பாதிப்புகள் அதிகமாக உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்ட மக்களிடையே காசநோய் தொடர்பான உயிரிழப்புகள் குறைந்துள்ள எட்டு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- எச்.ஐ.வி நோய்த் தொற்றுகளில் சில குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்ட இரண்டு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- இருப்பினும், 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு காசநோய்த் தடுப்புச் சிகிச்சையை வழங்குவதில் இந்தியா 8 சதவீதம் சரிவைக் கண்டுள்ளது.
- தென்னாப்பிரிக்கா மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளில் சிகிச்சை 30 சதவீதம் குறைந்துள்ளது.
- உலகளவில் 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் புதிய நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை 3.6 சதவீதம் மட்டுமே குறைந்துள்ளது.
- இது 2016 ஆம் ஆண்டிலிருந்துப் பதிவான புதிய எச்ஐவி நோய்த் தொற்றுகளில் ஏற்பட்ட மிகச் சிறிய வருடாந்திர வீழ்ச்சியாகும்.

## ஜிம்பாப்வேயின் தங்க நாணயம்

- ஜிம்பாப்வே நாட்டில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அந்த நாடு தங்க நாணயங்களை அறிமுகப் படுத்தியது.
- ஜிம்பாப்வேயின் ரிசர்வ் வங்கி இந்த வெளியீடு குறித்த அறிவிப்பினை வெளியிட்டு, வணிக வங்கிகளுக்கு 2,000 நாணயங்களை விநியோகித்தது.
- ஜூலை மாதத்தில், வருடாந்திரப் பணவீக்க விகிதம் 190% ஆக அதிகரித்தது.
- இதனால் மத்திய வங்கியின் வட்டி விகிதம் இரண்டு மடங்கு அதிகரித்து 200% ஆக இருந்தது.
- இந்த நாணயங்கள் எளிதில் உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் வர்த்தகம் செய்யக் கூடியவையாகும்.
- இந்த தங்க நாணயம் "மொஷி-ஓவ்-துன்யா" என்று அழைக்கப்படுகிறது.
- இதன் பொருள் "இடியை எழுப்பும் புகை" என்பதாகும்.
- இது டோங்கா மொழியில் விக்டோரியா நீர்வீழ்ச்சியையும் குறிக்கிறது.




## VINBAX பயிற்சி 2022

- வியட்நாம்-இந்தியா இடையிலான "VINBAX 2022" எனப்படும் 3வது இருதரப்பு ராணுவப் பயிற்சியானது ஹரியானாவில் நடத்தப் படுகிறது.
- VINBAX 2022 பயிற்சியின் கருத்துரு, "அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகளின் குழுவின் ஒரு பகுதியாக பொறியாளர் நிறுவனம் மற்றும் ஒரு மருத்துவக் குழுவைப் பணியமர்த்துதல் மற்றும் நிலை நிறுத்துதல்" என்பதாகும்.
- இந்தப் பயிற்சியானது, இந்தியா மற்றும் வியட்நாம் ஆகியவற்றுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும்.



## சாபஹார் தின மாநாடு

- சாபஹார் தின மாநாடானது மும்பையில் தொடங்கப்பட்டது.
- இதன் தொடக்க விழா நிகழ்வில் கஜகஸ்தான், ஈரான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.
- இந்தியாவும் ஈரானும் 2016 ஆம் ஆண்டு மே மாதத்தின் போது இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ஷாஹித் பெஹெஷ்தி என்ற துறைமுகத்தில் உள்ள கப்பல் நிறுத்தங்களுள் ஒன்றைப் புதுப்பிப்பதற்கு இந்தியா ஒப்புக் கொண்டது.
- இந்தத் துறைமுகத்தில் உள்ள 600 மீட்டர் நீளமுள்ள ஒரு கொள்கலன் கையாளும் மையத்தினைப் புனரமைப்பதற்கும் இந்தியா ஒப்புக் கொண்டது.
- 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், இந்தியா ஆப்கானிஸ்தானுக்குச் சாபஹார் துறைமுகம் வழியாக கோதுமையை முதல்முறையாக ஏற்றுமதி செய்தது.
- இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் 2016 ஆம் ஆண்டில் சாபஹார் துறைமுகத்தை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- முத்தரப்பு போக்குவரத்து மற்றும் இடம் பெயர்வு வழித்தடத்தை அமைப்பதற்கும் இந்த நாடுகள் ஒப்புக் கொண்டன.

## பாகிஸ்தான் நாட்டிற்கு நிதி வசதி விரிவாக்கம்

- சர்வதேச நாணய நிதியமானது, பாகிஸ்தான் நாட்டின் பொருளாதாரத்தினை மறு சீரமைப்பதற்காக பாகிஸ்தான் அரசாங்கத்துடன் நிதி விரிவாக்க வசதி ஒப்பந்தத்தில் (EFF) கையெழுத்திட்டது.
- பாகிஸ்தான் நாட்டின் 2022 ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கையின் படி, 2022 ஆம் நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை 18.6 பில்லியன் டாலராக உள்ளது.
- 252 பில்லியன் டாலராக உள்ள நிகர பொதுக் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 66.3% ஆகும்.



*நிதி விரிவாக்க வசதி*

- இது நீண்ட காலமாக இருக்கும் கட்டமைப்பு சார்ந்த ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்ய தேவையான கொள்கைகள் உட்பட விரிவான திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குகிறது.
- நிதி விரிவாக்க வசதியின் ஈடுபாடு மற்றும் மறு வழங்கீடு ஆகியவை பெரும்பாலான நிதி வசதிகளை விட நீண்ட காலம் வரை நிதி உதவி வழங்குகிறது.
- 3 முதல் 4 ஆண்டுகள் வரை நிதி வழங்கப்படுகிறது.
- நிதி விரிவாக்க வசதியின் கீழ் பெறப்பட்டத் தொகைகள் 5 முதல் 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

## ஏவுகணை பாதுகாப்புப் பயிற்சி

- தென் கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஒரு கூட்டு ஏவுகணை பாதுகாப்புப் பயிற்சி நடைபெற உள்ளது.
- இது ஆண்டிற்கு இரண்டு முறை நடைபெறும் பசிபிக் டிராகன் பயிற்சியாகும்.
- 2022 ஆம் ஆண்டின் பயிற்சியில் மற்ற மூன்று நாடுகளோடுச் சேர்த்து ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளும் பங்கேற்க உள்ளன.

## அல்-கொய்தா அமைப்பின் தலைவர் படுகொலை

- ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற ஒரு ஆளில்லா விமானம் மூலமான தாக்குதலில் அல்-கொய்தா அமைப்பின் தலைவர் அய்மன் அல்-ஜவாஹிரியை அமெரிக்கா கொன்றது.
- ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மத்திய உளவு அமைப்பு நடத்திய தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் அவர் கொல்லப்பட்டார்.
- இவர் மற்றும் ஒசாமா பின்லேடன் ஆகியோர் சேர்ந்து 9/11 தாக்குதலுக்குத் திட்டம் இட்டவர் ஆவர்.
- மேலும் அவர் அமெரிக்காவினால் மிகவும் தேடப்படும் பயங்கரவாதிகளில் ஒருவர் ஆவார்.




## பிட்ச் பிளாக் பயிற்சி 2022

- ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள "2022 ஆம் ஆண்டு பிட்ச் பிளாக்" என்ற மாபெரும் வான்வழிப் போர் பயிற்சியின் ஒரு பகுதியாக இந்தியாவும் பங்குபெற உள்ளது.

- 17 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விமானங்களும், 2,500 இராணுவ வீரர்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- பிட்ச் பிளாக் பயிற்சி என்பது ஆஸ்திரேலிய வான் படையினால் நடத்தப்படும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மாபெரும் பன்னாட்டுப் போர்ப் பயிற்சி ஆகும்.

## இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்பு

- இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்பிற்கு (NDC) மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது.
- பாரீஸ் ஒப்பந்தத்தின் படி, பருவநிலை மாற்றத்திற்கான உலகளாவிய நடவடிக்கைகளை வலுப்படுத்துவதில் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது குறைவான உமிழ்வு என்ற இலக்கின் முன்னேற்றப் பாதைகளில் இந்தியாவை அழைத்துச் செல்ல உதவும்.
- புதுப்பிக்கப்பட்ட NDC ஆனது, பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டு அமைப்பிற்கு மாற்றப்படும்.
- இந்த புதுப்பிப்பானது 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய நிலையை அடைதல் என்ற நாட்டின் நீண்ட கால இலக்கை அடைவதற்கான ஒரு செயல்நிலைப் படியாகும்.
- புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பின் படி, 2005 ஆம் ஆண்டின் அளவை ஒப்பிடுகையில், 2030 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவில் உமிழ்வுச் செறிவினை 45% ஆக குறைக்க இந்தியா உறுதி பூண்டுள்ளது.




## வங்காள தேசத்துடன் IOCL நிறுவனம் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் மற்றும் வங்காளதேசத்தின் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை ஆகியவை ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது அவசரகாலத்தில் வங்காளதேசப் பகுதி வழியாக இந்தியாவிற்குப் பெட்ரோலியப் பொருட்களை விநியோகம் செய்ய வழி வகுக்கும்.


- பெட்ரோலியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கொள்கலன் சரக்குந்துகள் மேகாலயாவில் இருந்து திரிபுரா செல்லும் வழியில் வங்காளதேச எல்லை வழியாக செல்லும்.

## யுத் அபியாஸ் பயிற்சி

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உத்தரகாண்டில் இரண்டு வார கால அளவிலான இராணுவப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளன.
- இது 18வது பயிற்சியாகும்.
- இதற்கு முந்தையப் பயிற்சியானது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா நகரில் நடைபெற்றது.
- 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், அமெரிக்கா இந்திய நாட்டினை "ஒரு முக்கியப் பாதுகாப்புப் பங்குதாரர் நாடு" என்று அறிவித்தது.
- தளவாடப் பரிமாற்ற ஒப்பந்தமானது, (LEMOA) 2016 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- தகவல் தொடர்பு இணக்கத் தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA) ஆனது 2018 ஆம் ஆண்டில் இறுதி செய்யப் பட்டது.
- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 2020 ஆம் ஆண்டில் அடிப்படைப் பரிமாற்ற மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு (BECA) ஒப்புதல் அளித்தன.

## நெதர்லாந்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை


- நெதர்லாந்தில் தேசிய அளவிலான நீர்மட்டமானது எப்போதும் இல்லாத அளவிற்கு குறைந்துள்ளது.
- இதனால் நெதர்லாந்து நாடானது தண்ணீர்ப் பற்றாக்குறையால் தவித்து வருகிறது.
- ரைன் நதியின் நீர்மட்டமானது இயல்பை விட 50% குறைவான நீரையே வழங்குகிறது.
- நெதர்லாந்து நாடானது மிகுதியான அளவு தண்ணீர் நிறைந்து காணப்படும் பகுதியாக அறியப் படுகிறது.
- ஆனால் கடந்த 22 ஆண்டுகளில் ஐந்தாவது முறையாக அந்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக் குறை அறிவிக்கப் பட்டுள்ளது.



## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் சந்திப்பு

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பினர் நாடுகளின் சிறப்புப் பயங்கர வாத எதிர்ப்புச் சந்திப்பினை இந்தியா நடத்த உள்ளது.
- இந்தியாவில் நடைபெறும் இந்தச் சந்திப்பானது, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திற்கு வெளியே நடத்தப்படும் ஏழாவது சந்திப்பாகும்.
- கடந்த ஆண்டு இந்தியா, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினராக 2 ஆண்டு பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் இந்தக் குழுவின் தலைவராக இந்தியா செயல்படும்.

## சீனாவின் மிகப்பெரிய இராணுவப் பயிற்சி




- தைவானைச் சுற்றி உள்ள பகுதிகளில் சீனா தனது மிகப்பெரிய ஒரு இராணுவப் பயிற்சியைத் தொடங்கியுள்ளது.
- சீன ஊடகங்கள் இந்தப் பயிற்சியை 'மறுஒருங்கிணைப்புச் செயல்முறைக்கான' ஒரு ஒத்திகையாகக் குறிப்பிடுகின்றன.
- தைவான் பகுதி முழுவதும் உள்ள ஆறு மண்டலங்களில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.
- சீனாவின் கடற்படை, விமானப்படை மற்றும் இதர துறைகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- பதிலுக்கு, தைவானும் தனது இராணுவத்தை எச்சரித்து, தயார் செய்து, பல குடிமைப் பாதுகாப்புப் பயிற்சிகளை மேற்கொண்டது.

## சிலி நாட்டின் புதிய அரசியலமைப்பு

- சிலி நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக ஒரு அரசியலமைப்பு மக்களாட்சி முறையில் உருவாக்கப்பட்டது.
- முன்மொழியப்பட்ட இந்தப் புதிய உரையானது ஒரு மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 154 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பால் எழுதப்பட்டது.
- அதிபர் அந்நாட்டில் அரசாங்கத்தின் தலைவராக இருப்பார்.
- அதிபர் தொடர்ந்து ஒரு முறை மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம்.
- சிலி நாட்டின் அதிபரைத் தற்சமயம் தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்க முடியாது.
- அதன் காங்கிரஸ் ஆனது சம அதிகாரம் கொண்ட, ஈரவை கொண்ட அமைப்பாகும்.




## அமெரிக்கக் கடற்படைக் கப்பலின் முதல் பழுதுநீக்கப் பணி

- அமெரிக்கக் கடற்படைக் கப்பலானது சென்னை எண்ணூரில் உள்ள L&T என்ற நிறுவனத்தின் காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்திற்குப் பழுது மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக வந்தடைந்தது.
- இது இந்திய - அமெரிக்க இராணுவக் கூட்டுறவிற்கு என்று புதிய உத்தி சார்ந்த ஒரு பரிமாணத்தைச் சேர்க்கிறது.
- இந்தியக் கப்பல் கட்டும் தளத்தில் முதன்முறையாக ஒரு அமெரிக்க கடற்படைக் கப்பல் பழுது பார்க்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற இந்திய - அமெரிக்க 2+2 பேச்சு வார்த்தையின் போது இந்தியக் கப்பல் கட்டும் தளங்களின் சேவைகள் மற்றும் நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு அமெரிக்கக் கடற்படைக்கு அனுமதி வழங்குவதாக இந்தியா முன்மொழிந்தது.
- தளவாடங்கள் பரிமாற்றப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (LEMOA) ஒரு பகுதியாக, இந்திய கப்பல் கட்டும் தளங்களில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களைப் பழுது பார்க்கச் செய்வதற்கு என்று வழி வகை செய்யப்பட்டது.
- தளவாடங்கள் பரிமாற்றப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது இந்திய மற்றும் அமெரிக்கக் கடற்படைகளுக்கு இடையே சரக்குகள் மற்றும் போர் சார்ந்த பொருட்களின் மீதான பரிமாற்றத்தை எளிதாக்குவதற்காக கையொப்பமானது.




## தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் 55வது ஆண்டு விழா

- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமானது தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் 55வது ஆண்டு விழாவினைக் குறிக்கிறது.
- ஆசியான் அமைப்பு என்பது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒரு கூட்டமைப்பைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்புத் தினத்தின் கருத்துரு "ஒற்றுமையாக வலுப் பெறுதல்" என்பதாகும்.
- 2022 ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு மற்றும் இந்தியா ஆகியவற்றுக்கு இடையிலானப் பேச்சுவார்த்தை சார்ந்த உறவுகளின் 30வது ஆண்டு விழாவையும் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டானது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு மற்றும் இந்தியா ஆகியவற்றுக்கு இடையிலான உத்திசார் கூட்டுறவின் 10வது ஆண்டு நிறைவாகும்.
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு ஆனது தாய்லாந்தின் பாங்காக் நகரில் 1967 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- ஆசியான் பிரகடனம் (பாங்காக் பிரகடனம்) கையெழுத்தானதன் விளைவாக இந்த அமைப்பு நிறுவப்பட்டது.
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பின் முழக்கம், "ஒரு குறிக்கோள், ஒரு அடையாளம், ஒரு சமூகம்" என்பதாகும்.
- இந்த அமைப்பின் ஆரம்ப கால உறுப்பினர்கள் - இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் ஆகும்.
- தற்போது இந்த அமைப்பில் 10 உறுப்பினர் நாடுகள் உள்ளன.
- ஆசியான் +3 என்ற அமைப்பில் - சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவை அடங்கும்.
- ஆசியான் +6 என்ற அமைப்பில் - ஆசியான் +3 உறுப்பினர் நாடுகளுடன் இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் அடங்கும்.

## மேற்கு சேத்தி நதி நீர்மின் நிலையத் திட்டம்

- மேற்கு நேபாளப் பகுதிகளில் உள்ள 1,200 மெகாவாட் திறன் கொண்ட நீர்மின் நிலையங்கள் குறித்து ஆய்வு செய்து, அவற்றை மேம்படுத்துவதற்கு இந்தியாவின் நீர் மின் வாரியத்திற்கு நேபாள அரசு ஒப்புதல் அளித்தது.
- இந்த நீர்மின் நிலையங்களில் 750 மெகாவாட் திறன் கொண்ட மேற்கு சேத்தி நதி நீர் மின் நிலையம் மற்றும் 450 மெகாவாட் திறன் கொண்ட சேத்தி நதி (SR-6) கூட்டு நீர்த் தேக்க மின் நிலையம் ஆகியவை அடங்கும்.
- மேற்கு சேத்தி நதி நீர் மின் நிலையமானது மேற்கு நேபாளத்தில் உள்ள சேத்தி ஆற்றின் மீது கட்டப் படுவதற்காக முன்மொழியப் பட்ட ஒரு நீர்மின் நிலையமாகும்.
- இந்தத் திட்டத்திலிருந்து சீனா விலகியதையடுத்து, சுமார் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா இந்தத் திட்டத்தைக் கையகப்படுத்த உள்ளது.
- மேற்கு சேத்தி நதி நீர் மின் நிலையத் திட்டமானது 60 ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முதலில் கருத்தாக்கம் செய்யப் பட்டது.




## வண்ணத்துப்பூச்சி வடிவிலான கண்ணிவெடி

- PFM-1 ரக 'வண்ணத்துப்பூச்சி வடிவிலான கண்ணிவெடியினை' ரஷ்ய நாட்டு ராணுவம் பயன்படுத்துவது குறித்த சாத்தியக் கூறுகள் பற்றி ஐக்கிய இராஜ்ஜியம் எச்சரித்தது.
- வண்ணத்துப்பூச்சி வடிவிலான கண்ணிவெடிகள் இராணுவம் மற்றும் உள்ளூர்ப் பொது மக்களிடையே பெருமளவிலான உயிரிழப்புகளை ஏற்படுத்தும் திறன் கொண்டவை ஆகும்.
- முன்னதாக, சோவியத்-ஆப்கான் இடையிலான போரில் PFM-1 ரக கண்ணிவெடிகள் பயன்படுத்தப்பட்டன.
- PFM-1 மற்றும் PFM-1S மனிதர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் கண்ணிவெடிகள் பொதுவாக 'வண்ணத்துப்பூச்சி வடிவிலான கண்ணிவெடிகள் அல்லது 'கிரீன் பாராட்ஸ்' என்று அழைக்கப் படுகின்றன.
- அவற்றின் வடிவம் மற்றும் நிறத்தின் காரணமாக இது இப்பெயர் பெற்றது.
- வண்ணத்துப்பூச்சி வடிவிலான வெடிகுண்டுகள் வண்ணமயமான பொம்மையைப் போன்று இருப்பதால் இது குழந்தைகளைக் கவர்கிறது.

- இவற்றைத் தொடுவதன் மூலம் அவை வெடிக்கும் அளவிற்கு அது மிகவும் உணர்திறன் கொண்டவையாக இருப்பதோடு அவற்றை எடுப்பதன் மூலமும் இவற்றை வெடிக்கச் செய்யலாம்.
- இவை நெகிழிப் பொருளால் ஆனவை என்பதால் அதனைக் கண்டறிவது மிகக் கடினம் ஆகும்.
- மேலும், இது உலோகக் கண்டறிவு கருவிகளுக்குப் புலப்படாத திறன் கொண்டதாகும்.



## "தியாக மண்டலம்"

- மியான்மர் நாட்டில் உள்ள ஒரு பகுதி "தியாக மண்டலம்" ஆக மாறியுள்ளது.
- உலக நன்மைக்காகத் தன்னையே அழித்துக் கொள்ளும் இடம் என்பது இதன் பொருள் ஆகும்.
- சில ஆண்டுகளுக்கு முன்பு மலைக் காடுகளால் சூழப்பட்ட நிலப்பரப்பைக் கொண்ட நீலப் பசும் நிற குளங்களில் இந்தத் தியாக மண்டலங்கள் காற்றில் வெளிப்படையாகத் தென்படுகின்றன.
- மியான்மரில் உள்ள அரிய வகை களிமண் மென்மையாக இருப்பதோடு அவை மேற்பரப்புக்கு அருகில் இருப்பதால், எளிதாக இந்த இரசாயனக் குளங்களுக்குள் அவை உள்ளீர்க்கப் படுகின்றன.
- குளோபல் விட்னஸ் என்ற ஒரு அமைப்பினால் வெளியிடப்பட்ட செயற்கைக்கோள் படங்கள், கிட்டத்தட்ட 300 தனித்தனி இடங்களில் 2,700க்கும் அதிகமான அளவில் இந்தக் குளங்கள் இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டியது.

## உலக அமைதிக்கான ஆணையம்

- மெக்சிகோ அதிபர் ஆண்ட்ரஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர், உலக அமைதிக்காக 3 பேர் கொண்ட ஒரு ஆணையத்தை அமைப்பதற்கு முன்மொழிந்துள்ளார்.
- இதில் நரேந்திர மோடி, ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் மற்றும் போப் பிரான்சிஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- மெக்சிகோ அதிபர் இந்த ஆணையத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகளிடம் ஒரு எழுத்துப் பூர்வ முன்மொழிதலைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

## IMD-UNDP மற்றும் ஜப்பான் ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு பருவநிலை நடவடிக்கைக்கான ஒத்துழைப்பு

- இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) ஆனது ஜப்பான் அரசு மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்புடன் (UNDP) இணைந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள 10 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பருவநிலை நடவடிக்கையை விரைவுபடுத்தும் முயற்சியை அந்த நாடுகள் தொடங்கியுள்ளன.
- நிகர- சுழிய உமிழ்வை அடைவதற்கான முயற்சியில், இந்த முன்னெடுப்பானது தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புக்கு (NDC) நிதி உதவியை வழங்கும்.
- இது பருவநிலை நெகிழ்திறன் கொண்ட மேம்பாட்டினையும் உறுதி செய்யும்.

## உதராசக்தி பயிற்சி

- உதராசக்தி என்பது இந்திய விமானப்படைக்கும் மலேசிய விமானப் படைக்கும் இடையிலான இரு தரப்பு விமானப் படைப் பயிற்சியாகும்.
- இந்த நான்கு நாட்கள் அளவிலான இருதரப்புப் பயிற்சிகள் ஆனது சமீபத்தில் மலேசியாவில் தொடங்கியது.
- சுகோய்-30 என்ற போர் விமானத்தின் பங்கேற்புடன் முதல் இரு தரப்பு விமானப்படைப் பயிற்சியானது 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## 'அல் நஜா' பயிற்சி




- இந்தியா-ஓமன் ஆகிய நாடுகளுக்கு இடையிலான 4வது கூட்டு ராணுவப் பயிற்சியான 'அல் நஜா-IV' பயிற்சி ராஜஸ்தானில் தொடங்கியது.
- 3வது அல் நஜா பயிற்சியானது 2019 ஆம் ஆண்டில் மஸ்கட் நகரில் நடைபெற்றது.
- இந்தப் பயிற்சியானது, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பிராந்தியப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அமைதி காப்பு நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும்.

## சூப்பர் கருடா பாதுகாப்புப் பயிற்சி

- முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற "சூப்பர் கருடா பாதுகாப்பு" பயிற்சிகளில் இந்தோனேசிய மற்றும் அமெரிக்கப் படைகள் மட்டுமே பங்கேற்றன.
- தற்போது, இந்த ஆண்டு நடைபெறும் பயிற்சியில் 12 நாடுகள் பங்கேற்கும் வகையில் இது விரிவுபடுத்தப் பட்டுள்ளது.
- ஆஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் இராணுவப் படைகள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.
- இந்தியா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் இந்தப் பயிற்சியில் தனது படைகளைப் பார்வையாளர்களாக ஈடுபடுத்துகின்றன.
- இது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒற்றுமையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கிளேட் I மற்றும் கிளேட் II

- உலக சுகாதார அமைப்பானது குரங்கம்மை வைரசின் திரிபுகளுக்கு என்று புதியப் பெயர்களை அறிவித்துள்ளது.
- எந்தவொரு "கலாச்சாரத்திற்கும் அல்லது சமூகத்திற்கும் பாதிப்பு" ஏற்படுவதைத் தவிர்க்கும் முயற்சியில் இந்த நடவடிக்கையானது எடுக்கப்பட்டுள்ளது.
- குரங்கம்மை வைரஸ் திரிபுகளின் புதியப் பெயர்கள் – கிளேட் I, IIA மற்றும் IIB ஆகியவையாகும்.
- 1958 ஆம் ஆண்டில் முதன்முறையாக கண்டறியப்பட்ட இந்த வைரசிற்கு குரங்கம்மை வைரஸ் என்று பெயரிடப்பட்டது.




## சர்வதேசப் பாதுகாப்பு குறித்த மாஸ்கோ மாநாடு 2022

- சர்வதேசப் பாதுகாப்பு தொடர்பான 2022 ஆம் ஆண்டு மாஸ்கோ மாநாடு சமீபத்தில் நடைபெற்றது.
- ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பில் விரிவான சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல் குறித்து இந்த மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியது.
- சர்வதேசப் பாதுகாப்பு குறித்த இந்த மாநாடானது நடைமுறை சார்ந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் உலகளாவியப் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆராய்தல் போன்ற நோக்கங்களுடன் இது ஏற்பாடு செய்யப் பட்டது.

- இந்த மாநாடுகள் என்பது பாதுகாப்பு அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு விவகாரங்களில் தங்கள் சக அதிகாரிகளுடன் உரையாட வாய்ப்பளிக்கின்றன.

## அனைவருக்கும் இலவச மாதவிடாய்க் கழிவுத் துணி

- உலகிலேயே முதன்முதலில் மாதவிடாய்க் கால உபயோகப் பொருட்களை அனைவருக்கும் இலவசமாக வழங்கும் நாடாக ஸ்காட்லாந்து மாறியுள்ளது.
- டம்போன் துணிகள் மற்றும் மாதவிடாய்க் கழிவுத் துணிகள் போன்ற இலவசப் பொருட்களை "தேவை உள்ளவர்களுக்கு" வழங்க வேண்டிய ஒரு சட்டப்பூர்வக் கடமை தற்போது உள்ளூர் அதிகாரிகளுக்கு உள்ளது.
- மாதவிடாய்க் கால உபயோகப் பொருட்கள் சட்டம் அமலுக்கு வருவதால், சபைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் மூலம் மாதவிடாய்க் கால உபயோகப் பொருட்கள் விநியோகிக்கப் படும்.
- 2018 ஆம் ஆண்டில், ஸ்காட்லாந்து அரசானது மாணவர்களுக்கு மாதவிடாய்க் கால உபயோகப் பொருட்களை இலவசமாக வழங்கிய உலகின் முதல் நாடு என்ற ஒரு வரலாற்றினைப் படைத்தது.

## TEXCON மாநாடு

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியுஷ் கோயல் 10வது ஆசிய ஜவுளி மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- இந்திய ஜவுளித் தொழில்துறை கூட்டமைப்பு (CITI) ஆனது இந்த மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த மாநாட்டின் கருத்துரு - 'அடுத்தப் பத்தாண்டுகளுக்கு ஏற்ற வகையில் ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்துறையை மறு வடிவமைத்தல்' என்பதாகும்.

## ரைன் நதியில் நீர்மட்டம்

- ரைன் நதியின் நீர்மட்டம் தற்போது குறைந்துள்ளது.
- நதியின் குறைந்த நீர்மட்டம் ஆனது, முழுமையாக சரக்குப் பொருட்களால் கப்பல்கள் நிரப்பப் பட்டிருக்கும் போது முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஐரோப்பியக் கப்பல் போக்குவரத்துப் பாதை வழியாக செல்வதைக் கடினமாக்குகிறது.
- தானியங்கள் போன்றப் பொருட்களிலிருந்து இரசாயனங்கள் மற்றும் நிலக்கரி வரையிலான சரக்குப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு இது ஒரு முக்கிய வழித் தடம் ஆகும்.
- இந்த நதியானது சுவிஸ் ஆல்ப்ஸ் பகுதியில் இருந்து வடக்கு கடல் வரை ஜெர்மன் தொழில்துறை மையப்பகுதிகள் வழியாக பாய்கிறது.
- இது ரோட்டர்டாம் மற்றும் ஆம்ஸ்டர்டாம் உள்ளிட்ட வடக்குக் கடல் துறைமுகங்களில் அமைந்த தொழில்துறை உற்பத்தியாளர்களுக்கும் உலகளாவிய ஏற்றுமதி முனையங்களுக்கும் இடையேயான முக்கியவத்துவம் வாய்ந்த ஒரு இணைப்பாக செயல்படுகிறது.




## ஐக்கிய நாடுகள் சபையின் இணையக் குழு

- இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பச் செயலாளர் அல்கேஷ் குமார் சர்மா, இணைய ஆளுமை மீதான ஐக்கிய நாடுகள் சபையின் புகழ்பெற்ற நிபுணர்கள் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
- இணைய வெளித்துறையின் முன்னோடியான விண்ட் செர்ஃப் மற்றும் நோபல் பரிசு பெற்றப் பத்திரிகையாளர் மரியா ரீசா ஆகியோரும் இந்த 10 உறுப்பினர்களைக் கொண்ட இணைய ஆளுமை மன்றத்தின் (IGF) தலைமைத்துவக் குழுவில் நியமிக்கப் பட்டுள்ளனர்.
- அவர்கள் 2022-23 ஆகிய இரண்டு வருடக் காலத்திற்கு இணைய ஆளுமை மன்றத்தின் சுழற்சி முறை பணிக் காலத்திற்கான இப்பதவியினை வகிப்பர்.




## தற்கால அடிமைத்தனத்தின் பிற வடிவங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அறிக்கையானது, தற்கால அடிமைத்தனத்தின் பிற வடிவங்களை எடுத்துரைத்து, குழந்தைத் தொழிலாளர் முறை, சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வறுமை ஆகியவை குறித்தத் தரவுகளைச் சுட்டிக் காட்டியுள்ளது.
- சீனாவின் உய்குர் சிறுபான்மையினர் மத்தியில் நிலவும் கட்டாய உழைப்பு முறை, தெற்காசியாவில் வாழும் தாழ்த்தப்பட்டச் சாதியினரான தலித்துகள் எதிர்கொண்டு

வரும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை மற்றும் வளைகுடா நாடுகள், பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் நிலவும் வீட்டுத் தொழிலாளர் அடிமைத்தனம் உள்ளிட்ட தற்கால அடிமை முறைகள் உலகம் முழுவதும் பரவலாக நடைமுறையில் உள்ளன.

- குழந்தைத் தொழிலாளர் முறையானது (5-17 வயது), அதன் அனைத்து மோசமான வடிவங்கள் உட்பட, உலகின் அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறையில் உள்ளது.
- ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகள், மத்தியக் கிழக்கு நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் 4% முதல் 6% வரையிலான குழந்தைகள் குழந்தைத் தொழிலாளர்களாக இருப்பதாகக் கூறப்படுகிறது.
- இந்த சதவீதமானது ஆப்பிரிக்க நாடுகளில் 21.6% ஆகவும், ஆப்பிரிக்காவின் துணை சஹாராப் பகுதியில் 23.9% ஆகவும் அதிகளவில் நிலவி வருகிறது.
- கம்போடியா, இந்தியா, கஜகஸ்தான், இலங்கை மற்றும் வியட்நாம் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நடத்தப்படும் கட்டாயத் திருமணம் ஒரு கவலையளிக்கக் கூடியப் பிரச்சனையாக உள்ளது.
- பால்கன் நாடுகளின் சில பகுதிகளில் வாழும் 20 முதல் 24 வயதுடைய ரோமா இனப் பெண்களில் பாதிப் பேர் 18 வயதிற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப் பட்டு உள்ளனர்.
- இது தேசிய அளவில் ஒப்பிடுகையில் 10% ஆக உள்ளது.




## சர்வதேசப் போக்குவரத்து மன்றம்

- இந்தியப் போக்குவரத்துத் துறையில் சர்வதேசப் போக்குவரத்து மன்றத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இந்தியா-பிரான்ஸ் ஒப்பந்தத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் சர்வதேசப் போக்குவரத்து மன்றம் 64 உறுப்பு நாடுகளைக் கொண்ட வகையில் ஒரு அரசுகளுக்கு இடையேயான ஒரு அமைப்பாகும்.
- இது போக்குவரத்துக் கொள்கைக்கான சிந்தனைக் குழுவாகச் செயல்படுவதோடு போக்குவரத்து அமைச்சர்களுக்கான ஒரு வருடாந்திர உச்சி மாநாட்டையும் ஏற்பாடு செய்கிறது.
- அனைத்துப் போக்குவரத்து முறைகளையும் உள்ளடக்கிய ஒரே உலகளாவிய அமைப்பாக சர்வதேசப் போக்குவரத்து மன்றம் உள்ளது.

- சர்வதேசப் போக்குவரத்து மன்றமானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்புடன் நிர்வாக ரீதியாக ஒருங்கிணைக்கப் பட்டிருந்தாலும் அது அரசியல் ரீதியாக தன்னாட்சி பெற்றுள்ளது.

## இந்துஸ்தான் வானூர்தியியல் நிறுவனத்தின் சந்தைப் படுத்துதலுக்கான முதல் வெளிநாட்டு அலுவலகம்


- இந்துஸ்தான் வானூர்தியியல் நிறுவனமானது (HAL) கோலாலம்பூரில் தனது முதல் சர்வதேசச் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை அலுவலகத்தை நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தேஜாஸ் எனும் ஒரு இலகுரக போர் விமானத்தினை மலேசியா கொள்முதல் செய்திடச் செய்வதற்கான சாத்தியமான ஒப்பந்தத்தை எதிர்நோக்கி இந்த ஒப்பந்தமானது மேற் கொள்ளப்பட்டது.
- தேஜாஸ் விமானம் ஆனது மலேசிய விமானப்படைக்கான போர் ரக மேம்பட்ட பயிற்சி (FLIT) விமானமாக மலேசிய அரசினால் கருதப்படுகிறது.

## ஓரினச் சேர்க்கைக்கான தடை ரத்து – சிங்கப்பூர்

- சிங்கப்பூர் அரசானது, திருமணம் என்ற வார்த்தையின் வரையறையைப் பாதுகாக்கும் காலனித்துவ காலத்துச் சட்டத்தை ரத்து செய்வதன் மூலம் ஆண்களுக்கு இடையே ஏற்படும் ஓரினச் சேர்க்கை/ஒரு பாலின ஈர்ப்பினை குற்றமற்ற நடவடிக்கையாக அறிவித்தது.
- இதற்கு முன்பாக சிங்கப்பூர் தண்டனைச் சட்டத்தின் 377A என்ற ஒரு பிரிவின் கீழ், ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 377வது பிரிவானது இயற்கைக்கு மாறான சில குற்றங்களை வரையறுக்கிறது.
- 2018 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் நவ்தேஜ் சிங் ஜோஹர் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் ஒருமனதாக 377வது பிரிவினை அரசியலமைப்பிற்கு எதிரானது என்று கூறி உள்ளது.

## அதிக வயதான மக்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடு

- போர்ச்சுகல் நாட்டில் முதியோர் எண்ணிக்கை கடந்த முப்பது ஆண்டுகளில் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.
- இந்நாட்டில் தற்போது ஒவ்வொரு 100 இளைஞர்களுக்கும் 182 வயதானவர்கள் இருப்பதாக பதிவாகியுள்ளது என்பது ஐரோப்பிய ஒன்றியத்தினை மிகப்பெரிய அளவில் முதியோர் மக்கள்தொகையைக் கொண்டு உள்ளதாக மாற்றும் வகையில் உள்ளது.
- 1990 ஆம் ஆண்டுகளில் போர்ச்சுகல் நாட்டில் 100 இளைஞர்களுக்கு 66 முதியவர்களே இருந்தனர்.
- 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், போர்ச்சுகல் நாட்டில் அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையும் விட அதிகமாக 3.6 சதவிகிதம் என்ற அளவில் வருடாந்திர முதியோர் விகிதமானது பதிவாகியுள்ளது.




## சீனாவில் இதுவரை பதிவாகாத அளவிற்கான மிக நீண்டகால வறட்சி

- சீனா இதுவரை இல்லாத அளவிற்கான மிகப்பெரிய வறட்சியைச் சந்தித்து வருகிறது.
- இந்த வறட்சியால் அதன் ஆறுகள் வறண்டுள்ளதால், அந்நாட்டின் நீர்மின்சார உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது.
- சிறிய மற்றும் பெரிய நகரங்களில் மின்சாரம் இல்லாததால் அங்கு இருள் சூழ்ந்து உள்ளது.
- 64 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆசியாவின் மிக நீளமான நதி மற்றும் சீனாவின் மிகப் பெரிய நதியான யாங்சே வறண்டுள்ளது.



## இந்தியா மற்றும் எகிப்து இடையேயான அரசுமுறை உறவுகளின் 75வது ஆண்டு விழா

- இந்தியாவுடனான அரசுமுறை உறவுகளின் 75வது ஆண்டு நிறைவின் நினைவாக எகிப்து அரசு நினைவு தபால்தலையை வெளியிட்டது.
- 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று, எகிப்து அரசு இந்தியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்த போது இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையிலான அரசு முறை உறவுகள் தொடங்கியன.

- 1950 ஆம் ஆண்டுகளில் இந்த இரு நாடுகளும் நெருக்கமானதன் விளைவாக 1955 ஆம் ஆண்டில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நட்பு ஒப்பந்தம் ஏற்பட்டது.
- தற்போது 3.15 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இந்திய முதலீட்டுடன் இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவிற்கான மிகப்பெரிய முதலீட்டுத் தளங்களில் எகிப்து நாடும் ஒன்றாகும்.
- 1960 ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு வளர்ச்சி பெற்றது
- இந்தியாவும் எகிப்தும் இணைந்து ஹெலன்-300 ஜெட் என்ற போர் விமானத்தைத் தயாரித்தன.
- இந்திய-எகிப்து கூட்டு பாதுகாப்புக் குழுவானது 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- அதன் பிறகு, இந்தக் குழு ஆறு முறை கூடியுள்ளது.
- இந்தியாவும் எகிப்தும் இணைந்து டெசெர்ட் வாரியர் என்ற இருதரப்பு இராணுவப் பயிற்சியையும் ஏற்பாடு செய்கின்றன.




## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம்

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டமானது உஸ்பெகிஸ்தானில் நடைபெற்றது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடானது உஸ்பெகிஸ்தான் நாட்டின் சமர்கண்ட் நகரில் செப்டம்பர் 15-16 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.
- இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான் உள்ளிட்ட அதன் 8 உறுப்பினர் நாடுகளின் அரசுத் தலைவர்கள் இதில் பங்கேற்கின்றனர்.
- ஷாங்காய் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு என்பது ஒரு ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கூட்டணியாகும்.

## PEN-PLUS உத்தி

- ஆப்பிரிக்க நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் தொற்றா நோய்களுக்கு எதிரான PEN-PLUS என்ற உத்தியை ஏற்றுக் கொண்டனர்.
- ஆப்பிரிக்காவின் முக்கிய நகரங்களில் தொற்றா நோய்களுக்குப் பெரும்பாலும் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.
- பெரும்பாலான கிராமப்புற, நகர்ப்புற, விளிம்பு நிலை மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நோயாளிகளுக்குத் தேவையான பயன்கள் அளிக்கப்பட வில்லை என்பதால் சுகாதார ஏற்றத்தாழ்வுகளை இந்நோய்கள் மேலும் மோசமாக்குகிறன.
- இதை முறியடிக்க ஆப்பிரிக்கா PEN-PLUS என்ற புதிய ஒரு உத்தியை ஏற்றுக் கொண்டு உள்ளது.
- PEN-PLUS உத்தி என்பது அத்தியாவசிய மருந்துகள், தொழில்நுட்பங்கள், நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை ஆகியவற்றிற்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம் முதல்-நிலை பரிந்துரை சார்ந்த சுகாதார மையங்களில் கடுமையான தொற்றா நோய்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு பிராந்திய உத்தி ஆகும்.
- ஏனெனில் ஆப்பிரிக்காவில் உள்ள நோயாளிகளின் சுய செலவினம் சார்ந்த செலவழிப்பிற்குப் பெரும்பாலும் தொற்றா நோய்களே காரணமாக இருப்பதால், இந்த உத்தி என்பது சிகிச்சையில் உள்ள அணுகல் இடைவெளியைக் குறைக்கும்.
- PEN-PLUS உத்தியானது லைபீரியா, மலாவி மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டது.




## ஐரோப்பாவில் நிலவும் மோசமான வறட்சி நிலை

- 1540 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் ஒரு ஐரோப்பியக் கோடை இவ்வளவு வறண்ட நிலையில் இருந்ததாக இல்லை என்று கூறப்படுகிறது.
- 1540 ஆம் ஆண்டில் ஒராண்டுக் கால வறட்சியானது பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பலி வாங்கியது.
- உலகளாவிய வறட்சி ஆய்வகத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, ஐரோப்பாவின் 47% நாடுகள் தற்போது "எச்சரிக்கை" நிலையில் உள்ளன.

- மேலும், ஐரோப்பாவின் 17% பகுதிகளின் தாவரப் பரவல் "நெருக்கடி நிலையின் அறிகுறிகளை" காட்டுகின்றன.
- தற்போது நிலவும் இந்த வறட்சியானது குறைந்தபட்சம் கடந்த 500 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மோசமான வறட்சி என்று முதற்கட்டத் தகவல்கள் கூறுகின்றன.
- உலகளாவிய வறட்சி ஆய்வகமானது ஐரோப்பிய ஆணையத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் ஒரு பகுதியாகும்.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் உக்ரைன் மீதான செயல்முறை வாக்கெடுப்பு

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் மேற்கொள்ளப்பட்ட உக்ரைனுக்கு எதிரான ஒரு செயல்முறை வாக்கெடுப்பின் போது, இந்தியா, முதல் முறையாக, ரஷ்யாவிற்கு எதிராக வாக்களித்தது.
- உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை காணொளிக் காட்சி மூலம் ஒரு சந்திப்பில் உரையாற்ற அழைப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை வாக்கெடுப்பை நடத்தியது.
- ரஷ்யத் தூதர் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியைச் சபையில் உரையாற்ற அனுமதிக்கும் விவகாரத்தின் மீது ஒரு செயல்முறை வாக்கெடுப்பினை மேற்கொள்ளுமாறு கோரினார்.
- இந்தியா தற்போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தன் பதவிக் காலம் டிசம்பர் மாதத்தில் முடிவடைகிற நிலையில் இரண்டு வருடக் காலத்திற்கு ஒரு நிரந்தரமற்ற உறுப்பினராக உள்ளது..
- ரஷ்யாவின் கோரிக்கையை ஏற்று, ஒரு செயல்முறை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- இதில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பினர் நாடுகளில் 13 நாடுகள் ஜெலென்ஸ்கியைச் சபையில் உரையாற்ற அனுமதிப்பதற்கு ஆதரவாக வாக்கு அளித்தனர்.
- இதற்கு ரஷ்யா எதிராக வாக்களித்த நிலையில் சீனா இதில் வாக்களிப்பைப் புறக்கணிக்க முடிவு செய்தது.
- செயல்முறை வாக்கெடுப்பின் மீதான பாதுகாப்புச் சபையின் முடிவுகள் அதன் ஒன்பது உறுப்பினர்களின் ஒரு உறுதியான வாக்கெடுப்பு மூலம் மேற்கொள்ளப் படும்.

## உலகின் 3வது பணக்காரர்


- அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி உலகின் 3வது பணக்காரர் ஆனார்.
- இவர் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் பில் கேட்ஸ் மற்றும் LVMH நிறுவனத்தின் இணை நிறுவனர் பெர்னார்ட் அர்னால்ட் ஆகியோரை முந்தியுள்ளார்.
- இந்தப் பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் மற்றும் முதல் ஆசியர் இவரே ஆவார்.
- அவரது சொத்துகளின் மொத்த நிகர மதிப்பு 137.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது.

- அதானி குழுமம் இந்திய நாட்டின் மிகப்பெரிய நிலக்கரி வர்த்தக நிறுவனமும் ஆகும்.
- அதானி தற்போது ப்ளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டுத் தரவரிசையில் எலோன் மஸ்க் மற்றும் ஜெஃப் பெசோஸ் ஆகியோருக்கு அடுத்தபடியாக பின்தங்கியுள்ளார்.
- முன்னதாக, இந்தியாவின் முகேஷ் அம்பானி மற்றும் சீனாவின் ஜாக் மா ஆகியோர் இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களுக்குள் இடம் பெற முயற்சி செய்திருந்தனர்.




## உலகின் மிகக் குறைந்த கருவுறுதல் விகிதம்


- உலகின் மிகக் குறைந்த கருவுறுதல் விகிதம் உள்ள நாடு என்ற தனது சொந்தச் சாதனையை தென் கொரியா மீண்டும் முறியடித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில், ஒரு வருடத்திற்கு முன்பு 0.84 ஆக இருந்த நிலையில் தென் கொரியப் பெண்கள் தங்கள் வாழ்நாளில் சராசரியாக வெறும் 0.81 குழந்தைகளைப் பெற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் உலகளாவிய மக்கள்தொகைக் கணிப்புகள் மற்றும் உலக வங்கியின் தரவுகளின் படி, குறைந்தபட்சம் 30,000 டாலர் மதிப்பிலான தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்ட நாடுகளில் தென் கொரியா உலகிலேயே மிக அதிக வயதானவர்களைக் கொண்டுள்ள நாடாக அதிவேகமாக மாறி வருகிறது.



# பொருளாதாரச் செய்திகள்

## வருடாந்திர அந்நிய நேரடி முதலீடுகள்

- 2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியா அதிகபட்சமாக ஆண்டுக்கு 85 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது.
- 2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவிற்கு சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிலிருந்து அதிக அந்நிய நேரடி முதலீடு செய்யப்பட்டது.
- அவற்றைத் தொடர்ந்து மொரீஷியஸ், நெதர்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- கர்நாடகா, மகாராஷ்டிரா, டெல்லி, தமிழ்நாடு மற்றும் ஹரியானா ஆகியவை அதிக அந்நிய நேரடி முதலீடுகளைப் பெறும் முதல் 5 மாநிலங்களாகும்.




## HDFC வங்கி இணைப்பு





- HDFC வங்கியானது, அதன் தாய் நிறுவனமான வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகத்துடன் இணைந்த பிறகு உலகின் முதல் 10 மதிப்புமிக்க வங்கிகளில் ஒன்றாக இருக்கும்.

- உலகின் முன்னணி 10 வங்கிகள் குழுவில் இடம்பிடித்த முதல் இந்திய வங்கியாகவும் இது திகழும்.
- HDFC வங்கி மற்றும் வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனமானது சுமார் 160 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும்.

## சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூல்

- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ஆண்டிற்கு 28 சதவீதம் உயர்ந்து ரூ.1,48,995 கோடியாக அதிகரித்துள்ளது.
- இதுவரை பதிவான இரண்டாவது அதிகபட்ச சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் வசூல் இதுவாகும்.
- ஜூன் மாத வசூல் ஆனது, ரூ.1,44,616 கோடியாக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அதிகபட்ச வசூலாக 1,67,540 கோடி ரூபாய் பதிவாகி உள்ளது.
- வரி வசூலிக்கத் தொடங்கப்பட்டதில் இருந்து, மாதாந்திரச் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் ரூ.1.40 லட்சம் கோடியைத் தாண்டியது இது ஆறாவது முறையாகும்.




## 5G அலைக்கற்றை ஏலம் 2022

- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது 5ஆம் தலைமுறை தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப ஏலத்தில் அதிக அலைக்கற்றைகளை வாங்கிய ஒரு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- 700 மெகா ஹெர்ட்ஸ் அளவிலான அலைக்கற்றையானது, ஒரு சேவை வழங்கும் நிறுவனத்தினால் வாங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

- ஜியோ நிறுவனத்திற்கு அடுத்த இடத்தில் பார்தி ஏர்டெல் நிறுவனமும், அதைத் தொடர்ந்து வோடபோன் ஐடியா நிறுவனமும் உள்ளது.
- அதானி குழும நிறுவனமான அதானி டேட்டா நெட்வொர்க்ஸ் இந்த ஏலத்தில் புதிதாக நுழைந்துள்ளது.
- இந்த ஏலத்தில் அரசாங்கம் 1.50 டிரில்லியன் ரூபாய்க்குச் சற்று அதிகமானத் தொகையைப் பெற்றுள்ளது.
- 29% அலைக்கற்றைகள் விற்கப்படாமல் உள்ளன.

**Auction Numbers**

| | Spends (₹ Cr) | Purchases (MHz) |
|---|---|---|
| Jio | 88,078 | 24,740.0 |
| Airtel | 43,084 | 19,867.8 |
| Vi | 18,799 | 6,228.4 |
| Adani | 212 | 400.0 |


## 75,000 அங்கீகரிக்கப்பட்ட தொடக்க நிறுவனங்கள்

- தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது 75,000 தொடக்க நிறுவனங்களை அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவில் தொடக்க நிறுவனங்களுக்கானச் சூழலமைவானது புதுமை, உற்சாகம் மற்றும் தொழில் முனைவோர் மனப்பான்மை ஆகியவை மூலம் முன்னேறி வருகிறது.
- தொடக்க நிறுவனங்களுக்கு ஏதுவான சூழலை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் ஸ்டார்ட்-அப் இந்தியா திட்டமானது தொடங்கப்பட்டது.



## 6 பில்லியன் பரிவர்த்தனைகள்

- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம் மூலமாக 6 பில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 2016 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுக இயங்குதளம் தொடங்கப் பட்டதிலிருந்துப் பதிவான மிக அதிகப் பரிவர்த்தனை இதுவாகும்.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம் மூலம் ரூ.10.62 டிரில்லியன் மதிப்பிலான 6.28 பில்லியன் பரிவர்த்தனைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளது.
- தற்போது பரிவர்த்தனைகளின் அளவானது 7.16 சதவீதம் அதிகரித்துள்ளது.
- தற்போது பரிவர்த்தனைகளின் மதிப்பானது, மாதந்தோறும் 4.76 சதவீதம் அதிகரித்து உள்ளது.





## புதிய வரி தளத்தில் பணவழங்கீட்டு முகமை

- ஃபெடரல் வங்கியானது, வருமான வரித் துறையின் TIN 2.0 தளத்தில் அதன் பண வழங்கீட்டு முகமை தளத்தை இடம்பெறச் செய்த இந்தியாவின் முதல் வங்கியாக மாறி உள்ளது.
- கடன் அட்டை/பணம் எடுத்தல் அட்டை, ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம், NEFT/RTGS மற்றும் இணைய வழி வங்கி போன்ற பல முறைகளைப் பயன்படுத்தி, வரி செலுத்துவோர் எளிதாகத் தங்கள் வரிகளை செலுத்தலாம்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் 4வது நிதிக் கொள்கை மறுஆய்வு

- இந்திய ரிசர்வ் வங்கியானது நடப்பு நிதியாண்டிற்கான சில்லறைப் பணவீக்க கணிப்பு அளவினை மாற்றாமல் 6.7 சதவீதமாக தக்க வைத்திருக்கிறது.
- எனவே பணப்புழக்க சரிசெய்தல் வசதியின் (LAF) கீழ் கொள்கை ரெப்போ விகிதத்தை 50 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தி, அதனை உடனடியாக அமலுக்குக் கொண்டு வரும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கியானது அதை 5.40 சதவீதமாக உயர்த்தியுள்ளது.




## இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை

- இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையானது ஜூலை மாதத்தில் வரலாறு காணாத வகையில் 31.02 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- கச்சா எண்ணெய் இறக்குமதி 70 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்துள்ளதே இதற்குக் காரணமாகும்.
- கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இந்த மதிப்பு 10 பில்லியன் டாலராக இருந்தது.
- நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் இந்தப் பற்றாக்குறை 100 பில்லியன் டாலராக இருந்தது.
- கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இது 42 பில்லியன் டாலராக இருந்தது.





## அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்கான குழு

- இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் ஆனது அந்நிய முதலீட்டை அதிகரிப்பதற்காக 15 பேர் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளது.
- இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவானது, 'அந்நிய முதலீட்டை ஈர்ப்பதற்கான ஆலோசனைக் குழு' என்று அழைக்கப்படுகிறது.
- முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் K.V.சுப்பிரமணியன் இந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போதுள்ளச் செயல்முறைகளை மதிப்பாய்வு செய்வதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தைகளில் முதலீடு செய்வதற்கான சில வழிகளை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- உள்நாட்டுப் பத்திரச் சந்தைகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்பை அதிகரிக்க இந்தக் குழு உதவும்.
- முதலீட்டை ஈர்ப்பதற்கும் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்கும் தற்போதுள்ள விதிகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான புதிய வழிமுறைகளை இக்குழுப் பரிந்துரை செய்யும்.
- பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பரிந்துரைகளையும் இக்குழு வழங்கும்.

## வரிப் பகிர்வு

- மத்திய அரசானது இரண்டு மாதத் தவணை வரிப் பகிர்வுக்குச் சமமான 1.16 லட்சம் கோடி ரூபாய் நிதியை மாநில அரசுகளுக்கு வழங்கியது.
- இது இந்த நிதியாண்டில் மாநில அரசுகளின் மூலதனச் செலவுத் திறன்களை அதிகரிக்க உதவுகிறது.
- மாநிலங்களுக்கு உத்தரவாதமாக அளிக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு ஆனது இந்த ஜூலை மாதத்தில் காலாவதியானது.
- ‘பொதுவான மாதாந்திர வரிப் பகிர்வு’ என்பது சுமார் ₹58,332.86 கோடிகள் ஆகும்.




## டிஜிட்டல் முறையிலான கடன் வழங்கீடுகளுக்கு விதிக்கப்பட்ட விதிமுறைகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது டிஜிட்டல் முறையில் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- இது டிஜிட்டல் கடன் வழங்கீடு (WGDL) தொடர்பான பணிக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றுகிறது.
- அனைத்து டிஜிட்டல் முறையிலான கடன்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் மூலம் மட்டுமே வழங்கப்பட வேண்டும் மற்றும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்று இந்த விதிமுறைகள் குறிப்பிடுகின்றன.

- கடன் வழங்கீட்டுச் சேவை வழங்குநர்கள் அல்லது பிற மூன்றாம் தரப்பினர்களின் குறுக்கீடு இதில் தடை செய்யப் பட்டுள்ளது.




## வருமான வரி செலுத்துவோர் மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம்

- வருமான வரி செலுத்துவோர் அக்டோபர் 01 முதல் அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டமான அடல் ஓய்வூதியத் திட்டத்தில் (APY) இணைவதற்கு இனி அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- 2015 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதியன்று அரசாங்கம் அடல் ஓய்வூதியத் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- இது முக்கியமாக அமைப்புசாராத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தில் பதிவு செய்துள்ளச் சந்தாதாரர்களுக்கு அவர்கள் 60 வயதை அடைந்த பிறகு, அவர்கள் அளித்தப் பங்களிப்புகளின் அடிப்படையில் குறைந்தபட்ச உத்தரவாத ஓய்வூதியமாக மாதம் ₹1,000 முதல் ₹5,000 வரை வழங்கப்படும்.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதிக்கு முன்பாக இத்திட்டத்தில் சேர்ந்த அல்லது இணைந்தச் சந்தாதாரர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.


## கிராமப்புற கூட்டுறவு வங்கிகளின் தேசிய மாநாடு

- கிராமப்புற கூட்டுறவு வங்கிகளின் தேசிய மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது.
- சிறந்த மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் ஆகியவற்றிற்கு இதில் விருதுகள் வழங்கப் பட்டன.
- வேளாண் கடன் துறையில், 2,000க்கும் மேற்பட்டக் கிளைகளுடன் 34 மாநிலக் கூட்டுறவு வங்கிகள், 14,000 கிளைகளுடன் 351 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சுமார் 95,000 முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் உள்ளன.

## டிஜிட்டல் வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பின் இயங்குதளத்தில் மைக்ரோசாப்ட் நிறுவனம்

- ❖ மைக்ரோசாப்ட் நிறுவனமானது அரசாங்கத்தின் டிஜிட்டல் வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பில் (ONDC) இணைந்தது.
- ❖ இந்தியச் சந்தையில் சமூக இணைய வர்த்தகத்தினை அறிமுகப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ டிஜிட்டல் வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பின் இயங்குதளத்திற்காக அரசாங்கத்துடன் இணைந்த முதல் பெரிய தொழில்நுட்ப நிறுவனம் மைக்ரோசாப்ட் நிறுவனம் ஆகும்.
- ❖ சமூக இணைய வர்த்தகத்தின் ஒரு பகுதியாக, மைக்ரோசாப்ட் நிறுவனம் இந்தியாவில் ஷாப்பிங் (வணிகம்) செயலியை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

## 2021 ஆம் ஆண்டில் டிஜிட்டல் நாணயம்




- ❖ 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பான UNCTAD அமைப்பின் அறிக்கையின்படி இது வெளியிடப் பட்டது.
- ❖ இணைய சங்கேதப் பணங்களைக் கொண்டிருக்கும் மக்கள்தொகையின் பங்கினைப் பொறுத்த வரையில், வளர்ந்து வரும் நாடுகள் முதல் 20 நாடுகளில் 15 நாடுகளைக் கொண்டுள்ளன.
- ❖ இதில் உக்ரைன் 12.7 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து ரஷ்யா (11.9 சதவீதம்), வெனிசுலா (10.3 சதவீதம்), சிங்கப்பூர் (9.4 சதவீதம்), கென்யா (8.5 சதவீதம்), அமெரிக்கா (8.3 சதவீதம்) ஆகியவையும் இடம் பெற்று உள்ளன.

- ❖ இந்தியாவில், 2021 ஆம் ஆண்டின் படி 7.3 சதவீத மக்கள் எண்ணிம நாணயத்தை வைத்துள்ளனர்.
- ❖ மக்கள்தொகையின் அடிப்படையில் எண்ணிம நாணய உரிமைகளைக் கொண்ட முதல் 20 உலக நாடுகளின் பட்டியலில் இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது.

## முதல் உற்பத்திக் குறியீட்டு நிதி

- ❖ நவி பரஸ்பர நிதி நிறுவனமானது நவி நிஃப்டி இந்தியா உற்பத்திக் குறியீட்டு நிதியைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ இது உற்பத்தித் துறை குறித்து கவனம் செலுத்தும் இந்தியாவின் முதல் குறியீட்டு நிதி ஆகும்.
- ❖ நவி நிஃப்டி இந்தியா உற்பத்திக் குறியீட்டு நிதி என்பது நிஃப்டி இந்தியா உற்பத்திக் குறியீட்டினை ஒத்திருக்கும் ஒரு திறந்தநிலைக் குறியீட்டு நிதியாகும்.
- ❖ இது இந்தியாவின் முதல் 300 நிறுவனங்களில் இடம் பெற்ற உற்பத்தி நிறுவனங்களின் செயல்திறனைக் கண்காணிக்கும்.




## எல்லைகளுக்கிடையிலான பாரத் கட்டண வழங்கீட்டு அமைப்பு மூலமான உள் வரவு


- ❖ எல்லைகளுக்கிடையேயான உள்நாட்டு கட்டண வழங்கீடுகளைச் செயல்முறைப் படுத்துவதற்குப் பாரத் கட்டண வழங்கீட்டு அமைப்பிற்கு அனுமதி வழங்க உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- ❖ இந்தியாவில் பயன்பாடு சார்ந்தக் கட்டணங்களைச் செலுத்துவதில் சிக்கல்களை எதிர்கொள்ளும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு இந்த அமைப்பு உதவும்.
- ❖ இந்த முன்மொழிவானது ஏற்றுக் கொள்ளப் பட்டால், இது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்குப் பயனளிக்கும்.
- ❖ பாரத் கட்டண வழங்கீட்டு அமைப்பு என்ற கருத்தானது மத்திய வங்கியினால் கருத்தாக்கப்பட்டது.
- ❖ இது இந்தியத் தேசியப் பண வழங்கீட்டுக் கழகம் மற்றும் பாரத் கட்டண வழங்கீட்டு நிறுவனம் ஆகியவற்றினால் நடத்தப்படுகிறது.

## புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான பிரத்தியேகக் கிளை

- பாரத் ஸ்டேட் வங்கியானது புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கான தனது முதல் பிரத்தியேகக் கிளையைப் பெங்களூருவின் கோரமங்களாவில் தொடங்கி உள்ளது.
- இந்தக் கிளையானது புத்தொழில் நிறுவனங்களின் ஆரம்ப நிலை முதல் பொதுப் பங்கு வழங்கீடுகள் மற்றும் இரண்டாம் நிலைப் பங்கு வழங்கீடுகள் வரையிலான பல சேவைகளை வழங்கும்.

## 2029 ஆம் ஆண்டில் 5 டாலர் டிரில்லியன் மதிப்பிலான பொருளாதாரம்

- 5 டிரில்லியன் டாலர் மதிப்பிலானப் பொருளாதாரம் என்ற ஒரு இலட்சிய இலக்கினை அடைய இந்திய நாடு எட்டு முக்கியச் சவால்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளன.
- அந்த சவால்கள்; முதலீடுகளை அதிகரித்தல், உற்பத்தித் திறன் மற்றும் கல்வி மற்றும் சுகாதார நலப் பயன்களை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பெருநிலைப் பொருளியல் துறைகளின் உறுதித் தன்மையை நீடித்தல், உலகளாவிய மாபெரும் போக்குகளை நிர்வகித்தல் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துதல் ஆகியனவாகும்.
- எனவே, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஆண்டிற்கு ஒன்பது சதவிகிதம் தொடர்ந்து வளர்ச்சியடைந்தால் மட்டுமே 2028-29 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 5 டிரில்லியன் டாலர் மதிப்பு கொண்ட பொருளாதாரமாக மாற முடியும்.





## அவசர கடன் உத்தரவாதத் திட்டம்

- "அவசர கடன் உத்தரவாதத் திட்டத்தின் பயன்களை (ECLGS)" அதிகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம் இத்திட்டத்தின் வரம்பு 5 டிரில்லியன் ரூபாயாக உயர்த்தப்பட உள்ளது.
- விருந்தோம்பல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற துறைகளில் உள்ள நிறுவனங்களுக்கு கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் அவசரக் கடன் உத்தரவாதத் திட்டம் தொடங்கப்பட்டது.

- கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு வணிகர்கள் தங்கள் செயல்பாட்டுக் கடன்களைத் தீர்க்கவும், மீண்டும் தொழில் தொடங்கவும் உதவுவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், கடன் பெற்றவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாததால் வங்கிகளுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு 100% உத்தரவாதம் வழங்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதி வரை சுமார் 3.67 டிரில்லியன் ரூபாய் மதிப்பிலான கடன்கள் இந்தத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- இத்திட்டம் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.


## மக்கக் கூடிய நெகிழிப் பொருட்களுக்கானக் கடன்





- "மக்கக் கூடிய" நெகிழிப் பொருட்களை வணிகமாக்குவதற்காக 1.15 கோடி ரூபாய் தொடக்க நிறுவனக் கடன் ஆனது சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த நடவடிக்கையானது ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டை அகற்ற முயல்கிறது.
- தொடக்க நிறுவனமானது ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்களுக்கு ஒரு மாற்றுத் தீர்வை "மக்கக் கூடிய நெகிழிப் பொருட்களின் முன்மாதிரி" வடிவில் கொண்டு வந்துள்ளது.
- இந்தப் பொருள் ஆனது மண்ணில் உரம் போன்று சிதைவுறுவதால் இது சுற்றுச்சூழலை பாதிக்காது.
- இந்தக் கலவையானது வெப்பத்தினால் இழக்கக்கூடிய நெகிழி-ஸ்டார்ச்-கிளிசரின் மற்றும் சில இரசாயன மாற்றங்கள் ஆகியவற்றினைக் கொண்ட தனித்துவம் மிக்க ஒரு கலவையாகும்.
- மேலும் இது அந்தப் பொருளுக்கு அதிக வலிமையை வழங்குகின்றது.
- பட்டியலிடப்பட்டு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப் படும் நெகிழிப் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு, விற்பனை, விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவை 2022 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளன.

## இந்தியாவின் முதல் தங்கம் மற்றும் வெள்ளி நிதி

- ஏடெலிவெய்ஸ் பரஸ்பர நிதியம் எனப்படும் சொத்து மேலாண்மை நிறுவனமானது, ஒற்றை வைப்புத் தொகை மூலமாக தங்கம் மற்றும் வெள்ளியில் வர்த்தகம் செய்யும் ஒரு அமைப்பினை அறிமுகப் படுத்துகிறது.
- இது இந்தியாவின் இத்தகைய முதல் திட்டமாகும்.
- வெள்ளி அடிப்படையிலான பரஸ்பர நிதிகள் ஆரம்பத்தில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் அறிமுகப்படுத்தப் பட்டன.
- இந்தியாவின் முதல் தங்க நிதியான நிப்பான் இந்தியா ETF கோல்டு BeES என்ற நிதி, 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்டது.




## 2வது பெரிய உள்நாட்டு விமான நிறுவனம்





- விஸ்தாரா நிறுவனமானது கடந்த மாத உள்நாட்டுச் சந்தைப் பங்கீட்டில் 10.4% என்ற அளவுடன் இந்தியாவின் இரண்டாவது பெரிய விமான நிறுவனமாக உருவெடுத்தது.

- இண்டிகோ நிறுவனம் 58.8% பங்குகளுடன் முதலிடத்தில் உள்ளது.
- விஸ்தாரா விமான நிறுவனமானது சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம் மற்றும் டாடா சன்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டு நிறுவனமாகும்.
- மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் நிலைகளில் ஏர் இந்தியா (8.4%), கோஃபர்ஸ்ட் (8.2%) மற்றும் ஸ்பைஸ்ஜெட் (8%) ஆகிய விமான நிறுவனங்கள் மிகச் சிறிய தசமப் புள்ளிகள் வேறுபாட்டில் அடுத்தடுத்த நிலையில் உள்ளன.

## NDTV மற்றும் அதானி குழுமம்


- அதானி குழுமம் NDTV ஊடகத்தில் 29.2% அளவிலான பங்குகளை மறைமுகமாக கையகப் படுத்துவதாக அறிவித்தது.
- மேலும், திறந்தநிலைச் சந்தையில் இருந்து மேலும் 26% பங்குகளை வாங்க அது முன் வந்துள்ளது.
- இப்போது அதானி குழுமம், இந்தியாவின் பங்குச் சந்தைக் கட்டுப்பாட்டு அமைப்பான இந்தியப் பங்குகள் மற்றும் பங்குச் சந்தை வாரியத்தின் அனுமதியினைப் பெற வேண்டும்.




## கோதுமை மாவு ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள்

- கோதுமை அல்லது மெஸ்லின் மாவுப் பொருட்களின் மீதான விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி கோதுமை அல்லது மெஸ்லின் மாவு ஏற்றுமதிக்கு சிலக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் முடிவு செய்து உள்ளது.
- நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, மே மாதம் முதல் கோதுமை ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்தது.
- இருப்பினும், இது வெளிநாடுகளில் கோதுமை மாவுக்கான தேவையை அதிகரித்தது.
- இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் கோதுமை மாவு ஏற்றுமதியானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூலை ஆகிய காலங்களில் 2021 ஆம் ஆண்டின் இதே கால கட்டத்தினை ஒப்பிடுகையில் 200 சதவிகித வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் இந்தியா 246 மில்லியன் டாலர் மதிப்புள்ள கோதுமை மாவை ஏற்றுமதி செய்தது.

- இந்த நிதியாண்டின் ஏப்ரல்-ஜூன் மாத காலத்தில் ஏற்றுமதி சுமார் 128 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.




## லித்தியம் வழங்கீட்டுச் சேவை – இந்தியா

- சுரங்கத் துறை நடவடிக்கைகளில் இந்திய நிறுவனங்களுக்கு அணுகலை வழங்கச் செய்வதன் மூலமும், அதிக மதிப்புள்ள லித்தியம் மற்றும் கோபால்ட் ஏற்றுமதியை அனுமதிக்கச் செய்வதன் மூலமும், பல ஆப்பிரிக்க நாடுகள் இந்திய அரசினை அணுகி, அவற்றின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான கடன்களின் ஒரு பகுதியை வழங்கச் செய்வதற்காகப் பல சலுகைகளை வழங்குகின்றன.
- இந்திய மேம்பாட்டு மற்றும் பொருளாதார உதவித் திட்டத்தின் (IDEAS) கீழ் சலுகைக் கடன் வழங்கீடு மூலம் மேம்பாட்டு உதவிகள் வழங்குவதை இந்தியா விரிவுபடுத்தச் செய்கிறது.
- ஆப்பிரிக்காவில் எண்ணெய், எரிவாயு மற்றும் லித்தியம் ஆகியவற்றின் வளமான இருப்புகள் உள்ளன.
- இப்போது லித்தியம்-அயனி மின்கல அடுக்குகளைப் பயன்படுத்தி மின்சார வாகன உள்கட்டமைப்பைக் கட்டமைக்கும் நாடுகளால் இது மிகவும் விரும்பப்படும் ஒரு கனிமமாக மாறியுள்ளது.




*Source : Atlassons Business Services Private Limited*

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## AI4Bharat குழுமத்தில் நிலேகனி மையம்

- "AI4Bharat' குழுமத்தில், இந்திய மொழிகளுக்கானப் பரந்த மூல ஆதாரச் செயற்கை நுண்ணறிவினை உருவாக்குவதற்காக நிலேகனி மையமானது தொடங்கப்பபட்டது.
- இது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினால் தொடங்கப்பபட்டது.
- ரோகினி மற்றும் நந்தன் நிலேகனி ஆகியோர் நிலேகனி சேவை நிறுவனங்கள் மூலம் ரூ. 36 கோடி மானியம் வழங்கி, இந்த மையத்திற்கு நிதி உதவி அளித்து வருகின்றனர்.


## இந்தியாவின் முதல் கற்பிக்கும் எந்திர மனிதன்

- சிந்து சர்வதேச பள்ளியானது, இந்தியாவில் ஈகிள் ரோபோட் எனப்படும் புதுமையான மற்றும் முதலாவது கற்பிக்கும் எந்திர மனிதனை அறிமுகப் படுத்தி உள்ளது.
- ஹைதராபாத், பெங்களூரு மற்றும் புனே நகரில் உள்ள மூன்று சிந்து பள்ளிகளில் தலா ஏழு எந்திர மனிதன் என 21 ஈகிள் ரோபோட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- ஈகிள் ரோபோ மிகவும் ஊடாடக்கூடிய, தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை வழங்கக் கூடிய மற்றும் எண்ணிம அடிப்படையிலான முகத்தின் மூலம் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்கிறது.




## உறுப்புகளைப் படமிடுவதற்கான மீயொலி திறன் கொண்ட பசை போன்ற சாதனம்

- மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது அஞ்சல்தலை அளவுள்ள ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தச் சாதனமானது நேரலையான, உயர் தெளிவுத் திறன் கொண்ட படங்களை உருவாக்கக் கூடியது.
- இந்தச் சாதனம் தோலில் பொருத்தப்பட்டு 48 மணி நேரம் தொடர்ந்து படங்களை அனுப்பும் திறன் கொண்டது.
- தற்போதைக்கு, இந்தப் பசை கொண்ட சாதனமானது கருவிகளுடன் இணைக்கப்பட வேண்டும்.
- கம்பிவட இணைப்புகள் இல்லாத முறையில் அவற்றை இயக்குவதற்கான வழியைக் கண்டறிய ஆராய்ச்சியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.




## மிகவும் நீடித்தத் திறன் கொண்ட ஹைட்ரஜன் எரிபொருள் கலம்

- உலகிலேயே மிகவும் நீடித்தத் திறன் கொண்ட ஹைட்ரஜன் எரிபொருள் கலமானது சமீபத்தில் உருவாக்கப்பட்டது.
- இந்த ஹைட்ரஜன் எரிபொருள் கலமானது மிகவும் செலவு குறைந்ததாகும்.
- கார்பன்-நடுநிலை என்ற உலகின் இலக்கை அடையச் செய்வதில் பசுமை ஆற்றலைப் பரவலாகப் பயன்படுத்துவதற்கான வழிகளை இது வழங்குகிறது.
- அவை ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனை மின்சாரமாக மாற்றுவதன் மூலம் திறன் மிக்க ஆற்றலை உருவாக்குகின்றன.
- கார்பன் டை ஆக்சைடு, நுண் துகள்கள் மற்றும் பிற காற்று மாசுபடுத்திகள் இந்தச் செயல்முறையில் வெளியேற்றப் படுவதில்லை.





## பைரீன் சீராக்கம்

- டெஹ்ராடூனில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை சபையின் இந்தியப் பெட்ரோலியக் கழகமானது, சுற்றுச்சூழலில் இருந்து நச்சு, மறுசுழற்சிக்கு உட்படாத மற்றும் புற்றுநோயை உருவாக்கும் பாலிசைக்ளிக் நறுமண ஹைட்ரோகார்பன்களை (PAHs) அகற்றும் திறன் கொண்ட ஒரு பூஞ்சையை அடையாளம் கண்டுள்ளது.
- அவர்கள் டி.மாக்ஸிமா எனப்படும், பைரின் நுண்ணுயிர் சிதைவை ஏற்படுத்தும் திறன் கொண்ட வெள்ளை நிற அழுகல் பூஞ்சையை அடையாளம் கண்டுள்ளனர்.

- இறந்தத் தாவரங்களில் வளரும் இந்தப் பூஞ்சையானது சிறப்பு நொதிகளைப் பயன்படுத்தி பைரீன் சிதைவை ஏற்படுத்துகிறது.
- இந்தப் பூஞ்சை நுண்ணுயிர்ச் சிதைவை ஏற்படுத்துவதன் மூலம் மண்ணின் தரத்தை மேம்படுத்துகிறது.


***பாலிசைக்ளிக் நறுமண ஹைட்ரோகார்பன்கள்***

- பாலிசைக்ளிக் நறுமண ஹைட்ரோகார்பன்கள் (PAHs) என்பது நிலக்கரி, கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலில் இயற்கையாகக் காணப்படும் இரசாயனங்களின் ஒரு வகையாகும்.
- இவை நிலக்கரி, எண்ணெய், எரிவாயு, மரம், குப்பை மற்றும் புகையிலை ஆகியவற்றை எரிப்பதன் விளைவால் வெளிப்படுகிறது.
- இவை காற்றில் ஒன்றோடொன்று பிணைந்து சிறியத் துகள்களை உருவாக்கும்.
- இறைச்சி மற்றும் பிற உணவுகளை சமைக்கும் போது உருவாகும் அதிக வெப்பமானது இதனை உருவாக்கும்.




## லீப் ஆண்டில் ஒரு வினாடிக்குக் குறைவான சுழற்சி

- பூமி கிரகமானது 24 மணி நேரத்திற்குள் அதன் அச்சில் தனது சுழற்சியை நிறைவு செய்தது.
- ஜூலை 29 ஆம் தேதியன்று 1.59 மில்லி விநாடி குறைவாக தனது சுழற்சியை நிறைவு செய்ததன் மூலம், குறுகிய நாளிலான சுழற்சியின் தனது சொந்தச் சாதனையை அது முறியடித்தது.
- எனவே, பூமியில் இந்த நாள் வழக்கமான 24 மணி நேர நாளை விட 1.59 மில்லி விநாடிகள் குறைவாக பதிவானது.
- முன்னதாக, 1960 ஆம் ஆண்டுகளில் இருந்து பதிவாகியதில் பூமியின் மிகக் குறுகிய நாளாக 2020 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் தேதியானது பதிவு செய்யப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில், பூமியின் சுழற்சியானது வழக்கமான 24 மணி நேர நாளை விட 1.47 மில்லி விநாடிகள் குறைவாக இருந்தது.
- 2021 ஆம் ஆண்டிலும் பூமி வேகமாகச் சுழன்றது.
- எனினும், அந்தச் சுழற்சியானது புதிய சாதனைகள் எதையும் உருவாக்கவில்லை.




## தென் கொரியாவின் நிலவு ஆய்வுப் பயணத் திட்டம்


- தென் கொரியா தனது முதல் விண்கலத்தை நிலவுக்கு அனுப்பியுள்ளது.
- தென் கொரிய நாட்டின் இந்த உலாவு விண்கலமானது (தனூரி) எதிர்காலத்தில் நிலவில் தரையிறங்குவதற்கான இடங்களை ஆய்வு செய்யும்.
- இது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் 9 என்ற ஏவுகணை வாகனத்தின் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- இந்தப் பணி வெற்றியடைந்தால், சந்திரனில் ஏற்கனவே இயக்கத்தில் உள்ள இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் குழுவில் இதுவும் இணையும்.
- இந்தியா, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் 2022-2023 ஆம் ஆண்டில் தனது புதிய நிலவு ஆய்வுத் திட்டப் பயணங்களைத் தொடங்க உள்ளன.
- நாசா நிறுவனமானது ஆர்ட்டெமிஸ் என்ற திட்டத்தின் கீழ், 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தனது மாபெரும் நிலவு ஆய்வு விண்கலத்தினை விண்ணில் ஏவ உள்ளது.




## விண்வெளியில் இஸ்ரோவின் மிகச்சிறிய ஏவுகலம்


- இஸ்ரோ தனது சிறிய வணிக ஏவுகலமான ‘சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகனத்தை (SSLV) விண்ணில் ஏவியது.
- SSLV ஏவுகலத்தினால் 500 கிலோ எடை கொண்ட விண்வெளிப் பொருட்களை 500 கிமீ தொலைவு வரை உள்ள கோள்களின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்த முடியும்.

- ஆனால் பெரிய ஏவு கலங்களைப் போலல்லாமல், SSLV குறுகிய, சிறிய அல்லது நுண்ணிய அளவிலான செயற்கைக் கோள்களையும் (10 முதல் 500 கிலோ எடை) கொண்டு செல்ல முடியும்.
- SSLV ஏவுகலங்களை ஒரு பதினைந்து நாட்களுக்குள் ஒன்றிணைத்துவிட முடியும்.
- இது தனது முதல் பயணத்தில் இரண்டு விண்வெளிப் பொருட்களை விண்ணை நோக்கி ஏற்றிச் சென்றது.
- முதலாவதாக, EOS-02 என்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு புவி கண்காணிப்பு செயற்கைக் கோளினை இது ஏற்றிச் சென்றது.
- இது அகச்சிவப்பு அலைநீளத்தினுள் அதிக இடஞ்சார்ந்த தெளிவுத்திறனுடன் மேம்பட்ட ஒளியியல் தொலை உணர்வுச் செயல்பாடுகளை வழங்கும்.
- இரண்டாவது விண்வெளியில் மூவர்ணக் கொடியை பறக்க விடும் ஒரு நோக்கத்துடன் அனுப்பப் பட்ட 'AzaadiSAT' செயற்கைக் கோள் ஆகும்.
- இது 75வது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்காக குறிப்பாக கருத்தாக்கப்பட்டு ஏவப் பட்டது.
- AzaadiSAT செயற்கைக் கோளானது 75 விண்வெளிப் பொருட்களைக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் 75 கிராமப்புற அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 750 இளம் பெண் மாணவர்களால் இந்த விண்வெளிப் பொருட்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- இது 8 கிலோ எடையுள்ள கன சதுர வடிவ (கியூப்சாட்) செயற்கைக் கோளாகும்.
- தகவல் தொடர்பினைப் பெறுவதில் ஏற்பட்ட ஒரு துண்டிப்பு காரணமாக இத்திட்டம் தோல்வியடைந்தது.



## செவ்வாய்க் கிரகத்தின் பல்நிறமாலை வரைபடங்கள்


- செவ்வாய்க் கிரகத்தினுடைய மேற்பரப்பின் முதலாவது பல்நிறமாலை வரைபடத்தை நாசா பொது மக்களின் பார்வைக்காக வெளியிட்டது.
- 5.6 GB அளவுடைய இந்தப் பல்வண்ண வரைபடமானது இந்த செந்நிறக் கிரகத்தின் 86% பரப்பளவைக் காட்சிப்படுத்துகிறது.
- அடுத்த ஆறு மாதங்களில் அக்கிரகத்தின் முழு வரைபடத்தையும் படிப்படியாக அது வெளியிடும்.
- இந்த வரைபடங்களுக்கானத் தரவானது நாசாவின் செவ்வாய்க் கிரக ஆய்வுச் சுற்றுக் கலத்தினால் எடுக்கப்பட்டது.
- இது கிரகத்தைச் சுற்றி வரும் மிக நீண்ட சுற்றுப்பாதையைக் கொண்ட செயற்கைக் கோள் ஆகும்.




## புரதங்களின் வடிவம்

- 2020 ஆம் ஆண்டில், டீப் மைண்ட் என்ற ஒரு செயற்கை நுண்ணறிவு ஆய்வகமானது புரதங்களின் வடிவத்தைக் கணிக்கக் கூடிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியது.
- தற்போது, இந்த ஆய்வகம் AlphaFold என்ற கருவியைப் பற்றி பகிர்ந்து கொண்டது.
- இந்தக் கருவியைப் பயன்படுத்தி, இந்த ஆய்வகம் 3,50,000க்கும் மேற்பட்ட புரதங்களின் கணிக்கப் பட்ட வடிவங்களை வெளியிட்டது.

- இந்த எண்ணிக்கையானது மனித மரபணுவால் வெளிப்படுத்தப்படும் அனைத்துப் புரதங்களையும் உள்ளடக்கியது.
- மேலும் இந்தத் தொழில்நுட்பமானது நிறைவானதல்ல.
- ஆனால் இது மற்ற இயற்பியப் பரிசோதனைகளுக்குப் போட்டியாக இருக்கும் வகையில் ஒரு புரதத்தின் வடிவத்தை 63% வரை துல்லியமாக கணிக்க முடியும்.



## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர் முறையில் வழிகாட்டுகின்ற பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை




- பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்திய ராணுவம் ஆகியவை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர் முறையில் வழிகாட்டுகின்ற பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதனை செய்தன.

- அர்ஜுன் எனப்படும் பிரதான போர் பீரங்கியில் இருந்து இந்த ஏவுகணைகள் பரிசோதனை செய்யப்பட்டன.
- பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகள் துல்லியமாகவும் வெற்றிகரமாகவும் இலக்கைத் தாக்கி அவற்றை இரண்டு வெவ்வேறு தொலைவு வரம்புகளில் அழித்தன.
- மேம்படுத்தப்பட்ட பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை பல தளங்களில் இருந்து ஏவக் கூடியத் திறனைக் கொண்டுள்ளது.

## மேம்படுத்தப் பட்டப் பிணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பு


- மேம்படுத்தப் பட்டப் பிணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பானது (ATAGS), சுதந்திரத் தினத்தின் போது மேற்கொள்ளப் படும் 21 துப்பாக்கிக் குண்டுகள் முழக்க வணக்கத்திற்குப் பயன்படுத்தப்பட உள்ளது.
- இது வரையில், இந்திய நாட்டின் வருடாந்திரக் கொண்டாட்டங்களில் பிரிட்டிஷ் துப்பாக்கிகள் (ஆர்ட்னன்ஸ் QF 25-பவுண்டர்) மட்டுமே பயன்படுத்தப்பட்டன.
- மேம்படுத்தப் பட்டப் பிணைப்பு ரக பீரங்கித் துப்பாக்கி அமைப்பு என்பது 155 மிமீ, 52 உள் விட்டம் கொண்ட கனரக பீரங்கித் துப்பாக்கி ஆகும்.
- இது ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.
- புதிய கனரக பீரங்கித் துப்பாக்கியின் தாக்குதல் வீச்சுத் தொலைவான 45 கி.மீ. என்பது உலகிலேயே இத்தகைய வரம்புடைய முதல் துப்பாக்கி இது என்பதைக் குறிக்கிறது.



## புதிய லாங்யா ஹெனிபாவைரஸ்

- லாங்யா ஹெனிபாவைரஸ் என்ற புதிய வைரஸ் பாதிப்பானது சீனாவில் அதிகாரப் பூர்வமாகக் கண்டறியப்பட்டது.
- இது முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் ஷான்டாங் மற்றும் ஹெனான் ஆகிய வட கிழக்கு மாகாணங்களில் கண்டறியப்பட்டது.
- இந்த வைரஸ் ஆனது விலங்குவழித் தொற்று எனப்படும் ஒரு செயல்பாட்டின் மூலம் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியதாக சந்தேகிக்கப்படுகிறது
- லாங்யா என்பது எதிர்மறையான அமைப்பு நிலையுடன் ஒற்றை இழைக் கொண்ட RNA மரபணுவைக் கொண்டுள்ள ஹெனிபா வைரஸ் இனத்தின் ஒரு பகுதியாகும்.

- இந்த வைரஸ் விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு கடுமையான நோயை ஏற்படுத்தக் கூடும் என்பதோடு உயிரிப் பாதுகாப்பு நிலை 4 என்ற வைரஸ் வகைப்பாட்டை இது கொண்டுள்ளது.
- இது 40 முதல் 75 சதவீதம் வரையில் உயிரிழப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.




## ஒமிக்ரான் தடுப்பூசிக்கு ஒப்புதல்

- ஒமிக்ரான் மாற்றுருவினை எதிர்கொள்ளும் கோவிட்-19 தடுப்பூசியை அங்கீகரிக்கும் முதல் நாடாக பிரிட்டன் மாறியுள்ளது.
- வயது வந்தோருக்கான ஊக்கியாக மாடர்னா நிறுவனம் தயாரித்த 'ஈரிணைத் திறன் கொண்ட' தடுப்பூசியை இங்கிலாந்து மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் அங்கீகரித்து உள்ளது.
- இந்த தடுப்பூசி ஆனது ஓமைக்ரான் (BA.1) மற்றும் 2020 ஆம் ஆண்டில் பரவிய வைரஸ் ஆகிய இரண்டிற்கும் எதிராக "ஒரு வலுவான நோயெதிர்ப்புத் திறனை" தூண்டுகிறது.
- இது தற்போது ஆதிக்கம் செலுத்தி வரும் ஓமைக்ரான் மாற்றுருவின் பிற துணை வகைகளான BA.4 மற்றும் BA.5 ஆகியவற்றிற்கு எதிராக ஒரு நல்ல நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகிறது.




## முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட மனிதக் கருவிழி

- ஹைதராபாத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் ஒரு செயற்கைக் கருவிழியினை வெற்றிகரமாக முப்பரிமாண முறையில் அச்சிட்டுள்ளனர்.
- இது இந்தியாவில் முதன்முறையாக ஒரு முயலினுடையக் கண்ணில் பொருத்தப் பட்டது.
- முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட மனிதக் கருவிழியானது உயிருள்ளவற்றிற்கு இணக்கமானதோடு, இயற்கையான முறையில், விலங்குகள் சார்ந்தப் பொருட்களால் தயாரிக்கப் படாதது ஆகும்.
- இது மனிதக் கருவிழியின் திசுக்களில் இருந்து பெறப்பட்ட மூலக்கூறுகளால் ஆனது.




## விந்தணு இல்லாத முதல் செயற்கைக் கருமுட்டை


- இஸ்ரேலிய அறிவியலாளர்கள், பெட்ரி டிஷ் எனப்படும் கண்ணாடி வட்டில் வளர்க்கப் பட்ட விந்தணு செல்களைப் பயன்படுத்தி, கருப்பைக்கு வெளியே உருவான உலகின் முதல் செயற்கைக் கருவை உருவாக்கியுள்ளனர்.
- விந்தணுவின் அவசியத்தினைத் தவிர்த்து, கருவுற்ற முட்டைகளைப் பயன்படுத்தாமல் இந்தச் செல்கள் வளர்க்கப்பட்டன.



## ஆர்ட்டெமிஸ் III ஏவுகலத்திற்கான தரையிறங்கும் தளங்கள்

- அமெரிக்க விண்வெளி நிறுவனம் ஆனது தற்போது ஆர்ட்டெமிஸ் I ஏவுகலத்தினை விண்ணில் ஏவுவதில் கவனம் செலுத்தி வருகிறது.

- ❖ 2024 ஆம் ஆண்டிற்குள் நிலவின் தென் துருவப் பகுதிக்கு ஒரு மனிதனை அனுப்புவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- ❖ இந்த ஆய்வுத் திட்டம் ஆனது மூன்று பகுதிகளாகச் செயல்படுத்தப்பட உள்ளது.
- ❖ அவையாவன ஆர்ட்டெமிஸ் I, ஆர்ட்டெமிஸ் II மற்றும் ஆர்ட்டெமிஸ் III ஆகியனவாகும்.
- ❖ ஆர்ட்டெமிஸ் III ஏவுகலத்திற்கான பல சாத்தியமான தரையிறங்கும் தளங்களை நாசா தற்போது அடையாளம் கண்டுள்ளது.
- ❖ நிலவில் காலடி வைக்க உள்ள முதல் பெண் உள்பட, மனிதர்களை நிலவின் மேற் பரப்பிற்குக் கொண்டு செல்லும் முதல் கலம் இதுவாகும்.




## ஹைட்ரஜன் எரிபொருள் கலன் மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்து

- ❖ புனேவில் உள்ள KPIT-CSIR நிறுவனத்தினால் ஹைட்ரஜன் எரிபொருள் கலன் மூலம் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்து உருவாக்கப்பட்டது.
- ❖ ஹைட்ரஜன் எரிபொருள் கலன் ஆனது ஹைட்ரஜன் மற்றும் காற்றைப் பயன்படுத்தி மின்சாரத்தை உருவாக்குகிறது.
- ❖ மேலும் இந்தச் செயல்பாட்டின் போது வெப்பம் மற்றும் தண்ணீரை மட்டுமே அது உற்பத்தி செய்கிறது.
- ❖ இந்தப் பேருந்தில் உள்ள ஹைட்ரஜன் எரிபொருள் கலன்கள் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் அணுக்களை இணைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.
- ❖ இந்த இரண்டு வாயுக்களும் மின்சாரம், நீர் மற்றும் சிறிய அளவு வெப்பத்தை உருவாக்குவதற்காக வழக்கமான மின்கல அடுக்குகள் போன்ற மின் வேதியியல் கலத்தின் உள்ளே வினை புரிகின்றன.
- ❖ இந்த மின்சாரம் அந்த வாகனத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்கு உதவுவதற்காக வேண்டி மின்சார இயக்கிகளால் பயன்படுத்தப்படுகிறது.

## வணிகம் சார்ந்த விண்வெளிச் சூழ்நிலை குறித்த முன்னுணர்வு ஆய்வகம்

- ❖ இந்தியாவின் முதல் வணிகம் சார்ந்த விண்வெளிச் சூழ்நிலை குறித்த முன்னுணர்வு ஆய்வகமானது உத்தரகாண்டின் கர்வால் பகுதியில் அமைக்கப்பட உள்ளது.


- இது பூமியைச் சுற்றி வரும் 10 செமீ அளவுள்ள பொருட்களைக் கண்காணிக்கும் திறன் கொண்டது.
- இது விண்வெளித் துறையின் ஒரு புத்தொழில் நிறுவனமான திகந்தரா என்ற அமைப்பினால் அமைக்கப் பட உள்ளது.
- தற்போது, பல இடங்களில் உள்ள கண்காணிப்பு நிலையங்கள் மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து கூடுதல் உள்ளீடுகளை வழங்கும் வணிக நிறுவனங்கள் ஆகியவை மூலம் விண்வெளிக் கழிவுகளைக் கண்காணிக்கும் ஒரு நடவடிக்கையில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிறது.

## VL-SRSAM

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்தியக் கடற்படை ஆகியவை இணைந்து VL-SRSAM எனப்படும் செங்குத்தாக ஏவக்கூடிய, ஒரு குறுகிய வரம்புடைய நிலம் விட்டு வானில் பாயும் ஏவுகணையினை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளனர்.
- VL-SRSAM ஏவுகணையானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும்.
- இந்த ஏவுகணைகள் இந்தியக் கடற்படைக்காக உருவாக்கப்பட்டுள்ளன.
- கடல்சார் ரேடார்களிலிருந்துத் தப்பிக்கும் இலக்குகள் உட்பட பல்வேறு வான்வழி அச்சுறுத்தல்களை அவை எதிர்கொள்ளும்.
- இது பராக்-1 எனப்படும் பழைய, நிலத்தை விட்டு வானிற்குப் பாயக்கூடிய வான்வழி ஏவுகணை அமைப்பிற்கு மாற்றாக அமையும்.
- இந்த ஏவுகணை 360 பாகை அளவிலான இடைமறிக்கும் திறனைக் கொண்டது.


## வியாழன் கோளின் படங்கள்

- ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது முதன்முறையாக வியாழன் கிரகத்தின் சிறப்பான தோற்றத்தைப் படம் பிடித்துள்ளது.
- இந்தப் படங்களானது ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியினால் 2022 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதியன்று எடுக்கப்பட்டது.
- இந்தக் கிரகத்தின் அனைத்துப் பகுதிகளும் இந்த ஒரு படத்தில் சரியாகப் புலப்படச் செய்கின்றன.
- அதன் மங்கலான வளையங்கள், அதன் இரண்டு துணைக் கோள்கள் (அமல்தியா மற்றும் அட்ராஸ்டியா நிலவுகள்) மற்றும் பிரகாசமான நட்சத்திரங்கள் பால்வீதியில் நன்றாகப் புலப்படுகின்றன.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி ஒரு பெரிய அகச்சிவப்புத் தொலைநோக்கி ஆகும்.
- இது பேரண்டத்தின் வரலாற்றுக் காலத்தின் ஒவ்வொருக் கட்டத்தையும் ஆய்வு செய்ய உள்ளது.
- இந்தத் தொலைநோக்கியானது பூமியில் இருந்து 1.5 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் பயணித்துக் கொண்டுள்ளது.




## சர்க்கரைக்கான மாற்று "சைலிட்டால்"

- கௌஹாத்தியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகமானது, மீயொலியினைப் பயன்படுத்திக் கரும்புச் சக்கையில் இருந்து சைலிட்டாலை ஒரு பாதுகாப்பான முறையில் உருவாக்குவதற்காக ஒரு நொதித்தல் செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- இது கரும்புச் சக்கைகளில் இருந்து பெறப்படும் ஒரு துணை உற்பத்திப் பொருள் ஆகும்.
- இந்த அணுகுமுறையானது வேதியியல் செயல்முறையில் உள்ள செயல்முறை சார்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் பாரம்பரிய நொதித்தல் செயல்முறையில் உள்ள கால தாமதங்களை நிவர்த்தி செய்கிறது.
- நொதித்தல் செயல்முறையின் போது மீயொலியினைப் பயன்படுத்துவது என்பது நொதித்தலுக்கான நேரத்தை 15 மணி நேரமாகக் குறைத்தது.
- இது உற்பத்தி அளவினைக் கிட்டத்தட்ட 20% அதிகரித்துள்ளது.



## ஹைட்ரஜன் மூலம் இயங்கும் பயணியர் இரயில்கள்

- ஜெர்மனி அரசானது கொராடியா ஐலிண்ட் என்ற ஹைட்ரஜன் மூலம் இயங்கும் புதிய இரயிலை அறிமுகப்படுத்தியது.
- இந்த இரயில்கள் நீராவி மற்றும் செறிவாக்கப்பட்ட நீரை மட்டுமே வெளியிடுவதால் சுழிய அளவு உமிழ்வை மட்டுமே வெளியிடுகின்றன.
- இரயிலின் மேற்கூரையில் பொருத்தப்பட்டுள்ள ஹைட்ரஜன் எரிபொருள் கலன்கள், காற்றில் உள்ள ஆக்ஸிஜன் அணுக்களுடன் இணைந்து மின்சாரத்தை உருவாக்கச் செய்கின்றன.
- இது ஜெர்மனியில் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் 4,400 டன் என்ற அளவிலான கார்பன் டை ஆக்ஸைடினைக் குறைக்கும்.



## உரையாடல் சாராத ஒலியைப் பயன்படுத்தித் தரவுகளை அனுப்புதல்

- பெர்சியஸ் அண்டத் திரளின் மையத்தில் உள்ள கருந்துளையில் இருந்து வெளிப்படும் ஒலியைப் பயன்படுத்தித் தரவுகளை அனுப்பும் செயல்முறையை நாசா உருவாக்கி உள்ளது.
- 2003 ஆம் ஆண்டில், இந்த கருந்துளையால் அனுப்பப்படும் அழுத்த அலைகள் விண்மீன் திரளின் வாயுவில் சிற்றலைகளை ஏற்படுத்துகின்றன என்பதை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- அதனை மனிதர்களால் கேட்க முடியாததாக இருந்தாலும் அதனை ஒரு ஒலி குறிப்பாக மாற்றலாம்.
- ஆனால் நாசா இந்த ஒலியின் சோனிஃபிகேஷன் என்ற உரையாடல் சாராத ஒலியைப் பயன்படுத்தித் தரவுகளை அனுப்புதல் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.
- சோனிஃபிகேஷன் என்பது தரவுகளை ஒலியாக மாற்றும் ஒரு செயல்முறையாகும்.



### முப்பரிமாண அச்சிடல் முறையில் கட்டமைக்கப்பட்ட தபால் அலுவலகம்

- இந்தியாவிலேயே முதல் முறையாக முப்பரிமாண அச்சிடல் முறையில் கட்டமைக்கப் பட்ட தபால் அலுவலகமானது கர்நாடகா மாநிலத்தின் பெங்களூரு நகரில் அமைக்கப் பட உள்ளது.
- ஒரு பாரம்பரிய முறையில் கட்டமைக்கப்படும் கட்டிடத்திற்கு என்று செலவிடப்படும் தொகையில் நான்கில் ஒரு பங்குத் தொகையே இதற்குச் செலவாகும்.
- பெங்களூரு நகரின் ஹலசூருவில் உள்ள கேம்பிரிட்ஜ் பகுதியில் இந்தப் புதிய தபால் நிலையக் கட்டிடம் அமைக்கப்பட உள்ளது.
- இந்தத் தபால் அலுவலகக் கட்டிடமானது லார்சன் & டூப்ரோ என்ற நிறுவனத்தினால் கட்டமைக்கப் படுகிறது.
- இந்தியாவில் தற்போது முப்பரிமாண அச்சிடல் என்ற தொழில்நுட்பத்தை கட்டுமானத்திற்காகப் பயன்படுத்தும் ஒரே நிறுவனம் லார்சன் & டூப்ரோ மட்டுமே ஆகும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### வளமான சுற்றுச்சூழலுக்கான உரிமை

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, 2022 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் தேதி அன்று, அனைவருக்கும் வளமான சுற்றுச்சூழலைப் பெறுவதற்கான உரிமையை அங்கீகரிக்கும் ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்தியா இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ள போதிலும் அந்தத் தீர்மான உரையின் செயல்பாட்டு விதிமுறைகள் பத்தியில் சில கருத்து வேறுபாடு எண்ணங்களைக் கொண்டுள்ளது.
- தீர்மானத்தின் நடைமுறை மற்றும் பொருள் குறித்து இந்தியா தனது மாற்றுக் கருத்துகளைத் தெரிவித்தது.
- 1972 ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மாநாடானது, சுற்றுச்சூழலை ஒரு முக்கியப் பிரச்சினையாக மாற்றிய முதல் உலக மாநாடு ஆகும்.

### TERI செயல் திட்டம்

- எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனமான TERI இந்தியாவின் கார்பன் நீக்க இலக்குகளை அடையச் செய்வதற்கான சாத்தியமான நடவடிக்கைகளுக்கான செயல் திட்டத்தினை வெளியிட்டுள்ளது.

### *பரிந்துரைகள்*

- தனியார் முதலீட்டுக்கு போதுமான ஈர்ப்புமிக்க, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் வழங்கப் படும் மின் ஆற்றல்களுக்கு அதற்கான கட்டணம் வழங்கும் முறையை அறிமுகப் படுத்துவதன் மூலம் பரவலாக்கப்பட்ட சூரிய சக்தியின் மீதான பங்கினை அதிகரித்தல்.
- இந்தியாவில் இதற்காக முறையான கொள்கை வழங்கீடுகள் உள்ளன.
- கட்டமைப்பிற்கு நிலைத்தன்மை மற்றும் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டு வரும் புதிய ஆற்றல் சேமிப்பு முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை இந்தியா பின்பற்ற வேண்டும்.
- காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தியை ஒருங்கிணைப்பதற்குத் தேவையான நெகிழ்வுத் தன்மையை மின் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துதல்
- புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான செலவு குறைந்த மற்றும் போட்டித் திறன் கொண்ட உற்பத்தி மையமாக இந்தியா முன்னேறுவதற்கு முக்கியத்துவம் அளித்தல்.
- வழங்கீட்டு நிறுவனங்கள் வணிக மற்றும் தொழில்துறை நுகர்வோருக்கு கார்பன் சாராத மின்சாரத்தை வாங்குவதற்கான விருப்பத் தெரிவுகளை வழங்க வேண்டும்.
- புதுப்பிக்கத் தக்க எரிசக்தி உபகரணங்கள் முழுமையும் உள்ளடக்கும் வகையில் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்தின் விரிவுப்படுத்துதல்.




### **10 புதிய ராம்சார் தளங்கள்**

- இந்தியாவில் மேலும் 10 ஈரநிலங்கள் ராம்சார் தளங்களாக நியமிக்கப்பட்டுள்ளன.
- இதன் மூலம் இந்தியாவில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்தது.
- இந்த 10 புதிய தளங்களில் தமிழ்நாட்டில் ஆறு (6) தளங்களும், கோவா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் தலா ஒரு (1) தளமும் அடங்கும்.
- புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள தளங்கள்

| S.No | Name of wetland | State |
|---|---|---|
| 1 | Koonthankulam Bird Sanctuary | Tamil Nadu |
| 2 | Satkosia Gorge | Odisha |
| 3 | Nanda Lake | Goa |
| 4 | Gulf of Mannar Marine Biosphere Reserve | Tamil Nadu |
| 5 | Ranganathituu BS | Karnataka |
| 6 | Vembannur Wetland Complex | Tamil Nadu |
| 7 | Vellode Bird Sanctuary | Tamil Nadu |
| 8 | Sirpur wetland | Madhya Pradesh |
| 9 | Vedanthangal Bird Sanctuary | Tamil Nadu |
| 10 | Udhayamarthandapuram Bird Sanctuary | Tamil Nadu |

## அரிய வகை வெள்ளை நிற யானை


- மியான்மர் நாட்டின் மேற்குப் பகுதியில் அரியவகை வெள்ளை நிற யானை ஒன்று பிறந்துள்ளது.
- பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த நாடு இதை ஒரு அதிர்ஷ்டம் வழங்கும் படைப்பு என்று கருதுகிறது.
- வரலாற்று ரீதியாக, தென்கிழக்கு ஆசியக் கலாச்சாரத்தில் வெள்ளை யானைகள் மிகவும் மங்கள கரமானதாகக் கருதப் பட்டன.
- இராணுவத்தினால் கட்டமைக்கப்பட்ட அந்த நாட்டின் தலைநகரான நேய்பிடாவில் தற்போது ஆறு வெள்ளை யானைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



## போர்ட்லகா ஓலரேசியா

- ஒரு பொதுவான களைச் செடி ( கீரைச் செடி) வகையான போர்ட்லகா ஓலரேசியா (சிறு பசலை), பொதுவாக பர்ஸ்லேன் என்று அழைக்கப்படுகிறது.
- பருவநிலை மாற்றத்தால் சூழப்பட்ட உலகில் வறட்சியைத் தாங்கும் பயிர்களை உருவாக்குவது பற்றிய முக்கியமானத் தடயங்களை இது வழங்குகிறது.
- இந்தச் செடியானது, ஒரு புதிய வகை ஒளிச்சேர்க்கையை உருவாக்கச் செய்வதற்காக இரண்டு வெவ்வேறு வளர்சிதை மாற்றப் பாதைகளை ஒருங்கிணைக்கிறது.

- இந்த ஒளிச்சேர்க்கையானது வறட்சியைத் தாங்கிக் கொள்ள உதவுகிற அதே சமயம் அதிக உற்பத்தித் திறன் கொண்டதாகும்.
- இது மிகவும் அரிதான குணாதிசயங்களின் ஒரு கலவையாக இருப்பதோடு இது ஒரு வகையான 'சிறப்பம்சம் வாய்ந்த செடியையும்' உருவாக்கியுள்ளது.




## இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் புதியப் புத்தகம்

- இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பானது நாட்டில் காணப்படும் 1,331 பறவை இனங்களைப் பற்றிய ஒரு கள வழிகாட்டிப் புத்தகத்தினை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புத்தகமானது வரைபடங்களைப் பயன்படுத்தும் மற்ற புத்தகங்களைப் போல அல்லாமல் குறிப்பாக பறவைகளின் தரமான புகைப்படங்களைக் காட்சிப் படுத்தச் செய்கிறது.
- இந்நூல் நாட்டில் காணப்படும் 1331 வகையான பறவைகள், அவற்றின் தற்போதைய நிலை மற்றும் அவை பரவிக் காணப்படும் இடங்கள் சார்ந்த விவரங்கள் பற்றிய ஒரு ஆயத்தக் கணக்காய்வுப் புத்தகமாக விளங்கும்.
- 'கள வழிகாட்டி, இந்தியப் பறவைகள்' என்ற இந்தப் புத்தகத்தை விளம்பரப் படுத்தச் செய்வதற்காக வேண்டி, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகிய இரு இடங்களில் இரண்டு நிகழ்வுகளை இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பு ஏற்பாடு செய்தது.

## கழிவுகள் உருவாக்கம் மற்றும் அதன் மேலாண்மை குறித்த தேசியப் பதிவு அறிக்கை

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது வருடாந்திர அடிப்படையிலான கழிவுகள் உருவாக்கம் மற்றும் அதன் மேலாண்மை குறித்த தேசியப் பதிவு அறிக்கையைத் தயாரித்துள்ளது.
- சம்பந்தப்பட்ட மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் (SPCB) / மாசுக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் (PCC) ஆகியவற்றிலிருந்துப் பெறப்பட்ட வருடாந்திரப் பதிவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கையானது தயாரிக்கப்படுகிறது.
- 2019-20 ஆம் நிதியாண்டில் இந்தியா முழுவதும் 3.47 மில்லியன் டன் நெகிழிக் கழிவுகள் உருவாக்கப் பட்டுள்ளது.
- நாடு முழுவதும் உற்பத்தியாகும் நெகிழிக் கழிவுகளில் பாதியளவினை மட்டுமே இந்தியா மறுசுழற்சி செய்தது.

## தீபகற்பப் பாறையோந்தி

- தீபகற்பப் பாறையோந்தி/தென்னிந்தியப் பாறையோந்திகளின் எண்ணிகையினைப் பாதிக்கக் கூடிய பல சுற்றுச்சூழல் காரணிகள் (நகரமயமாக்கல் உட்பட) உள்ளன.
- தீபகற்பப் பாறையோந்தி என்பது தென்னிந்தியாவில் அதிக எண்ணிக்கையில் காணப் படும் ஒரு வகை தோட்டப் பல்லி ஆகும்.
- இந்திய மாநிலங்களான தமிழ்நாடு, சத்தீஸ்கர், கேரளா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, பீகார் ஆகிய மாநிலங்களில் இந்தப் பல்லியின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.
- பாறையோந்தி நகரின் எந்தெந்தப் பகுதிகள் வெப்பமடைகின்றன என்பதையும், அதனால் அவற்றின் எண்ணிக்கை உணவு அதன் வலையமைப்பு எவ்வாறு மாறுகிறது என்பதையும் காட்டுகிறது.



## இத்தாலியின் கார்டா ஏரி

- பல தசாப்தங்களில் இல்லாத அளவிற்கான, இத்தாலியின் மிக மோசமான வறட்சி என்பது கார்டா ஏரியின் நீர்மட்டத்தை இதுவரையில் பதிவாகாத அளவிற்கு வெகுவாக குறைத்துள்ளது.
- கார்டா என்பது இத்தாலி நாட்டின் மிகப்பெரிய ஏரியாகும்.
- வடக்கு இத்தாலியின் சில பகுதிகள் 70 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ஒரு மோசமான வறட்சியை எதிர்கொண்டு வருகின்றன.




## அழிந்து போன புலி இனங்கள் மீண்டும் உருவாக்கம்


- தைலாசின் அல்லது டாஸ்மேனியன் புலி இனத்தினை மரபணு மாற்றத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உயிர்ப்பிப்பதற்காக 15 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு ஆராய்ச்சியில் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள அறிவியலாளர்கள் இறங்கியுள்ளனர்.

- இது 1930 ஆம் ஆண்டுகளில் அழிந்து போன வயிற்றில் பையுடைய ஒரு பாலூட்டி இனமாகும்.
- டாஸ்மேனியா பகுதியில் அழிந்து போன சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டு எடுப்பதற்காக இந்த விலங்குகளை அதன் சொந்த இடமான டாஸ்மேனியா பகுதியில் மீண்டும் அறிமுகப்படுத்துவதை இந்த இலட்சிய நோக்கமுள்ளத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தைலாசின் இனங்களை உயிர்ப்பிப்பதற்கான முதல் முயற்சி அல்ல.
- 1999 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலிய அறிவியலாளர் டாக்டர் மைக்கேல் ஆர்ச்சர், இது குறித்து ஒரு முற்றுப் பெறாத ஆராய்ச்சியினை மேற்கொண்டார்.



## மெகலோடன்

- மிகப்பெரிய வேட்டையாடி உண்ணும் விலங்குகளில் ஒன்றான மெகலோடன் உயிர் வாழ்ந்தது பற்றியப் புதிய ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மெகலோடன் உயிரினத்தால் "வேட்டையாடும் திமிங்கலத்தைப் போன்ற ஒரு பெரிய இரையை முழுமையாக மற்றும் ஐந்து கடிகளில் உட்கொள்ள முடியும்".
- இது அதன் மூக்கில் இருந்து வால் வரையிலான அளவில் ஒரு பள்ளிப் பேருந்தை விடப் பெரியதாக சுமார் 50 அடி உயர அளவுடையது ஆகும்.
- இது பல பெருங்கடல்களைக் கடந்து இடம் பெயரும் திறன் பெற்றிருந்த விலங்காகும்.



## அரவிந்த் நிலவாழ் மரப் பல்லி

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள அகஸ்தியமலை பகுதியில் இருந்து சமீபத்தில் வளைந்த கால் கொண்ட மரப் பல்லி இனமானது கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்தப் புதிய மரப் பல்லி இனத்திற்கு புகழ்பெற்ற மெல்லுடலிகள் ஆய்வாளர் N.A. அரவிந்த் அவர்களின் நினைவாக அரவிந்த் நிலவாழ் மரப் பல்லி என்று பெயர் வழங்கப் பட்டுள்ளது.
- உருவவியல் மற்றும் மூலக்கூறு டிஎன்ஏ தரவுகளில் உள்ள அதன் தனித்தன்மையின் அடிப்படையில் இந்தப் புதிய இனங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.
- இதன் அறிவியல் பெயர் சிர்ட்டோடாக்டைலஸ் அரவிந்தி என்பதாகும்.
- இந்த இனமானது இதுவரையில், தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முப்பந்தல் மற்றும் தக்கலை ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே கண்டறியப் பட்டு உள்ளது.
- இந்தப் பகுதியானது தமிழ்நாட்டின் அகஸ்தியமலை உயிர்க்கோளக் காப்பகத்திற்கு உட்பட்டது.
- அண்டார்டிகாவைத் தவிர அனைத்துக் கண்டங்களிலும் காணப்படுகின்ற மரப் பல்லி என்பது ஒரு ஊர்வன இனமாகும்.
- கெக்கோனிடே குடும்பத்தைச் சேர்ந்த இந்தியத் தங்க நிற மரப் பல்லி இனமானது இந்தியாவின் தமிழ்நாடு, ஒரிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைப் பூர்வீகமாகக் கொண்டது.
- கெக்கோனிடே குடும்பத்தைச் சேர்ந்த மரப் பல்லி இனமானது இந்தோ-மலாயன் பகுதியில் பரவலாகக் காணப்படுகிறது.



## மினியோப்டெரஸ் பிலிப்சி

- சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று இந்தியாவிலும் இலங்கையிலும் நீண்ட விரல் கொண்ட புதிய வௌவால் இனங்கள் காணப்படுவதைக் கண்டறிந்துள்ளது.
- இந்தக் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வௌவால் இனங்கள் மற்ற வௌவால் உயிரினங்களுடன் ஒப்பிடப் படும்போது நீண்ட விரல்கள் உட்பட பல தனித்துவமான உடலியல் பண்புகளைக் கொண்டுள்ளன.
- இலங்கை மற்றும் தெற்காசியாவில் காணப்படும் பாலூட்டிகள் பற்றிய ஆய்வுகளில் ஆற்றியப் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக W.W.A. பிலிப்ஸ் (1892-1981) என்பவரின் பெயரானது இந்த இனத்திற்குச் சூட்டப்பட்டது.

- அறிவியலாளர்கள் குழு ஒன்று சமீபத்தில் மேகாலயாவில் ஒரு மூங்கில் காட்டில் இருந்து தடித்த கட்டைவிரல் கொண்ட புதிய வௌவால் இனத்தைக் கண்டுபிடித்து அதற்கு அம்மாநிலத்தின் பெயரைச் சூட்டியுள்ளது.



## அனங் தால் ஏரி

- கலாச்சார அமைச்சகமானது, தெற்கு டெல்லியில் உள்ள அனங் தால் ஏரியினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவித்துள்ளது.
- இது டெல்லியின் தேசிய தலைநகரப் பிரதேசத்தில் உள்ள மெஹ்ரூலியில் அமைந்த குதுப்மினார் அருகே அமைந்துள்ளது.
- இது கி.பி 1060 ஆம் ஆண்டில் டெல்லி நகரை நிறுவிய ராஜா அனங் பால் தோமரால் உருவாக்கப் பட்டது.
- 1958 ஆம் ஆண்டு பண்டையக் கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்கள் மற்றும் எஞ்சிய பாகங்கள் சட்டமானது, 100 ஆண்டுகளுக்கும் அதிகமான காலமாக இருந்து வரும் தளங்களைப் பழங்கால நினைவுச் சின்னங்கள் என்று வரையறுக்கிறது.
- இந்தியத் தொல்லியல் துறையானது ஒரு தளத்தினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கிறது.



# மாநிலச் செய்திகள்

## "கேரளா சவாரி" ஆன்லைன் வாடகை வாகனச் சேவை

- கேரள மாநில அரசானது, தனது சொந்த இணையவழி ரீதியிலான வாடகை வாகனச் சேவையைத் தொடங்க உள்ளது.
- இந்தியாவிலேயே இது போன்ற முதல் முயற்சியாக இது கருதப்படுகிறது.
- இந்த ஆன்லைன் வாடகை வாகனச் சேவைக்கு 'கேரளா சவாரி' என பெயரிடப் பட்டு உள்ளது.
- இந்திய நாட்டிலேயே ஒரு மாநில அரசு ஆன்லைன் வாடகை வாகனச் சேவையைத் தொடங்குவது இதுவே முதல் முறையாகும்.

## குஜராத் குறைகடத்திக் கொள்கை

- குஜராத் அரசானது சமீபத்தில் பிரத்தியேக '2022-27 ஆம் ஆண்டுகளுக்கான குஜராத் குறைகடத்திக் கொள்கையினை' வெளியிட்டது.
- ஐந்தாண்டுகளில் குறைந்தது 2,00,000 என்ற அளவில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.
- இந்தியாவில் பிரத்தியேக குறைகடத்திக் கொள்கையை வெளியிட்ட முதல் மாநிலம் இதுவாகும்.
- தோலேரா சிறப்பு முதலீட்டு மண்டலத்தின் ஒரு பகுதியாக ஒரு சிறப்பு 'செமிகான் (குறைக்கடத்தி) நகரத்தினை' உருவாக்கவும் இது முன்மொழிந்துள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, 2021 ஆம் ஆண்டில் 'இந்தியக் குறைகடத்தித் திட்டத்தினை' தொடங்கியது.

## Under2 கூட்டணி

- பஞ்சாப் மாநிலமானது, சமீபத்தில் Under2 என்ற கூட்டணியில் இணைந்தது.
- இந்த சர்வதேச மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களின் வலையமைப்பின் ஒரு பகுதியாக இடம்பெறுகின்ற ஆறாவது இந்திய மாநிலமாக இது உள்ளது.
- மற்ற மாநிலங்கள் மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், ஜம்மு காஷ்மீர், தெலங்கானா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியனவாகும்.
- பாரீஸ் உடன்படிக்கையுடன் இணைந்து அதன் பருவநிலை செயல் திட்டத்தைச் சீரமைப்பதற்கு அம்மாநிலம் உறுதி பூண்டுள்ளது.
- பஞ்சாப் மாநிலமானது, 'இந்தியாவின் உணவுக் கிண்ணம்' என்று வெகு பிரபலமாக குறிப்பிடப் படுகிறது.
- இந்தியாவின் உபரியான உணவுப் பங்குகளில் 40% பஞ்சாப் மாநிலத்தில் இருந்து வருகிறது.
- 1°C வெப்பநிலை உயர்வானது பயிர் உற்பத்தியை 3% முதல் 7% வரை குறைக்கலாம்.




## நாட்டின் மிக நீண்ட கால அவை கூட்டத் தொடர்

- 2021 ஆம் ஆண்டில், 61 நாட்கள் என்ற அளவில் நாட்டிலேயே மிக நீண்ட காலச் சட்ட மன்ற கூட்டத் தொடரினைக் கேரள அரசு நடத்தியது.
- 2020 ஆம் ஆண்டில், ஆரம்பகட்ட கோவிட்-19 பெருந்தொற்றின் போது சட்டமன்ற அமர்வுகளைக் கூட்டுவதன் அடிப்படையிலானப் பட்டியலில் கேரளா எட்டாவது இடத்திற்குச் சென்றது.
- 40 நாட்கள் அளவிற்கு கூட்டத் தொடர் நடத்தியதன் மூலம், கர்நாடகா இப்பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (34 நாட்கள்), ஒடிசா ஆகியவை உள்ளன.
- 28 மாநிலச் சட்டசபைகளில் 17 மாநிலங்கள் மற்றும் ஒரு ஒன்றியப் பிரதேசத்தின் சட்ட சபை 20 நாட்களுக்கும் குறைவாகவே கூடியுள்ளன.
- ஆந்திரப் பிரதேசம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்கள் 10 நாட்களுக்கும் குறைவாகக் கூடியுள்ளன.

## உள்ளூர் மக்களுக்கு 100% ஒதுக்கீடு

- பொது வேலைவாய்ப்புகளில், 13 பட்டியலிடப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த உள்ளூர் மக்களுக்கு 100% இடஒதுக்கீடு வழங்குவதாக ஜார்க்கண்ட் அரசு 2016 ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிவிப்பினை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- அரசின் முடிவானது பாரபட்சமானது மற்றும் அனுமதிக்க முடியாதது என்று கூறிய உயர் நீதிமன்றத் தீர்ப்பை இந்தத் தீர்ப்பானது உறுதி செய்தது.
- இந்த அறிவிப்பானது அரசியலமைப்புக்கு எதிரானது மற்றும் இந்திய அரசியல் அமைப்பின் 14, 16(2), 16(3) மற்றும் 35 ஆகிய பிரிவுகளுக்கு எதிரானதாகும்.
- 1992 ஆம் ஆண்டு இந்திரா சாஹ்னே வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள படி இட ஒதுக்கீட்டிற்கான அதிகபட்ச வரம்பு 50% ஆகும்.
- 2016 ஆம் ஆண்டில், ஜார்க்கண்ட் அரசானது, அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் (TGT) பதவிகளுக்கு மாநிலத்தில் உள்ள 13 பட்டியலிடப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு 100% இடஒதுக்கீட்டுடன் நியமனம் செய்வதற்காக வேண்டி அதற்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவிப்பினை வெளியிட்டது.

## கூகிள் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நுண்ணறிவு ஆய்வு அமைப்பிலிருந்து தரவைப் பெறுதல்

- கூகிள் நிறுவனம் வழங்கும் சுற்றுச்சூழல் நுண்ணறிவு ஆய்வு (EIE) தரவு அமைப்பானது ஔரங்காபாத் நகரில் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதன் மூலம் இந்த வசதியைப் பெற்ற இந்தியாவின் முதல் நகரமாக ஔரங்காபாத் நகரம் மாறியுள்ளது.
- நகரத்திற்கான நிலையான தீர்வுகளை உருவாக்குவதில் ஆராய்ச்சிக் குழுக்களுக்கு இந்தத் தரவு அமைப்பு உதவும்.




## வேளாண் உள்கட்டமைப்பு நிதிப் பயன்பாட்டில் வெற்றி கண்ட மாநிலம்

- வேளாண் உள்கட்டமைப்பு நிதிப் பயன்பாட்டில் ஆந்திரப் பிரதேச மாநிலம் முதல் இடத்தில் உள்ளது.
- ஆந்திர மாநிலமானது வேளாண் தொழில்துறையின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து சிறந்த மாநிலமாக உருவெடுத்துள்ளது.



## பர்வாஸ் சந்தை இணைப்புத் திட்டம்

- ஜம்மு & காஷ்மீர் மாநில அரசானது சமீபத்தில் “பர்வாஸ்” என்ற சந்தை இணைப்புத் திட்டத்தை அறிமுகப் படுத்தியது.
- இது ஒரு புதுமைமிக்கச் சந்தை இணைப்புத் திட்டமாகும்.
- ஜம்மு மற்றும் காஷ்மீர் முழுவதும் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதற்கான மாபெரும் ஆற்றலை இத்திட்டம் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், வான்வழிச் சரக்கு விமானம் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற, விரைவில் கெட்டுப் போகும் பழங்களின் ஏற்றுமதிக்கான சரக்குகள் கட்டணத்தில் 25 சதவீதத்தினை மானியமாக அரசாங்கம் வழங்க உள்ளது.




## பீகார் முதல்வர்

- பீகார் மாநில முதல்வர் பதவியில் இருந்து விலகுவதற்காக தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த நிதீஷ் குமார் தனது ராஜினாமா கடிதத்தை மாநில ஆளுநர் பாகு சௌகானிடம் சமர்ப்பித்தார்.
- புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான உரிமையைக் கோருவதற்காக 160 சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனது ஆதரவினை வழங்குவதற்கான ஆதரவுக் கடிதத்தையும் அவர் சமர்ப்பித்தார்.
- பீகார் மாநில முதல்வராக ஜனதா தள் (ஐக்கியம்) தலைவர் நிதிஷ்குமார் ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று மீண்டும் பதவியேற்றார்.
- 2000 ஆம் ஆண்டில் முதல்முறையாக அவர் மாநில முதல்வராகப் பதவியேற்ற பிறகு, திரும்ப அவர் பதவியேற்பது இது எட்டாவது முறையாகும்.
- துணை முதல்வராக இராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியின் தலைவர் தேஜஸ்வி யாதவ் பதவியேற்றார்.

## அசாம்-மிசோரம் எல்லைப் பிரச்சனை

- ஐஸ்வால் சங்கத்தில் நடைபெற்ற ஒரு பேச்சுவார்த்தையின் போது, எல்லையில் அமைதியை மேம்படுத்தவும் அதனை நிலை நாட்டவும் அசாம் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களின் உயர்மட்டக் குழுக்கள் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டன.
- இரண்டு வடகிழக்கு அண்டை மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இதற்கான கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டனர்.


- பல தசாப்தங்களாக நிலவும் எல்லைப் பிரச்சனையை அமைதியான முறையில் தீர்க்க இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.
- மிசோரம் மற்றும் அசாம் இடையே பல தசாப்தங்களாக நிலவும் ஒரு எல்லைப் தகராறானது, முக்கியமாக 1875 மற்றும் 1933 ஆம் ஆண்டுகளில் காலனித்துவ ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு எல்லை நிர்ணய அறிவிப்புகளில் இருந்து உருவானது.
- வங்காளக் கிழக்கு எல்லை ஒழுங்குமுறையின் கீழ் 1875 ஆம் ஆண்டு அறிவிப்பில் குறிப்பிடப் பட்ட எல்லை நிர்ணயத்தை மிசோரம் அரசு ஏற்றுக் கொண்டது.
- ஆனால் அசாம் மாநில அரசானது, 1933 ஆம் ஆண்டின் அறிவிப்பின் கீழ் குறிப்பிடப் பட்ட எல்லை நிர்ணயம் தனது அரசியலமைப்பு எல்லைக்குட்பட்டது என்று கூறியது.

## நெதன்னா பீமா திட்டம்

- தேசிய கைத்தறித் தினத்தை முன்னிட்டுச் சமீபத்தில் தெலுங்கானா மாநில அரசினால் நெதன்னா பீமா திட்டம் தொடங்கப்பட்டது.
- நெசவாளர்களின் நலனுக்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- நெதன்னா பீமா திட்டம் ஆனது ஒரு வகையிலான காப்பீட்டுத் திட்டமாகும்.
- இதன் மூலம் சுமார் 80,000 நெசவாளர் குடும்பங்கள் பயன் பெறும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியான பயனாளிகள் எதிர்பாராத விதமாக உயிரிழந்தால், அந்த நெசவாளர் குடும்பங்களுக்கு அரசு ரூ.5 லட்சம் காப்பீடு வழங்கும்.
- இத்திட்டமானது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் (LIC) இணைந்து அம்மாநில அரசாங்கத்தினால் செயல்படுத்தப்பட உள்ளது.

## கட்டாய வெகுஜன மதமாற்றத்திற்கு எதிரான மசோதா

- இமாச்சலப் பிரதேச சட்டமன்றம் ஆனது 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் தேதியன்று "வெகுஜன மதமாற்றத்தை" தடை செய்யும் ஒரு மசோதாவை நிறைவேற்றியது.
- 2022 ஆம் ஆண்டு இமாச்சல பிரதேசச் சமயச் சுதந்திரத் திருத்த மசோதாவானது ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.



MAX PENALTY UP TO 10 YRS' JAIL

➤ The maximum punishment under the bill is 10 years' jail, up from seven in the 2019 Act and three in the old Himachal Pradesh Freedom of Religion Act, 2006.

➤ The current law says no person or organisation violating its provisions will be allowed to accept a donation or contribution of any kind from within or outside the country.

- அதன் 2019 ஆம் ஆண்டு சட்டத்தில் குறிப்பிடப்பட்டக் கட்டாயப்படுத்துதல் அல்லது ஈர்ப்பு நடவடிக்கைகள் மூலம் மதம் மாறுவதற்கு எதிராக, அதிகபட்சத் தண்டனையை இந்த மசோதா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையாக உயர்த்துகிறது.

- 2019 ஆம் ஆண்டு சட்டத்தில் ஒரே நேரத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் மதமாற்றம் செய்வதைக் குறிப்பிடும் "வெகுஜன மதமாற்றம்" என்ற குறிப்பை இந்த மசோதா உட்சேர்த்தது.
- கட்டாய மதமாற்றங்களுக்கானத் தண்டனையை ஏழு ஆண்டுகளில் இருந்து அதிக பட்சமாக 10 ஆண்டுகளாக அதிகரிக்க இந்த மசோதா முன்மொழிகிறது.

## டோன்யி போலோ விமான நிலையம்


- அருணாச்சலப் பிரதேசத்தின் 3வது விமான நிலையமானது, இட்டா நகரில் கட்டமைக்கப் பட்டு வருகிறது.
- இதற்கு அருணாச்சலப் பிரதேச நிர்வாகம், "டோன்யி போலோ விமான நிலையம்" என்று பெயரிட்டுள்ளது.
- இது மக்களிடம் நிலவும் சூரியன் (டோன்யி) மற்றும் நிலவு (போலோ) பற்றிய நீண்ட கால பழங்குடியினக் கருத்துகளைப் பிரதிபலிக்கிறது.
- பாசிகாட் மற்றும் தேசு விமான நிலையங்களுக்கு அடுத்ததாக அந்த மாநிலத்தில் அமைய உள்ள 3வது விமான நிலையம் இதுவாகும்.
- மேலும் வடகிழக்கு இந்தியாவில் அமைந்த 16வது விமான நிலையம் இதுவாகும்.

## எஃகுத் தொழிற்சாலைக் கழிவைக் கொண்டு அமைக்கப்பட உள்ள சாலை - அருணாச்சலப் பிரதேசம்

- எல்லைச் சாலைகள் அமைப்பானது அருணாச்சலப் பிரதேசத்தில் எஃகுத் தொழிற் சாலைக் கழிவைக் கொண்டு போடப்பட்ட ஒரு சாலையை ஒரு முன்னோடித் திட்ட அடிப்படையில் அமைக்க உள்ளது.
- எஃகுத் தொழிற்சாலைக் கழிவைக் கொண்டு அமைக்கப்பட உள்ள இந்தச் சாலை என்பது இந்தியாவிலேயே இது போன்ற முதல் வகை திட்டமாக இருக்கும்.
- கனமழை மற்றும் கடுமையானப் பருவநிலைகளைத் தாங்கும் ஆற்றலை இவைக் கொண்டிருக்கும்.
- ஆபத்து மிக்கப் பகுதிகளில் உள்ள உத்தி சார்ந்த இடங்களில் நீண்ட காலம் நிலைக்கக் கூடியச் சாலைகளை அமைப்பதற்கானச் சாத்தியமான தீர்வுகளை ஆராய்வதற்காக இந்தக் கட்டுமானம் மேற்கொள்ளப் படுகிறது.

## வான்வழியாக மருந்து வழங்கீடு

- அருணாச்சலப் பிரதேச அரசானது வான்வழியாக மருந்து வழங்கீடு என்ற ஆளில்லா விமானம் மூலமான மருத்துவ வசதிகளை அறிமுகப்படுத்தியது.
- கிழக்கு கமெங் மாவட்டத்தில் உள்ள செப்பா என்னுமிடத்திலிருந்து சாயோயாங் தாஜோ வரையில் இதன் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.
- இந்த ஆளில்லா விமானச் சேவை அல்லது முதல் முன்னோடி திட்டம், ஆளில்லா விமானங்களின் உதவியுடன் தேவையுள்ள மக்களுக்கு மருந்து மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடினமான நிலப்பரப்பு மற்றும் பகுதிகளை அடையவும் இந்தச் சேவை உதவும்.




## முழுமையான செயல்பாட்டுக் கல்வியறிவு பெற்ற முதல் மாவட்டம்

- மத்தியப் பிரதேசத்தின் மாண்ட்லா மாவட்டம் முழுமையான செயல்பாட்டுக் "கல்வி அறிவு" பெற்ற இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.
- 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் போது, மாண்ட்லா மாவட்டத்தில் கல்வியறிவு விகிதம் 68% ஆக இருந்தது.




Map of Mandla District

- 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மற்றொரு அறிக்கை, இந்த மாவட்டத்தில் 2.25 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்றும், அவர்களில் பெரும்பாலோர் வனப் பகுதிகளைச் சேர்ந்தப் பழங்குடியினர் என்றும் கூறுகிறது.
- தற்பொழுது அங்குள்ள அனைத்து மக்களும் தங்கள் பெயர்களை எழுதவும், எண்களை எண்ணவும், படிக்கவும் முடியும் என்று அந்த மாவட்டத்தின் ஆட்சியர் கூறுகிறார்.
- ஒரு நபர் தனது சொந்தப் பெயரை ஏதேனும் ஒரு மொழியில் எழுதவும், எண்களை எண்ணவும் படிக்கவும் எழுதவும் முடியும் போது அவர் /அவள் முழுமையான அளவில் கல்வியறிவு பெற்றவர் என்று அழைக்கப்படுவார்.

## இந்தியாவை முதன்மை நாடாக மாற்றுவதற்கான திட்டம்

- டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் 'இந்தியாவை ஒரு முதன்மை நாடாக மாற்றச் செய்வதற்கான' பிரச்சாரத்தைத் தொடக்கி வைத்து தனது ஆம் ஆத்மி கட்சியின் தேசிய அளவிலான ஒரு இலட்சியத்தை வெளியிட்டார்.
- அவர் நல்லாட்சிக்கான ஒரு ஐந்து அம்சத் திட்டத்தினை முன்மொழிந்தார். அது
    - இந்த நாட்டின் ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசமான மற்றும் தரமான கல்வி.
    - நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இலவச மருந்துகள் மற்றும் பரிசோதனை வசதிகளுடன் கூடிய இலவச மற்றும் சிறந்த மருத்துவச் சிகிச்சை.
    - சரியான கருத்தாக்கம் மற்றும் நிர்வாகத்துடன் சாத்தியமாகின்ற ஒவ்வொரு இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு.
    - ஒவ்வொரு பெண்ணுக்கும் மரியாதை, சம உரிமை மற்றும் பாதுகாப்பு
    - விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்து, தான் விவசாயிகளாக மாற விரும்புவதாக குழந்தைகள் பெருமையுடன் சொல்லும் அளவிற்கு கௌரவத்தினைப் பெறச் செய்தல்.





## மின்சார இரட்டை அடுக்குப் பேருந்து

- இந்தியாவின் முதல் மின்சார இரட்டை அடுக்குப் பேருந்தானது தெற்கு மும்பையில் உள்ள YB மையத்தில் தொடங்கப்பட்டது.
- இந்தப் பேருந்தின் பெயர் "Switch EiV 22" என்பதாகும்.
- இது பெஸ்ட் சலோ என்ற செயலி அடிப்படையிலான இருக்கை முன்பதிவு, நேரடிக் கண்காணிப்பு மற்றும் பணம் செலுத்துதல் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது.

## மகாராஷ்டிரா அரசின் மாநில விளையாட்டு

- மகாராஷ்டிர மாநிலத்தில் 'தாஹி-ஹண்டி' என்ற விளையாட்டு அம்மாநில அரசின் மாநில விளையாட்டாக அங்கீகரிக்கப்பட உள்ளது.
- மாநில அரசானது 'ப்ரோ-தாஹி ஹண்டி' போட்டியை ஏற்பாடு செய்ய உள்ளது.
- மஹாராஷ்டிரா அரசானது, கோவிந்தாக்களுக்கு (இந்த விளையாட்டில் விளையாடும் வீரர்களுக்கு) விளையாட்டுப் பிரிவின் கீழ் வேலை வழங்கும் என்றும் அறிவித்துள்ளது.

## தொடர்ச் சங்கிலித் தொழில்நுட்பம் அடிப்படையில் விதை விநியோகம்




- ❖ ஜார்க்கண்ட் மாநில அரசு மற்றும் உலகளாவியத் தொடர்ச் சங்கிலித் தொழில்நுட்ப நிறுவனமான செட்டில்மின்ட் நிறுவனம் ஆகியவை இணைந்து தொடர்ச் சங்கிலித் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விதை விநியோகம் செய்யும் ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- ❖ விதைப் பரிமாற்றத் திட்டம் உட்பட பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் விவசாயிகள் பெறும் போலியான விதைகளை அகற்றுவதையும், விதிகளை மீறச் செய்வதைக் குறைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மிதிலா மக்கானாவிற்கு புவிசார் குறியீடு

- ❖ பீகாரின் மிதிலா மக்கானாவிற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- ❖ இதன் தாவரவியல் பெயர் 'யூரியாலே பெராக்ஸ் சலிஷப்'.
- ❖ மேலும் இது நீரில் முளைக்கும் ஒரு சிறப்பு வகை விதையாகும்.
- ❖ இந்த நடவடிக்கையின் வாயிலாக, விவசாயிகள் தங்கள் உயர்மதிப்புள்ள விளை பொருட்களுக்கு அதிக பட்ச விலையைப் பெற உதவும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ பீகாரின் மிதிலா பகுதியிலும் நேபாளத்தின் சில பகுதிகளிலும் இது பயிரிடப்படுகிறது.
- ❖ இது பீகாரில் இருந்து புவிசார் குறியீட்டினைப் பெற்ற ஐந்தாவது தயாரிப்பு ஆகும்.
- ❖ இதற்கு முன்பாக, பாகல்பூரின் ஜர்தாலு மாம்பழம், கதர்னி தான் (அரிசி), நவாடாவின் மாகாய் பான் மற்றும் முசாபர்பூரின் ஷாஹி லிச்சி ஆகியவை அங்கீகரிக்கப் பட்டு உள்ளன.



## இணையவழி மருந்து கண்காணிப்பு அமைப்பு

- ❖ கேரள அரசானது விரைவில் இணையவழியிலான மருந்துக் கண்காணிப்பு வசதியைத் தொடங்க உள்ளது.
- ❖ இது மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவ நிறுவனங்களில் மருந்துகளின் இருப்பு மற்றும் விநியோகத்தைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சில அரசு மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகள் உட்பட மருந்துகளுக்குக் கூட தட்டுப்பாடு இருப்பதாக புகார் எழுந்ததை அடுத்து இந்த வசதியானது அறிமுகப் படுத்தப் படுகிறது.

## டிஜிட்டல் லோக் அதாலத்தில் 75 லட்சம் வழக்குகள்

- ராஜஸ்தானில் உள்ள டிஜிட்டல் லோக் அதாலத் மொத்தம் 568 அமர்வுகளை அமைத்து உள்ளது.
- மொத்தம் 5,62,295 வழக்குகள் இதில் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- விசாரணைக்கு முந்தைய நிலையில் 2,28,863 வழக்குகள் மற்றும் 3,33,432 வழக்குகள் மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.
- மகாராஷ்டிராவில், டிஜிட்டல் லோக் அதாலத்தில் மொத்தம் 63,99,983 போக்குவரத்து வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- லோக் அதாலத்துகள் முழுவதும் டிஜிட்டல் முறையில் உருவாக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## லக்னோ – இரவு நேரப் பூங்கா

- உத்தரப் பிரதேச சுற்றுலாத் துறையானது, தலைநகர் லக்னோவில் நாட்டில் முதல் வனவிலங்கு இரவு நேரப் பூங்கா வசதியினைத் தொடங்க உள்ளது.
- லக்னோவில் ஏற்பாடு செய்யப்பட உள்ள இந்த இரவு நேரப் பூங்கா வசதியானது குக்ரைல் வனப்பகுதியில் 350 ஏக்கரில் உருவாக்கப்பட உள்ளது.
- இந்த இரவு நேரப் பூங்கா வசதியானது 2027.46 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது.
- மேலும் 150 ஏக்கரில் ஒரு விலங்கியல் பூங்காவும் கட்டமைக்கப்பட உள்ளது.
- இங்கு புலி, சிறுத்தை மற்றும் கரடி ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கென தனித்தனி இரவு நேரப் பூங்கா வசதியானது கட்டமைக்கப்படும்.
- லக்னோவின் வரலாற்றுச் சிறப்புமிக்க நவாப் வாஜித் அலி ஷா உயிரியல் பூங்கா தற்போது உள்ள இடத்திலிருந்து இந்த இரவு நேரப் பூங்கா வசதிக்கு மாற்றப்படும்.
- குக்ரைல் ஆற்றுப் பகுதியானது ஓர் அழகிய ஆற்றங்கரையாக உருவாக்கப்படும்.
- இந்த இரவு நேரப் பூங்காவில் டாய் ட்ரெயின் எனப்படும் பொம்மை ரயிலும் இயக்கப் படும்.

## 20வது பயோ ஆசியா மாநாடு 2023

- 20வது பயோ ஆசியா மாநாட்டினை (2023) தெலுங்கானா அரசானது நடத்த உள்ளது.
- இந்த மாநாட்டில் ஒரு சுகாதாரம், சுகாதாரப் பாதுகாப்பில் உள்ள சீர்குலைக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பில் வசதிகளை அணுகக் கூடிய தன்மை மற்றும் மலிவுத்தன்மை ஆகியவை குறித்த இடைநிலைத் தலைப்புகள் பற்றி விவாதிக்கப் பட உள்ளது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "Advancing for ONE: Shaping the next generation of humanised healthcare" என்பதாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஆசியாவின் பணக்காரப் பெண்மணி

- நிகழ்நேர ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, OP ஜிண்டால் குழுமத்தின் தலைவரான சாவித்ரி ஜிண்டால், ஆசியாவின் பணக்காரப் பெண்மணி ஆனார்.
- இவர் சீனாவின் யாங் ஹுயான் என்பவரை முந்தியுள்ளார்.
- இவர் 1.4 பில்லியன் சொத்து மதிப்பினைக் கொண்ட நாட்டின் பணக்காரப் பெண் மற்றும் 10வது பணக்காரர் ஆவார்.




## புகழ்பெற்ற இந்தியவியலாளர் 2021

- கனடிய அறிஞர், ஜெஃப்ரி ஆம்ஸ்ட்ராங் இந்தியக் கலாச்சார உறவுகள் சபையின் 2021 ஆம் ஆண்டின் புகழ்பெற்ற இந்தியவியலாளர் விருதினைப் பெற்றுள்ளார்.
- “இந்தியாவின் தத்துவம், சிந்தனை, வரலாறு, கலை, கலாச்சாரம், இந்திய மொழிகள், இலக்கியம், நாகரிகம், சமூகம் போன்றவற்றிற்கான ஆய்வு/கற்பித்தல்/ஆராய்ச்சி ஆகியவற்றில் அவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில்” இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- ஜெர்மனி, சீனா, ஜப்பான், இங்கிலாந்து, தென் கொரியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முந்தைய விருதாளர்களுடன் இணைந்து, இந்த விருதினைப் பெறும் ஏழாவது நபர் ஆக இப்பட்டியலில் இவர் இடம் பெற்றுள்ளார்.
- இந்த வருடாந்திர விருதானது 2015 ஆம் ஆண்டில் டெல்லியில் நடைபெற்ற முதல் உலக இந்தியவியல் மாநாட்டின் போது நிறுவப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் இந்த விருதை முதன்முதலில் பெற்றவர் ஜெர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் ஹென்ரிச் ஃப்ரீஹர் வான் ஸ்டிடென்கிரான் ஆவார்.

## மத்திய ஊழல் தடுப்பு ஆணையர்

- ஊழல் தடுப்பு ஆணையர், சுரேஷ் N. படேல் மத்திய ஊழல் தடுப்பு ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- சஞ்சய் கோத்தாரி என்பவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய ஊழல் தடுப்பு ஆணையமானது ஒரு மத்திய ஊழல் தடுப்பு ஆணையர் மற்றும் இரண்டு ஊழல் தடுப்பு ஆணையர்களைக் கொண்டு செயல்படுகிறது.
- தற்போது ஆணையத்தில் ஊழல் தடுப்பு ஆணையர் எவரும் இல்லை.
- பிரதமர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட ஒரு தேர்வுக் குழுவானது இவர்களை நியமிக்கிறது.
- இந்தக் குழுவில் உள்ள மற்ற இரு உறுப்பினர்கள் மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஆவர்.

## டிபால் இர்ங்காம் டஸ்டன் விருது

- திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா அவர்களுக்கு 'டிபால் இர்ங்காம் டஸ்டன்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இது லடாக்கின் ஒரு உயரியக் குடிமை விருதாகும்.
- மனிதகுலத்திற்கு, குறிப்பாக இந்த ஒன்றியப் பிரதேசத்திற்கு அவர் ஆற்றிய மகத்தானப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த ஆறாவது விருதானது லடாக் சுயாட்சி மலைப் பகுதி மேம்பாட்டுச் சபையினால் வழங்கப் பட்டது.

## அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் முதல் பெண் தலைமை இயக்குநர்

- மூத்த மின்வேதியியல் அறிவியலாளரான நல்லதம்பி கலைச்செல்வி அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் முதல் பெண் தலைமை இயக்குநர் ஆக பொறுப்பேற்றுள்ளார்.
- இது நாடு முழுவதும் உள்ள, அரசினால் நடத்தப்படுகின்ற 38 ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டமைப்பாகும்.
- இவர் இரண்டு ஆண்டு காலத்திற்கு இப்பதவியில் இருப்பார்.
- லித்தியம் அயனி மின்கலங்கள் துறையில் அவரது பங்களிப்பிற்காக இவர் பிரபலமாக அறியப் பட்டார்.
- கலைச்செல்வி தற்போது தமிழ்நாட்டின் காரைக்குடியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (CSIR-CECRI) தலைமை தாங்கிய முதல் பெண் அறிவியலாளர் ஆனார்.

## சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர்

- இந்தியச் சதுரங்க ஜாம்பவான் விஸ்வநாதன் ஆனந்த் FIDE எனப்படும் சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் .
- அந்த அமைப்பின் தற்போதையத் தலைவர் ஆர்கடி டிவோர்கோவிச் இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சர்வதேசச் சதுரங்கக் கூட்டமைப்பு அல்லது உலக சதுரங்கக் கூட்டமைப்பு பொதுவாக அதன் பிரெஞ்சு சுருக்கப் பெயரான FIDE மூலம் குறிப்பிடப்படுகிறது.
- இது சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இது பல்வேறு தேசியச் சதுரங்கக் கூட்டமைப்புகளை இணைத்து சர்வதேச சதுரங்கப் போட்டியின் ஆளுகைக் குழுவாக செயல்படுகிறது.

## இந்திய அமெரிக்க அழகி 2022

- விர்ஜீனியா மாகாணத்தினைச் சேர்ந்த இந்திய அமெரிக்கரான ஆர்யா வால்வேகர் நியூ ஜெர்சியில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டிற்கான இந்திய அமெரிக்க அழகிப் பட்டத்தை வென்றுள்ளார்.
- இதில் சௌமியா சர்மா இரண்டாமிடத்தினையும், நியூ ஜெர்சியைச் சேர்ந்த சஞ்சனா செகுரி மூன்றாவது இடத்தினையும் பெற்றனர்.
- வாஷிங்டன் மாகாணத்தினைச் சேர்ந்த அக்சி ஜெயின் திருமதி இந்திய அமெரிக்க அழகி என்றப் பட்டத்தை வென்றுள்ளார்.
- நியூயார்க் மாகாணத்தினைச் சேர்ந்த தன்வி குரோவர் பதின்ம வயது இந்திய அழகி என்ற பட்டத்தினை வென்றார்.
- இந்த ஆண்டு நடைபெறும் இப்போட்டியானது 40வது இந்திய அமெரிக்க அழகிப் போட்டியாகும்.
- இது இந்தியாவிற்கு வெளியே வேறு ஒரு நாட்டில் மிக நீண்ட காலமாக நடைபெற்று வரும் ஒரு இந்திய அழகிப் போட்டியாகும்.



## அமெரிக்கப் பாரம்பரியப் புகழ் மன்றம்

- அமெரிக்காவில் உள்ள குணநலன் மற்றும் சமூக உளவியலுக்கான சங்கத்தின் அமெரிக்க பாரம்பரியப் புகழ் மன்றத்தில் இடம்பெற்ற முதல் இந்தியச் சமூக உளவியலாளர் ராமதர் சிங் ஆவார்.

- இவர் தற்போது அகமதாபாத் பல்கலைக்கழகத்தின் கீழ் அம்ருத் மோடி மேலாண்மை கல்லூரியின் பேராசிரியராக உள்ளார்.

## சர்வதேச தொழில்முனைவோர் விருது

- கேரளாவைச் சேர்ந்த ஒரு தொழில்முனைவோரான சங்கீதா அபயன் உலகப் பெண் தொழில்முனைவோர் விருதினை வென்றுள்ளார்.
- இது ஜுனியர் சேம்பர் இன்டர்நேஷனல் ஹாங்காங் (JCIHK) என்ற அமைப்பு மூலம் நிறுவப் பட்டது.
- ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கு ஏற்ற வகையில் கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யும் அவரது புத்தொழில் தொடக்க நிறுவனத்தின் செயல் திறனுக்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.

## சரோஜ் நாராயணசாமி

- அகில இந்திய வானொலியின் தமிழ் செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயண சுவாமி சமீபத்தில் காலமானார்.
- 1962 ஆம் ஆண்டு வானொலிச் சேவையில் இவர் பணிக்குச் சேர்ந்தார்.
- இவர் தமிழ் செய்தி வாசிப்பாளராக சுமார் 35 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றவர் ஆவார்.
- அகில இந்திய வானொலியின் முதல் தமிழ் செய்தி வாசிப்பாளர் என்ற ஒரு பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- 2008 ஆம் ஆண்டில் தமிழக அரசு இவருக்குக் கலைமாமணி விருதினை வழங்கிக் கௌரவித்தது.

## முதலீட்டாளர் ராகேஷ் ஜுன்ஜுன்வாலா

- தலால் தெருவின் 'பிக் புல்' என்று பிரபலமாக அழைக்கப்படும் முதலீட்டாளர் ராகேஷ் ஜுன்ஜுன்வாலா சமீபத்தில் காலமானார்.
- இவர் வெளிப்படையாகவே 32 பங்குகளைக் கொண்டிருந்தார்.
- தற்போது, அவர் ஆகாசா ஏர்லைன் என்ற பெயரில் புதிய விமானப் போக்குவரத்துத் தொழிலிலும் ஈடுபட்டார்.

## சசி தரூர் - மிக உயரியப் பிரெஞ்சுக் குடிமை விருது


- பிரான்சு நாட்டின் அரசு காங்கிரஸ் கட்சித் தலைவர் சசி தரூருக்கு தனது உயரியக் குடிமை விருதான 'செவாலியர் டி லா லெஜியன் டி'ஹானூர்' இம்மானுவேல் லெனைன் என்ற விருதினை வழங்கிக் கௌரவிக்கிறது.
- தரூர் அவர்களின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளைப் பாராட்டி இந்த விருதானது அவருக்கு வழங்கப்படுகிறது.
- இரண்டு முறை மக்களவை உறுப்பினராக இருந்த இவர் பல புனைவுக் கதை மற்றும் புனைவுக் கதை அல்லாத புத்தகங்களை எழுதிய ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார்.

## சுபாஸ் சந்திர போஸ் நினைவுச் சின்ன அந்தஸ்து

- சுபாஸ் சந்திரபோஸ் நினைவுச் சின்ன அந்தஸ்தை படாங் தற்போது பெற உள்ளதாக தேசியப் பாரம்பரிய வாரியம் தெரிவித்துள்ளது.
- நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் "டெல்லி சலோ" என்ற அழைப்பினை விடுத்த இடம் இதுவாகும்.
- சிங்கப்பூரின் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இது ஒரு மிகப் பெரிய அளவிலானப் பாதுகாப்பைக் கொண்டிருக்கும்.
- படாங் சிங்கப்பூரில் உள்ள ஒரு மிகப்பெரிய திறந்தவெளி மைதானமாகும்.
- 1943 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தில், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் "டெல்லி சலோ" என்ற சொற்றொடரை இங்கு வழங்கினார்.



## ஸ்ரீ அரவிந்தரின் 150வது பிறந்தநாள்




- ஸ்ரீ அரவிந்தர் ஒரு இந்தியத் தத்துவவாதி, மகரிஷி, யோகா குரு, கவிஞர் மற்றும் இந்தியத் தேசியவாதி ஆவார்.
- அவர் வந்தே மாதரம் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்தார்.
- ஆங்கிலேயருக்கு எதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தில் இவர் பங்கேற்றார்.
- 1910 ஆம் ஆண்டு வரை, அவர் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் செல்வாக்கு மிக்கத் தலைவர்களில் ஒருவராக இருந்தார்.
- பின்னர், அவர் ஆன்மீகச் சீர்திருத்தவாதியாக மாறி, மனித முன்னேற்றம் மற்றும் ஆன்மீகப் பரிணாமம் பற்றிய தனது கருத்துக்களை மக்கள் முன்வைத்தார்.

- 1872 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் (கொல்கத்தா) பிறந்த இவர் பாண்டிச்சேரியில் 1950 டிசம்பர் ஆம் தேதியன்று இறந்தார்.
- 1926 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் நிறுவப்பட்டது.

## லிஸ்பன் ட்ரைன்னாலே வாழ்நாள் சாதனையாளர் விருது

- வங்காள தேசத்தினைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர், ஆராய்ச்சியாளர் மற்றும் கல்வியாளர் மெரினா தபஸ்ஸம் மதிப்பு மிக்க லிஸ்பன் ட்ரைன்னாலே மில்லினியம் பிசிபி வாழ்நாள் சாதனையாளர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- உலகின் தெற்கு நாடுகளில் இருந்து இந்த விருதை வென்ற முதல் தெற்காசிய நபர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- வணிகவாதத்திலிருந்து விலகி, சுற்றுச்சூழல் சார்ந்த கருத்துகளை வெகு ஆழமாக உட் பொதிக்கும் கட்டிடக்கலை வடிவமைப்புகளுக்காக அவர் வெகு பிரபலமாக அறியப் படுகிறார்.

## சிறந்த காவல் துறைக்கான சர்வதேச விருதுகள்




- இந்தியாவைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரிகளான, காவல் துறை கண்காணிப்பாளர்கள் சந்தோஷ் குமார் சிங் மற்றும் அமித் குமார், சர்வதேச காவல் துறைத் தலைவர்கள் சங்கத்தின் (IACP) 2021 ஆம் ஆண்டிற்கான 40 அண்டர் 40 என்ற விருதுகளை வென்றுள்ளனர்.
- உலகெங்கிலும் உள்ள ஆறு நாடுகளைச் சேர்ந்த முதல் 40 காவல்துறை அதிகாரிகளில் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- "தங்கள் சமூகங்கள் மற்றும் சட்ட அமலாக்கத் தொழிலுக்கு அவர்கள் ஆற்றிய சிறப்பானத் தலைமை, அர்ப்பணிப்பு மற்றும் சேவையை வழங்கியதற்காக" வேண்டி அவர்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.

## நவ்ரோஸ் திருவிழா

- பார்சி இனத்தவரின் புத்தாண்டானது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 16 ஆம் தேதியன்று பார்சி சமூகத்தினரால் கொண்டாடப்படுகிறது.
- பார்சி புத்தாண்டானது நவ்ரோஸ் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது ஜோராஸ்ட்ரியன் நாட்காட்டியின் முதல் நாளைக் குறிக்கிறது.
- இந்த நாளில் இந்தியா முழுவதும் உள்ள பார்சி குடும்பங்கள் பிரார்த்தனை செய்திட வேண்டி புனிதக் கோவில்களுக்கு வருகை தருகின்றனர்.
- பார்சி புத்தாண்டு அல்லது நவ்ரோஸ் ஆனது, சுமார் 35,000 ஆண்டுகளுக்கு முன்னதாக தோற்றுவிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.
- தற்காலத்தில் ஈரானின் பெர்சியாவில் பரவிக் காணப்படும் ஜோராஸ்ட்ரியனிசத்தை (சரதுசம்) நபி ஸரதுஸ்திரா அவர்கள் நிறுவிய காலம் இதுவாகும்.

## நீல நிற அடையாளக் குறியீடு

- தாதாபாய் நௌரோஜியின் இலண்டன் இல்லத்திற்கு நீல நிற அடையாளக் குறியீடு (ப்ளூ பிளேக்) குறியீடு வழங்கப்பட உள்ளது.
- இது இலண்டனில் வாழ்ந்து பணியாற்றியப் புகழ்பெற்ற நபர்களுக்கு வழங்கப் படுகின்ற ஒரு கௌரவமாகும்.
- 1892 ஆம் ஆண்டில் பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆசிய நாட்டவர் நௌரோஜி ஆவார்.
- ப்ளூ பிளேக் குறியீடு வழங்கும் திட்டமானது ஆங்கிலேயப் பாரம்பரியத் தொண்டு நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது.




- இது இலண்டன் முழுவதும் உள்ள குறிப்பிட்டத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த சில கட்டிடங்களின் வரலாற்று முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கிறது.
- நௌரோஜி "இந்தியாவின் பழம்பெரும் மனிதர்" என்று குறிப்பிடப்படுகிறார்.
- நௌரோஜி இங்கிலாந்து நாட்டிற்கு ஏழு முறை பயணம் மேற்கொண்டதோடு அவர் தனது நீண்ட வாழ்நாளில் இலண்டனில் முப்பது ஆண்டுகளுக்கு மேலான ஆண்டுகளைக் கழித்தார்.
- ராஜா ராம் மோகன் ராய், காந்தி, ஸ்ரீ அரவிந்தர், ஜவஹர்லால் நேரு மற்றும் B.R. அம்பேத்கர் உள்ளிட்டோரின் வீடுகளுக்கு ப்ளூ பிளேக் குறியீடு வழங்கப்பட்டது.

## பாண்டுரங் கான்கோஜி சிலை

- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தனது மெக்சிகோ பயணத்தின் போது சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் வேளாண் அறிவியலாளரான பாண்டுரங் கான்கோஜி என்ற இந்தியரின் சிலையைத் திறந்து வைக்க உள்ளார்.
- இவர் மகாராஷ்டிராவில் பிறந்த சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் வேளாண் நிபுணர் ஆவார்.
- கான்கோஜி காதர் கட்சியின் ஸ்தாபன உறுப்பினர்களில் ஒருவர் ஆவார்.
- 1910 ஆம் ஆண்டில் நடைபெற்ற மெக்சிகன் புரட்சி என்பது சர்வாதிகார ஆட்சியை அகற்ற வழி வகுத்ததோடு அது கான்கோஜிக்கு வெகுவாக உத்வேகம் அளித்தது.
- இவர் அமெரிக்கப் பண்ணைகளில் பணி புரியும் இந்தியர்களுடன் இந்தியச் சுதந்திரம் பற்றியக் கருத்துகளை விவாதிக்கும் நோக்கத்துடன் அவர்களை அணுகினார்.
- இவர் பாரீஸில் இருந்த பிகாஜி காமாவை அணுகி, அவரைச் சந்தித்ததோடு, ரஷ்யாவில் விளாடிமிர் லெனினைச் சந்தித்தார் மற்றும் மற்றத் தலைவர்கள் மத்தியில் இந்தியப் பிரச்சினைக்கு வேண்டிய ஆதரவினையும் கோரினார்.
- எனினும், அவர் ஐரோப்பாவிலிருந்து நாடு கடத்தப்படுதல் என்ற தண்டனையை எதிர் கொள்ள நேர்ந்ததால், இந்தியாவுக்கும் செல்ல முடியாத நிலையில், மெக்சிகோவில் தஞ்சம் புகுந்தார்.
- மெக்ஸிகோ நகருக்கு அருகில் உள்ள சாபிங்கோவில் உள்ள தேசிய வேளாண்மைப் பள்ளியில் அவர் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.
- சோளம், கோதுமை, பருப்பு வகைகள் மற்றும் ரப்பர் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்து, அவற்றுள் உறைபனி மற்றும் வறட்சியைத் தாங்கும் வகைகளை அவர் உருவாக்கச் செய்தார்.
- இவர் மெக்சிகோவில் ஒரு புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளராக மதிக்கப் பட்ட நிலையில் மெக்சிகோவில் பசுமைப் புரட்சியைக் கொண்டு வருவதற்கான சில முயற்சிகளின் ஒரு அங்கமாக விளங்கினார்.
- 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு பாண்டுரங் இந்தியா திரும்பினார்.

## வானியல் மற்றும் வானியற்பியல் தொடர்பான 15வது சர்வதேச ஒலிம்பியாட் போட்டி

- ஜார்ஜியாவின் குட்டாசி நகரில் நடைபெற்ற 15வது சர்வதேச வானியல் மற்றும் வான் இயற்பியல் (IOAA)-2022 ஒலிம்பியாட் போட்டியில் இந்திய அணி ஐந்துப் பதக்கங்களை வென்று மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தப் போட்டியில் இந்தியாவில் இருந்து மொத்தம் ஐந்து மாணவர்கள் கலந்து கொண்டு ஒவ்வொருவரும் பதக்கம் வென்றுள்ளனர்.
- இப்போட்டியில் மாணவர்கள் 3 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.
- பதக்கப் பட்டியலில் சிங்கப்பூருடன் இணைந்து இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- இந்திய அணியானது ஈரான் அணி (5 தங்கம்) மற்றும் கெஸ்ட் அணி (4 தங்கம், 1 வெள்ளி) ஆகியவற்றுக்குச் சற்றே பின் தங்கியுள்ளது.
- ராகவ் கோயல் மிகவும் சவாலான ஒரு தத்துவார்த்தக் கேள்விக்கான சிறந்தப் பதிலை வழங்கியதற்காக ஒரு சிறப்புப் பரிசை வென்றார்.

- வானியல் மற்றும் வானியற்பியல் தொடர்பான சர்வதேச ஒலிம்பியாட் போட்டி என்பது ஒரு வருடாந்திரப் போட்டியாகும்.
- மேலும், இது ‘சர்வதேச அறிவியல் ஒலிம்பியாட்’ போட்டிகளில் ஒன்றாகும்.

## பட்டுக் குறியீட்டு அமைப்பு ஜவுளிக் கண்காட்சி

- புது டெல்லியில் பட்டுக் குறியீட்டு அமைப்பு கண்காட்சியானது தொடங்கப்பட்டது.
- ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்தியப் பட்டு வாரியத்தின் கீழ் உள்ள இந்தியப் பட்டுத் தர நிர்ணய அமைப்பினால் இந்தக் கண்காட்சியானது ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- பட்டுக் குறியீடு என்பது நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கையான மற்றும் தூயப் பட்டுகளின் தரத்தைத் தீர்மானிக்க அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட ஒரு தர உத்தரவாத முத்திரை ஆகும்.
- பட்டுக் குறியீட்டு முத்திரையானது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில் நுகர்வோரின் நம்பிக்கையை உருவாக்குகின்ற, பட்டு உற்பத்திப் பொருட்களின் தரங்களை எடுத்துக் காட்டுகிறது.




## அண்ணா மொடயில் மணி

- இயற்பியலாளரும் வானிலை ஆய்வாளருமான அண்ணா மொடயில் மணியின் 104வது பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கென ஒரு சிறப்பு டூடுலை அர்ப்பணித்து அவரது பிறந்த நாளினை கூகுள் கொண்டாடியது.
- இவர் இந்தியாவின் முதல் பெண் அறிவியலாளர்களுள் ஒருவர் ஆவார்.
- இவர் இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) துணைத் தலைமை இயக்குநராகப் பணியாற்றினார்.
- ஐக்கிய நாடுகளின் உலக வானிலை அமைப்பிலும் இவர் சில முக்கியப் பதவிகளை வகித்துள்ளார்.
- 1987 ஆம் ஆண்டில் அறிவியல் துறையில் அவரது குறிப்பிடத்தக்க சில பங்களிப்புகளுக்காக INSA K.R.ராமநாதன் என்ற பதக்கத்தை அவர் வென்றார்.

## புலிட்சர் பரிசு 2022

- வங்காள தேசத்தினைச் சேர்ந்த ஃபஹ்மிதா அசிம் 2022 ஆம் ஆண்டிற்கான புலிட்சர் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- விரிவான அறிக்கை வழங்கீடு மற்றும் விளக்கப் படம் என்றப் பிரிவின் கீழ் அவருக்கு இந்த விருது வழங்கப்பட உள்ளது.
- உய்குர்களின் மீதான சீனாவின் அடக்குமுறை குறித்து நியூயார்க்கில் வெளியிடப் படும் இன்சைடர் இதழில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கைக்காக இந்த விருதிற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட அந்தோணி டெல் கோல், ஜோஷ் ஆடம்ஸ் மற்றும் வால்ட் ஹிக்கி உள்ளிட்ட நான்குப் பத்திரிகையாளர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- 'I escaped a Chinese internment Camp' என்றப் படைப்பில் ஃபஹ்மிதா அசிமின் விளக்கப் படங்கள் இடம் பெற்றுள்ளன.

## விடுதலைப் பதக்கம் 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான லிபர்ட்டி மெடல் எனப்படும் விடுதலைப் பதக்கமானது உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி அவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.
- அமெரிக்காவின் தேசிய அரசியலமைப்பு மையமானது ஜெலென்ஸ்கி "ரஷ்ய கொடுங் கோன்மை ஆட்சியில் தனது நாட்டின் சுதந்திரத்தை வீரமிக்க முறையில் பாதுகாத்த தீரத்திற்காக" இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவார் என்று அறிவித்து உள்ளது.
- இவர் ரொனால்ட் ரீகன் சுதந்திர விருது மற்றும் ஜான் F. கென்னடியின் துணிவு விருது போன்ற விருதுகளைப் பெற்றவர் ஆவார்.
- இவர் செக் குடியரசு, லாட்வியா, லித்துவேனியா, போலந்து, ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களிடமிருந்தும் கௌரவ விருதுகளைப் பெற்றுள்ளார்.




## உலகம் முழுவதும் தனியாக பயணம் மேற்கொண்ட நபர்

- மாக் ரூதர் ஃபோர்ட் (17) ஒரு சிறிய ரக விமானத்தில் தனியாக உலகைச் சுற்றி வந்த இளம் நபர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- மேக் பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில் தனது பயணத்தினை முடித்து இரண்டு கின்னஸ் உலகச் சாதனைகளைப் படைத்தார்.
- இதன் மூலம் தானே விமானத்தினை இயக்கி உலகைச் சுற்றிப் பயணம் மேற்கொண்ட இளம் நபர் என்ற ஒரு பெருமையையும் இவர் பெற்றார்.
- ஒரு சிறிய வகை இலகுரக விமானத்தில் உலகைச் சுற்றி வந்த மிக இளம் நபர் ரூதர் ஃபோர்ட் ஆவார்.

## ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசு 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசிற்குப் பேராசிரியர் எமரிடஸ் வில்பிரட் புருட்ஸேர்ட் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- சுற்றுச்சூழல் சார்ந்த ஆவியாதல் செயல்முறையினை மதிப்பிடுவதற்கான அவரது அற்புதமானப் பணிக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- ஆவியாதல் மற்றும் நீரியல் பற்றிய அவரது புதுமையான ஆய்வுகள் ஆனது, குறிப்பாக பருவநிலை மாற்றத்தினைப் பொறுத்தவரையில் ஒரு நீடித்த தத்துவார்த்த மற்றும் ஒரு நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.
- மேலும், நிலத்தடி நீர்ச் சேமிப்பில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கான புதிய அணுகுமுறைகளை உருவாக்குவதில் அவர் முன்னோடியாகத் திகழ்கிறார்.
- ஸ்டாக்ஹோம் தண்ணீர் பரிசானது உலகின் மிகவும் மதிப்பு மிக்க தண்ணீர் விருது எனவும், பெரும்பாலும் தண்ணீருக்கான நோபல் பரிசு என்றும் விவரிக்கப்படுகிறது.
- மதிப்புமிக்க இந்தப் பரிசானது 1991 ஆம் ஆண்டு முதல் தண்ணீர் தொடர்பான அசாதாரணமானச் சாதனைகளை மேற்கொள்ளும் நபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப் பட்டு வருகிறது.

## தேசிய கோபால் ரத்னா விருதுகள் 2022



- தேசிய பால் தினத்தை முன்னிட்டு (26 நவம்பர், 2022) தேசிய கோபால் ரத்னா விருதுகள் வழங்கப்பட உள்ளன.
- அந்தப் பிரிவுகள்:
  - நாட்டு மாடு/எருமை இனங்களை வளர்க்கும் சிறந்தப் பால் பண்ணையாளர்.
  - சிறந்த செயற்கைக் கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர் (AIT)
  - சிறந்தப் பால் கூட்டுறவு சங்கம்/ பால் உற்பத்தி நிறுவனம்/ பால் பண்ணை உற்பத்தியாளர் அமைப்பு.

## யுனெஸ்கோ அமைப்பின் அமைதிப் பரிசு 2022

- "அகதிகளை வரவேற்று ஏற்றுக் கொள்ளும் வகையிலான அவரது முயற்சிகளுக்காக", முன்னாள் ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கெல் யுனெஸ்கோ அமைப்பின் 2022 ஆம் ஆண்டிற்கான அமைதிப் பரிசினைப் பெற்றுள்ளார்.
- 2015 ஆம் ஆண்டின் கோடைக் காலத்தில், அகதிகள் ஐரோப்பாவிற்குள் வந்து கொண்டு இருந்த போது, மெர்க்கெல் தனது நாட்டின் எல்லைகளை அவர்களுக்காக திறக்க அனுமதித்து, ஜெர்மனிய நாட்டவரிடம் "நாம் இதைச் செய்ய முடியும்" என்று பொது மக்களிடம் அறிவித்தார்.
- யுனெஸ்கோ அமைதிப் பரிசானது அதிகாரப்பூர்வமாக ஃபெலிக்ஸ் ஹௌபோவேட் போய்க்னி யுனெஸ்கோ அமைதிப் பரிசு என்று அழைக்கப்படுகிறது.
- ஐவரி கோஸ்ட்டின் முன்னாள் அதிபரின் நினைவாக இதற்கு இப்பெயரானது சூட்டப் பட்டது.

## பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் புதியத் தலைவர்

- புகழ்பெற்ற அறிவியலாளர் சமீர் V.காமத், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலாளராகவும், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களின் அறிவியல் ஆலோசகராக நியமிக்கப் பட்ட G. சதீஷ் ரெட்டி நியமிக்கப்பட்டதை அடுத்து இவர் இந்தப் பொறுப்பினை ஏற்க உள்ளார்.
- ரெட்டி 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு ஆண்டுகளுக்குப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அவருக்கு இரண்டு ஆண்டுகள் பதவி நீட்டிப்பு வழங்கப் பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் ODI உலகக் கோப்பை போட்டி 2025

- சர்வதேச கிரிக்கெட் சபையானது, மகளிர் பிரிவில் அடுத்தடுத்த முக்கிய ICC போட்டிகளை நடத்தும் நாடுகளின் பட்டியலை வெளியிட்டது.
- அடுத்து நடைபெற உள்ள 2025 ஆம் ஆண்டு ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியானது இந்தியாவில் நடைபெறவுள்ளது.
- 2027 ஆம் ஆண்டு ICC மகளிர் டி20 சாம்பியன்ஸ் கோப்பை போட்டிக்கு இலங்கை தகுதி பெற்றால் அந்த ஆண்டின் போட்டியினை இலங்கை நடத்தும்.
- மகளிர் டி20 உலகக் கோப்பை போட்டியினை வங்காளதேசம் இரண்டாவது முறையாக 2024 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- இந்த ஆண்டு பர்மிங்காமில் நடைபெற உள்ள 2022 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் மகளிர் டி20 கிரிக்கெட் போட்டியும் இடம் பெறவுள்ளது.




## காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் 2022

- டெல்லியின் அனாஹத் சிங், 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறும் இளம் வயது (14) பேட்மிண்டன் வீரர் ஆவார்.
- ஆடவருக்கான 73 கிலோ எடைப் பிரிவு பளு தூக்குதல் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் அச்சிந்தா ஷூலி (மேற்கு வங்கம்) தங்கப் பதக்கம் வென்றார்.
- பெண்களுக்கான 49 கிலோ எடைப்பிரிவு பளு தூக்குதல் இறுதிப் போட்டியில் மீராபாய் சானு (மணிப்பூர்) இந்திய அணிக்கான முதல் தங்கப் பதக்கத்தினை வென்றார்.

- ஆடவருக்கான 67 கிலோ எடைப் பிரிவில் ஜெர்மி லால்ரின்னுங்காவும் (மிசோரம்) தங்கம் வென்றார்.
- பளு தூக்குதல் போட்டியில், சங்கேத் மகாதேவ் சர்கார் (மகாராஷ்டிரா) இந்திய அணிக்கான முதல் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- பளு தூக்கும் போட்டியில் பிந்த்யாராணி தேவி (மணிப்பூர்) வெள்ளி வென்றார்.
- பெண்களுக்கான 71 கிலோ பளு தூக்குதல் போட்டியில் இந்தியாவின் ஹர்ஜிந்தர் கவுர் (பஞ்சாப்) வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ஜூடோ போட்டியில் சுஷிலா தேவி லிக்மாபம் (மணிப்பூர்) வெள்ளிப் பதக்கமும், விஜய் குமார் (உத்தரப் பிரதேசம்) வெண்கலப் பதக்கமும் வென்றனர்.
- பளுதூக்கும் வீரர் குருராஜா பூஜாரி (கர்நாடகா) வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.




| RANK | COUNTRIES | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | AUSTRALIA | 31 | 20 | 20 | 71 |
| 2 | ENGLAND | 21 | 22 | 11 | 54 |
| 3 | NEW ZEALAND | 13 | 7 | 4 | 24 |
| 4 | CANADA | 6 | 11 | 18 | 33 |
| 5 | SOUTH AFRICA | 5 | 3 | 4 | 12 |
| 6 | INDIA | 3 | 3 | 3 | 9 |
| 7 | SCOTLAND | 2 | 8 | 13 | 23 |
| 8 | MALAYSIA | 2 | 2 | 2 | 6 |
| 9 | NIGERIA | 2 | 0 | 2 | 4 |
| 10 | WALES | 1 | 2 | 7 | 10 |

## 'கேம்ஸ் வைட் ஓபன்'

- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஏற்பாட்டாளர்கள் "கேம்ஸ் வைட் ஓபன்" என்ற சொற்றொடரைத் தங்கள் அதிகாரப் பூர்வ முழக்கமாக வெளியிட்டனர்.
- 2024 ஆம் ஆண்டின் கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் 2024 ஆம் ஆண்டு ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை நடைபெற உள்ளன.
- ஒலிம்பிக்ஸ் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகள் "வேகமானவை", "உயர்ந்தவை" மற்றும் "வலுவானவை" - அத்துடன் "அதிக உள்ளடக்கத்தினையும், அதிகச் சகோதரத்துவத்தினையும், மிகவும் அழகு நிறைந்ததாகவும் இருக்கும்" என்று உறுதியளிக்கும் ஒரு ஒளிப்படக் காட்சியுடன் இந்த முழக்கம் வெளியிடப்பட்டது.

## 20 வயதிற்குட்பட்டோருக்கான SAFF சாம்பியன்ஷிப் போட்டி - 2022

- இந்தியா வங்காளதேசத்தை வீழ்த்தி 2022 ஆம் ஆண்டு 20 வயதிற்குட்பட்டோருக்கான SAFF சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது.

- 4வது 20 வயதிற்குட்பட்டோருக்கான SAFF சாம்பியன்ஷிப் போட்டியினை இந்தியா நடத்தியது.
- 20 வயதிற்குட்பட்டோருக்கான SAFF சாம்பியன்ஷிப் போட்டி என்பது தெற்காசியக் கால்பந்துக் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 18 வயதுக்குட்பட்டத் தேசிய அணிகளுக்கான சர்வதேசக் கால்பந்துப் போட்டியாகும்.

## இந்தியாவின் 75வது கிராண்ட்மாஸ்டர்

- V.பிரணவ் ருமேனியாவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியாவின் 75வது கிராண்ட்மாஸ்டர் ஆனார்.
- 15 வயதான இவர் 2021 ஆம் ஆண்டில் செர்பியா ஓபன் போட்டியில் தனது முதல் கிராண்ட் மாஸ்டர் பட்டத்திற்கான நெறிமுறையை நிறைவு செய்திருந்தார்.
- பிரணவ் தமிழ்நாட்டின் 27வது கிராண்ட்மாஸ்டர் ஆவார்.



## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் - ஹாக்கி

- 16 வருட இடைவெளிக்குப் பிறகு, இந்திய மகளிர் ஹாக்கி அணியானது நியூசிலாந்து அணிக்கு எதிரானப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்றது.
- இப்போட்டியில் இந்திய ஆடவர் ஹாக்கி அணியும் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரானப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றது.
- இதற்கு முன்னதாக, 2006 ஆம் ஆண்டில் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற காமன் வெல்த் போட்டிகளில் இந்திய அணி வெள்ளிப் பதக்கத்தினை வென்றது.



## தங்கப் பதக்கம் - பி.வி. சிந்து

- தற்போது நடைபெற்று வரும் 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், பாட்மிண்டன் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் பி.வி.சிந்து தனது முதல் தங்கம் பதக்கத்தினை வென்றார்.
- கனடா நாட்டினைச் சேர்ந்த மிச்செல் லி என்பவரை வீழ்த்தி சிந்து தனது முதல் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- 2014 ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டியில் வெண்கலம் மற்றும் 2018 ஆம் ஆண்டில் வெள்ளி ஆகிய பதக்கங்களை வென்றதையடுத்து சிந்து வென்றுள்ள முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.



## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2022

- இந்த ஆண்டு, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் 18வது பங்கேற்பாகும்.
- 2022 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் இந்தியா 4வது இடத்தைப் பெற்றுள்ளது.
- 22 தங்கம், 16 வெள்ளி மற்றும் 23 வெண்கலம் உட்பட இந்தியா பெற்ற ஒட்டு மொத்தப் பதக்க எண்ணிக்கை 61 ஆகும்.
- சைகோம் மீராபாய் சானு இந்தியாவிற்கான முதல் தங்கப் பதக்கத்தினைப் பெற்றுத் தந்தார்.
- மகளிர் அணி தங்கப் பதக்கத்தையும், வென்றதையடுத்து லான் பவுல்ஸ் என்ற உருட்டுப் பந்தாட்டப் போட்டியில் இந்தியா தனது முதல் பதக்கத்தை வென்றது.
- மேலும் இந்தப் போட்டியில் ஆடவர் அணி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது.
- டேபிள் டென்னிஸ் (மேசைப் பந்தாட்டம்) போட்டியில் ஷரத் கமல் 3 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.
- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியானது வெள்ளிப் பதக்கம் வென்றது.
- ஜூடோ போட்டியில் சுஷிலா தேவி லிக்மாம்பம் (வெள்ளி), துலிகா மான் (வெள்ளி) மற்றும் விஜய் குமார் யாதவ் (வெண்கலம்) ஆகியோர் அடங்கிய இந்திய அணி இந்தப் போட்டியினைச் சிறப்பாக முடித்தது.
- ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சௌரவ் கோசல் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் தீபிகா பல்லிகல் / சவுரவ் கோசல் ஆகியோர் அடங்கிய இணை வெண்கலப் பதக்கத்தினை வென்றனர்.

- 2010 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி தனது சிறந்தப் பங்கேற்பினை வெளிப்படுத்தியது.
- அந்தப் போட்டிகளில் ஆசியாவின் மாபெரும் அணியான இந்திய அணி 38 தங்கம் உட்பட 101 பதக்கங்களை வென்றது.
- ஒட்டு மொத்தமாக வென்றப் பதக்கங்களின் அடிப்படையில், புது டெல்லி 2010 (101), மான்செஸ்டர் 2002 (69), கோல்ட் கோஸ்ட் 2018 (66), மற்றும் கிளாஸ்கோ 2014 (64) ஆகியப் போட்டிகளுக்குப் பிறகு 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம் போட்டிகளில் இந்திய அணியின் பங்கேற்பானது 5வது சிறந்தப் பங்கேற்பாகும்.

**CWG 2022 MEDAL TALLY**

| | COUNTRIES | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | AUS | 67 | 57 | 54 | 178 |
| 2 | ENG | 57 | 66 | 53 | 176 |
| 3 | CAN | 26 | 32 | 34 | 92 |
| 4 | IND | 22 | 16 | 23 | 61 |
| 5 | NZL | 20 | 12 | 17 | 49 |
| 6 | SCO | 13 | 11 | 27 | 51 |
| 7 | NGR | 12 | 9 | 14 | 35 |
| 8 | WAL | 8 | 6 | 14 | 28 |
| 9 | RSA | 7 | 9 | 11 | 27 |
| 10 | MAS | 7 | 8 | 8 | 23 |

## மல்யுத்தம்

| Athlete | Category | Medal |
|---|---|---|
| Bajrang Punia | Men's 65kg | Gold |
| Sakshi Malik | Women's 62k | Gold |
| Deepak Punia | Men's 86kg | Gold |
| Ravi Kumar Dahiya | Men's 57kg | Gold |
| Vinesh Phogat | Women's 53kg | Gold |
| Naveen | Men's 74kg | Gold |
| Anshu Malik | Women's 57kg | Silver |
| Divya Kakran | Women's 68kg | Bronze |
| Mohit Grewal | Men's 125kg | Bronze |
| Pooja Gehlot | Women's 50kg | Bronze |
| Pooja Sihag | Women's 76kg | Bronze |
| Deepak Nehra | Men's 97kg | Bronze |

## பளு தூக்குதல்

| Athlete | Category | Medal |
|---|---|---|
| **Mirabai Chanu** | Women's 49kg | Gold |
| **Jeremy Lalrinnunga** | Men's 67kg | Gold |
| **Achinta Sheuli** | Men's 73kg | Gold |
| **Sanket Sargar** | Men's 55kg | Silver |
| **Bindyarani Devi** | Women's 55kg | Silver |
| **Vikas Thakur** | Men's 96kg | Silver |
| **Gururaja Poojary** | Men's 61kg | Bronze |
| **Harjinder Kaur** | Women's 71kg | Bronze |
| **Lovepreet Singh** | Men's 100kg | Bronze |
| **Gurdeep Singh** | Men's 109+kg | Bronze |

## தடகளம்

| Athlete | Category | Medal |
|---|---|---|
| **Eldhose Paul** | Men's Triple Jump | Gold |
| **Abdulla Aboobacker** | Men's Triple Jump | Silver |
| **Avinash Sable** | Men's 3000m Steeplechase | Silver |
| **Priyanka Goswami** | Women's 10km Race Walk | Silver |
| **Murali Sreeshankar** | Men's Long Jump | Silver |
| **Tejaswin Shankar** | Men's High Jump | Bronze |
| **Annu Rani** | Women's Javelin | Bronze |
| **Sandeep Kumar** | Men's 10km Race Walk | Bronze |

## பூப்பந்தாட்டம் (பாட்மிண்டன்)

| Athlete | Category | Medal |
|---|---|---|
| PV Sindhu | Women's Singles | Gold |
| Lakshya Sen | Men's Singles | Gold |
| Satwiksairaj Rankireddy/Chirag Shetty | Men's Doubles | Gold |
| India | Mixed Team | Silver |
| Gayatri Gopichand/Treesa Jolly | Women's Doubles | Bronze |
| Kidambi Srikanth | Men's Singles | Bronze |

## குத்துச்சண்டை

| Athlete | Category | Medal |
|---|---|---|
| **Nitu Ghangas** | Women's 48kg | Gold |
| **Nikhat Zareen** | Women's 50kg | Gold |
| **Amit Panghal** | Men's 51kg | Gold |
| **Sagar Ahlawat** | Men's +92kg | Silver |
| **Rohit Tokas** | Men's 67kg | Bronze |
| **Jaismine Lamboria** | Women's 60kg | Bronze |

## மேசைப் பந்தாட்டம் (டேபிள் டென்னிஸ்)

| Athlete | Category | Medal |
|---|---|---|
| Achanta Sharath Kamal | Men's Singles | Gold |
| India | Men's Team | Gold |
| Achanta Sharath Kamal/Sreeja Akula | Mixed Team | Gold |
| Achanta Sharath Kamal/G Sathiyan | Men's doubles | Silver |
| G Sathiyan | Men's singles | Bronze |

## 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டி

- கொலம்பியாவில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான உலகத் தடகளச் சாம்பியன் ஷிப் போட்டியில் ஆண்களுக்கான மூன்று நிலையிலான நீளம் தாண்டுதல் போட்டியில் செல்வ பிரபு திருமாறன் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- இவர் ஜமைக்காவின் ஜேடன் ஹிபர்ட்டிற்கு அடுத்ததாக இரண்டாம் இடத்தினைப் பெற்றார்.
- 20 வயதுக்குட்பட்டோருக்கான உலகப் போட்டியில் இந்தியாவிற்குக் கிடைத்த மூன்றாவது பதக்கம் இதுவாகும்.
- 4 x 400 மீ கலப்பு நிலைமாற்று அணி ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கத்தினையும் மகளிருக்கான 400 மீ. ஓட்டப் பந்தயத்தில் ரூபல் சவுத்ரி வெண்கலப் பதக்கத்தினையும் வென்றார்.




## செரீனா வில்லியம்ஸ் ஓய்வு

- அமெரிக்க நாட்டின் டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் டென்னிஸ் துறையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- இவர் அமெரிக்க ஓபன் போட்டியில் தனது பங்கேற்பினை நிறைவு செய்த பிறகு, டென்னிஸ் துறையில் இருந்து ஓய்வு பெற உள்ளார்.
- இவர் டென்னிஸ் துறையின் இராணி என்று அழைக்கப்படுகிறார்.
- இவர் சுமார் 22 ஆண்டுகள் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று வருகிறார்.
- இவர் டென்னிஸ் துறையில் 73 ஒற்றையர் பட்டங்களையும், 23 இரட்டையர் பட்டங்களையும் வென்றார்.



## ஆண்டின் சிறந்தக் கால்பந்தாட்ட வீரர்

- சுனில் சேத்ரி மற்றும் மனிஷா கல்யாண் ஆகியோர் முறையே 2021-22 ஆம் ஆண்டிற்கான சிறந்தக் கால்பந்தாட்ட வீரராகவும், சிறந்தக் கால்பந்தாட்ட வீராங்கனையாகவும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- இதனை அகில இந்தியக் கால்பந்தாட்டப் போட்டி கூட்டமைப்பு (AIFF) அறிவித்துள்ளது.
- கடந்த போட்டித் தொடரிற்கான ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் கால்பந்தாட்ட வீராங்கனை என்ற பட்டத்தினை மனிஷா வென்றிருந்தார்.
- சுனில் இந்த விருதை பெறுவது இது 7வது முறையாகும்.
- இவர் இதற்கு முன்பு 2007, 2011, 2013, 2014, 2017 மற்றும் 2018-19 ஆகிய ஆண்டுகளில் இந்த விருதினை வென்றுள்ளார்.




## 600 டி20 போட்டிகள்

- மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் ஆல்-ரவுண்டர், கீரன் பொல்லார்ட் 600 டி20 போட்டிகளில் பங்கேற்று விளையாடிய முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.



- அவருக்கு அடுத்தபடியாக டுவைன் பிராவோ (543 போட்டிகள்), சோயப் மாலிக் (472), கிறிஸ் கெய்ல் (463), ரவி போபாரா (426) ஆகியோர் உள்ளனர்.

## பளு தூக்குதல் போட்டியில் கின்னஸ் உலக சாதனை

- அமெரிக்காவின் மேரிலாந்து பகுதியைச் சேர்ந்த தமரா வால்காட் சமீபத்தில் பளு தூக்கும் போட்டியில் (பவர் லிஃப்டிங்) கின்னஸ் சாதனை படைத்தார்.
- அமெரிக்காவின் விர்ஜீனியாவில் நடைபெற்ற ஒரு பளுதூக்கும் போட்டியில் அவர் மொத்தம் 1,620.4 பவுண்டுகள் அல்லது 735 கிலோ எடையைத் தூக்கி சாதனை ஒன்றைப் படைத்தார்.

## டாடா எஃகு நிறுவனத்தின் இந்திய சதுரங்கப் போட்டி 2022

- டாடா எஃகு நிறுவனத்தின் 4வது இந்தியச் சதுரங்கப் போட்டியானது கொல்கத்தாவில் நடைபெற உள்ளது.
- இதுவரை ஓபன் பிரிவில் மட்டுமே நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல்முறையாக மகளிருக்கென தனிப்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.
- இப்போட்டியானது (விரைவு மற்றும் பிளிட்ஸ் பிரிவு) இந்தியாவின் மிக முக்கியமான சதுரங்கப் போட்டிகளில் ஒன்றாகும்.
- கோனேரு ஹம்பி, D. ஹரிகா, மற்றும் R. வைஷாலி போன்ற முன்னணி இந்திய மகளிர் போட்டியாளர்கள் இந்த முதலாவது மகளிர் போட்டியில் பங்கேற்க உள்ளனர்.


## UEFA சூப்பர் கோப்பை போட்டி 2022

- பின்லாந்தில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு UEFA சூப்பர் கோப்பை போட்டியில் எலின்ட்ராக்ட் பிராங்பட் அணியை ரியல் மாட்ரிட் அணி வீழ்த்தியது.
- ரியல் மாட்ரிட் அணியானது 5வது முறையாக இந்தப் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை ஒன்றைப் படைத்தது.
- இதற்கு முன் பார்சிலோனா அணியும், மிலன் அணியும் தலா 5 முறை இந்தக் கோப்பையை வென்றன.
- UEFA சூப்பர் கோப்பை போட்டி என்பது இரண்டு முக்கிய ஐரோப்பியக் குழுப் போட்டிகளின் வெற்றியாளர்களுக்காக UEFA என்ற அமைப்பினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கால்பந்துப் போட்டியாகும்.

## அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு இடைநீக்கம்

- உலகக் கால்பந்துப் போட்டிக்கான ஆளுமை அமைப்பான சர்வதேசக் கால்பந்து கூட்டமைப்புச் சங்கமானது, மூன்றாம் தரப்பினரின் தேவையற்றத் தலையீட்டிற்காக அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பினை இடைநீக்கம் செய்தது.
- 1937 ஆம் ஆண்டு இந்த கூட்டமைப்பு நிறுவப்பட்டதிலிருந்து, இது போன்று நடவடிக்கை எடுக்கப்படுவது இது முதல்முறையாகும்.

- 3 பேர் கொண்ட நிர்வாகக் குழுவினால் 2022 ஆம் ஆண்டு மே 18 முதல் அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்பு ஆனது நிர்வகிக்கப்படுகிறது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பிரஃபூல் படேல் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் பதவிக் காலம் நிறைவடைந்த பிறகு, அந்த நிர்வாகக் குழுவானது உச்ச நீதி மன்றத்தினால் நியமிக்கப்பட்டது.
- நிர்வாகக் குழு நியமிக்கப்பட்ட நிகழ்வானது, மூன்றாம் தரப்பின் தலையீடாகவும், அனைத்து நாடுகளும் தங்களது விவகாரங்களைச் சுதந்திரமான முறையில் நிர்வகிக்கக் கூறும், சர்வதேசக் கால்பந்துக் கூட்டமைப்புச் சங்கத்தின் சட்டங்களுக்கு எதிரானதாகவும் கருதப் படுகிறது.
- இடைநீக்கம் என்பது, எந்தவொரு இந்திய அணியும், போட்டிக் குழுவும் (அ) நாடும் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க இயலாது.
- மேலும் 2022 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள 17 வயதிற்குட்பட்ட மகளிருக்கான FIFA போட்டியினை நடத்தும் உரிமையையும் இந்தியா இழக்க உள்ளது.



RED CARD

WHAT DOES THIS SUSPENSION FROM FIFA MEAN FOR AIFF?

- India cannot host the FIFA U-17 Women's World Cup which is scheduled to commence on Oct 11
- Indian teams, both representing clubs and country, are not allowed to take part in any international competition
- Neither AIFF nor any of its members or officials can benefit from any development programmes, courses or training from FIFA and/or the AFC

WHAT NEXT?

- Repeal of the CoA mandate in full
- AIFF administration to be fully in charge of the AIFF's daily affairs
- The AIFF constitution to be revised in accordance with the requirements of FIFA-AFC and to be approved by the AIFF general assembly without interference from any third party
- Concurrently, an independent electoral committee to be elected by the AIFF general assembly to run the elections of a new executive committee
- Hold elections based on the pre-existing membership structure of AIFF (i.e. state associations only)

HOW IT ALL STARTED

- Elections were due in December 2022 but the Praful Patel-led AIFF dragged its feet, citing a pending case in the Supreme Court. It was only on May 12, almost 18 months later, that the apex court agreed to look into the illegal continuation of Patel as president
- **May 18, 2022:** Supreme Court removed AIFF president Praful Patel and his executive committee, whose tenure ended in Dec 2022, and instead appointed a three-member Committee of Administrators (CoA) to finalise the constitution and hold elections.
- **June 21-23:** FIFA-AFC sent a joint team to India for talks with all stakeholders. Roadmaps were agreed, crucially to approve the constitution on July 31 and hold elections before September 15.
- The July 31 deadline was missed and on August 3 Supreme Court ordered elections, without the draft constitution being finalised. The apex court also provided voting rights to 36 former players, a clear violation of FIFA Statutes.

BONE OF CONTENTION

- FIFA is not against inclusion of individual players in the executive committee as co-opted members but said giving voting rights to 36 players undermines state associations who also have a vote each.
- Other objection includes a clause in the draft constitution that officials cannot hold simultaneous posts in AIFF and state associations.
- FIFA also said a provision stipulating that the term limits have no retroactive effect was missing in Article 26 of the draft constitution

WHO COMPRISES THE CoA?

- Justice (retired) Anil Dave, Former Chief Election Commissioner of India SY Quraishi, Former India captain Bhaskar Ganguly

"THE COA IS SURPRISED THAT THE FIFA DECISION HAS COME WHEN EXTENSIVE DISCUSSIONS WERE GOING ON FOR THE PAST FEW DAYS BETWEEN ALL STAKEHOLDERS, INCLUDING FIFA-AFC, AIFF, COA, AND THE SPORTS MINISTRY AS PER THE ORDER OF THE SUPREME COURT."
—CoA STATEMENT

## துராந்த் கோப்பை 2022

- வரலாற்றுச் சிறப்புமிக்க 131வது துராந்த் கோப்பைப் போட்டியானது கொல்கத்தாவில் தொடங்க உள்ளது.
- ஆசியாவின் பழமையான கால்பந்துப் போட்டியான இது இந்தியாவில் கால்பந்து போட்டித் தொடர் தொடங்கப் பட்டதைக் குறிக்கிறது.
- பிரித்தானிய ஆட்சியில் இருந்த இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலர் மார்டிமர் துராந்த் 1888 ஆம் ஆண்டில் துராந்த் கோப்பைப் போட்டியினை நிறுவினார்.

- ஆரம்பத்தில் ஆயுதப் படையினருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட இது, ஆனால், பின்னர் தொழில்முறைக் கால்பந்து அணியினருக்கும் அனுமதி வழங்கப்பட்டது.
- துராந்த் கோப்பை கால்பந்துப் போட்டிச் சங்கமானது அகில இந்தியக் கால்பந்து கூட்டமைப்புடன் (AIFF) இணைந்து இந்த வருடாந்திரப் போட்டியினை நடத்துகிறது.
- இந்தப் போட்டியின் வெற்றி அணி ஆனது, துராந்த் கோப்பை, பிரசிடென்சி கோப்பை மற்றும் சிம்லா டிராபி ஆகிய மூன்று கோப்பைகளைப் பெறும்.




## FTX கிரிப்டோ கோப்பைப் போட்டி

- இந்தியச் சதுரங்க ஜாம்பவான் ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா அமெரிக்காவின் மியாமியில் நடைபெற்ற FTX கிரிப்டோ கோப்பைப் போட்டியில் உலகச் சாம்பியனான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனைத் தோற்கடித்தார்.
- இவர் ஓராண்டில் மூன்றாவது முறையாக மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்தார்.
- ஆனால் அவர் இந்தப் போட்டியின் இறுதி நிலைகளில் இரண்டாவது இடத்தினைப் பெற்றார்.

## 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் போட்டி

- இந்தியாவின் இளம் மல்யுத்த வீராங்கனை ஆன்டிம் பங்கால் பல்கேரியாவின் சோபியா நகரில் நடைபெற்ற 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக சாம்பியனாக மாறி வரலாறு படைத்தார்.
- 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண் மல்யுத்த வீராங்கனை பங்கல் ஆவார்.
- இறுதிப் போட்டியில் ஆண்டிம் 53 கிலோ எடைப் பிரிவில் கஜகஸ்தானின் அட்லின் ஷகாயேவாவை வீழ்த்தி தங்கப் பதக்கத்தினை வென்றார்.


# முக்கிய தினங்கள்

## உலக தாய்ப்பால் வழங்கல் வாரம் – ஆகஸ்ட் 01 முதல் 07 வரை

- இது உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெப் உடன் இணைந்து தாய்ப்பாலூட்டும் நடவடிக்கைக்கான உலகக் கூட்டணியால் (WABA) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது தாய்ப்பால் கொடுப்பதற்கான பாதுகாப்புகளை உருவாக்குவதையும், தாய்ப்பால் ஊட்டுதல் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தாய்ப்பாலூட்டும் நடவடிக்கைக்கான உலகக் கூட்டணியானது (WABA) 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டின் உலக தாய்ப்பால் ஊட்டுதல் வாரத்திற்கான கருத்துரு, 'தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிப்பதற்காக முன் வாருங்கள்: அது பற்றிய கல்வி மற்றும் அதற்கான ஆதரவினை வழங்குதல்' என்பதாகும்.

## முஸ்லிம் பெண்கள் உரிமை தினம் – ஆகஸ்ட் 01

- இது முத்தலாக் சட்டம் அமல்படுத்தப்பட்டதைக் கொண்டாடும் ஒரு நாளாகும்.
- இது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 அன்று அமல்படுத்தப்பட்டது.
- இந்தச் சட்டத்தின் மூலம், முத்தலாக் நடைமுறையானது ஒரு குற்றவியல் நடவடிக்கையாக மாற்றப்பட்டது.
- முத்தலாக் முறையானது, இந்திய முஸ்லிம் கணவர்கள், “தலாக்” என்ற வார்த்தையை தொடர்ந்து மூன்று முறை உச்சரிப்பதன் மூலம் உடனடியாக தங்கள் மனைவிகளை விவாகரத்து செய்ய அனுமதித்தது.
- இந்த நடைமுறை மனைவியின் சம்மதத்தைக் கருத்தில் கொள்ளாது.
- முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இது தடைசெய்யப் பட்டுள்ளது.



## உலக நுரையீரல் புற்றுநோய் தினம் - ஆகஸ்ட் 01

- இந்தக் கொடிய நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திட வேண்டி உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களை வலியுறுத்துவதன் மூலமும் ஒவ்வோர் ஆண்டும் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நோயானது, 2020 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 1.80 மில்லியன் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.
- இந்தத் தினமானது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

## ஹிரோஷிமா தினம் - ஆகஸ்ட் 06

- 1945 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பானின் ஹிரோஷிமா நகரின் மீது அணுகுண்டு வீசப்பட்டதை இந்தத் தினம் நினைவு கூருகிறது.
- அமெரிக்காவின் B-29 சூப்பர்போட்ரீஸ் எனோலா கெய் என்ற விமானமானது ஹிரோஷிமா நகரின் மீது "லிட்டில் பாய்" என்ற பெயரிடப்பட்ட அணுகுண்டை வீசியது.
- மூன்று நாட்களுக்குப் பிறகு, நாகசாகி நகரின் மீது அமெரிக்கா மற்றொரு அணு குண்டை வெடிக்கச் செய்தது.

## தேசிய கைத்தறி தினம் - ஆகஸ்ட் 07

- சமூக-பொருளாதார மேம்பாட்டில் கைத்தறித் தொழில்துறையின் பங்களிப்பை முன்னிலைப் படுத்துவதும், இத்துறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் இந்தத் தினமானது நாடு முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- 1905 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் சுதேசி இயக்கம் தொடங்கியது.


## 2வது ஈட்டி எறிதல் தினம் - ஆகஸ்ட் 07

- இந்தியத் தடகளக் கூட்டமைப்பு ஆனது (AFI) 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதி அன்று இரண்டாவது 'ஈட்டி எறிதல் தினத்தை' கொண்டாடுகிறது.
- ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவிற்கு மரியாதை அளிக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டு முதன்முதலில் இந்தத் தினம் அனுசரிக்கப்பட்டது.
- டோக்கியோ நகரில் நடைபெற்ற தடகளப் போட்டியில் இந்தியாவின் முதல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை இவர் வென்றார்.
- மேலும் இளைஞர்களை விளையாட்டுத் துறைப் பக்கம் ஈர்ப்பதும், தடகளத்தில் ஒரு பிரகாசமான எதிர்காலத்தினை நோக்கி முன்னேற்ற வேண்டி சாம்பியன்களை தயார் படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

## நாகசாகி தினம் - ஆகஸ்ட் 09

- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று அமெரிக்கா ஜப்பானின் நாகசாகி நகரம் மீது அணுகுண்டை வீசியது.

- அகலமான மற்றும் உருண்டையான வடிவத்தைக் கொண்டிருந்த இந்த வெடிகுண்டின் வடிவமைப்பால் அதற்கு "ஃபேட் மேன்" என்று குறியீட்டுப் பெயரிடப்பட்டது.
- 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று, அமெரிக்காவின் B-29 என்ற குண்டுவீச்சு விமானமானது அந்த நகரத்தின் மீது அணுகுண்டை வீசி கிட்டத்தட்ட 20,000 பேரின் உயிரைப் பறித்தது.
- 2022 ஆம் ஆண்டானது இந்த சம்பவம் நிகழ்ந்ததன் 77வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.




## உலகப் பூர்வகுடி மக்களின் சர்வதேச தினம் - ஆகஸ்ட் 09

- 1982 ஆம் ஆண்டில் ஜெனீவா நகரில் நடைபெற்ற பூர்வகுடி மக்கள்தொகை பற்றிய முதலாவது ஐக்கிய நாடுகளின் ஒரு செயற்குழுக் கூட்டத்தை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




- உலகெங்கிலும் உள்ள 90 நாடுகளில் 476 மில்லியனுக்கும் அதிகமாகப் பூர்வகுடி மக்கள் வாழ்வதோடு உலக மக்கள்தொகையில் பூர்வகுடி மக்கள் 6.2 சதவிகிதமாக உள்ளனர்.
- 1993 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதியினை உலகின் பூர்வகுடி மக்களின் சர்வதேச தசாப்தத்தின் தொடக்கமாக அறிவித்தது.

- 1993 ஆம் ஆண்டானது உலகப் பூர்வகுடி மக்களின் சர்வதேச ஆண்டாகவும் அறிவிக்கப் பட்டது.
- இத்தினத்தின் கருத்துரு, "பாரம்பரிய தகவல்களைப் பாதுகாத்து அதனைப் பரப்பச் செய்வதில் பூர்வகுடி பெண்களின் பங்கு" என்பதாகும்.


## உலக சிங்க தினம் - ஆகஸ்ட் 10

- சிங்கங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது
- முதலாவது உலக சிங்க தினமானது 2013 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- சிங்கங்கள் IUCN சிவப்பு நிறப் பட்டியலில் பாதிக்கப்படக்கூடிய இனமாக குறிப்பிடப் பட்டுள்ளன.
- ஆப்பிரிக்காவிற்கு வெளியே சிங்கங்கள் வாழும் ஒரே காட்டுப்பகுதி கிர் வனப் பகுதி ஆகும்.
- 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இவற்றின் எண்ணிக்கை 523 என்ற எண்ணிக்கையிலிருந்து 674 ஆக அதிகரித்துள்ளது.




## உலக உயிரி எரிபொருள் தினம் - ஆகஸ்ட் 10

- டீசல் எந்திரத்தினைக் கண்டுபிடித்த சர் ருடால்ப் டீசலின் நினைவாக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- வழக்கமான எரிபொருட்களுக்கு மாற்றாக புதைபடிமம் சாராத எரிபொருட்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- 1893 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று, சர் ருடால்ஃப் டீசல் முதன்முறையாக கடலை எண்ணெயைக் கொண்டு இயந்திரத்தை இயக்கினார்.
- வரவிருக்கும் நூற்றாண்டில் தாவர எண்ணெயை அதிகளவில் ஒரு ஆற்றல் மூலமாகப் பயன்படுத்தப்படும் என்பதை அவரது சோதனை முன்பே தீர்மானித்தது.




## சர்வதேச இளைஞர் தினம் - ஆகஸ்ட் 12

- உலக இளைஞர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஆனது 1999 ஆம் ஆண்டில் இந்தத் தினத்திற்கான ஒரு முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "தலைமுறை இடையிலான ஒற்றுமை: எல்லா வயதினருக்கும் ஏற்ற ஓர் உலகத்தை உருவாக்குதல்" என்பதாகும்.

## உலக யானைகள் தினம் - ஆகஸ்ட் 12

- உலகெங்கிலும் உள்ள யானைகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இத்தினமானது 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதியன்று முதல் முறையாக அனுசரிக்கப் பட்டது.
- உலக யானைகள் தினமானது, கனடா நாட்டுத் திரைப்படத் தயாரிப்பாளர் பாட்ரிசியா சிம்ஸ் மற்றும் தாய்லாந்தின் யானை மறு அறிமுகத் திட்டத்திற்கான அறக்கட்டளை ஆகியோரால் இணைந்து நிறுவப்பட்டது.

## உலக உடல் உறுப்பு தான தினம் - ஆகஸ்ட் 13

- உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- 1953 ஆம் ஆண்டில், முதல் தற்காலிக வெற்றிகரமான மனித சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையானது பாரீஸ் நகரில் ஜீன் ஹாம்பர்கர் என்பவரால் செய்யப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “உறுப்புகளை தானம் செய்து உயிர்களைக் காப்போம் என்று உறுதியேற்போம்” என்பதாகும்.
- இந்தியா ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 27 ஆம் தேதியன்று "தேசிய உறுப்பு தான தினத்தினை" அனுசரித்து வருகிறது.

## உலக சமஸ்கிருத திவாஸ் - ஆகஸ்ட் 12

- இது ஷ்ரவண பூர்ணிமாவின் போது கொண்டாடப்படுகிறது.
- இந்தத் தினமானது ரக்சா பந்தன் பண்டிகையுடன் ஒன்றிக் கொண்டாடப் படுகிறது.
- இது வரவிருக்கும் தலைமுறையினர் மத்தியில் சமஸ்கிருத மொழியை ஊக்குவித்து, அதனைப் பரிச்சயப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச இடது கைப் பழக்கம் கொண்டோர் தினம் - ஆகஸ்ட் 13

- இந்தத் தினமானது டீன் R. கேம்ப்பெல் என்பவரால் 1976 ஆம் ஆண்டில் முதன் முறையாக கொண்டாடப்பட்டது.
- இவர் லெஃப்ட்-ஹேண்டர்ஸ் இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்தின் நிறுவனர் ஆவார்.
- அந்த ஆண்டு முதல் இத்தினம் ஆண்டுதோறும் அனுசரிக்கப் படுகிறது.
- இது ஒரு இடது கைப் பழக்கம் கொண்டோர் எதிர்கொள்ளும் அன்றாடப் போராட்டம் குறித்து கருத்துக்களை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பிரிவினையின் கொடுந்துயர நினைவு தினம் – ஆகஸ்ட் 14




- இந்திய நாடானது ஆகஸ்ட் 14 ஆம் தேதியன்று பிரிவினையின் கொடுந்துயர நினைவு தினத்தினை அனுசரிக்கிறது.
- இந்த நினைவு தினமானது கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- இந்திய நாடானது இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு நாடாகப் பிரிந்த நிகழ்வானது 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 முதல் பல வாரங்கள் மற்றும் மாதங்கள் கடுமையான வன்முறை மற்றும் வகுப்புவாத கலவரங்கள், சொத்து இழப்பு மற்றும் தீவிர வன்முறைகள் நிகழ வழி வகுத்தது.
- சமீபத்திய உலக வரலாற்றில் மிகவும் வன்முறைமிக்க மற்றும் திடீரென நிகழ்ந்த இடம் பெயர்வு நிகழ்வுகளுள் ஒன்றாக இந்தப் பிரிவினை கூறப்படுகிறது.

## உலகப் புகைப்பட தினம் - ஆகஸ்ட் 19

- புகைப்படம் எடுத்தலின் கலை, கைவினை மற்றும் அதன் அறிவியல் ஆகியவை குறித்து இந்தத் தினம் கவனம் செலுத்துகிறது.

- ஒரு பொருளின் மீதான முதல் நிரந்தரப் புகைப்படம் ஆனது 1826 ஆம் ஆண்டில் பிரெஞ்சு ஜோசப் நைஸ்ஃபோர் நீப்ஸ் என்பவரால் எடுக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒளிவில்லை மூலம் பெருந்தொற்று கால நிகழ்வுகளைக் காணுதல்" என்பதாகும்.

## உலக மனிதநேய தினம் - ஆகஸ்ட் 19


- அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக பேரழிவுகள் மற்றும் நெருக்கடிகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவ முன்வந்த அனைத்து உதவி மற்றும் சுகாதார ஊழியர்களை இத்தினமானது அங்கீகரிக்கிறது.
- உலகம் முழுவதும் மனிதநேயம் சார்ந்த உதவிகளின் ஒரு அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று, ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள கேனால் ஹோட்டல் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், ஈராக் நாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் சிறப்புப் பிரதிநிதி உட்பட 22 மனிதநேய உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.
- ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது ஆகஸ்ட் 19 ஆம் தேதியினை உலக மனிதநேயத் தினமாக அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, “ஒரு குழந்தையை வளர்க்க ஒரு கிராமம் தேவை" என்ற பழமொழியை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## அக்சய் உர்ஜா திவாஸ் - ஆகஸ்ட் 20

- இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மேம்பாடு மற்றும் அதன் திறன்மிக்கப் பயன்பாடு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தத் தினமானது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்தநாளையும் நினைவு கூருகிறது.
- 2004 ஆம் ஆண்டில் இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் அமைச்சகத்துடன் இணைந்து முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் முதன் முதலில் இந்த தினம் அனுசரிக்கப்பட்டது.



## சத்பவ்னா திவாஸ் - ஆகஸ்ட் 20




- ❖ சத்பவ்னா திவாஸ் என்பது இந்தியாவின் அனைத்துக் குடிமக்களிடையேயும் அமைதி, நல்லிணக்கம், அனுதாபம் மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கிறது.
- ❖ இந்த ஆண்டின் இத்தினமானது ராஜீவ் காந்தி அவர்களின் 78வது பிறந்த நாளினை நினைவு கூருகிறது.
- ❖ சத்பவ்னா திவாஸ் தினமானது 1992 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பிறகு நிறுவப்பட்டது.

## உலக கொசு நாள் - ஆகஸ்ட் 20

- ❖ 1897 ஆம் ஆண்டில் கொசுக்களுக்கும் மலேரியா பரவுவதற்கும் இடையே உள்ள ஒரு தொடர்பைக் கண்டறிந்த சர் ரொனால்ட் ராஸ் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக இது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ அவரது கண்டுபிடிப்பின்படி, பெண் கொசுக்கள் தான் மலேரியாவை மனிதர்கள் மத்தியில் பரப்புகின்றன.
- ❖ மலேரியா வருவதற்கான காரணங்கள் மற்றும் அதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- ❖ உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி, 2019 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை மலேரியாவினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் அறுபத்தொன்பதாயிரம் ஆக அதிகரித்துள்ளன.


## உலக மூத்த குடிமக்கள் தினம் - ஆகஸ்ட் 21

- ❖ இது அமெரிக்காவில் தேசிய மூத்த குடிமக்கள் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ மனிதச் சமுதாயத்தில் முதியோர்களின் பங்களிப்பை வெகுவாகச் சிறப்பித்துக் காட்டி அவர்களைக் கௌரவிப்பது என்பது இத்தினத்தின் நோக்கமாகும்.
- ❖ இந்தத் தினமானது 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று அப்போதைய அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகனின் பிரகடனத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ 2050 ஆம் ஆண்டில் முதியோர்களின் எண்ணிக்கை 1.5 பில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

- இந்த அதிகரிப்பானது கிழக்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மிகவும் பரவலாகக் காணப்படும்.
- 2050 ஆம் ஆண்டில் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள், நமது புவியில் வாழும் முதியவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான நபர்களைக் கொண்டு இருக்கும்.


## பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கௌரவமளிக்கும் சர்வதேச நினைவு தினம் - ஆகஸ்ட் 21

- பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியத்தை நிலைநிறுத்தவும், பாதிக்கப்பட்டவர்கள் மறக்கப் படாமல் இருப்பதை உறுதி செய்வதில் உலகளாவிய ஒற்றுமையின் ஒரு முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டவும் வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த சர்வதேச தினமானது 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு "நினைவுகள்" என்பதாகும்.




## சமயம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலான வன்முறைச் செயல்களால் பாதிக்கப் பட்டவர்களை நினைவு கூரும் சர்வதேச தினம் - ஆகஸ்ட் 22

- சமயம் அல்லது நம்பிக்கையின் அடிப்படையிலோ அல்லது அதன் பெயரிலோ மேற் கொள்ளப் படும் தீயச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவற்றிலிருந்துத் தப்பிப் பிழைத்தவர்களை நினைவு கூருவதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நாளில், சர்வதேச நாடுகள் மத அடிப்படையிலான வன்முறையில் உயிர் பிழைத்தவர்களையும் அதனால் பாதிக்கப்பட்டவர்களையும் கௌரவிக்கின்றது.
- இந்தத் தினமானது போலந்து முன்மொழிந்தபடி 2019 ஆம் ஆண்டு மே 28 ஆம் தேதி அன்று 73வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.




## உலக தண்ணீர் வாரம் 2022: ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 1 வரை

- உலக தண்ணீர் வாரம் என்பது 1991 ஆம் ஆண்டு முதல் ஸ்டாக்ஹோம் சர்வதேச தண்ணீர் நிறுவனத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் நிகழ்வாகும்.
- இது உலகளாவிய அளவில் தண்ணீர் பிரச்சினைகள் மற்றும் சர்வதேச மேம்பாட்டுடன் தொடர்புடைய சிக்கல்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் வாரத்தின் கருத்துரு, "புலப்படாததைக் கண்டறிதல்: தண்ணீரின் மதிப்பு" என்பதாகும்.

## சர்வதேச அடிமை வர்த்தகம் மற்றும் ஒழிப்பு நினைவு தினம் - ஆகஸ்ட் 23

- காலனித்துவ ஆட்சியின் போது அட்லாண்டிக் கடல் கடந்து மேற்கொள்ளப்பட்ட அடிமை வர்த்தகத்தினால் பாதிக்கப்பட்ட, மில்லியன் கணக்கான அப்பாவி உயிர்களுக்கு எதிரான இந்த நடைமுறையை நினைவு கூரும் வகையில் இந்தத் தினம் என்பது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினத்திற்கான முதல் முக்கியத்துவம் யுனெஸ்கோ அமைப்பினால் கொடுக்கப் பட்டது.
- சர்வதேச அடிமை வர்த்தகம் முதன்முதலில் 1807 ஆம் ஆண்டு ஒழிக்கப் பட்டது.
- இந்தத் தினமானது முதன் முதலில் ஹைதி (ஆகஸ்ட் 23, 1998) மற்றும் செனகலில் உள்ள கோரி தீவு (ஆகஸ்ட் 23, 1999) போன்ற நாடுகளில் அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'துணிவின் கதைகள்: அடிமைத் தனத்திற்கு எதிர்ப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான ஒற்றுமை' என்பதாகும்.

## கருப்பு ரிப்பன் தினம் - ஆகஸ்ட் 23

- இது சர்வாதிகார ஆட்சிகளால் பாதிக்கப்பட்டவர்கள், ஸ்டாலினிசம் மற்றும் நாசிசம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரும் தினமாகும்.
- இவற்றில் ஸ்டாலினிசம், கம்யூனிஸ்ட், நாஜி மற்றும் பாசிசம் போன்ற ஆட்சிகள் அடங்கும்.
- இந்தத் தினமானது கருப்பு ரிப்பன் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- 1939 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மோலோடோவ்-ரிப்பன்ட்ராப் ஒப்பந்தத்தை நினைவு கூரும் வகையில் ஆகஸ்ட் 23 ஆம் தேதியானது இந்தத் தினத்திற்காக தேர்ந்து எடுக்கப் பட்டது.

- இந்த ஒப்பந்தமானது சோவியத் ஒன்றியத்திற்கும் ஜெர்மனிக்கும் இடையே மேற் கொள்ளப் பட்டது.

## உலக குஜராத்தி மொழி தினம் - ஆகஸ்ட் 24

- குஜராத்தி மொழியின் சிறந்த எழுத்தாளரான 'வீர் நர்மத்' பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- கவிஞர் நர்மத் குஜராத்தி மொழியினை உருவாக்கியவராகக் கருதப்படுகிறார்.

## சர்வதேச இணையவெளி தினம் - ஆகஸ்ட் 23

- இந்தத் தினமானது 1991 ஆம் ஆண்டில் உலகளாவிய இணைய வெளியானது பொது மக்களின் பயன்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஒரு தினமாகும்.
- முதன்முறையாக உலகளாவிய இணைய வெளியினை கண்டுபிடித்த டிம் பெர்னர்ஸ் லீ அனைவருக்கும் இந்த வசதியினை அணுகுவதற்கு அனுமதி வழங்கினார்.
- இணைய வெளியானது அனைவருக்கும் இலவசம் என்றும் அதன் பயன்பாட்டிற்கு கட்டணம் ஏதும் இல்லை என்றும் CERN நிறுவனம் அறிவித்தது.
- லீ என்ற ஆங்கிலேயக் கணினி அறிவியலாளர் 1989 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள CERN நிறுவனத்தில் பணிபுரியும் போது உலகளாவிய இணைய வெளியினைக் கண்டுபிடித்தார்.




## பெண்கள் சமத்துவ தினம் - ஆகஸ்ட் 26

- 1920 ஆம் ஆண்டில் அமெரிக்க அரசியலமைப்பின் மீதான 19வது திருத்தத்தை ஏற்றுக் கொண்டதன் நினைவாக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- இது பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Hard Won... Not Done" என்பதாகும்.

## தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்ட் 29

- இது ஹாக்கி ஜாம்பவான் மேஜர் தியான் சந்த் அவர்களின் பிறந்தநாளை நினைவு கூறுவதை நோக்கமாகக் கொண்டு அனுசரிக்கப்படுகிறது.

- இவர் பிரபலமாக மந்திரவாதி என்று அழைக்கப்படுகிறார்.
- தியான் சந்த் வரலாற்றில் மிகச்சிறந்த ஹாக்கி கள வீரர்களில் ஒருவராகக் கருதப் படுகிறார்.
- இவர் 1928, 1932 மற்றும் 1936 ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்காகத் தொடர்ந்து மூன்று ஒலிம்பிக் பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளார்.

## தெலுங்கு மொழி தினம் - ஆகஸ்ட் 29

- ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் தெலுங்கு மொழி தினம் ஆண்டுதோறும் கொண்டாடப் படுகிறது.
- கிடுகு ராமமூர்த்தி பந்துலு அவர்களின் பிறந்த நாள் ஆனது தெலுங்கு மொழி தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- இந்தத் திராவிட மொழியானது இந்தியாவின் ஆறு செம்மொழிகளில் ஒன்றாகும்.
- இந்தியாவில் அதிகம் பேசப்படும் நான்காவது மொழி தெலுங்கு மொழியாகும்.

## அணுசக்திச் சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 29

- 2010 ஆம் ஆண்டு மே மாதத்தில், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் "அணு ஆயுதங்கள் இல்லாத ஒரு அமைதியான மற்றும் பாதுகாப்பான உலகம் என்ற நிலையை அடைய" உறுதி பூண்டுள்ளன.
- 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று செமிபாலடின்ஸ்க் அணுசக்தி சோதனைத் தளம் மூடப்பட்டதை நினைவு கூரும் வகையில் கஜகஸ்தான் நாட்டினால் இந்தத் தீர்மானம் தொடங்கப்பட்டது.
- அணு ஆயுதங்களை ஒட்டு மொத்தமாக ஒழிப்பதற்கான சர்வதேச தினம் முதன் முறையாக 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அனுசரிக்கப்பட்டது.
- அனைத்து வகையான அணுசக்தி சோதனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கான சர்வதேசச் செயற்கருவி 1996 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விரிவான அணு-சோதனைத் தடை ஒப்பந்தம் (CTBT) ஆகும்.
- துரதிர்ஷ்டவசமாக, இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

## தேசிய சிறு தொழில் தினம் - ஆகஸ்ட் 30

- 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவில் சிறுதொழில்களுக்கான (SSI) விரிவான கொள்கைத் திட்டத்தினை இந்திய அரசு உருவாக்கியது முதல் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தொழில்துறையானது நாட்டின் பொருளாதாரத்தின் மொத்தத் தொழில்துறை மதிப்பில் 40 சதவிகிதப் பங்கினை அளிக்கிறது.
- CHAMPIONS தளம், UDYAM மற்றும் தேசிய SC-ST மையம் போன்ற பல்வேறு முயற்சிகளை மத்திய அரசு இதற்காக துவக்கியுள்ளது.


## வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் – ஆகஸ்ட் 30

- இத்தினமானது 2011 ஆம் ஆண்டில் முதன்முதலாக அனுசரிக்கப்பட்டது.
- 2010 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அதன் ஒரு தீர்மானத்தின் மூலம், உலகின் பல்வேறு பகுதிகளில் வலுக்கட்டாயமாக அல்லது விருப்பமில்லாமல் காணாமல் போதல் அதிகரிப்பு குறித்த தனது ஆழ்ந்த அனுதாபத்தினை வெளிப் படுத்தியது.

# இதரச் செய்திகள்

## உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் கந்த்வா என்னுமிடத்தின் வழியே பாயும் நர்மதை ஆற்றின் மீது அமைந்துள்ள ஓம்காரேஷ்வர் அணையில் உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையமானது கட்டமைக்கப்பட உள்ளது.
- இந்த மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையமானது 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 600 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையமானது 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது.




## யுனெஸ்கோ அமைப்பின் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் வானியல் ஆய்வகம்

- பீகாரில் உள்ள லங்காத் சிங் கல்லூரியில் உள்ள வானியல் ஆய்வுக்கூடம் ஆனது தற்போது யுனெஸ்கோ அமைப்பினுடைய, உலகின் முக்கியமான அழிந்து வரும் பாரம்பரிய ஆய்வகங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- 123 ஆண்டுகள் பழமையான இந்தக் கல்லூரியில் 1916 ஆம் ஆண்டில் இந்த ஆய்வகம் என்பது கட்டப்பட்டது.

- 1970களின் ஆரம்பக் காலம் வரை இந்த ஆய்வகம் மற்றும் கோளரங்கமானது திருப்தி கரமான முறையில் செயல்பட்டது.
- ஆனால் காலப்போக்கில் படிப்படியாக இதன் செயல்பாடுகள் சரிவடைந்து குறையத் தொடங்கியது.
- தற்போது, இது முற்றிலும் செயல்பாடற்ற நிலையில் உள்ளது.

## காய்கறிகளுக்கான சிறப்பு மையம்


- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர், நரேந்திர சிங் தோமர், உத்தரப் பிரதேச மாநிலம் சந்தோலி நகரில் நிறுவப்பட உள்ள இந்திய-இஸ்ரேலியக் காய்கறிகள் சிறப்பு மையத்திற்கு அடிக்கல்லை நாட்டினார்.
- இந்திய-இஸ்ரேலியச் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக இஸ்ரேலிய நாட்டின் நிபுணர்கள் இந்த மையத்திற்கானத் தொழில்நுட்பத்தை வழங்குகிறார்கள்.
- தோட்டக் கலையின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கான திட்ட அமைப்பானது, செயல் விளக்க நோக்கங்களின் அடிப்படையில் இந்த மையத்தின் உள்கட்டமைப்புகளைக் கட்டமைப்பதற்கான நிதியுதவியினை வழங்குகிறது.
- இஸ்ரேலியத் தொழில்நுட்பங்களின் அடிப்படையில் இந்த மாநிலத்தில் சிறப்பு மையங்கள் அமைக்கப்படுகின்றன.
- இந்தச் சிறப்பு மையங்கள் தோட்டக்கலைத் துறையில் உள்ள சமீபத்தியத் தொழில் நுட்பங்களுக்கானச் செயல்விளக்க மையமாகவும், பயிற்சி மையங்களாகவும் செயல்படுகின்றன.

## இளைஞர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் 2022

- 2022 ஆம் ஆண்டிற்கான இளைஞர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் என்ற ஒரு அறிக்கையானது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பினால் வெளியிடப் பட்டது.
- 15 மற்றும் 24 வயதுக்குட்பட்டவர்கள் எதிர்கொள்ளும் ஏராளமான தொழிலாளர் சந்தை சார்ந்த சவால்களைப் பெருந்தொற்று மோசமாக்கியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து வயது வந்தோர் பிரிவினரை விட இந்த வயதிற்குட்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பில் அதிக சதவீத இழப்பைச் சந்தித்து உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய மொத்த வேலையற்ற இளைஞர்களின் எண்ணிக்கை 73 மில்லியனை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில், 2020 ஆம் ஆண்டின் மதிப்புடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இளைஞர்களின் வேலைவாய்ப்பு பங்கேற்பு விகிதம் 0.9 சதவீதப் புள்ளிகள் குறைந்துள்ளது.
- ஆனால் அதே காலகட்டத்தில் வயது வந்தோர் பிரிவினரின் பங்கேற்பு வீதம் 2 சதவீதப் புள்ளிகள் அதிகரித்தது.
- இந்தியாவில் 18 மாதங்கள்வரையில் பள்ளி மூடல்கள் நீடித்தன.
- பள்ளி செல்லும் 24 கோடி குழந்தைகளில், கிராமப்புறங்களில் உள்ள 8% மற்றும் நகர்ப் புறங்களில் உள்ள 23% குழந்தைகள் மட்டுமே இணையவழிக் கல்வி முறைக்குப் போதுமான அணுகல் வசதியைப் பெற்றிருந்தனர்.

- இந்தியாவில், சராசரியாக 92% குழந்தைகள் மொழியில் குறைந்தபட்சம் ஒரு அடிப்படைத் திறனையும், 82% குழந்தைகள் கணிதத்தில் குறைந்தபட்சம் ஒரு அடிப்படைத் திறனையும் இழந்துள்ளனர்.
- இந்தியாவில் மிகக் குறைந்த அளவில் மட்டுமே இளம் பெண் தொழிலாளர் சந்தைப் பங்கேற்பு வீதம் உள்ளது.
- மேலும், இந்திய இளம் பெண்கள் 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் இளம் ஆண்களை விட பெரிய அளவிலான வேலைவாய்ப்பு இழப்பைச் சந்தித்துள்ளனர்.

## இயற்கைக் குறியீடு 2022





- ஹைதராபாத் பல்கலைக்கழகம் ஆனது, 2022 ஆம் ஆண்டு இயற்கைக் குறியீட்டுத் தர வரிசையில் இந்தியப் பல்கலைக் கழகங்களில் முதல் இடத்தையும், கல்வித் துறையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களில் 16வது இடத்தையும் பெற்றது.
- இயற்கைக் குறியீடு என்பது இயற்கை மற்றும் இயற்பியல் அறிவியலில் மேற் கொள்ளப் படும் உயர்தர ஆராய்ச்சியின் ஒரு குறிகாட்டியாகும்.
- இதில் வேதியியல், உயிரி அறிவியல், பூமி மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் இயற்பியல் அறிவியல் ஆகியவை அடங்கும்.

## தபால் குறியீட்டு எண்ணின் 50 ஆண்டு கால வரலாறு


- 76வது சுதந்திரத் தின விழாவுடன், நாட்டின் மற்றொரு மைல்கல் நிகழ்வும் ஒன்று இணைந்து அனுசரிக்கப் படுகிறது.
- அது 50 ஆண்டுகளுக்கு முன்பு, 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று தபால் குறியீட்டு எண் இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டதைக் குறிக்கிறது.
- தபால் துறையின் கூற்றுப்படி, சுதந்திரத்தின் போது இந்தியாவில் குறிப்பாக நகர்ப் புறங்களில் 23,344 தபால் நிலையங்கள் இருந்தன.
- தபால் குறியீட்டு எண்ணானது, பெரும்பாலும், ஒரு மாதிரியான பெயர்களைக் கொண்ட வெவ்வேறு இடங்கள் அமைந்துள்ள ஒரு நாட்டில் அஞ்சல்களை வரிசைப் படுத்துதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை எளிதாக்கச் செய்வதற்கும், பல்வேறு மொழிகளில் எழுதப்படும் கடிதங்களை விநியோகிப்பதற்கும் உருவாக்கப்பட்டன.

- ❖ தபால் குறியீட்டு எண் ஆனது 6 இலக்க எண்ணால் ஆனது.
- ❖ முதல் எண் ஆனது வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என உள்ள தபால் மண்டலத்தினையும், எண் 9 ஆனது இராணுவத் தபால் சேவையையும் குறிக்கிறது.
- ❖ இந்த முன்னெடுப்பின் பின்னணியாக இருந்த நபர், மத்தியத் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் முன்னாள் கூடுதல் செயலாளர் ஸ்ரீராம் பிகாஜி வேளான்கர் ஆவார்.
- ❖ உலகளவில் அமெரிக்காவில் 1963 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று மண்டல மேம்பாட்டுத் திட்டக் குறியீடானது (ZIP) அறிமுகப் படுத்தப்பட்டது.




## ஃபோர்ப்ஸ் நிறுவனத்தின் 100 முன்னணி மேகக் கணிமை நிறுவனங்களின் பட்டியல்


- ❖ இந்தியாவின் முன்னணிப் பண வழங்கீட்டு மற்றும் வணிக வங்கித் தளமான ரேசர்பே, 2022 ஆம் ஆண்டிற்கான ஃபோர்ப்ஸ் நிறுவனத்தின் 100 முன்னணி மேகக் கணிமை நிறுவனங்களின் பட்டியலில் பெயரிடப்பட்ட முதல் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.



- ரேசர்பே இரண்டாவது முறையாக இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- இது நிதித் தீர்வுகளுக்கான ஒரு மென்பொருளாக 49வது இடத்தில் பட்டியலிடப் பட்டு உள்ளது.
- கடந்த ஆண்டு ரேசர்பே இந்தப் பட்டியலில் 57வது இடத்தில் இருந்தது.
- 100 முன்னணி மேகக் கணிமை நிறுவனங்களின் பட்டியல், தொழில்நுட்பப் பிரிவில் உள்ள சிறியப் புத்தொழில் நிறுவனங்கள் முதல் தனியார் நிறுவங்களின் பங்குகள் மூலமாக ஆதரவு பெற்ற பெரிய நிறுவனங்கள் வரையிலான சிறந்த நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தி அங்கீகரிக்கிறது.

## நகரங்களில் காற்று மாசுபாடு மற்றும் சுகாதார நிலை அறிக்கை

- அமெரிக்காவின் ஹெல்த் எஃபெக்ட்ஸ் நிறுவனமானது காற்றின் தரம் குறித்த "நகரங்களில் காற்றின் தரம் மற்றும் சுகாதார நிலை" என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, உலகின் பெரிய நகரங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் பூமியிலேயே மிக மோசமான அளவில் காற்றின் தரத்தைக் கொண்டுள்ளன.
- உலகெங்கிலும் உள்ள 7,000 நகரங்கள் மீதான காற்று மாசுபாடு மற்றும் உலகளாவிய சுகாதார விளைவுகள் பற்றிய விரிவான மற்றும் விளக்கமானப் பகுப்பாய்வினை இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.
- இது நுண் துகள்கள் (PM2.5) மற்றும் நைட்ரஜன் டை ஆக்சைடு (NO2) போன்ற இரண்டு தீங்கு விளைவிக்கும் மாசுக்கள் பற்றி கவனம் செலுத்துகிறது.
- PM 2.5 அளவுகளை ஒப்பிடும் போது, மாசுபட்ட முதல் 10 நகரங்களின் பட்டியலில் டெல்லி மற்றும் கொல்கத்தா ஆகியவை முறையே முதலாவது மற்றும் இரண்டாவது இடங்களில் உள்ளன.




- NO2 அளவுகளை ஒப்பிடும் போது, இந்தியாவின் எந்த நகரமும் மாசுபட்ட முதல் 10 அல்லது முதல் 20 நகரங்களின் பட்டியலில் இடம் பெறவில்லை.
- பெய்ஜிங்கில் 100,000 நபர்களுக்கு 124 என்ற இறப்புகளுடன், PM 2.5 சார்ந்த நோயுடன் தொடர்புடைய மிகப்பெரிய அளவிலான நோய்ச் சுமை இருந்தது.

- இதில் ஐந்து சீன நகரங்கள் முதல் 20 இடங்களில் இடம் பெற்றன.
- இதில் 100,000 நபர்களுக்கு 106 இறப்புகளுடன் டெல்லி 6வது இடத்திலும், 99 இறப்புகளுடன் கொல்கத்தா 8வது இடத்திலும் உள்ளன.
- ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு & மத்திய ஐரோப்பாவில் உள்ள நகரங்களில் மிகப்பெரிய சுகாதார பாதிப்புகள் காணப்படுகின்றன.
- 2050 ஆம் ஆண்டளவில், உலக மக்கள்தொகையில் சுமார் 68% பேர் நகர்ப்புறங்களில் வசிக்க வாய்ப்புள்ளது.

## பாங்க் ஆஃப் அமெரிக்கா செக்யூரிட்டீஸ் இந்தியா நிறுவனத்தின் அறிக்கை

- இரயில் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகளை மேம்படுத்தச் செய்வதற்கான உலக நாடுகளின் அனைத்துச் சாதனைகளையும் முறியடிக்கும் பயணத்தில் இந்தியா உள்ளது.
- 1950 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஒட்டு மொத்தமாக கட்டமைக்கப் பட்டதை விட 2025 ஆம் ஆண்டில், இந்திய அரசு அதிக அளவில் நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் பாதைகளைக் கட்டமைக்கும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 1.2 லட்சம் கிமீ தூர இரயில் பாதைகளையும் 1.8 லட்சம் கிமீ தூர நெடுஞ்சாலைகளையும் கட்டமைத்திருக்கும் என்று மதிப்பிடப் படுகிறது.
- 1950 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்திய அரசு 4,000 கிலோமீட்டர் தொலைவு வரை தேசிய நெடுஞ்சாலைகளை மட்டுமே உருவாக்கியது.
- இது 2015 ஆம் ஆண்டில் மொத்தம் 77,000 கிலோமீட்டர் என்ற அளவில் நெடுஞ்சாலை அமைப்பினைக் கட்டமைத்தது.
- இருப்பினும், 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் உள்ள நெடுஞ்சாலையின் நீளம் ஆனது பத்து ஆண்டுகளில் கட்டமைக்கப்பட்ட சாலை நீளத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக 1.8 லட்சம் கிலோ மீட்டர்களைக் கடக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டில் இந்தியாவில் 10,000 கிலோமீட்டர் இரயில் பாதைகள் மட்டுமே இருந்தது.
- இது 2015 ஆம் ஆண்டில் 63,000 கிலோ மீட்டராக அதிகரித்தது.
- ஆனால் இது 2025 ஆம் ஆண்டில் 1.2 லட்சம் கிலோமீட்டரைத் தொடும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- 1995 ஆம் ஆண்டில் 777 MTPA ஆக இருந்த துறைமுகச் சரக்கு கையாளும் திறன் ஆனது 2015 ஆம் ஆண்டில் 1,911 MTPA ஆக உயர்ந்துள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டில் 3,000 MTPA என்ற அளவில் இருமடங்கிற்கும் அதிகமாக உயரும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★